  

# தேசிய விடுதலைப் போராட்ட வீரர்கள்

முன்னேற்றப் பதிப்பகம்

T. 11867

# தேசிய விடுதலைப் போராட்ட வீரர்கள்

(அரசியல் தலைவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்)

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: இரா. கௌதம்

ஆசிரியர்கள்: ரோ. அ. உலியானேவ்ஸ்கி,
வி.வி. வவீலவ் (க.அ. நாசர்), யு.நி. வினக்கூரவ்
(பா. லுமும்பா), அ. யூரியவ் (சுகர்னோ)

БОРЦЫ ЗА НАЦИОНАЛЬНУЮ СВОБОДУ

(политические портреты)

*На тамильском языке*

Fighters for National Liberation
(political portraits)
*in Tamil*

**வாசகர்களுக்கு**

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வரவேற்கவும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்ச்சியோடு காத்திருக்கிறது.

தங்கள் கடிதங்களை «Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR» என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

© Политиздат, 1983

© சுருக்கமான தமிழ் மொழிபெயர்ப்பு, முன்னேற்றப் பதிப்பகம், 1985

சோவியத் யூனியனில் அச்சிடப்பட்டது

Б $\frac{0901010000-401}{014(01)-85}$ 342–85

## பொருளடக்கம்


| | |
|---|---|
| சுருக்கம் | 5 |
| வாசகர்களுக்கு | 8 |
| மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி | 11 |
| ஜவகர்லால் நேரு | 68 |
| சுகர்ணோ | 109 |
| கமால் அப்துல் நாசர் | 146 |
| அந்தோனியோ அகஸ்திநோ நேத்தோ | 180 |
| பாட்ரிஸ் லுமும்பா | 209 |
| குவாமே நுக்ருமா | 232 |

## சுருக்கம்

ரோ. அ. உலியானேவ்ஸ்கி மற்றும் பிறர். ''தேசிய விடுதலைப் போராட்ட வீரர்கள்'' (அரசியல் தலைவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்). மாஸ்கோ, முன்னேற்றப் பதிப் பகம், தமிழ் மொழியில்.

தேசிய விடுதலை இயக்கப் பிரச்சினைகளை ஆராயும் பிரபல சோவியத் அறிஞர்களால் எழுதப்பட்ட இப்புத்தகத்தில் கீர்த்தி மிக்க தேசிய விடுதலை இயக்கத் தலைவர்களுடைய நடவடிக்கைகளின் அடிப்படை சமூக உள்ளடக்கமும் அவர் களின் சில தனிப்பட்ட, அரசியல் தன்மைகளும் கட்டுரை வடிவில் கொடுக்கப்பட்டுள்ளன (மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி, ஜவகர்லால் நேரு — இந்தியா; சுகர்ணோ — இந்தோ னேசியா; பாட்ரிஸ் லுமும்பா — காங்கோ; கமால் அப்துல் நாசர் — எகிப்து; அகஸ்தினோ நேத்தோ — அங்கோலா; நுக்ருமா — கானு).

அவர்களின் நடைமுறைப் பணிகள், கருத்து நிலைகள், கோட்பாடுகள் ஆகியவற்றைப் பற்றிய விவாதங்கள் அவர் களுடைய நாடுகளில் மட்டுமின்றி, அவற்றின் எல்லைகளைக் கடந்து பிற நாடுகளிலும் இன்றுவரை தொடர்ந்து நடந்து வருகின்றன. அவர்களின் சேவைகளின் மீதான ஆர்வம் தற்காலத்திலும் குறையவில்லை.

அவர்களுடைய கருத்தோட்டங்கள், கோட்பாடுகள், சமூக-பொருளாதார நடவடிக்கைகள் ஆகியவற்றின் சாரம் எதில் அடங்கியுள்ளது? இளம் அரசுகளின் பொருளாதார, சமூக, அரசியல் வளர்ச்சியில் உள்ள எத்தகைய நிகழ்ச்சிகள், நிகழ்முறைகள் இத்தலைவர்களின் மரபு வழிகளை கையாள மக்களைத் தூண்டுகின்றன? இத்தலைவர்கள் எந்தக் கருத்து களுக்குத் தங்களுடைய முழு வாழ்க்கையையும் அர்ப்பணித் தார்களோ அந்தக் கருத்துக்களை, வரலாற்றின் சிக்கலான

திருப்பு முனைகளிலும், மிகவும் சிக்கலான அரசியல் கூட்டு களிலும், உடன்படிக்கைகளிலும் விட்டுக் கொடுக்காத அந்தக் கொள்கைகளை நடைமுறையில் ஏன் செயல்படுத்த முடிய வில்லை? இவர்களில் பலரின் சோக நிலைமைக்கான காரணங் கள் என்ன?

இத்தகைய மற்றும் இதே போன்ற பிற கேள்விகளுக்கு பதிலளிக்க ஆசிரியர்கள் முயன்றிருப்பது சந்தேகமின்றி ஆர்வத்தை தூண்டுவதாகவும், அதே சமயம் தற்கால முக்கியத்துவத்தைக் கொண்டும் உள்ளது.

இளம் அரசுகளின் முன் இன்று நிற்கும், மேலும் முற்றி வரும் பல பிரச்சினைகளின் தீர்வின் போது, இத்தகைய தலைவர்களின் சமூக முன்னேற்றத்திற்கான போராட்ட அனுபவங்கள் (சாதகமான மற்றும் எதிர்மறையான அனுபவங் களும்) மிகுந்த முக்கியத்துவத்தைக் கொண்டிருப்பதன் மூலம் இது விளக்கப்படுகின்றது.

இத்தகைய தலைவர்களின் சித்தாந்த-அரசியல் கருத் தோட்டங்கள் பல வளரும் நாடுகளின் புரட்சி ஜனநாயக ஆளும் வட்டங்களின் மீதும், சமூக-பொருளாதார மற்றும் இன்ன பிற சீர்திருத்தங்களின் மீதும் தொடர்ந்து இன்று வரையும் தாக்கம் செலுத்தி வருகின்றன. இந்நாடுகளின் பல தற்காலப் பிரச்சினைகளின் தீர்விற்கு முதலில் இத்தலைவர் களின் நடைமுறை, தத்துவ மரபு வழிகளுடனான தங்களின் உறவை வகுத்துக் கொள்வதும், அவர்களின் அனுபவங்களைக் கணக்கில் கொள்வதும் அவசியம்.

இத்தலைவர்களின் பணிகளை ஒப்படுகையில், அவ்வொப் பீடு கணிசமான அளவு அவர்களுக்கு இடையேயான வேறு பாடுகளைக் கொண்டிருப்பதுடன் அவர்களின் தவறுகள், தோல்விகளுக்கான வேறுபட்ட காரணங்களையும் வெளிப்படை யாகக் கொண்டிருக்கின்றன.

உதாரணமாக, புரட்சிகர சீர்திருத்தங்களைச் செயற் கையான முறையில் கட்டாயப்படுத்தி ஏற்றுக் கொள்ளச் செய்தலும், இயற்கையான வளர்ச்சிக் கட்டங்களை தாண்டிச் செல்ல முயற்சிப்பதும் ஆகிய இடதுசாரி பிறழ்ச்சிகள் பல வளரும் நாடுகளில் நடைபெறுகின்றன.

அதே சமயம், வலதுசாரிகளின் அபாயத்தைக் குறைத்து மதிப்பிடுவதும், தன்னைப் பலப்படுத்திக் கொண்டு பின்னர் நாட்டில் தங்களுக்குச் சாதகமான ஆனால் பரந்த வெகுஜன

உழைப்பாளிகளுக்குப் பாதகமான சமூக, பொருளாதார வளர்ச்சியைக் கொணர முயற்சிக்கும் முதலாளித்துவச் சார்பு சக்திகளுக்கு விட்டுக் கொடுப்பதும் வளரும் நாடுகளின் மற்ருெரு பிரிவின் தன்மையாக உள்ளது. இதற்கு உதாரண மாக 1966ம் ஆண்டு நுக்ருமா அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கான காரணங்களைக் கூறலாம்.

பூர்ஷ்வாக்களுக்கும், இனக்குழுக்களின் மேல்மட்டங்களுக் கும் இடையிலான இணைப்பை உறுதியடைய விட்டதனுல் பிற்போக்கு அரசுக்கவிழ்ப்பின் மூலம் நுக்ருமாவின் அரசாங் கம் வீழ்த்தப்பட்டது. அந்தச் சக்திகளே இதற்கான முன் முயற்சிகளை மேற்கொண்டன. அதே சமயம் குறைந்த காலகட்டத்தில் இயந்திரமயமாக்குதல் போன்ற இன்ன பிற உண்மையற்ற திட்டங்களும் இருந்தன.

ஆகவே இத்தலைவர்களின் அனுபவங்களை கற்றுக் கொள் வது, நாட்டின் சமூக-பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சிக்கு மிகுந்த பாதகத்தை விளைவித்ததும் இத்தலைவர் களுடைய பணிகளின் துன்பகரமான முடிவுகளுக்குக் காரண மாயிருந்ததுமான தவறுகளைத் தவிர்க்க உதவும்.

இத்தலைவர்களின் செல்வாக்கைத் தங்களின் குறுகிய வர்க்க நலன்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ள (நிச்சயம் சிறிதளவு வெற்றியுடன்) முதலாளித்துவ வர்க்கம் முயல் வதனுலும் நம்முடைய கண்ணேட்டத்தில், தேசிய விடுதலைக் காகப் போராடிய வீரர்களின் மரபுகளைத் தெரிந்து கொள்வது மேலும் முக்கியமாகிறது. கடைசியாக, வர்க்க-அரசியல் நிலையிலிருந்து, அவர்களின் மரபு வழிகளில் எதைப் பயன் படுத்திக் கொள்வது, என்ன காரணத்தினுல் சிலவற்றை மறுப்பது என்பதை நோக்கியே கேள்வி முன்வைக்கப்படுகின் றது.

பல வேறுபட்ட பொதுவிஞ்ஞான வட்டங்களின் நிபுணர் கள் மட்டுமின்றி, பரந்த அளவில் வாசகர்களும் ஆர்வமுடன் படிக்கும் வகையில் எளிய கட்டுரை வடிவில் இப்புத்தகம் ஆக்கப்பட்டுள்ளது.

## வாசகர்களுக்கு

இப்புத்தகத்தில் இடம்பெற்றுள்ள தேசிய சுதந்திரத் திற்கென போராடிய வீரர்களைப் பற்றிய அரசியல் குறிப்பு கள், அவர்களது தனிச் சிறப்புகள் மற்றும் தங்கள் நாட் டிலும் சர்வதேச அரங்கிலும் அவர்கள் ஆற்றிய சிறந்த, பலதரப்பட்ட சேவைகள் ஆகியவற்றைப் பற்றிய பரந்த ஆராய்ச்சி அல்ல. ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் நடைபெற்ற தேசிய விடுதலை இயக்கங்களின் புகழ் பெற்ற தலைவர்கள் ஆற்றிய பணிகளின் அடிப்படை சமூக சாரத்தையும் அவர் களின் சில தனித்த, அரசியல் சிறப்பு அம்சங்களையும் விவரிப் பதாக மட்டுமே இப்புத்தகம் உள்ளது என நான் கருது கிறேன். தங்களின் கண்ணோட்டங்களில் சில வேறுபாடுகளை அவர்கள் கொண்டு இருப்பினும், காலனியாதிக்க எதிர்ப்பு, சமுதாய முன்னேற்றம், மக்கள் விடுதலை, பாதுகாப்பு மற்றும் உண்மையான சுதந்திரம் பெறுவது ஆகியவற்றில் இத்தலைவர் கள் கொண்டிருந்த நாட்டம் இவர்களை ஒன்றிணைக்கிறது.

இத்தகைய தலைவர்களைப் பற்றிய அரசியல் குறிப்புகளை எழுதும் பணியில், ஆசிய, ஆப்பிரிக்க நாட்டு மக்களின் தேசிய விடுதலைப் போராட்டங்களின் பிரசித்தி பெற்ற தலைவர்களில் பலரைப் பற்றி விவரித்துக் கூற நாட்டம் கொண்டு, இந்நாடுகளையும் இவற்றின் தேசியத் தலைவர் களின் பணிகளையும் ஆராயும் இளம் சோவியத் அறிஞர்கள் பலரின் உதவியை நாடினேன்.

இப்படி, இந்தியாவை ஆராய்கையில் அம்மக்களின் தலைசிறந்த, மிகவும் பிரபலமான இரண்டு தலைவர்களை — மகாத்மா காந்தியையும் ஜவகர்லால் நேருவையும் — அசட்டை செய்துவிட்டு முன் செல்ல முடியவில்லை. அவர்களின் ஏகாதி பத்திய எதிர்ப்புப் பணியும் இந்திய தேசிய விடுதலைப் போராட் டத்தில் அதன் தலைவர்களாக அவர்கள் வகித்த பெரும் பங்கும், இந்தியாவின் தேசிய விடுதலைக்கும் அதன் புத்தெழுச்

சிக்கும் போராடிய, பலவகைகளில் சுயமான, மிகவும் வித்தியாசமான இவ்விரு பெரும் தலைவர்களின் தனிச் சிறப்புகளையும், சமூகப் பணியையும் கண்ணுங் கருத்துமாக ஆராய என்னைத் தூண்டின.

காலனியாதிக்கத்தின் கீழும் சார்புநிலையிலும் மக்களினங்களின் சுதந்திரத்திற்காகப் போராடியவர்களில் தலைசிறந்த ஒருவராக கமால் அப்துல் நாசரை அடுத்துக் குறிப்பிடலாம். சோவியத் யூனியனின் உண்மை நண்பராக விளங்கிய நாசர், தன்னுடைய பரந்த புரட்சிகர ஏகாதிபத்திய எதிர்ப்புப் பணியில் படிப்படியாக விஞ்ஞான சோஷலிசக் கருத்துக்களால் கவரப்பட்டார். இத்தலைவரின் அகாலமரணம், நம்முடைய கண்ணோட்டத்தில், எகிப்திய சமுதாயத்தின் பரிணாமத்தை அடியோடு பாதித்தது.

போர்ச்சுகேசிய காலனியாதிக்கத்தை எதிர்த்து கிட்டத்தட்ட இருபது வருடங்களாகப் போராடியவர், அங்கோலா மக்களின் கீர்த்தி மிக்க அரசியல் தலைவர் அகஸ்தினோ நேத்தோ ஆவார். ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் ஆற்றிய தீவிர பங்கு, போர்ச்சுகேசியப் புரட்சியின் முற்போக்குச் சக்திகளுடனான நெருங்கிய தொடர்பு, சோஷலிச நாடுகளுடனான நட்பின் வளர்ச்சி, இவற்றுடன் சுய கல்வி ஆகியவற்றின் முடிவாக இவர் மார்க்சிய-லெனினியவாதியாக மாறினார். இவ்வகையில், விஞ்ஞான சோஷலிசத்தை அறிதலிலும் நடைமுறையில் அதைச் செயலாக்குவதிலும் மற்ற பல தேசிய விடுதலை இயக்கத் தலைவர்களை விடப் பல மடங்கு முன் சென்றுவிட்டார்.

இந்தோனேசியப் புரட்சியின் புகழ் பெற்ற தலைவரான சுகர்னோவின் தேசத் தொண்டை உயர்த்தி மதிப்பிடுகையில், இவர் உண்மையான தேசியப் புரட்சியாளராகவும் சுதந்திர இந்தோனேசியாவின் தந்தையாகவும் இருந்தார் என்பதைக் குறிப்பிட வேண்டும்; போருக்குப் பிந்தைய இந்தோனேசியாவின் வரலாற்றில் கிட்டத்தட்ட இருபது வருட காலம் அந்நாட்டு மக்களின் வீரம் மிகுந்த போராட்டத்தின் தலைவராக இவர் இப்போராட்டச் சரித்திரத்தில் என்றென்றும் நிலைத்திருப்பார்.

ஆப்பிரிக்காவின் புகழ் பெற்ற முதல் தேசிய ஜனநாயகவாதிகளில் பாட்ரிஸ் லுமும்பா ஒருவராவார். காங்கோ (ஜாயிர்) நாட்டின் புரட்சி நெருக்கடி வருடங்களில் ஒரு

அரசியல்வாதியாக உருவான இவர், பல்வேறு தேசிய இனங்களும் பழங்குடி மக்களும் நிறைந்த இந்த நாட்டின் சிறந்த முற்போக்கானத் தலைவராக விளங்கினார். தேசிய விடுதலைக்காகப் போராடும் பல மில்லியன் மக்களுக்கு சுதந்திர வேட்கை, தேசபக்தி, வீரம் ஆகியவற்றின் சின்னமாக அவர் திகழ்ந்தார்.

60வது வருடங்களில்—ஆப்பிரிக்க விடுதலை காலத்தில்—குவாமே நுக்ருமா நமது ஆழ்ந்த கவனத்தைக் கவர்ந்தார். சுதந்திரத்திற்காகப் போராடிய ஆப்பிரிக்கப் போராளிகளின் வரிசையில், விஞ்ஞான சோஷலிசத்தின் சில முக்கியமான கோட்பாடுகளை நோக்கி படிப்படியாக வளர்ந்த தன்னுடைய தேசிய சீர்திருத்தவாதத்தால் பிறரிடமிருந்து தனித்து விளங்கினார்.

மேற்கூறப்பட்ட தலைவர்களில் பெரும்பான்மையோருடன் நான் பலமுறை சந்திக்கவும் விடுதலை இயக்கங்களின் அந்தக் கால முக்கிய பிரச்சினைகளைப் பற்றி உரையாடவும் நேர்ந்தது. அவ்வாறே, 1927லேயே ஜவகர்லால் நேருவுடன் நான் அறிமுகம் ஆனேன். பின்னர் 1960-63ம் வருடங்களில் எங்களுடைய அறிமுகம் வளர்ந்தது.

கடைசியாக, இந்தத் தேசிய விடுதலை இயக்கத் தலைவர்களின் பணிகளை இவ்வகையில் ஆராய்வது சோவியத் இலக்கியத்தில் அல்லது வெளிநாட்டு இலக்கியத்தில் வெளிவருவது இதுவே முதல் தடவை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அவர்களின் நடைமுறைப் பணிகளையும் சித்தாந்த நிலைகளையும் கருத்தோட்டங்களையும் பற்றிய விவாதங்கள் அவர்களுடைய சொந்த நாடுகளில் மட்டுமின்றி உலகம் முழுமையிலுமே குறையவில்லை. அவர்களின் வழிமுறைகளின் மீதான ஆர்வம் இன்றும் தணியாமல் உள்ளது.

இப்புத்தகத்தின் மூலம், இந்தப் பிரபல தேசிய விடுதலை இயக்கத் தலைவர்களின் வாழ்க்கையையும் போராட்டங்களையும் பற்றிய ஆராய்ச்சியில் தங்களின் சிறிய பங்கை நிறைவேற்றி இருப்பதாக இதன் ஆசிரியர்கள் நம்புகின்றனர்.

ரோ. அ. உலியானேவ்ஸ்கி.

# மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி

இந்திய தேசிய விடுதலை இயக்கத்தின் மிகவும் பிரசித்தமான தலைவர். காந்தியம் என்ற பெயரிலான போதனையைத் தோற்றுவித்தவர்.

1869ம் வருடம் அக்டோபர் 2ம் தேதி குஜராத்தில் போர்பந்தர் என்ற சுதேச சமஸ்தானத்தில் பிறந்தார். பானியா என்ற வம்சத்து வழிவந்த இவர், இந்து மத வழக்கங்கள் முறையாக, கண்டிப்புடன் பின்பற்றப்பட்ட குடும்பத்தில் வளர்ந்தார். இது அவருடைய உலகக் கண்ணோட்ட வளர்ச்சியின் மீது கணிசமான அளவு தாக்கம் கொண்டிருந்தது. அவருடைய தந்தை கத்தியவார் தீபகற்பத்தின் சில சுதேச சமஸ்தானங்களில் மந்திரியாக இருந்தார்.

காந்தி இங்கிலாந்தில் சட்டக் கல்வி பயின்றார். 1891—1893ம் வருடங்களில் பம்பாய் நகரில் வழக்கறிஞராகத் தொழில் பயிற்சி பெற்றார்.

பின்னர் 1893லிருந்து 1914ம் வருடம் வரை தென்னாப்பிரிக்காவில் குஜராத் வியாபார நிறுவனம் ஒன்றின் சட்ட ஆலோசகராக வேலை செய்தார். அங்கே இந்தியர்களின் மீதான அடக்கு முறையையும் நிறவெறியையும் எதிர்த்து போராட்டங்களைத் தலைமை தாங்கி நடத்தினார். குறிப்பாக அங்கேதான் சத்தியாகிரகப் போராட்ட முறையை வளர்த்தார்.

1915ம் வருடம் ஜனவரி மாதம் இந்தியா திரும்பிய அவர் இந்திய தேசியக் காங்கிரசுடன்

அறிமுகமாகி *1919*ல் அதில் இணைந்து, அதன் மாபெரும் தலைவர்களில் ஒருவராக வளர்ந்தார்.

*1919—1922*ம் வருடங்களில் இந்தியாவில் வெகு ஜன தேசிய விடுதலை இயக்கத்தைத் தலைமை தாங்கி நடத்தினர். பற்பல கூட்டங்களில் கலந்து கொண்டு, ஆங்கில ஆதிக்கத்திற்கு எதிரான அஹிம்சா முறைப் போராட்டத்திற்கு அறைகூவி அழைத்தார். *1920*க்களில் கைத்தொழில், நெசவு ஆகியவற்றின் மறுமலர்ச்சிக்கும் தீண்டாமையை ஒழிப்பதற்காகவும் பிரசாரங்கள் செய்தார்.

*1919—1947*ம் வருடங்களில் இந்திய தேசிய காங்கிரசின் சித்தாந்தவாதியாகவும் அக்கட்சியின் மீது மிகவும் தாக்கம் செலுத்திய தலைவராகவும் விளங்கினர். இவர் தலைமையின்கீழ் இந்திய தேசிய காங்கிரஸ் பரந்த அளவில் மக்களின் ஆதரவைப் பெற்று வெகுஜன கட்சியாக மாறியது. தேசிய விடுதலை இயக்கத்தில் பெருமளவில் மக்களைப் பங்கெடுக்கத் தூண்டியது காந்தியின் தனிச்சிறப்பாக விளங்கியது. அதுவே அவரை ''மகாத்மா'' என்று அனைவரும் அழைக்கும் அளவுக்கு மக்கள் மத்தியில் அவர் புகழடைந்ததற்குக் காரணமாகவும் விளங் கியது.

காந்தி பலமுறை கைது செய்யப்பட்டு சிறை யில் அடைக்கப்பட்டார். *(1922-24, 1930-31, 1942-44*ம் வருடங்கள்.) சிறையிலும் வெளியிலும் ஆங்கிலக் காலனியாதிக்கத்திற்கு எதிராக பலமுறை உண்ணுவிரதமிருந்தார்.

*1942*ம் வருடம் ஆங்கிலக் காலனியாதிக்கத் திற்கு எதிராக ''வெள்ளையனே வெளியேறு!'' என்ற கோஷத்தை முன்வைத்தார்.

இந்தியா, பாகிஸ்தான் என இரண்டு அரசு களாக இந்தியா பிரிக்கப்பட்ட போது *(1947*ம்

வருடம் ஆகஸ்ட் மாதம்), அதன் விளைவாக நடந்த, ஏகாதிபத்தியம் தீய சக்திகள் மற்றும் உள்நாட்டுப் பிற்போக்குவாதிகளினல் தூண்டிவிடப்பட்ட இந்து-முஸ்லிம் கலவரங்களுக்கு எதிராகவும் இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காகவும் பாடுபட்டார்.

ஆர். எஸ். எஸ். என்ற இந்து இனவெறி ஸ்தாபனத்தின் உறுப்பினன் கோட்ஸே என்பவனுல் *1948*ம் வருடம் ஜனவரி மாதம் *30*ம் தேதி சுட்டுக் கொல்லப்பட்டார்.

பழம் பெரும் நாடான இந்தியாவைக் காலனியாதிக்க நுகத்தடியில் இருந்து விடுவிக்க நடந்த கடும் போராட்ட வருடங்கள் இறந்த காலத்திற்குள் சென்று கொண்டிருக்கின் றன. ''கலகம் செய்யும் அரை நிர்வாணப் பக்கிரி'' என்று காலனியதிக்கத்தின் தீவிர ஆதரவாளர் வின்ஸ்டன் சர்ச்சிலால் இழிவாக அழைக்கப்பட்ட, குறிப்பாக ஐரோப்பியர்களின் பார்வையில் மிகவும் முரண்பாடான, வழக்கத்திற்கு மாருன வாழ்க்கையை வாழ்ந்த காந்தியின் மீதான தீவிர ஆர்வம் சற்றே தணிந்துள்ளது. ஆனுல் பல முரண்பாடுகளைத் தன் னுள் கொண்டிருந்தும் ஆச்சரியமான வகையில் பூரணமான இவரின் மீதான ஆர்வமோ அவருடைய சித்தாந்த, அரசியல் பரம்பரையின் மீதான ஆர்வமோ, அவர் இந்தியாவின் வரலாற்றில் வகித்த பங்கு, இந்நாட்டின் பழமைக்கும் எதிர் காலத்திற்கும் அவர் கொண்டிருந்த அணுகுமுறை ஆகியவற் றின் மீதான ஆர்வமோ இன்றும் கூட குறையவில்லை. காந் தியைப் பற்றிய விவாதங்கள் முன்போல அனல் பறப்பவை யாக இல்லாவிட்டாலும், இன்று வரை முடிந்து விடவில்லை, அநேகமாக இன்னும் நெடுங்காலம் தொடர்ந்து நடக்கும். ஏனெனில் காந்தியின் காலம், இந்திய வரலாற்றில் ஒரு யுகம்—அதுவும் நவீன இந்தியா உருவான, இன்று வரையும் பெரும்பாலும் அதன் தோற்றத்தை நிர்ணயிக்கும் மனிதர்கள் உருவான யுகம். இன்றைய இந்தியாவின் எல்லா அரசியல் சக்திகளும் எல்லா சமுதாய அரசியல் சிந்தனைப் போக்குகளும் ஏதாவது ஒரு வகையில் காந்தியுடனுன தங்களுடைய கண் ணேட்டத்தை வகுப்பதற்கு இதுவே காரணம். எந்த ஒரு அரசியல் கட்சிக்கும் அவருடைய கொள்கைகளைத் திரித்துக் காட்டுவது முக்கியமாக உள்ளது.

வெகுஜன மக்களே வரலாற்றைப் படைக்கிருர்கள் என்பது அனைவரும் நெடுங்காலமாக நன்கு அறிந்த விஷயமாகும்.

ஆனால் அது தனி நபர்களால் குறிப்பிடப்படுகிறது. அப்படிப் பட்ட சின்னமாக காந்தியும் அதே போல் அவருக்குப் பின் நேருவும் விளங்கினர். இத்தகைய சின்னங்கள் இந்தியாவின் அரசியல் உணர்வு, அரசியல் வாழ்வு ஆகியவற்றின் பகுதி களாகும். மேலும் இவர்களுடைய பணிகளும் வழிமுறைகளும் காலனி மற்றும் சார்பு நாடுகளின் மக்களை விடுவிக்கும் கட்டத் திற்குப் பொதுவான பல அம்சங்களைக் கொண்டிருந்தபடி யால், இந்தியாவின் எல்லைகளைக் கடந்தும் குறிப்பிடத்தக் கவர்களாக இவர்கள் விளங்கினர்.

இந்திய மக்களின் தேசிய விடுதலைப் போராட்ட காலத்தில் காந்தியால் முன்வைக்கப்பட்ட அரசியல், ஒழுக்கநெறி, தத்துவஞானக் கருத்துக்களின் ஒட்டு மொத்தமான காந்தியம், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆதிக்கத்திற்கு எதிரான பல்லாண் டுகால விடுதலைப் போராட்டத்துடன் இந்திய மக்களின் தேசிய பிரக்ஞையில் பிரிக்க இயலாத வகையில் ஒன்றிணைந்த விஷயம் மட்டுமே அல்ல. காந்தியம் என்பது இன்று சித் தாந்த, அரசியல், வர்க்கப் போராட்டங்களில் அடங்கியுள்ள ஒரு காரணி ஆகும். இன்றைய இந்தியாவின், வெகு ஜனங் களின்மீது தாக்கம் செலுத்துவதற்கான ஒரு சாதனமாக, கிட்டத்தட்ட எல்லா அரசியல் கட்சிகளும் காந்தியத்தைப் பிரயோகிக்கின்றன. எனவேதான் காந்தியத்தையும், அதன் உண்மையான சாரத்தையும் வரலாற்றுப் பங்கையும் ஆராய் வது முக்கியமாகும்.

* * *

தாயகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, தென் ஆப்பிரிக்காவில் வாழ்ந்த இந்தியர்களின் உறுதியான, வீரம் மிகுந்த நிறவெறி எதிர்ப்புப் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்திய போது, 20ம் நூற்றாண்டின் ஆரம்ப காலகட் டத்தில் ஒரு சிந்தனையாளராகவும் சமுதாயத் தலைவராகவும் காந்தி உருவானார்.

அதே சமயத்தில் இந்தியாவில், அசைக்க முடியாதது என அப்போது கருதப்பட்ட ஆங்கிலக் காலனியாதிக்கத்திற்கு எதிராக தேசிய விடுதலை இயக்கம் பிறக்க ஆரம்பித்தது. அப்போதே அந்த இயக்கத்தில் இரண்டு அடிப்படைப் போக் குகள் தோன்றின. முதலாளித்துவ வளர்ச்சிப் பாதைக்கு ஆதரவு அளித்த பணக்கார வர்க்க மேற்குடியினருடன் பெரும்

பாலும் தொடர்பு கொண்ட மிதவாதிகள், மக்களிடையே முற்றி வந்த தேசிய அடிமை முறை எதிர்ப்பைப் பிரதிபலித்த தீவிர தேசியவாத, ஜனநாயகவாதிகள் என இரு பிரிவுகள் தோன்றின. அப்போது உருவாகிக் கொண்டிருந்த தேசிய முதலாளி வர்க்கமும் இவ்வெதிர்ப்புத் தன்மையைப் பரந்த அளவில் கொண்டிருந்தது.

தேசிய விடுதலை இயக்கத்தின் முன்னணித் தலைவர்கள் காலனி ஆட்சிக்கு எதிரான முடிவான போராட்டத்திற்கு மக்களை அறைகூவி அழைத்தனர். மத்திய காலத்தை ஒத்த சமூக ஒடுக்குமுறை, நிலப்பிரபுக்கள் மற்றும் கடுவட்டிக்காரர்களின் கொடுமை, வளர்ந்து வரும் முதலாளித்துவத் தொழில் நிறுவனங்களின் கருணையற்ற சுரண்டல் ஆகியவற்றிலிருந்து விடுதலை பெற இவர்கள் உதவுவார்கள் என வெகு ஜனங்கள் இவர்கள் மீது நம்பிக்கை வைத்தனர். ஆனால் இத்தலைவர்களின் ஜனநாயகவாதம் வர்க்க முரண்பாடுகளை தவிர்க்க முடியாமல் மூடிமறைத்து குறைந்தபட்ச சமூக சமரசத்திற்கு வழி வகுக்கக் கூடிய, சுரண்டப்பட்ட தேசிய இனத்தின் பூர்ஷ்வா தேசியவாதத்தின் எல்லைக்குள் வழக்கமாக அடங்கியிருந்தது.

இந்தக் காலகட்டத்தில் இந்தியாவில் தேசியவாதப் பிரக்ஞையும், சமூக முரண்பாடுகளின் சீர்கேடும் வளர்ச்சியடைந்தன. முதலாளித்துவ உறவுகளின் வளர்ச்சியின் ஆரம்பக் கட்டத்தில் அன்னிய முதலீட்டின் உதவியாலும் உள்நாட்டு முதலாளித்துவத்தின் சர்வதிசை ஊடுருவலாலும், பரம்பரை ஐதீகங்களின் அழிவும், விவசாய வெகு ஜனங்களின் அழிவும் ஆரம்பமாயின. தேசியவாத, நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறையின்மேல் மக்களிடையே வெறுப்பு வளர்ந்தது. இந்நிலைமைகளில் இந்திய அறிவு ஜீவிகளின் ஒரு பகுதியினர் மறுமலர்ச்சி சிந்தனைகள், மிதவாத முதலாளித்துவ சமூக சிந்தனைகள் ஆகியவற்றை மட்டும் அல்லாது முதலாளித்துவ சமுதாயத்தைப் பற்றிய விமர்சனங்களையும் அறிந்திருந்தனர் என்ற உண்மை, தேசிய முற்போக்குச் சக்திகளின் கொள்கைப் போக்கை நிர்ணயம் செய்தது. அத்துடன் ஒரு கற்பனை சமுதாயத்தைப் பற்றிய கருத்துக்கள், அவை கற்பனாவாதமாகவே நிலைத்து விட்ட போதிலும், சுரண்டலும், ஒடுக்குமுறையும் இல்லாத அப்படிப்பட்ட ஒரு சமுதாயத்தைப் பற்றிய கனவு பிறக்கவும் வழிவகுத்தது.

காந்தியத்தின் மிக முக்கியமான அம்சங்களாக, அதன் சமூக இலட்சியமான சர்வோதயமும்—அதாவது ''அனைவரும் நலமுடன் வாழும் சமுதாயம்'', அத்தகைய சமுதாயத்தை அடைவதற்கான வழிமுறையாக சத்தியாகிரஹமும் விளங்கு கின்றன. இவை இரண்டுமே இந்திய விவசாயிகளின் மரபு களுடனான தொடர்பின் மூலமாக வெளிப்பட்டவை ஆகும்.

காந்தியின் சமூக இலட்சியம்—இது ஒரு குட்டி முதலாளித் துவ, விவசாயக் கற்பனாவாதம்—கடவுளின் ராஜ்ஜியத்தை பூமியில் நிறுவுவதாகும். அவர் வெறுத்த ஐரோப்பிய இயந்திர நாகரிகத்தையும், கிராமப் பண்பாட்டிற்குப் பாதகமான, விவசாய-சிறுதொழில் சமூகத்தின் அழிவுக்கும் காரணமான சந்தைப் பொருளாதார உறவுகளை மறுப்பதன் மூலமும், தன்னிறைவான விவசாய சமுதாயங்களின் ''பொற்காலத் தைக்'' கொண்டுவருவதன் மூலமும் சமூக ஒழுங்குமுறையை நிலைநாட்ட காந்தி திட்டமிட்டார்.

காந்தியின் சர்வோதயக் கோட்பாடு என்பது இந்துமதப் புனித நூல்களில் பரந்த அளவில் அழகாகவும், கவர்ச்சிகர மாகவும் விவரிக்கப்பட்டுள்ள ஒரு கற்பனை சமுதாயத்தைப் பற்றி அன்னிய ஆட்சியாளர்களாலும், உள்நாட்டுச் சொந்த நிலப்பிரபுக்களாலும், வியாபாரிகளாலும் நசுக்கப்பட்ட விவ சாயிகள், கிராமக் கைத்தொழிலாளர்கள், நாட்டுப்புற ஏழைகள், கீழ்ப்படி உத்தியோகஸ்தர்கள் ஆகியவர்கள் கொண் டிருந்த ஏக்கம் ஆகும். அத்தகைய சமுதாயத்தைப் பற்றிய வர்ணனையை இந்திய மக்களின் பலதரப்பட்ட பரம்பரை ஐதீகங்களிலும், பழங்குடி மக்களின் மிச்சசொச்சங்களிலும் கலாச்சார, வரலாற்று நினைவுச் சின்னங்களிலும் காண முயன்றனர்.

அதே சமயம் சர்வோதயமானது நியாயமான சமுதாய மாற்றத்திற்கான உண்மையான, விஞ்ஞான பூர்வமான வழி களை அறியாத, தாங்கள் வாழும் தாங்க முடியாத சமூக, பொருளாயதச் சூழ்நிலைமைகளிலிருந்து விடுபட வழியைத் தேடினாலும் அதைக் கண்டுபிடிக்க இயலாத சமூகப் பிரிவுகள் முதலாளித்துவ அமைப்பிற்கு எதிராகத் தெரிவிக்கும் முழுதும் இயற்கையான, நியாயமான, நேர்மையான எதிர்ப்புணர்ச்சி ஆகும். இந்த எதிர்ப்பு அவமானகரமான ஜாதி அமைப்பின் கொடூரத்திற்கும் நிலப்பிரபுக்களின் கொடூரத்திற்கும் வட்டி வாங்குவோரின் கொடுமைக்கும் ஆளான பலகோடி இந்திய

மக்களின் அளவிட முடியாத துன்பத்தைப் பிரதிபலிக்கின்றது. அவர்கள் தங்களின் நிலையை இதுவரை உணர்ந்து கொள்ளாததால், அவர்கள் வெறுக்கும் ''ஐரோப்பிய'' முதலாளித்துவ நாகரிகத்தில் பிறந்த புரட்சிகர உழைக்கும் வர்க்கத்துடனுன உறுதியான ஒற்றுமையில்தான் தீர்வு அடங்கியுள்ளது என்பதை இதுவரையும் புரிந்து கொள்ளவில்லை. இதுவரையான சமுதாயங்களுடன் ஒப்பிடுகையில் இந்த நாகரிகத்திற்கு உள்ள முற்போக்குத் தன்மையும், தவிர்க்க இயலா தன்மையும் காந்தியத்தில் மறுக்கப்படுகின்றன. காந்தியம், இந்திய விவசாயி மற்றும் கைத்தொழிலாளியின் அதீத கற்பனுவாத ஆரம்பநிலைச் சமூக அமைப்புகளைப் பற்றிய கற்பனைகள் என்றைக்குமே நிறைவேருது என்ற சோக நினைவுகளைத் தருகின்றது.

தெளிவான கற்பனுவாதத்தையும், புராதனத் தன்மையையும் தன்னுள் கொண்டிருந்த போதிலும், காந்திய இலட்சியம்—சர்வோதயம்—இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தில் யதார்த்தமாக ஒரு சாதகமான பங்கு வகித்தது. பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை அடைவதற்கான போராட்டம் மிகவும் இன்றியமையாதது என்ற உணர்வையும், சமுதாய நீதியை நிலைநிறுத்துவதற்கும் நீண்டகாலமாக விவசாயிகளும், நகரக் குடிமக்களும் உண்மையாக்க ஏங்கிய கொள்கைகளின்மேல் கட்டப்பட்ட ஒரு புதிய சமுதாயத்திற்குமான போராட்டமாகவும் அது விளங்கியது என்ற உணர்வையும் அவர்களுக்குக் காந்தியம் அளித்தது. காந்தி மிகவும் உண்மையாகவும் நேர்மையாகவும் காலனி ஆதிக்கவாதிகளுக்கு எதிரான போராட்டத்தைச் சர்வோதயத்தின் நிறைவேற்றத்துடன் இணைத்தார்.

1947ம் ஆண்டு ஏகாதிபத்திய ஆட்சியை அகற்றி அதிலிருந்து விடுதலை அடைந்தது இந்திய மக்களின் மாபெரும் வரலாற்று வெற்றி ஆகும். இந்த வெற்றி, அம்மக்களின் பெரு மதிப்பிற்குரிய காந்தியின் பெயரோடு பிரிக்க முடியாதபடி ஒன்றிணைந்தது. ஆனுல் இந்த விடுதலை காந்தியத்தின் சர்வோதயத்தைக் கொண்டு வரவில்லை.

காலனிமுறை சுரண்டலுக்கு எதிரான அஹிம்சா முறைப் போராட்டம் இந்தியாவின் ஆன்மீகப் பாரம்பரியத்தை, இந்திய விவசாயியின் மனப்போக்கை அஸ்திவாரமாகக் கொண்டது. காந்தியின் சமூக இலட்சியத்தைப் போலவே, அது

பல நூற்றுண்டுகளாக வேரூன்றிய மதக் கண்ணேட்டத்துடன் வாழ்ந்த இந்திய விவசாயியின் தன்மைகளின் விசேஷ அம்சங் களான அளவிட முடியாத பொறுமை, எதிர்ப்புணர்ச்சி, இயற்கையான புரட்சி உணர்வு, அதே சமயம் பழமைப்பற்று ஆகியவற்றின் கலவை ஆகும்.

காந்தியத்தின் இந்த அம்சங்கள் அவருடைய சுதேசிக் கோட்பாட்டில் தெளிவாக விளக்கப்படுகின்றன. சுதேசிக் கோட்பாட்டின் மூன்று அம்சங்களான மதம், அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றில் பழங்கால வழக்கங்களையும், ஸ்தாபனங்களையும் பாதுகாத்துப் படிப்படியாக அஹிம்சா வழியில் அவற்றிற்கு புதுச் சாரத்தைத் தரும் கருத்துகள் ஊடுருவி நிற்கின்றன. இவற்றில் நிகழ்காலத்தில் ஒரு திருப் தியின்மையும், அற்புதமான பழமையின் மீதான நம்பிக் கையும், பழமைக்குத் திரும்புவதைத் தவிர பிற எல்லா சாத்தியங்களின் மறுப்பும், அதே சமயம் ஒரு தீவிர மாற் றத்தின் மீதான அச்சமும் ஒன்றிணைந்திருப்பதைக் காண லாம். இவையனைத்தும், பரம்பரை சமுதாயத்தின் மிச்ச சொச்சங்களைப் பெரிய அளவில் கொண்டுள்ள விவசாய வர்க்க மனவியலின் தனி அம்சங்களாகும். ஒரு சராசரி இந்தியனின் தன்னுணர்வில் இது உள்ள அளவு யதார்த்த பொருளாதார வாழ்வில் இல்லை என்பது உண்மையே.

தேசிய கலாச்சார, வரலாற்று, மதப் பாரம்பரியங்களின் மீதான விசுவாசம், விவசாயிகளுக்கும், கைத்தொழிலாளர் களுக்கும் நெருக்கமான வடிவங்களை அவற்றில் கண்டறியும் திறமை, ஆன்மீக வாழ்க்கையை நேரடியாகச் சுதந்திர தேசிய வளர்ச்சி மற்றும் சமுதாய மாற்றத்தின் தேவை களுடன் இணைக்கும் ஆற்றல் ஆகியவை ஒரு சித்தாந்தம் என்ற வகையிலும் அரசியல் நடைமுறைக் கொள்கை என்ற வகையிலும் காந்தியத்தின் சிறப்பான, வலிமையான அம்சங் களாகும். மக்கள் சம்பிரதாயங்களின் மீதான இந்த விசு வாசத்திலும் நேர்மையான வாழ்க்கையைப் பற்றிய கற்பனை யிலும்தான் இந்திய மக்களிடம் காந்திய சித்தாந்தம், அவரு டைய தனித்தன்மை ஆகியவற்றிற்கு உள்ள அளவிட முடியாத செல்வாக்கின் ரகசியம் அடங்கியுள்ளது.

மேலே குறிப்பிட்ட காரணங்களால் காந்தியம் ஒரு ஆழ்ந்த தேசிய, இயற்கையில் பெரும்பாலும் குட்டி முத லாளித்துவ, சித்தாந்தமாக விளங்குவதைக் காணலாம்.

காந்தியத்திற்கும், இந்திய தேசிய முதலாளித்துவத்தின் வர்க்க நலன்களுக்குமிடையில் உள்ள நெருங்கிய தொடர்பையும், இந்திய தேசிய முதலாளித்துவம் தன்னுடைய வர்க்க நலன்களுக்கு காந்தியச் சித்தாந்தம் மற்றும் நடைமுறையை பயன்படுத்திக் கொண்டதையும் சுட்டிக்காட்டும் மார்க்சிய ஆராய்ச்சியாளர்களின் சாதனைகளை, காந்தியத்தைப் பற்றிய விவாதத்திற்குரிய இக்கருத்து குறைக்கக் கூடாது. அதே சமயம், காந்தியத்திற்கும் இந்திய தேசிய முதலாளித்துவத்திற்கும் இடையேயான தொடர்பு வழக்கமாகக் கருதப்பட்டதை விட மிகவும் சிக்கலானதாகவும், குறைந்தபட்சம் அவ்வளவு நேரடியானதாகவும், எளிமையானதாகவும் இருக்கவில்லை என்பதை மார்க்சியவாதிகள் அழுத்திக் கூறுகின்றனர்.

பரம்பரை வழக்கத்தில் பிடிப்புள்ள விவசாயிக்கு உள்ள ''பொற்காலத்தைப்'' பற்றிய கனவைப் பகிர்ந்து கொண்டு, அதே நேரத்தில் அதை நடைமுறையாக்க ஒன்றுமே செய்யாதது மட்டுமல்லாமல், நிலப் பிரச்சினைக்கான தீர்வை சுதந்திரம் அடையும் வரையில் தள்ளி வைப்பதன் அவசியத்தை காந்தி வலியுறுத்தி வந்ததில்தான் காந்தியத்தின் மிகப்பெரும் முரண்பாடு அடங்கியுள்ளது. வெகுஜன மக்களிடம் தனக்கிருந்த அசாதாரணச் செல்வாக்கின் உதவியால், தேசிய விடுதலைப் போராட்டத்தின் முதலாளித்துவத் தலைமை இதை அடைவதற்கு காந்தி பெரிய அளவில் உதவினார். உண்மையில் இக்குறிக்கோள்களுக்குதான் சர்வோதயத்தைப் பற்றிய கனவும் அஹிம்சாக் கொள்கையும் பயன்பட்டன.

காந்தியம் முழுமையான அரசியல் ஸ்தாபனச் செல்வாக்கு செலுத்திய 1918-47ம் வருடங்களில் இந்திய மக்களின் விடுதலைப் போராட்டத்தில் ஒரு மிக முக்கிய, விசேஷ அம்சம் உள்ளது. இந்த முப்பது வருட காலத்தில் இந்திய முதலாளித்துவத்தால் தேசிய விடுதலை இயக்கத்தையும் நிலச் சீர்திருத்தத்திற்கான விவசாயிகளின் போராட்டத்தையும் பிரித்து தனிமைப்படுத்த முடிந்ததே அந்த அம்சமாகும். அத்தகைய பிரிவு அசாத்தியமானதாகவும் இயற்கைக்கு ஒவ்வாததாகவும் காணப்படலாம். ஏனெனில் காலனி-நிலப்பிரபுத்துவ அமைப்பும் சுரண்டலும் அன்னிய ஆக்கிரமிப்பாளர்கள், பெரிய அன்னிய மூலதனம், பெரிய இந்திய நிலப்பிரபுக்கள் மற்றும் சிறிய நில உடைமையாளர்கள் ஆகியோருக்கு இடையிலான

நீண்டகால அரசியல் கூட்டின்மீது நின்று கொண்டிருந்தது. ஆளும் சக்திகளின் இந்த ஐக்கியமே—அன்னிய ஆட்சியாளர்களுக்கும் அவர்களின் உள்நாட்டு பிற்போக்குவாத உதவியாளர்களுக்கும் இடையேயான ஐக்கியம்தான்—தேசிய விடுதலை, விவசாய, முதலாளித்துவ-ஜனநாயக புரட்சியால் தூக்கி எறியப்பட வேண்டிய ஒன்ருக இருந்தது.

எவ்வாருயினும் இந்தியாவில் இது நடக்கவில்லை. ஏகாதிபத்திய எதிர்ப்புப்புரட்சியின் மையமாக விவசாயப் புரட்சி விளங்கவில்லை. இந்த இரண்டு புரட்சிகளும் ஒன்றிணையவில்லை என்பதுடன் ஒன்றிற்கொன்று உதவிக் கொள்ளவும் இல்லை. தேசிய விடுதலைப் புரட்சி ஒரே நேரத்தில் விவசாயப் புரட்சியாகவும் விளங்க வேண்டியதற்கு முக்கியத் தேவையான ஐக்கியம் இவற்றிற்கிடையே நிலவவில்லை. புரட்சிப் போக்கின் அத்தகைய வளர்ச்சியை இந்திய முதலாளித்துவம் ஏன் தவிர்த்தது?

இந்திய முதலாளி வர்க்கங்களின் கணிசமான பகுதி, நகரக் குட்டி முதலாளிகள் உட்பட, ''பிரதேச மயமாக்கப்பட்டது''. இந்தியாவின் சுயமான இயந்திரத் தொழில் வளர்ச்சிக்கு பிரிட்டனின் மூலதனத்தால் தொடர்ந்த தடங்கல் இருந்தமையால் புதிதாகத் தோன்றிக் கொண்டிருந்த முதலாளித்துவத்திற்கு நிலத்தை உடைமையாக்கிக் கொண்டு அங்கேயே தங்க வேண்டியதாகி விட்டது. அத்துடன் நிலத்தில் முதலீடு செய்வது, பெரிய அளவு நவீன வேளாண்மை முறையில் லாபமுடையதாகவும், முக்கியமாக பிரிட்டிஷ் ஆட்சிகால முழுமையிலும் பாதுகாப்பானதாகவும் இருந்தது.

இந்திய முதலாளித்துவம் இந்தவகை முதலீட்டில் மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டது என்று கூறுவதாக இதற்கு நிச்சயமாகப் பொருளாகாது. தேசிய மூலதனத்தின் வளர்ச்சியுடன் முதலீடுகள் இயந்திரத் தொழிற்சாலை, வாணிபம், வங்கிகள் உட்பட பல உள்துறைகள், பண்ணை ஆகியவற்றில் மேலும் மேலும் திசை திருப்பப்பட்டன. ஆனுல் இந்திய மூலதனத்தின் எல்லா வகைகளும்—மத்தியகால வகையில் அடங்கிய வியாபாரி, வட்டி வாங்குவோர் ஆகியோரின் மூலதனம், இயந்திரத் தொழில், வங்கி மற்றும் ஏகபோக முதலாளித்துவத்திற்கும் முந்தைய மூலதனவகையில் அடங்கிய ஆரம்பகால வகைகளும்—நில உடைமை, சிறிய, அடிமைப்பட்ட விவசாயி

களின் சுரண்டல் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டவையாக இருந்தன. இந்தச் சுரண்டலுக்குக் காலனி ஆதிக்கவாளர்களின் ஆட்சியினுல், அவர்களின் பலம் வாய்ந்த அடக்கு முறையினுலும், பரந்த ராணுவ ஆக்கிரமிப்பாலும் உத்தர வாதமளிக்கப்பட்டது.

இந்திய தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் இந்தத் தனித் தன்மை, கிராமப்புறத்தில் நிலப்பிரபுத்துவத்தின் மிச்சசொச்சங்கள் இருந்த நிலைமையிலிருந்து அதனுடைய உபாய வழியை நிர்ணயிப்பதில் அடங்கியுள்ளது. சுரண்டப்பட்ட தேசியத்தின் மேலே குறிப்பிடப்பட்ட அரசியல் வளர்ச்சி—அனைத்திற்கும் முதலாக முதலாளித்துவ தேசியவாதத்தின் பங்கு—வர்க்கங்களுக்கிடையேயான முரண்பாட்டை மட்டுமின்றி உடைமை வர்க்கங்களுக்கிடையேயான முரண்பாடுகளையும் மங்கச் செய்த இந்த பங்கு—ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தில், அரசியல் சக்திகளின் உடன்பாட்டின் மேல் ஒரு தாக்கம் கொண்டிருந்தது. அத்தாக்கம் விவசாயிகள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் பூர்ஷ்வாக்களின் சூழ்ச்சிக்கு இடமளித்தது. தேசிய விடுதலைக்கான ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்துடன் ஒரே நேரத்தில் நிலப்பிரபுத்துவத்திற்கு எதிரான விவசாய இயக்கத்தை வளர்ப்பதற்கான அவசியத்தில் சிக்கிக் கொள்ளாமல் இருக்க இந்திய முதலாளித்துவம் இதைப் பயன்படுத்திக் கொண்டது.

இவை எல்லாம் இந்திய விவசாயிகளைப் படுவேதனைக்கு ஆளாக்கிக் கொண்டிருந்த நிலச்சுவான்தார்களுக்கு எதிரான தீவிர போராட்டத்திலிருந்து இந்திய பூர்ஷ்வா விலகிக் கொள்ளவும், நிலச்சுவான்தார்களுடன் உடன்படிக்கை செய்து கொள்ளவும், இந்திய முதலாளித்துவம் ஆட்சிக்கு வந்த பிறகு படிப்படியான சீர்திருத்தப் பாதையை தேர்ந்தெடுத்துக் கொள்ளவும் உதவின. விவசாயிக்கோ இது நில உடைமைச் சமுதாயத்தின் மிச்சசொச்சங்களில் இருந்து வேதனையுடன் மெதுவாக விடுதலை அடைவதாக இருந்தது.

நிலப்பிரபுத்துவ அமைப்பிற்கு எதிராயிராத ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தை, விவசாயிகளின் தலைமையை ஏற்றுக் கொண்டு, அவர்களை அப்போராட்டத்தில் வழி நடத்தத் தேவையான அரசியல் செல்வாக்கும், வெகுஜன அரசியல் ஸ்தாபனமும் உடையவராக விளங்கிய அரசியல் தலைவர் யார்?

அத்தகைய தலைவராக காந்தி விளங்கினர். 500,000 இந்திய கிராமங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட, விவசாயிகளின் வாழ்க்கையை அவரைவிட நன்கு உணர்ந்த தலைவர் எவரும் இருக்கவில்லை. விவசாயிகள் அவரை மகாத்மா என்றழைத்தனர். சுருக்கமாக, புனிதமானவராகக் கருதினர். விவசாயிகளின் முதிர்ச்சியடைந்த சமூக எதிர்ப்பையும், அவர்களுடைய சமூக நம்பிக்கைகளையும், வி.இ. லெனின் கூறியது போல் எளிமையான பரம்பரைப் பிடிப்பு மிக்க கிராமத்தின் தளர்வையும் தனக்கேயுரித்தான வகையில் பிரதிபலித்த காந்தி அதே நேரத்தில் வர்க்கத் தலைமையில் தேசிய முதலாளித்துவ விடுதலை இயக்கத்தின் தலைவராகவே விளங்கினர். விவசாயிகளின் விழிப்பையும், அவர்களின் புரட்சிகர உள்ளாற்றலையும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் விவசாய சமூகப் புரட்சியாகிவிடாமல் தடுத்து, தேசிய சுதந்திரத்தை மட்டும் அடையப் பயன்படுத்திக் கொள்ள காந்தியாலும் இந்திய தேசிய காங்கிரசாலும் முடிந்தது.

கிட்டத்தட்ட 80 சதவிகித ஜனத்தொகை கிராமப் புறங்களில் வாழ்ந்த நாட்டைப் பற்றியல்லவா பேசப்படுகிறது. ஆட்சிக்கு வந்த பின்புதான் இந்திய சமூக அமைப்பை சீர்திருத்த பூர்ஷ்வா வர்க்கம் விழைந்தது. அப்போதும் விவசாயி அல்லது சாதாரண மக்களின் வழியில் அல்லாமல், தன்னுடைய சொந்த வழியில், சரியாகக் கூறினுல், விவசாயிகளில் பெரும்பான்மையினரின் நலன்களுக்காக அல்லாமல் தன் சொந்த நலன்களுக்காகச் செய்ய விழைந்தது. அப்போது தான் நிலச்சுவான்தார்கள் பூர்ஷ்வாக்களாக மாற வகை செய்து கிராமப்புறத்தை தன்னுடைய ஆளுகைக்குள் படிப்படியாகச் சீர்திருத்த முறைகளில் கொணர முடியும் என்ற எண்ணத்திலும் பணக்கார விவசாயிகள் உழைக்கும் மக்களை விரைவாக மேலும் மேலும் சுரண்டுவதன் மூலம் பூர்ஷ்வாக்களாக வழி செய்ய வேண்டும் என்ற ஏற்கெனவே வளர்ந்திருந்த பூர்ஷ்வாவின் எண்ணத்திலும் இது இயங்கியது. இந்திய பூர்ஷ்வா சுதந்திரத்திற்குப் பின் எப்படி, எந்த அளவிற்கு இதில் வெற்றி அடைந்தது என்பது வேறு விஷயம், அதுவும் பலமுறை விரிவாக எழுதப்பட்ட ஒன்று. இந்திய வேளாண்மையில் முதலாளித்துவம் கணிசமான அளவு வளர்ந்துள்ள போதிலும், பூர்ஷ்வாச் சீர்திருத்தம் விவசாயப்

பிரச்சினையை முழுமையாகத் தீர்க்கவில்லை என்பதை மட்டும் இங்கே குறிப்பிடுவோம். ஏழை விவசாயிகள்—சிறு உடைமை யாளர்கள் அல்லது குத்தகையாளர்கள்—இந்தியக் கிராமத்தில் பெருத்த அளவில் இன்னும் நிறைந்துள்ளனர். அதே சமயத்தில் விவசாயத் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் கணிசமான அளவில் பெருகியுள்ளதானது கிராம வாழ்க்கையில் பல புதிய அம்சங்களைக் கொணர்ந்துள்ளது.

எந்தவொரு தேசிய விடுதலை இயக்கத்திலும் இருக்கும் இரண்டு போக்குகளை—புரட்சி-ஜனநாயகப் போக்கு, முதலா ளித்துவ-தேசியவாத சீர்திருத்தப் போக்கு—இவற்றைப் பற் றியும், தேசிய முதலாளித்துவத்தின் இரட்டைவேட அரசியல் பாத்திரத்தையும் பற்றிய மார்க்சிய-லெனினியத்தின் நிலை இந்திய உதாரணத்தில் உறுதிப்படுத்தப்படுகின்றது. இந்த இரண்டு போக்குகளும் அன்னிய ஆட்சியை நீக்குவதை நோக் கமாகக் கொண்டவை என்பதில் இரண்டும் பொதுவான குறிக்கோளை உடையன. இதன் அடிப்படையில் இந்த இரண்டு போக்குகளுக்கும் இடையில் இயற்கையான கூட்டு ஏற்படுகிறது. தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கெ டுத்துக் கொள்ளும் எல்லா சக்திகளின் ஒன்றிணைந்த ஏகாதி பத்திய எதிர்ப்பு முன்னணியானது, தேசிய சுதந்திரத்தை அடைவதற்கும் அதைக் கெட்டிப்படுத்துவதற்கும் தேவையான முக்கி யமான காரணமாக எப்போதும் விளங்குகிறது. ஆனால் புரட்சிகர-ஜனநாயகப் போக்கானது தேசிய விடுதலைப் போராட்ட வழியில் விவசாயப் புரட்சிப் பிரச்சினையை முன்வைத்து, பின்னர் மக்களின் நலனுக்கான பிற சமூக மாற்றங்களைக் கொணர முயற்சிக்குமேயானால், ஆட்சியைப் பற்றிய கேள்வியை விவசாய, சமூகப் பிரச்சினைகளிலிருந்து தனித் துப் பிரிக்கும் குறிக்கோளுடன் பூர்ஷ்வா சீர்திருத்தப் போக்கு அம்முயற்சிகளை ஒத்திவைக்கும்.

பிரிட்டனின் அரசியல் ஆதிக்கத்தை நீக்குதல், காந்தியின் தலைமையிலான வெகுஜன இயக்கத்தின் உதவியுடன் தன் னுடைய சொந்த ஆட்சியை அமைதியான வழியில் நிறுவுதல் என்ற அதனுடைய அடிப்படை வர்க்க நலன்களுக்கு காந்திய சித்தாந்தம் பதிலளிக்காமல் இருந்திருக்குமேயானால், இந்திய தேசிய முதலாளித்துவம், அச்சித்தாந்தத்தைத் தன்னுடைய ஆயுதமாகக் கொண்டிருக்காது. பொதுத் தேசிய இயக்கமாக, முக்கியமாக தன்னுடைய வர்க்கக் குறிக்கோள்களுக்கு அந்த

இயக்கத்தை, இந்திய தேசிய முதலாளித்துவம் பயன்படுத்திக் கொண்டது. காந்தியத்தையும் தேசிய பூர்ஷ்வாவையும் நெருங்க வைத்த காரணிகள் பல. இந்திய சுதந்திரத்திற்கான காலனி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டப் பிரச்சினைகள் மட்டுமின்றி, குட்டி முதலாளித்துவ, முதலாளித்துவ சித்தாந்தங்களுக்கிடையிலான இயற்கையான வர்க்கப் பொதுமை— முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையில் செல்லும் ஒரு நாட்டின் ''விவசாயச் சோஷலிசக் கற்பனுவாத'' பூர்ஷ்வாத் தன்மை— அவற்றின் நெருக்கத்தை நிர்ணயித்தது.

நிச்சயமாக, காந்தியச் சித்தாந்தமான அஹிம்சா முறை விவசாயிகளின் மதக் கண்ணேட்டத்துடன் உறுதியான தொடர்பு கொண்டது. அது வெகுஜன விடுதலைப் போராட்டத்தை வளர்க்கவும், விவசாயிகள், நகர்ப்புற குட்டி முதலாளிகள் ஆகியோர் தேசிய பூர்ஷ்வாக்கள் பக்கம் சேரவும் அனுகூலமாக இருந்தது. காலனி ஆதிக்கவாதிகளுக்கு எதிராக, அவர்களை நாட்டை விட்டு வெளியேற நிர்பந்திக்கும் வகையில் வெகுஜன மக்கள் பயன்படுத்தக் கூடிய, அதே சமயம் மக்களின் மீதான தனது வர்க்கக் கண்காணிப்பைப் பாதுகாக்கும் ஒரு சாதனத்தை அஹிம்சாக் கொள்கையில் தேசிய முதலாளித்துவம் கண்டறிந்தது. முதலாளித்துவ இந்திய தேசிய காங்கிரசுடனை அரசியல் கூட்டினுலும் நீண்டகாலத்திற்கு அதனுடைய பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட ஒரே தலைவராக காந்தி விளங்கியதாலும் அவருடைய சித்தாந்தங்களிலும் பணிகளிலும் இருந்த குட்டி முதலாளித்துவ அம்சங்கள், இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டன என்பதை மறக்கக் கூடாது.

சிந்தாந்தவாதியாகவும், கற்பனுவாதியாகவும் விளங்கிய காந்தியின் கண்ணேட்டம் இந்திய கிராமத்தை மூலமாகக் கொண்டிருந்தது. தெளிந்த அறிவும் தொலை நோக்கும் கொண்டிருந்த இந்த அரசியல்வாதி, எதார்த்தத்தில் பொதுத் தேசியக் குறிக்கோள்களைப் பிரதிபலிக்கும் வகையில் தொடர்ந்து செயலாற்றிய தேசிய பூர்ஷ்வாவின் நலன்களுக்காகவே இயங்கினுர். காந்தி தன்னுள் ஒருங்கே கொண்டிருந்த இந்தத் தன்மைகளும், விவசாயிகளுக்கு இயல்பான அம்சங்களை அவர் தன்னுடைய சித்தாந்தத்தில் முழுமையாகவும் தொடர்ந்தும் காட்ட அனுகூலமாக இருக்கவில்லை. ஆனுல் இவ்வியல்புகள் பொதுத் தேசிய, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில்

பங்கெடுத்துக் கொண்ட பல தரப்பட்ட வர்க்கங்களுக்கும் சமூக வகுப்புகளுக்கும் இயல்பான முரண்பாடுகளுடன் காந்தியைப் பலமுறை உடன்பாடு செய்து கொள்ள வைத்தன. இதனுல்தான் இந்திய விடுதலே இயக்கத்தில் தேசிய முதலாளித்துவ நலன்களின் எதார்த்தமான வெளியீட்டை மட்டுமே காந்தியத்தில் பார்ப்பது சரியல்ல. இதை விடப் பரந்தும், இத்தகைய மதிப்பீட்டுடன் முரண்படக் கூடிய பல அம்சங்களேக் காந்தியம் தன்னுள் கொண்டும் உள்ளது. இந்திய விடுதலே இயக்கத்தில் நிகழ்ந்த சிக்கலான பல சம்பவங்களின் தொகுப்பாக மட்டுமின்றி அதில் பங்கெடுத்துக் கொண்ட சக்திகள் ஆகியவற்றைக் கொண்டதாக விளங்குகிறது காந்தியம். இந்தச் சக்திகளின் பொது நலன்கள் மட்டுமின்றி அவற்றின் வித்தியாசங்களேயும் முரண்பாடுகளேயும்கூட அது தன்னுள் கொண்டுள்ளது. காந்தியம் ஒரு விவசாய நாட்டு தேசிய வாழ்க்கையின் புலப்பாடாக இருந்ததால் முதலாளித்துவ வர்க்க நலன்களின் வரம்புகளேத்தாண்டி நிற்கும் சமூக நியாயத்தின் பாலான இந்திய உழைப்பாளிகளின் தன்னிச்சையான நாட்டத்தை அதனுல் பிரதிபலிக்காமல் இருக்க முடியவில்லே.

காந்தியத்தின் இந்த அம்சங்களேக் கணக்கில் கொள்ளாமல், இந்திய மக்களுடன் காந்தி கொண்டிருந்த அசாதாரண நெருக்கத்திற்குக் காரணமான அவருடைய வரலாற்றுப் பங்கை முழுமையாகப் புரிந்து கொள்வது இயலாத ஒன்ருகும். இந்த நெருக்கத்தில்தான் அவருடைய செல்வாக்கின் ரகசியம் அடங்கியுள்ளது. பூர்ஷ்வாப் பிரதிநிதிகளுடன் சித்தாந்த-அரசியல் ரீதியாக இணைந்திருந்த போதிலும் காந்தி, வெகுஜன மக்களுடனும் உழைப்பாளிகளுடனும் எப்போதும் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ள உண்மையாக முயன்ருர். மேலும், இந்திய தேசிய காங்கிரசில் அவருடைய தலைமைப் பதவியும், சிறப்பான பங்கும் இந்த நெருக்கத்திலுலேயே நிர்ணயிக்கப்பட்டன. காந்தியின் பங்கைப் புரிந்து கொள்ளவும், தேசிய முதலாளித்துவத்துடனும் விவசாயிகளுடனும் அவர் கொண்டிருந்த பரஸ்பரத் தொடர்பைச் சித்தரிக்கவும் **சீனுவில் ஜனநாயகமும் நரோதியமும்** என்ற கட்டுரையில் வி. இ. லெனின் முன்வைக்கும் நிலே முக்கியக் கருத்துடையது: ‘‘வரலாற்று ரீதியாக முற்போக்குச் செயல்களில் இன்னும் திறன் பெற்றிருக்கும் இந்த ஆசிய பூர்ஷ்வாவின் முக்கியப்

பிரதிநிதி அல்லது தலையாயச் சமூக ஆதாரம்—விவசாயியே''.[9] காந்தியும் காந்தியமும் தேசிய பூர்ஷ்வாவையும், பரந்த அளவு விவசாய வெகு ஜனங்களையும் இணைக்கும் பாலமாக விளங்கினர்.

வெகுஜனப் போராட்டத்தின் பல தரப்பட்ட தேசிய, வரலாற்று உருவப்பாடுகளையும் அவற்றிற்கிடையேயான பரஸ்பரத் தொடர்பையும் புரிந்து கொள்ளாத் தன்மை இரண்டாம் உலகப் போருக்கு முந்தைய இலக்கியங்களில் காணப்பட்டது. பல சமயங்களில் ஏதாவது ஒருவகைப் போராட்ட வழிமுறை முன்மாதிரியாக்கப்பட்டு, ஒரே ஒரு வழிமுறையாகப் பிரகடனம் செய்யப்பட்டது. தற்கால பிரிவினைவாதிகளும், வறட்டுத் தத்துவவாதிகளும் தேசிய விடுதலை இயக்கங்களில் அஹிம்சா முறைப் போராட்டத்தை நிராகரித்து விட்டு ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம் நிறவெறி ஆகியவற்றிற்கு எதிராக ஆயுதமேந்திய போராட்டத்தை முன்மாதிரியாக்க முயன்றனர். வெகுஜனப் போராட்டங்களில் உபாய முறைகளை பயன்படுத்துவதையும் மதிப்பிடுவதையும் இவ்வாறு ஒருதலைப்பட்சமாக அணுகுவது இந்த முக்கியமான பிரச்சினையில் இயக்க இயலை முற்றிலும் மறக்கச் செய்து விடும்.

வெகுஜனப் போராட்ட வழிமுறையை ஒருதலைப்பட்சமாக அணுகியவராகவே காந்தியும் இருந்தார். காலனி ஆதிக்கவாதிகளுக்கும் நிறவெறியாளர்களுக்கும் எதிரான ஒரே ஒரு பொதுவான வெகுஜனப் போராட்ட முறை—அஹிம்சா வழி எதிர்ப்பு முறையே எனப் பிரகடனப்படுத்தினர். அவருடைய எதிரிகளில் பலர் இந்திய விடுதலை இயக்கத்தின் பல கட்டங்களில் உறுதியாகவும், ஒரு தலையாகவும் அஹிம்சா வழிப் போராட்ட முறையின் முக்கியத்துவத்தை மறுக்கும் மனப்பாங்குடையவர்களாக இருந்தனர். அவர்கள் அஹிம்சாவை மந்தத்தன்மை உடையதாகவும், காலனியாதிக்கவாதிகளுடனும், பிற்போக்காளர்களுடனும் சமாதானத்தை விழையும் ஒன்ருகவுமே கருதினர். அத்தகைய விமர்சனம் காந்தியின் வெகுஜன அஹிம்சா வழி எதிர்ப்பு முறையிலிருந்த தத்துவ சமயக் கொள்கையை மறுப்பதாக இருந்தது. இது புரிந்து கொள்ளக் கூடியதும் சரியானதுமாகும். ஆனல் அவருடைய எதிராளிகள்

[9] வி.இ. லெனின். முழு நூல் தொகுப்பு. தொகுதி 21, ப. 402. (ருஷ்ய மொழியில்.)

இந்த விமர்சனத்தை முன் யோசனையின்றி ஏகாதிபத்தியத்திற்கு எதிரான அரசியல் போராட்ட முறைக்கும் எதிராகப் பரப்பினர். இது வெளிப்படையான தவருகும்.

விஞ்ஞான சோஷலிசம் ஏதாவதொரு போராட்ட முறையை—அமைதி வழி அல்லது பலாத்கார வழி—முன்மாதிரியாக்குவதை அடிப்படையாகக் கொண்டது அல்ல. இதற்கு மாருக, பல்வேறு போராட்ட முறைகளின் இயக்க இயல் பரஸ்பர ஊடுருவலையும், அவற்றை இணைத்து பலவகைகளில் பயன்படுத்துதலின் முக்கியத்துவத்தையும் அங்கீகரிப்பதுதான் விஞ்ஞான சோஷலிசத்தின் தன்மையாகும். புரட்சிச் சாதனங்களையும் முறைகளையும் தொடர்ந்து புதுப்பித்து, சோதித்துச் சரிபார்த்து அவற்றிலிருந்து புதிய பயனுள்ள போராட்ட வகையைத் தேர்ந்தெடுப்பதன் அவசியத்தை அது அங்கீகரிக்கிறது. மார்க்சிய-லெனினியப் புரட்சி நடைமுறைத் தந்திரம் தன்னை ஏதாவது ஒருவகை வெகுஜனப் போராட்ட முறையுடன், அது வெற்றிகரமானதாக இருந்தாலும், அதனுடன் மட்டும் இணைத்துக் கொள்வதில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகளுக்கும் போராட்ட முறைகளுக்கும் இடையே பொருத்தம் எப்போதும் இருக்க வேண்டும் என்பதிலும், போராட்ட முறையின் தன்மை, நிலைகள், குறிக்கோள் ஆகியவற்றில் இருந்து மாருமல் இருப்பதிலும் அது நாட்டம் கொண்டது. முடிவில் அது திட்டமான வரலாற்றுச் சூழ்நிலைமைகளுக்கு ஏற்ப விரைவாகவும், தீர்மானமாகவும் போராட்ட முறைகளையும், அமைப்புகளையும் மாற்றும் திறனையும் தயார் நிலையையும் முற்போக்கு அரசியல் கட்சியிடம் எதிர்பார்க்கின்றது.

பலவிதமான போராட்ட முறைகளை—அஹிம்சா உட்பட—ஏற்றுக்கொள்ளுதல்—கம்யூனிஸ்டுகளால் எப்போதும் பயன்படுத்தப்பட்ட ஒன்று—விஞ்ஞான சோஷலிசம் அறிந்ததே. ஆனுல் காந்தியக் கொள்கையான அஹிம்சா முறை—ஒரே ஒரு முறை என ஆக்கப்படுமேயானுல் அதற்கு எதிர்மறையாகவே மார்க்சியவாதிகள் நடந்து கொள்கின்றனர். காலனி ஆதிக்கவாதிகள் நிற வெறியாளர்கள் விஷயத்தில் காந்தியின் அஹிம்சா முறை முரண்படுகிறது என்பதைக் கவனிக்காமல் இருக்க முடியாது. அஹிம்சா முறையில் தீவிர எதிர்ப்பு முறை, எதிரியிடம் பொறுமையைக் காண்பிப்பதுடன் இணைந்துள்ளது. அத்தகைய எதிர்ப்பு முறைதான் காலனி ஆதிக்

கவாதிகளுக்கு எதிராக ஏற்றுக்கொள்ளக் கூடிய, ஒரே ஒரு சாத்தியமான எதிர்ப்பு முறை எனக் காந்தி கருதினர். காந்தியின் அஹிம்சா முறையில் மத வறட்டுத்தனத்துடனும் வாழ்க்கையைத் துறவு மனப்பான்மையுடன் அணுகும் முறையுடனும் கூடிய கற்பனாவாத அம்சம் உள்ளது. ஆனல் சந்தேகமின்றி அதில், வெகுஜன, தனி நபர் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிறவெறி எதிர்ப்புப் போராட்டங்களின் அமைதி முறைகளைப் பயன்படுத்துவதற்கான முற்றிலும் எதார்த்தமான கருத்துகள் அடங்கியுள்ளன. பொதுவாகக் கூறினல் இன்னும் நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, முதலாளித்துவ எதிர்ப்புப் போராட்டமும் கூட—காந்தி இதற்கு முயலவில்லை என்ற போதிலும்—அதில் அடங்கியிருந்தது.

அஹிம்சாக் கருத்தை காந்தி உருவாக்கி, இந்தியாவில் பிரிட்டன் காலனி ஆதிக்கத்திற்கும், தென் ஆப்பிரிக்காவில் நிறவெறிக்கும் எதிராகப் போராடிய வருடங்களில், அதை வெகுஜனப் போராட்ட முறையாக உருவாக்கிய கட்டத்தில், அஹிம்சா முறை கணிசமான அளவில் புரட்சி உள்ளாற்றலைக் கொண்டிருந்தது என்பது மிகவும் தெளிவு. காலனி ஆதிக்கவாதிகளுக்கு எதிரான அமைதி வழிப் போராட்ட முறைகளை உருவாக்கி, அவற்றை நடைமுறையில் கொண்டுவருவதற்கு காந்தி செய்த பணிகள் சர்ச்சைக்கு அப்பாற்பட்டவை. காந்தி, அஹிம்சா முறையைத் தனி நபர் செயல் வட்டத்திலிருந்து, குறிக்கோளுடன் கூடிய நீண்டகால வெகுஜனப் போராட்டச் சாதனமாக மாற்றினர். அத்துடன் அதை ஏகாதிபத்திய எதிர்ப்புடனும், வெகு ஜனங்களின் சமூகத் தேவைகளுடனும் தொடர்பு படுத்தினர். காலனியாதிக்கவாதிகளால் நிறுவப்பட்ட ஒழுங்கு முறைகளையும், விதிகளையும், அரசியல் அமைப்புச் சட்டத்தையும் எதிர்க்கும், மற்றும் அன்னியர்களின் கொடுங்கோன்மைக்கு எதிராக எல்லா மக்களும் பங்கு கொண்ட வெகுஜன அமைதிப் போராட்ட முறையை உருவாக்கினர். 1920-40ம் வருடங்களில் காந்தியின் தலைமையின் கீழ் நடந்த, பிரிட்டன் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான வெகுஜன அஹிம்சாக் கூட்டங்களில் பங்கு கொண்டவர்களுக்கு மிகுந்த வீரம் தேவைப்பட்டது. அவர்கள் காலனி ஆதிக்கவாதிகளை மிகவும் கடினமான நிலைக்குக் கொணர்ந்தனர். இந்தக் கூட்டங்கள் இந்திய நிலைமையை வெகுவிரைவாகப் புரட்சிகரமாக்கின.

காந்தி, வெகுஜன அஹிம்சா இயக்கத்தை வழி நடத்துவதில் கை தேர்ந்தவராக இருந்தார் என்பதை மறுக்க இயலாது. எப்போது தனது பலாத்காரமற்ற இயக்கத்திற்கான அழைப்பை முழு நாடும் ஆதரிக்கும், எப்போது தன்னை அனைவரும் பின் தொடரத் தயாராயிருப்பார்கள், இயக்கத்தில் கோடிக்கணக்கில் எளிய மக்கள் எப்போது பங்கு கொள்வர் என்பதை எல்லாம் காந்தி நன்கறிந்தவராயிருந்தார். இந்திய வகை விடுதலை இயக்கத்தின் தலைவராகவும் அமைப்பாளராகவும் காந்தியின் தகுதிகளைக் குறிப்பிடும் போது, அஹிம்சா முறை இயக்கத்தின் பாதையில் வெகு ஜனங்களின் புரட்சி பலாத்காரத்திற்கு, முடிவாக ஆதிக்க வர்க்கத்தினருக்கும் அன்னிய ஆட்சியாளருக்கும் எதிரான சமூகப் புரட்சிக்கு அஹிம்சா இயக்கம் மாறிவிடாமல் இருக்க, அதை எப்போது நிறுத்த வேண்டும் என்பதை காந்தியை விட நன்கு புரிந்து கொண்டவர் எவரும் இருக்கவில்லை என்பதையும் சுட்டிக் காட்ட வேண்டும். எனவே, காந்தி வெகுஜன பலாத்காரமற்ற எதிர்ப்புப் போராட்டத்தில் புரட்சி சாத்தியங்களை முழுமையாகப் பயன்படுத்தவில்லை, பயன்படுத்தவும் விரும்பவில்லை. முழுமையாகப் புரிந்து கொள்ளக் கூடிய காரணங்களின் பேரில், காந்தியும் இந்திய தேசிய காங்கிரசின் அன்றைய தலைவர்களும் இந்த சாத்தியங்களை அடக்கி விட்டனர். உறுதியான, யாருடனும் உடன்பாடு செய்து கொள்ளாத, யாராலும் நிறுத்தி வைக்க முடியாத காலனியாதிக்க எதிர்ப்புப் போராட்டம் இன்னும் உயர்ந்த நிலைக்கு—அந்நிய, உள்ளூர் சுரண்டலுக்கு எதிரான நகர உழைப்பாளிகள் கிராம விவசாயிகளின் போராட்டமாக—கொண்டுவரத் தேவையான அடிப்படையை அவர்களால் தயார் செய்திருக்க முடியும். ஆனால், குறிப்பாக இதைத் தவிர்ப்பதில்தான் காந்தியும், இந்திய தேசிய காங்கிரசும் நாட்டம் கொண்டனர். அதனாலேயே தேசிய ஒற்றுமையின் அடிப்படையில் அமைந்த ''சுத்தமான'' ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமாகத் தங்களுடைய பாதையை வகுத்துக் கொண்டு, பிரிட்டனுடனான பேச்சுவார்த்தைகளுக்கு எப்போதும் தங்களுடைய கதவுகளைத் திறந்து வைத்திருந்தனர்.

எனவே, காந்தியின் சமரச மனப்போக்கைப் பற்றிய வலதுசாரிகளின் விமர்சனம், நமது பார்வையில், சரியானதே. ஆனால் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும், பலாத்காரமற்ற

எதிர்ப்பு முறையின் சாத்தியங்களை மறுப்பதிலிருந்தல்லாமல்—1920-40ம் வருடங்களில் அடிக்கடி நிகழ்ந்தது போல—காலனியாதிக்கத்திற்கும் நிறவெறிக்கும் எதிராகப் போராடும் ஒரே ஒரு வழிமுறையாக, மத வறட்டுக் கொள்கைகளின் உதவியுடனும், இயக்கத்தில் பங்கு கொண்ட சக்திகளின் சமூக, வர்க்கத் தன்மைகளுடன் தொடர்பற்ற, மானசீக ஒழுக்க நெறிகளின் உதவியுடன் காந்தியத்தைப் பூரணப்படுத்துவதை அனுமதிக்காததில் இருந்து வந்திருந்தால், அத்தகைய விமர்சனம் இணங்க வைக்கக் கூடியதாக இருந்திருக்கும்.

காந்தியக் கொள்கையான பலாத்காரமின்மை சர்வதேச வாழ்வில் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பதைச் சுருக்கமாகப் பார்ப்போம். சர்வதேச உறவுகளின் விசேஷத் தன்மை காரணமாக பலாத்காரமின்மை பற்றிய காந்தியக் கருத்துகள், வர்க்கங்களுக்கிடையிலான உறவுகளின் வட்டத்தை விட, அரசுகளுக்கிடையிலான பரஸ்பரத் தொடர்புகளைப் பொறுத்தவரையில் மிகவும் எதார்த்தமானவையாகக் காணப்படுகின்றன. அஹிம்சா முறை, அதனுடைய இயக்கமறுப்பு இயல் தன்மைகளைத் தள்ளி வைத்துப் பார்க்கையில் பலத்தை உபயோகிப்பதையும் சட்டத்திற்குப் புறம்பான போர் அறிவிப்பையும் நிராகரித்தல், அதாவது அரசுகளுக்கிடையிலான தொடர்புகளில் சமாதானக் கொள்கைகள் நிலைநாட்டப்படுவதைக் குறிப்பதாகவே சர்வதேச அரங்கில் விளங்குகிறது. காந்தி, மக்களுக்கிடையிலான நட்பை உறுதிப்படுத்துதல், அரசுகளுக்கிடையிலான பரஸ்பர மதிப்பு, பிறர் உள்விவகாரங்களில் தலையிடாமை ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த நியாயமான உறவுகளை நிலைநாட்டுதல், எல்லா முரண்பாடுகளையும் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்த்துக் கொள்ளுதல் ஆகியவற்றின் தேவைகளைப் பற்றிய பயனுள்ள முடிவுகளுக்கு வந்தார். ஜவகர்லால் நேரு உருவாக்கிய இந்திய குடியரசின் வெளிநாட்டுக் கொள்கையின் மீது காந்தியின் இவ்வகைக் கருத்துகள் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தின.

அதே சமயம் அஹிம்சாவின் அதீத நிலையையும்—இது சர்வதேசப் பிரச்சினைகளில் காந்திக்குப் பன்முறை தோல்வியை ஏற்படுத்தி தியாகக் கொள்கைக்கு இட்டுச் சென்றது—பலாத்காரத்தைப் பயன்படுத்தாதிருக்கும் கொள்கையின் பெயரால் எதிரியின் ஆக்கிரமிப்பின் முன் தேசிய நலன்களை

அசட்டை செய்வதையும் இந்தியர்களே நிராகரிக்கின்றனர். எதிரியின் ஆக்கிரமிப்பு எண்ணங்களுக்கு அல்லது நேரடி ஆக்கிரமிப்புக்குச் சம்பந்தப்படுத்தாமல் சமாதானத்திற்கு வகை செய்யும் பிரச்சினையைப் பற்றிய வரலாற்றுக்கு அப்பாற் பட்ட, தெளிவற்ற வியாக்கியானங்கள் நடைமுறைக்கு ஒவ் வாதவையாக இருந்தன.

தேசிய விடுதலைப் போராட்டங்களின் முற்போக்குத் தலைவர்கள் ருஷ்ய நரோதியத்துடனும்° லியோ தல்ஸ்தோ யின் கருத்துக்களுடனும் ஏதாவதொரு பொதுமையை, தங் களுடைய சமூகக் கண்ணோட்டங்களில் கொண்டிருந்தனர். தல்ஸ்தோயுடனான காந்தியின் கொள்கை நெருக்கம், ருஷ்ய எழுத்தாளரின் உலகக் கண்ணோட்டத்தைப் பற்றிய லெனினின் ஆராய்ச்சியில் குறிப்பாகப் பிரதிபலிக்கிறது. அத்துடன் காந்தியின் தேசிய-முதலாளித்துவ அரசியல் நிலைகள் சாராம் சத்தில் தல்ஸ்தோயின் நிலையில் இருந்து ஆழ்ந்து வித்தியாசப் படுவதும் தெளிவானதாகும்.

இந்தியா உட்பட, அனைத்து ஆசியாவின் விழிப்பையும் தூண்டிய முதல் ருஷ்யப் புரட்சி, இந்தியாவில் ஏகாதிபத் தியத்திய எதிர்ப்பியக்கத்தின் தலைவராக காந்தி உருவானதன் மேல் வெகுவாய் தாக்கம் செலுத்தியது என்ற உண்மையை அவ ருடைய தேசிய விடுதலை, ஜனநாயகக் கொள்கைகள் உறு திப்படுத்துகின்றன. 1905ம் வருடம் அக்டோபரில் நடை பெற்ற அனைத்து ருஷ்ய அரசியல் வேலை நிறுத்தத்தை இந்திய தேச பக்தர்களுக்கு முன்மாதிரியான ''பெரிய பாடம்'' என அவர் கருதினார். ருஷ்யர்களைப் போலவே ''அத்தகைய'' சக்தியை இந்திய தேசபக்தர்களும் காட்ட வேண்டுமென அறைகூவி அழைத்தார்.

இந்திய தேசிய முதலாளித்துவத்துடனான காந்தியின் உறவைப் பற்றிப் பேசும் போது அவர்கள் ஒன்றுகச் செயல் பட்ட வரலாற்றுக் காலகட்டத்தின் விசேஷ அம்சங்களை நினைவில் கொள்வது அவசியம். இக்காலகட்டத்தில் காந்தி இந்திய தேசிய காங்கிரசின் ஆதர்சத் தலைவராக விளங்கினார்,

---

° நரோதியம் — ருஷ்யாவின் புரட்சிகர இயக்கத்தில் 1860 — 1870ல் தோன்றிய ஒரு குட்டி முதலாளித்துவப் போக்கு. நரோத்னிக்குகள் எதேச் சாதிகார முறையை ஒழிக்கவும், நிலப்பிரபுக்களின் நிலத்தை விவசாயிகளுக்குக் கொடுக்கவும் வேண்டும் என்பதை ஆதரித்தார்கள். அவர்களது சோஷலிசம் கற்பனாவாத சோஷலிசமாகும். — ப-ர்.

காந்தியின் எண்ணங்களை நிறைவேற்றும் ஸ்தாபனமாக, குறிப்பாக காந்தியின் தலைமையின்கீழ் நடந்த வெகுஜன அஹிம்சா பிரச்சாரங்களை நிறைவேற்றும் ஸ்தாபனமாக இந்திய தேசிய காங்கிரஸ் திகழ்ந்தது. தேசிய முதலாளித்துவம் உட்பட, எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளின் கூட்டணி தேவைப்பட்ட நேரம் அது. அப்படிப்பட்ட பொதுத் தேசிய ஏகாதிபத்திய முன்னணி இருந்தது அந்தக் காலகட்டத்தின் விசேஷ அம்சமாகும். அது எதிர்மறையான வர்க்கங்கள் உட்பட, பல்வேறு வர்க்கங்களின் உறவுகளின்மீது தாக்கம் கொண்டிருந்ததல்லாமல், காலனி ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டத்தினுடைய பொதுப் பிரச்சினைகளின் அடிப்படையில் அவை ஒன்றை ஒன்று நெருங்கி வரத் தூண்டியது. குறிப்பிட்ட அளவு இந்த வர்க்கங்களின் போராட்டத்தின் அரசியல் பாதையைகூட நீண்டகாலத்திற்கு நிர்ணயித்தது.

தேசிய விடுதலை இயக்கத்தின் முன்னிலையில் நின்ற தேசிய பூர்ஷ்வாவுடன் காந்தி நெருங்கிய தொடர்பு கொண்டவராக இருந்தார். இந்திய தேசிய காங்கிரசால் முன்வைக்கப்பட்ட பூரண அரசியல் சுதந்திரத்தை அடைவது என்ற லட்சியமும், அதன் அடிப்படையில் காலனி ஆதிக்கவாதிகளுக்கு எதிரான உடன்பாடற்ற போராட்டத்திற்கான அழைப்பும் முதலாளித்துவத்தை முழுத் தேசத்துடனும் நெருங்கச் செய்தது. குறிப்பாக, அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டத்தில் பங்கு கொண்ட பல்வேறு வர்க்கங்களின் நலன்களின் பொதுமையே, உள்சாரத்தில் குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதியும், கற்பனுவாதியுமான காந்திக்கும், அரசு அதிகாரத்தை முழுமையாகத் தான் ஆட்கொள்வதற்காக அன்னிய ஆட்சியாளர்களை நீக்கும் எண்ணம் கொண்டிருந்த காங்கிரஸ் முதலாளித்துவ தலைவர்களுக்கும் இடையேயான முப்பது வருட அரசியல் கூட்டிற்குக் காரணமாகும்.

இருவரின் கூட்டும் நீண்டகாலத்திற்குத் தொடர்ந்த போதிலும், அதன் தற்காலிகத் தன்மையை இருவருமே உணர்ந்திருந்தனர். அத்துடன் நிச்சயமாக இருவருமே ஒருவருக்கொருவர் தேவைப்பட்டனர். காந்தியின் வடிவில், தன்னைச் சுற்றி உள்ள தீரம் மிகுந்த, சக்தி வாய்ந்த இளைய தலைமுறையை ஒன்றுபடுத்தி, அவர்களின் உதவியுடன் அடக்குமுறையில் வாழ்ந்த பல மில்லியன் எளிய மக்களைக் கிளர்ந்தெழச் செய்து தன்னுடன் கொண்டுவரும் மன உறுதி

படைத்த ஒரு சிறந்த ராஜதந்திரியை, புகழ் மிக்க தேசிய தலைவரை காங்கிரஸ் அடைந்தது. அவ்வாறே காங்கிரசின் வடிவில் காந்தி ஒரு பலம் வாய்ந்த, அனுபவம் நிறைந்த அரசியல் ஸ்தாபனத்தைப் பெற்ருர். அதற்குச் சமமாக வேறு எந்த ஸ்தாபனமும் இந்தியாவில் அன்றிருக்கவில்லை. காந்திக்கும், காங்கிரசுக்கும் இடையிலான பரஸ்பரத் தொடர்பின் வரலாற்றை இங்கே விவரிக்கப் போவதில்லை. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடனை போராட்டத்தின் கடைசிக் கால கட்டத்தில், எந்தக் குறிக்கோளுக்காகப் போராட்டம் நடந்ததோ அதை—அரசியல் சுதந்திரத்தை—அடைவது அருகில் இருந்த போதே, காந்திக்கும் காங்கிரசின் பூர்ஷ்வாத் தலைமைக்கும் இடையிலான, நிச்சயமாக அவர்களின் உறவில் எப்போதும் ஆழ்ந்து மறைந்திருந்த முரண்பாடுகள் அலட்சியம் செய்ய முடியாத அளவில் முற்றத் தொடங்கின என்பதை மட்டும் குறிப்பிடுவோம்.

ஆட்சியை அடைந்தவுடன் பல காங்கிரசார் காந்தியின் ஜனநாயக, மனிதாபிமானம் மிகுந்த லட்சியங்களை மறந்து விட்டனர். அவர்களின் கருத்துப்படி, தான் முன் நின்று நடத்திய அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டத்தை வெற்றியடையச் செய்ததன் மூலம் தன் வேலையைக் காந்தி முடித்தார்.

போராட்டத்தின் புதிய கட்டத்தை வருங்காலத்தில் நோக்கிய காந்தி தனது விரிவான சமூக லட்சியங்களை நிறைவேற்றுவதற்காக அஹிம்சா முறைச் செயல்பாட்டைப் பயன்படுத்துவதைப் பற்றி சிந்தித்தார். இந்திய பிரிவினையினுலும், வெகு ஜனங்களின் குருதி வெள்ளமென பெருகி ஓடச் செய்த இந்து முஸ்லிம் வேற்றுமைக் கிளர்ச்சியினுலும் அவர் மிகுந்த ஏமாற்றம் அடைந்திருந்தார். கிட்டத்தட்ட எல்லா இடங்களிலும் பரந்து தோன்றிய முதலாளித்துவத்தின் தன்னலப் போக்கும் அகங்காரமும் பதவிப் பித்தும் அவரை விரக்தி அடையச் செய்தன. இந்தியா அரசியல் சுதந்திரத்தை வெற்றிகரமாக அடைந்ததும், தொடர்ந்து ''பொருளாதார, சமூக ஒழுக்க நீதிச்'' சுதந்திரத்திற்கான, அதாவது சர்வோதயத்தை உண்மையாக்குவதற்கான சமூக நீதிக் கோட்பாடுகளை நிறைவேற்றுவதற்கான போராட்டப் பிரச்சினைகளை காந்தி முன்வைத்தார்.

இன்று வரையும் இந்தியாவைக் கணிசமான அளவு பாதிக்

கும் ஜாதி அமைப்புடன் காந்தி கொண்டிருந்த தொடர்பு கவனத்திற்குரியது. ஒரு புறத்தில் ஜாதி அமைப்பு, தீண்டாமைப் பிரச்சினை ஆகியவற்றின் மீதான காந்தியின் கண்ணோட்டங்கள், விவசாயிகளின் இயற்கைச் சுபாவ ஜனநாயகம், எளிய மக்களின்பால் அவருக்கு இருந்த அனுதாபம் ஆகியவற்றின் தாக்கத்தினுலும் அத்துடன் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் பரந்த அளவில் மக்களை ஈடுபடுத்துவதன் அவசியத்தை ஆழ்ந்து உணர்ந்ததாலும் உண்டானவையாகும். மறு புறம், அனைவரும் நன்கு அறிந்த காந்தியின் பழமைப் பற்றுச் சிந்தனையும், மத வழக்கங்களுடனுன அவரின் தொடர்பும் அவருடைய சமுதாயப் பரிணுமத்தின் சீர்திருத்தத் தத்துவமும் முக்கிய பங்கு வகித்தன.

ஜாதிப் பழக்கங்களில் ஊடுருவி இருந்த ஏற்றத் தாழ்வுகளை, ஜாதிகளுக்குள்ளான பரஸ்பரத் தொடர்பை மறுத்து ஒதுங்கிவாழும் தன்மை கொண்ட ஏராளமான சாதி அமைப்புகளை காந்தி எதிர்த்தார். ஆனுல் ஜாதி அமைப்பின் குறைகளுக்கான காரணம் அத்தகைய அமைப்பின் சாரமே அல்லாமல் அதன் திரிபே எனக் கருதினுர் அவர். நால்வகை வருண அமைப்பான பிராமணர், க்ஷத்திரியர், வைஸ்யர், சூத்திரர் என்ற பண்டைகால அமைப்பை, மிக சிறந்த சமுதாய அமைப்பு எனக் கருதி, ஜாதி அமைப்பின் பழக்கங்களை விமர்சித்தார். ஒவ்வொரு மனிதனின் நிலையும் சமுதாயத்தில் குறிப்பிட்ட அளவு, அவனுடைய பரம்பரைத் திறமைகளால் முன் கூட்டியே நிர்ணயிக்கப்படுகிறது என்பதில் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார். அவருடைய சமூக இயல் கண்ணோட்டங்களின் அடிப்படைகளில்கூட வரலாற்றுக்கப்பாற்பட்ட, விஞ்ஞானத்திற்கு மாறுன இந்தக் கருத்து பிரதிபலித்தது. அது நிர்ணயமான வர்க்க சமுதாயத்தின் சமுதாய உறவுகளைப் பற்றிய ஆராய்ச்சிகளுக்குப் பதிலாக பரம்பரையைப் பற்றிய மானசீக சிந்தனைகளுக்கு வழிவகுத்தது. அந்தச் சிந்தனைகள் காந்திய உபகாரத் தத்துவம் மற்றும் பேட்ரனலிசம் (Paternalism) ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்தனவாகும். இந்தத் தத்துவங்களின்படி நிலச்சுவான்தார்கள் விவசாயிகளின் தந்தைகளைப் போல இருப்பதற்காக வாழ்கின்றனர். முதலாளிகளோ பொருளாதார நிர்வாகத்தில் நிகரற்ற திறமைசாலிகளாக விளங்குகின்றனர். அதனுல் தொழிலாளிகள் உடலுழைப்புக்காக மட்டுமே இயற்கை

யாகவே உத்தேசிக்கப்பட்டவர்கள் என்ருகிறது. நிச்சயமாகத் தொழிலாளிகள் பொருளாதார நிர்வாகத்திற்கு உரிமை கொண்டாட முடியாது.

தீண்டத்தகாதவர்களின் பிரச்சினையை காந்தி தர்க்க ரீதியில் சிந்தித்தார். தீண்டாமையை இந்தியாவின் அவமானம் எனச் சரியாகக் கருதினுர். ஜனத்தொகையில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கை வகித்த இவர்களின் சட்ட ரீதியான சம உரிமைக்கான போராட்டத்திற்கு முழுசக்தியுடன் முயன்ருர். இந்தப் பிரச்சினையில் காந்தியின் உயர்ந்த ஜனநாயக நிலை, குறிப்பிட்ட அளவு இந்தியப் பொது மக்களின் கருத்தின்மீது தாக்கம் செலுத்தியது. மேலும் தீண்டத்தகாதவர்களின் குடி உரிமைகளைச் சட்டப்பூர்வமாகப் பிரகடனப் படுத்தவும் தாங்க முடியாத வகையில் இருந்த அவர்களின் வாழ்க்கை நிலையைச் சீர்திருத்துவதற்கான முயற்சிகளைத் தீவிரப்படுத்தவும் உதவியது.

எவ்வளவுதான் குட்டி முதலாளித்துவ, விவசாயத் தத்துவமாக, இதன் விளைவாக, தர்க்க ரீதியற்றதாக இருந்த போதிலும், தேசம் அரசியல் சுதந்திரம் அடைந்த பின்பு, காந்திய வழிகளிலாவது ''சமூக நீதி நிறைந்த சமுதாயத் திற்கான'' பரந்த போராட்டம் தொடங்கியிருந்தால், நமது கருத்துப்படி, அது முன்னேற்றப் பாதையில் பெரிய அடி எடுத்து வைத்ததாக இருந்திருக்கும். ஆனுல் அதன் பாதையில், காந்தி யாருடைய சுயநலத்தைக் கண்டித்தாரோ அதே பூர்ஷ்வா-முதலாளித்துவம் வளர்ந்தது. ஆனுல் அதற்கு எதிராக வெகுஜனப் போராட்டத்தைக் காந்தி உயர்த்தவில்லை, அப்படியே முயன்றிருந்தாலும் முடிந்திருக்குமா என்பது சந்தேகம் தான்.

* * *

இந்தியா அரசியல் சுதந்திரம் அடைந்ததானது நாட்டில் வர்க்க சக்திகளின் வரிசைக் கிரமத்தின் கணிசமான மாற்றத்திலும் தேசிய ஒற்றுமையின் எல்லைக்குள் அவற்றின் இயல்பு மாறியதிலும் முடிந்தது. வேறுபட்ட வர்க்கங்களை இணைக்கும் ஒரே தத்துவ-அரசியல் சாதனமாக இயங்கிய காந்தியம் அத்தன்மையை கொஞ்சம் கொஞ்சமாக இழந்தது. நாடு சுதந்திரமான முதலாளித்துவ வளர்ச்சிப் பாதைக்கு மாறியது

போன்ற எதார்த்த சூழ்நிலைகளின் விளைவாகவும் அதேபோல் இந்தியாவின் புதிய வரலாற்றின் இந்தத் திருப்பு முனையில் காந்தி மரணமடைந்ததன் விளைவாகவும்° —காந்தியின் தனித் தன்மைகளும் தீவிரப் பணிகளும் அவருடைய தத்துவஞான-அரசியல் கோட்பாடுகளைவிட அதிக அளவில் இந்திய தேசிய சக்திகள் உறுதியடைய ஒருவேளை அனுகூலமாக இருந்திருக் கலாம்—காந்தியம் மேற்கூறிய தன்மையைச் சிறிது சிறிதாக இழந்தது. இந்தியா சுதந்திரம் அடைந்ததற்குப் பிந்தைய வருடங்களில் எதிரெதிராக நிற்கும் வர்க்க சக்திகள் உருவா வது, அவற்றின் கொள்கைகள் உறுதிப்படுவது, சுயமாக அரசியல் ரீதியாக அவை ஒழுங்கமைவது ஆகியப் போக்குகள் கணிசமாக வலுவடைந்து பொது வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தன. ஒன்றிணைந்த பொதுத் தேசிய முன்னணியின் செல்வாக்கின் வரலாற்றுச் செயலின்மை தற்கால இந்திய சமுதாயத்தின் பல வர்க்கங்களுக்கிடையிலும், சமூக அடுக்குகளிலும் உணரப்பட்டாலும் அத்தகைய ஒன் றிணைந்த பொதுத் தேசிய முன்னணியின் முந்தைய அடிப் படையும் முந்தைய தொடர்ச்சியும் உறுதியும் இல்லாமல் போய்விட்ட நிலையில் மேற்கூறப்பட்ட போக்குகள் இத்தகைய அளவை அடைந்தன.

இன்றைய இந்தியாவும் ஏகாதிபத்தியத்தின் நிர்ப்பந்தத் திற்கு அடிக்கடி ஆளாக்கப்படுவதால் அதற்கு எதிராக நிற்கும் பொதுத் தேசிய ஒற்றுமை தொடர்ந்து வரலாற்று ரீதியாக நல்ல பங்கை ஆற்றி வருகிறது. இந்த வகையில் எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளின்—தேசிய-புரட்சி, தேசிய-சீர்திருத்த, பாட்டாளி வர்க்க சக்திகளின்—நலன்கள் ஒன்றிணைந்திருப்பது இன்னும் தொடர்கிறது. இத்தகைய நிலைமைகளில், ஏகாதிபத்தியத்தின் நிர்ப்பந்தத்தை எதிர்த்துத் தாக்குவதற்கான முன்முயற்சி மிக அதிகமாக இடதுசாரி ஜனநாயகவாதிகளையும், நாட்டின் முற்போக்கு வட்டாரங் களையுமே சார்ந்துள்ளது. கடைசியாகக் கூறப்பட்டவை இன்னும் முழுமையடையாதவையாகவே இருந்தபோதிலும், அவை தொடர்ந்து உறுதியாக்கப்படுவதுடன், இவை பெரிய ஏகபோக முதலீட்டை தீவிரப்படுத்தவும், நிலப்பிரபுத்துவ-

° இந்தியா 1947ம் வருடம், ஆகஸ்டு 15ம் நாள் சுதந்திரம் அடைந்தது. காந்தி 1948ம் வருடம், ஜனவரி 30ம் தேதி கொல்லப்பட்டார். — ப-ர்.

இந்து பிற்போக்கு சக்திகளுக்கும் கடுமையான தடையாக உள்ளன.

இந்திய வர்க்க சக்திகளின் நிலவரத்தில் மேலே குறிப் பிடப்பட்ட தர மாறுதல்கள், நிச்சயமாக காந்தியத்தை அரசியல் களத்திலிருந்து மறையச் செய்யவில்லை. அரசியல் போராட்டத்தில், மேலும் அரசியல் சொல் களஞ்சியத் தில் காந்தியக் கோட்பாடுகளைப் பயன்படுத்தாமல் நிறுத்துவது முடியவே முடியாது என்னும் அளவிற்கு சிறப்பாக விவசாயிகள் மத்தியிலும் நகரக் குட்டி முதலாளிகள் மத்தியிலும் காந் தியின் செல்வாக்கும், புகழும் மிகவும் பலமுடன் விளங்கின. அவை பல்வேறு முதலாளித்துவ குட்டி முதலாளித்துவ அர சியல் கட்சிகளின் பிரச்சாரங்களில் பரவலாகப் பயன்படுத் தப்பட்டன. சுதந்திரத்திற்கான போராட்டத்தின் பாதையில் ஏற்பட்ட ஏகாதிபத்திய எதிர்ப்புப் பொதுத் தேசிய ஒற்று மைக்கு ஏற்பட்ட நிலையே காந்தியத்திற்கும் ஏற்பட்டது. அந்த ஒற்றுமையில் ஏற்பட்ட பிளவுகளைப் போன்றே, இன் னும் வர்க்க முரண்பாடுகள் அதில் வெளிப்பட்டது போன்றே காந்தியத்தில் சித்தாந்த பலவீனம் ஏற்பட்டது. தேசிய காங் கிரசுடன் ஒப்பிடுகையில் வலதுசாரி நிலையை வகித்த கட்சி களைப் போலவே, இடதுசாரி நிலையை வகித்த கட்சிகளும், இன்னும் இந்தியாவின் பழமையான அரசியல் கட்சியான இந்திய தேசிய காங்கிரசும் கூட இந்த நிகழ்முறையில் பங்கு கொண்டன. முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ கட்சி கள்—இவற்றுள் பல தங்களுக்குள் போட்டியிடுகின்றன— காந்தியின் சில தனியான கோட்பாடுகளை அல்லது கருத்துக் களை, அவற்றிற்கு வறட்டுவாதப் போக்கான விளக்கங்களைக் கொடுத்துத் தங்கள் நலன்களுக்குப் பயன்படுத்திக் கொள் கின்றன. நீதி-அரசியல் காந்தியக் கொள்கைகளும், அவரு டைய பொருளாதார, சமூகக் கோட்பாடுகளும் இன்று, முன்பை விட அதிகமாக திரிக்கப்படுகின்றன.

காந்தியம், இயக்க இயல் தர்க்கவாதத்திலிருந்து விலகிய அதனுடைய நிலைத்த, சூட்சுமமான, கற்பனுவாத வகை யுடன், மத-நீதி போதனைகளை அரசியல் போராட்டத்தின் பொது உண்மைகளின் தரத்தில் பிரகடனப்படுத்த எப்போதும் முயன்றது. இப்போது அது தன்னுடைய வகையில் புனித மான ஒரு வேதமாக மாறியுள்ளது. இதன் விளைவாக மற்ற புனித நூல்கள் அடைந்த வருத்தத்திற்குரிய விதியையே

காந்தியமும் அடைந்துள்ளது. அதாவது சிருஷ்டிகர்த்தாவின் விருப்பத்துடனும் அவருடைய வரலாற்றுப் பணிகளுடனும் எவ்விதப் பொதுமையும் இல்லாத பலவேறுபட்ட, பரஸ்பரத் தொடர்பில்லாத நலன்களுக்கென அவை பயன்படுத்தப் படுவதிலேயே அத்தகைய புனித நூல்களின் துர்விதி அடங்கி யுள்ளது.

இந்திய சுதந்திர சகாப்தத்தின் இலக்கியங்களை ஊன்றிக் கவனித்தால் இந்திய பிற்போக்காளர்கள் காந்தியின் புகழை யும் காந்தியத்தின் செல்வாக்கையும் முடிந்தவரை அதிகமாகப் பயன்படுத்திக் கொள்வதில் நாட்டம் கொண்டிருந்தனர் என்பதை எளிதில் உணரலாம். காங்கிரசுக்குள் இருந்த வலதுசாரி சக்திகளும் அவ்வாறே பிற்போக்குக் கட்சிகளான ஜனசங்கமும் சுதந்திராக் கட்சியும், காங்கிரசால் செயல்படுத் தப்பட்ட சில சமயங்களில் ஒவ்வாத, ஆனல் வரலாற்று ரீதியாக முற்போக்கான சமூக-பொருளாதாரச் சீர்திருத்தங் களுக்கு எதிரான விமர்சனங்களுக்கும், அரசாங்க திட்டங் கள், அரசுப்பிரிவுகள், இயந்திரத் தொழில் கொள்கை, ஏக போக மூலதனத்தை ஓரளவு கட்டுப்படுத்தக் கூடிய, முதலா ளித்துவ சாரத்தைக் கொண்ட, உறுதியற்ற நிலச் சீர்திருத் தம் ஆகியவற்றைத் தாக்குவதற்கான ஆதாரங்களை, காந் தியின் சமூக, பொருளாதாரக் கோட்பாடுகளில் கண்டறிய முயன்றதில் இது வெளிப்பட்டது.

பிற்போக்கு சக்திகள் இந்திய மக்களுக்கு இடையேயான பரஸ்பர நம்பிக்கையைக் கெடுக்கும் வகையில் காந்தியின் பெயரைப் பயன்படுத்துகின்றன. மேலும், பல மக்களினங் கள் ஒன்றிணைந்த இந்தியாவின் ஐக்கியத்தையும் சக்தியையும் உறுதிப்படுத்துவதை விட, நாடு பலவீனம் அடைவதிலும், சிதறிப் போவதிலும் விருப்பம் கொண்ட, வெவ்வேறு மாநிலங் களில் பொறுப்புணர்ச்சியற்ற அம்சங்களால் வளர்க்கப்படும் சாராம்சத்தில் பிரிவினை நாட்டம் கொண்ட சக்திகளை நியா யப்படுத்துவதற்கும் பயன்படுத்துகின்றன. அவ்வாறே அவை இந்திய குடியரசுக்கும், சோஷலிச நாடுகளுக்கும் இடையி லான நட்பைக் குலைப்பதிலும் நாட்டம் கொண்டுள்ளன. மேலும் இந்திய ஜனநாயகவாதிகள், முற்போக்கு சக்திகள், உழைப்பாளி வர்க்கம் மற்றும் கம்யூனிஸ்டுக் கட்சி ஆகியவற் றின்மீது மக்களிடையே வெறுப்பைத் தூண்டவும் முயற்சிக் கின்றன.

இந்திய தேசிய காங்கிரசின் மைய வட்டங்கள் ஜனநாயகச் சீர்திருத்தங்கள் திட்டமிடப்படுவதிலும் செயல்படுத்தப் படுவதிலுமான மந்தத் தன்மையையும், முரண்பாடுகளையும் நியாயப்படுத்த காந்தியின் அஹிம்சாக் கொள்கையின் அடியில் தஞ்சம் அடைந்தனர். இதன் விளைவாக ஏகாதிபத்தியத் துடனுன போராட்ட சகாப்தத்தில் தன்னுடைய வலிமையினுலும் மக்களுடன் நெருங்கிய தன்மையிலும் அவர்களை ஒன்றுதிரட்டும் திறமையிலும் தனித்து விளங்கிய இந்தக் கோட்பாடே, பழைய மிகவும் தெளிவான சமுதாயக் கேடுகளுடன், நியாயமற்ற முறையில் செய்து கொண்ட நீண்ட காலச் சமரசமாக மாறியது.

சுதந்திர இந்தியாவின் அரசியல் வாழ்க்கையில் காந்தியம் எப்போதும் நிலைத்து இருந்தது. ஆனுல் இந்திரா காந்தியின் அரசின் வீழ்ச்சிக்கும் ஜனதா கட்சி ஆட்சிக்கு வரவும் காரணமாக இருந்த, இந்திய தேசிய காங்கிரஸ் தோல்வியடைந்த தேர்தலுக்குப் பின், இந்திய பத்திரிகைகளிலும் குறிப்பிடப் பட்டது போல, காந்தியத்தின் மீது புது மோகம் தோன்றியது. ஆளும் கட்சி வட்டங்களில் இந்திய தேசிய காங்கிரஸ் காந்தியத்திலிருந்து பிறழ்ந்துள்ளது என்றும் சமூக, அரசியல் பிரச்சினைகளில் காந்தியின் அணுகுமுறைக்கும் நேருவின் அணுகு முறைக்கும் உள்ள முக்கியமான வித்தியாசங்களும் சுட்டிக் காட்டப்பட்டன. இந்திய தேசிய காங்கிரசின் அரசியல் கொள்கைகளில் இருந்த முற்போக்கு அம்சங்களுக்கு எதிராக காந்தியத்தைக் காட்டுவதுடன் ''காந்தியை நோக்கித் திரும்புவோம்!'' என்ற அழைப்பும் கொடுக்கப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்திலும், காந்தியத்தை ஒரு தனிமுறையில் வியாக்கியானப்படுத்துவதைப் பற்றி, விசேஷ முறையில் அதை அணுகுவதைப் பற்றியே பேசுகிறேம். ''காந்தியத் திற்குத் திரும்புதலின்'' ஆதரவாளர்கள் கைத்தொழில், வேளாண்மை ஆகியவற்றின் வெற்றிகரமான வளர்ச்சிக்கு அறை கூவல் விடுத்தனர். இந்த நிலைகள் அவற்றின் சுய நோக்கில் சரியானவையே. இவை தேசிய பொருளாதாரத்தின் தேவைகளுக்குப் பதிலளிப்பவையும், உண்மையில் காந்தியத் தில் இருந்து எடுக்கப்பட்டவையுமே ஆகும். ஆனுல் சில சமயம் இவை சிறிதளவு ஒருதலைப்பட்சமாக வியாக்கியானப் படுத்தப்படுகின்றன, நாட்டை இயந்திர மயமாக்குவதற்கு எதிராக வைக்கப்படுகின்றன; இவை பொருளாதாரத்தின்

மைய ஆட்சி வலுத்தளர்த்தலுக்கான கோஷங்களுடனும் கனரகத் தொழிற்துறையில் அரசுத் துறையை ''அதிகப்படுத் துதல்'' மற்றும் பெரிய திட்டங்கள் ஆகியவற்றை மறுக்கும் கோஷங்களுடனும் வேளாண்மைத்துறையின் மேன்மையைப் பிரகடனப்படுத்தும் கோஷங்களுடனும் தொடர்புடையவை. இந்தியாவில் பல மில்லியன் மக்களுக்கு வாழ்க்கைச் சாதனங் களையும், வேலையையும் தரக்கூடிய வேளாண்மையின் மீதும் குடிசைத் தொழில்களின் மீதும் கவனம் செலுத்துவது மிகவும் நியாயமானதே. ஆனால் எது இல்லாமல் அரசாங்கம் பொருளா தாரச் சுதந்திரத்தை அடைய முடியாதோ அந்த கனரகத் தொழில் வளர்ச்சிக்கு எதிராக இது காட்டப்பட்டுள்ளது அல்லவா? தற்கால இயந்திரத் தொழிலின் அஸ்திவாரத்தைத் தோற்றுவிப்பதில் அரசுப்பிரிவிற்கு உள்ள தலைசிறந்த பங்கை சந்தேகத்திற்கு உள்ளாக்கலாமா? நம்முடைய காலகட்டத்தில் வலிமையான அரசுப் பிரிவு இல்லாத ஒரு வளரும் நாட்டைச் சிந்தனை செய்ய இயலுமா?

''காந்தியை நோக்கித் திரும்புவோம்'' என்ற அழைப்பு காந்தி, நேரு இருவரின் நிலைகளையும் எதிரெதிராகக் காட்டு வதற்கு அடிக்கடிப் பயன்படுத்தப்படுகின்றது. இந்திய விடு தலைப் போராட்டத்தின் இரண்டு புகழ் மிக்க தலைவர்களின் கண்ணோட்டங்கள் பெரிதும் வித்தியாசப்பட்டன என்பது நன்கு தெரிந்ததே. அவர்கள் இருவருமே அதைப் பற்றி நிறைய பேசினர். ஆனால் அவர்கள் இருவருமே, தங்களைச் சுதந்திரப் போராட்டத்தில் சகதோழர்களாக்கிய தமது கொள்கைகளின் மூலப் பொதுமையைக் கண்டனர். மேலும் நேரு தன்னுடைய சித்தாந்தப் பரிணமத்தில் காந்தியத்தை நெருங்கினர். இதைக் காந்தி 1942ம் வருடம் நேருவைத் தன்னுடைய அரசியல் வாரிசாகப் பெயரிட்டபோதே, முன்னுணர்ந்தார். காங்கிரசின் நூல்களில் காந்தி, நேரு இருவரின் கண்ணோட்டங்களில் இருந்த நெருக்கம் மிகைப் படுத்தப்பட்டது என்றால் இன்றைய இந்திய தேசிய காங் கிரசின் எதிரிகள் அவர்களின் வித்தியாசங்களை மட்டுமே வற்புறுத்துகின்றனர். இவ்விதமாக ''காந்தியை நோக்கித் திரும்புவோம்'' என்ற அழைப்பும் நேருவை நிராகரிப்பதையே உபதேசிக்கிறது. இரண்டு அணுகுமுறைகளும் ஒருதலைப்பட் சமானவையே. காந்தி, நேரு இருவரின் கண்ணோட்டங்களின் ஒப்புநோக்கு ஆராய்ச்சி, அவர்களின் பரஸ்பரச் செல்வாக்கை

நம்பவைக்கிறது. நேரு தன் வாழ்நாள் முழுதும் காந்தியின் தாக்கத்தின்கீழ் இருந்தார். ஆனல் காந்தியும் தன்னுடைய இளைய நண்பரின் சில கருத்துக்களை ஏற்றுக் கொண்டதுடன், அவை இந்திய தேசிய காங்கிரசின் கொள்கை அமைப்பைச் சிறப்பாக்குகிறது என்பதையும் ஒப்புக்கொண்டார். 1931ம் வருடம் கராச்சியில் நடந்த காங்கிரஸ் மகாநாட்டில் நேருவால் முன்வைக்கப்பட்ட அடிப்படை உரிமைகள், பொருளாதாரச் செயல்திட்டங்கள் ஆகியவற்றைப் பற்றிய தீர்மானத்தை அவர் அங்கீகரித்தது இதற்கு அத்தாட்சியாக விளங்குகின்றது.

இவர்கள் இருவரையும் எதிர் எதிராகக் காட்டுவதை நியாயப்படுத்த முடியாது. ஆனல் முக்கியமானது மற்ருென்று: ஏற்கெனவே காந்தி அல்லது நேரு இருவராலுமே இன்றைய இந்தியாவின் பல பிரச்சினைகளுக்குப் பதிலளிக்க முடியாது என்ருகி விட்டது. அதே சமயம் காந்தி, நேரு இருவரின் செல்வாக்கையும் அரசியல் பணிகளையும், கொள்கைகளையும் கணக்கில் கொள்ளாமல் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதும் இயலாது. காந்தியினுள் தேசியத்தின் மூல காரணங்களும் மரபுகளும் மிகவும் வலிமையுடன் விளங்கின; நேருவினுள் எதிர்காலத்திலான நாட்டமும், முன்னேற்றத்தை நோக்கி மனிதகுலம் போடும் நடையின் அடிப்படைப் பொதுமையின் மீதான நம்பிக்கையும் இருந்தன. இவ்வாறு இருந்த போதிலும் அவர்கள் இருவருமே தேசிய உணர்வு, கலாச்சாரம், மொத்தத்தில் தேசிய வாழ்க்கையின் பாகமாக விளங்கினர்.

காந்திக்கும் நேருவுக்கும் இடையில் யாரைத் தேர்ந்தெடுப்பது என்பதாகக் கேள்வி இல்லை என்பதும், அவர்களின் அரசியல் கொள்கைகளிலும், பணிகளிலும் எவற்றைப் பயன்படுத்திக் கொள்வது, எவற்றை நிராகரிப்பது, தேர்ந்தெடுத்ததை எவ்விதம் தொகுப்பது என்பதில்தான் கேள்வி அடங்கியுள்ளது என்பதும் தெளிவாகும். ஆனல் இதுவோ வர்க்க-அரசியல் நிலையைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகின்றது.

இன்று இந்திய தேசிய காங்கிரசின் பொருளாதாரக் கொள்கையின் அம்சங்களில் பலவற்றை, முதன்மையாக இயந்திரத் தொழிலுக்கும் வேளாண்மைக்கும் உள்ள விகிதத்தையும், அரசுப் பொருளாதாரப் பிரிவுகள், குடிசைத் தொழில்களின் பங்கையும் மையப்படுத்துதல் கொள்கையையும் விமர்சிக்கக் காந்தியத்தைப் பயன்படுத்துகின்றனர். காந்தியத்தின் சமூக சித்தாந்தங்களைப் பொறுத்தவரையில் இயந்திரத்

தொழிலிலும், வேளாண்மையிலும் முதலாளித்துவத்தைக் கண்டனம் செய்ததும், வர்க்கங்களும் சுரண்டலும் அற்ற சமுதாயத்தைப் பற்றிய அவருடைய நாட்டமும், காந்தியை நோக்கித் திரும்புவோம் என்று அறைகூவியழைப்போரின் விருப்பமாக இல்லை. சமூகச் சீர்திருத்தத்திற்கான காந்திய முறைகளை—சத்தியாகிரகம், பிறருக்கு உபகாரம் செய்தல் ஆகியவற்றைப் பற்றியும் இவ்வாறே கூற முடியும். இந்த உபகாரம் செய்தல் என்பதைப் பற்றிய தத்துவம் நல்ல விருப் பங்களுக்கு மட்டுமே காந்தியைக் கொண்டு செல்லவில்லை. சட்டபூர்வமான ஒழுங்கு முறையையோ, அரசாங்கத்தின் குறுக்கீட்டையோ, ஏற்கெனவே சோதித்துணர்ந்த ஆயுத மான சத்தியாகிரகத்தை ஏற்றுக் கொள்வதையோ அவர் மறுக்கவில்லை. ஆனால் ''காந்தியத்திற்குத் திரும்புவோம்'' என்ற அறைகூவலில் சர்வோதயம் மற்றும் உபகாரக் கோட் பாடுகளை நடைமுறையில் செயலாக்கும் முயற்சிகளைப் பற்றியோ, காந்தியக் கற்பனுவாத சோஷலிசத்திற்கு உயிர் தருவதைப் பற்றியோ பேசப்படவில்லை.

தொழிலாளி வர்க்கத்தின், உழைக்கும் விவசாயிகளின் முன்னர் முதன்மையாக பெரிய ஏகபோக மூலதனமும், பணத்தைப் பெருக்கிக் கொண்டும் அரசியலில் தன் நிலையை உறுதியாக்கிக் கொண்டும் செல்லும் தேசிய முதலாளித் துவமும், முதலாளித்துவ நிலப்பிரபுக்களும் நிற்கும் இப்புதிய வரலாற்றுச் சூழ்நிலையில் உழைப்பாளிகளின் வர்க்க உணர்வை மந்தமாக்குவதற்குத்தான் காந்தியக் கருத்துக்களான பிறருக்கு உபகாரம் செய்தல் என்பதும் சர்வோதயாவும் எல்லாவித மான முதலாளித்துவ அரசியல்வாதிகளாலும் பயன்படுத்தப் படுகின்றன.

ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மையும், காலனி ஆதிக்க எதிர்ப்புத் தன்மையும் கொண்ட ஜனநாயக சக்திகள் காந் தியின் செல்வாக்கைத் தங்களின் குறுகிய வர்க்க நலன்களுக்குப் பயன்படுத்த முயற்சிக்கும் முதலாளி வர்க்கத்தின் முயற்சி களைக் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாக்குகின்றன. ஆயினும் காந்தியின் மிகவும் நம்பிக்கைக்குரிய சீடர்களிடமும், அவரைப் பின் தொடர்பவர்களிடமும், உதாரணமாக வினோபா பாவேயிடம், காந்தியக் கோட்பாடுகளின் எல்லைக் குள் அவற்றின் முக்கியத்துவத்தை மாற்றுவது நிகழ்ந்தது. ஒரு புறத்தில் அவர்கள் காந்தியத்தின் சமூக அம்சங்களை

நெருங்குவதில் விருப்பமுள்ளவர்களாக உள்ளனர். மறு புறத்திலோ, நம்பகமான வெகுஜன அஹிம்சா எதிர்ப்பு முறையை இன்றைய சுரண்டும் வர்க்கங்களுக்கு எதிராகப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதுடன், எல்லா வித சமூக கேடுகளுக்கும் எதிரான அஹிம்சா எதிர்ப்பு முறைக் கொள்கை யிலிருந்து பொதுவான எதிர்ப்பற்ற கோஷத்திற்கு மாறுகிறார் கள். மக்களின் சார்பாக சமூக, அரசியல் வாழ்வில் அவருக்கே உரிய வகையில் குறுக்கிட்ட காந்தியின் கொள்கைகளின் தீவிர சமுதாயத்தன்மை, அவரே ஏற்றுக் கொண்ட விசேஷ முறை களில்கூட இந்திய பூர்ஷ்வா அரசியல்வாதிகளாலும், கொள் கைவாதிகளாலும் முற்றிலும் மறக்கப்பட்டு வருகின்றது. காந்தியத்தை இயந்திர முறையில் பின்தொடர்பவர்கள் அதைத் தனிப்பட்டவர்கள் ஒழுக்க சீலராகப் பூரணத்துவம் அடைவதற்கான வழியாகவும் எல்லா வர்க்கங்களுக்கும் இடையே சமரசத்தை உறுதியாக்கச் செய்யும் கோட்பா டாகவும் மட்டுமே காட்டுவதில் விருப்பமுடையவராக உள் ளனர்.

இன்று தங்களைக் காந்தியவாதிகளாகப் பெயரிட்டுக் கொள்ளும் அனைவருமே உண்மையில் காந்தியவாதிகளாக இல்லை என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். காந்தியின் பெயரை, அவருடைய போதனையின் சாராம்சத்திற்கே எதி ரான குறிக்கோள்களுக்காகப் பயன்படுத்துவதற்கான முயற்சி கள் இன்றைய இந்தியாவில் வெகுவாய்ப் பரந்துள்ளன.

காந்தியத்தை இந்திய தேசியப் பூர்ஷ்வாக் கொள்கையாக ஒருதலைப்பட்சமாகக் கருதுவது மேற்கூறிய போக்குகளை எதிர்ப்பதற்கு உதவாது. ஏனெனில், காந்திய சித்தாந்தத் தைத் தங்கள் ஆளுகைக்கு உட்படுத்தி அதை முதலாளித் துவத்திற்கும், பிற்போக்குவாதத்திற்கும் சேவகம் செய்ய வைக்கும் எண்ணம் கொண்டுள்ள இந்தப் போக்குகளின் உண்மையான அர்த்தத்தை அது வெளிப்படுத்துவதில்லை.

சுதந்திர இந்தியாவின் வரலாற்றுக் காலகட்டம் காந் தியத்தை மிகவும் சரியாக மதிப்பிட நமக்கு உதவுகிறது. காந்தியால் தோற்றுவிக்கப்பட்டு, தத்துவ ரீதியாக, அரசியல் போதனையாக அவராலேயே நடைமுறையில் பயன்படுத் தப்பட்ட காந்தியம் பிரிட்டிஷ் நிர்வாகத்துடன் அடிக்கடி செய்து கொண்ட சமரசங்களைக் கொண்டு பார்த்தாலும் அது காலனி ஆதிக்கத்திற்கு எதிராக உறுதியுடன் நின்றது

என்பதும், காந்தி தன்னுடைய முடிவான குறிக்கோளை—தேசிய சுதந்திரத்தை—அடைவதில் மாறுமல் நின்றூர் என்பதும் இப்போது தெளிவாகப் புலப்படுகின்றது. பிரிட்டிஷ் நிர்வாகத்துடனுன காந்தியின் சமரசங்கள் வெகுஜன இயக்கத்தைத் தற்காலிகமாக மந்தப்படுத்தினுலும் அவருடைய தலைமையின்கீழ் விடுதலைப் போராட்டம் திட்டமான கோரிக்கைகளுடன் மேலும் மேலும் உயர்ந்த நிலைக்கு மாறிச் சென்றது. காந்தியின் வாழ்க்கையும் சேவைகளும், அவர் என்றென்றும் காலனி ஆதிக்க, ஏகாதிபத்திய, நிறவெறி எதிர்ப்புப் போராட்டங்களிலும், பலவிதங்களில் எதார்த்தத்திலிருந்து விலகியிருந்த போதிலும், மக்களுக்கும் விவசாய வெகு ஜனங்களுக்கும் நெருங்கிய, மனித நேயம் மிகுந்த சமூக நீதிக் கோட்பாடுகளிலும் மிகுந்த நம்பிக்கை உடையவராக இருந்தார் என்பதற்குச் சான்றூக உள்ளன.

காந்தியின் சேவைகளின் சமூக முக்கியத்துவத்தைப் பற்றிய நேருவின் வார்த்தைகள் பலவிதங்களில் உண்மையானவையே.

''பிற தேசியவாத இயக்கங்களைப் போலவே இந்திய தேசியவாத இயக்கமும் சாராம்சத்தில் பூர்ஷ்வாத் தன்மை கொண்டதே என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அது இயற்கையான வரலாற்று வளர்ச்சிக் கட்டமாக இருந்தது. அதைத் தொழிலாளி வர்க்கத்தின் இயக்கமாகக் கருதுவதோ, விமர்சிப்பதோ தவறூனதாக இருக்கும். இந்த இயக்கத்தின் பிரதிநிதியாகவும் இதன் தொடர்பாக இந்திய வெகு ஜனங்களின் விருப்பத்தை எடுத்துரைப்பவராகவும் காந்தி விளங்கினுர். அவர், தேவையின் பொருட்டே தேசியவாதத் தத்துவத்தின் எல்லைக்குள் இயங்கினுர். ஆனுல் வெகு ஜனங்களை தூண்டுவதற்கான விருப்பமே அவருள் ஓங்கி இருந்தது. இந்த வகையில் அவர் எப்போதும் தேசியவாத இயக்கத்தின் முன்னிலையில் இருந்து, படிப்படியாக காந்தியத் தத்துவத்தை ஏற்றுக் கொள்ளத் தூண்டினுர்... தேசியவாத இயக்கத் தளத்தில் இயங்கிக் கொண்டு வர்க்கச் சண்டைகளைப் பற்றி அவர் சிந்திக்கவில்லை, இன்னும் அவற்றைச் சமரசப்படுத்த முயன்றூர் என்பது முற்றிலும் உண்மையே. ஆனுல் அவர் தன்னை அர்பணித்துக் கொண்ட சேவைகளும், அவர் இதை மக்களுக்குக் கற்பித்ததும் வெகு ஜனங்களின் உணர்வை வெகுவாக உயர்த்தியதுடன், சமூகப் பிரச்சினைகளுக்கு

முதன்மையான முக்கியத்துவத்தை அளித்தன. வெகு ஜனங்களின் பங்கு எங்கே தேவையோ, அங்கே அதை உயர்த்துவதில் அவருக்கிருந்த உறுதியான நாட்டம், வெகு ஜனங்களுக்குப் பயன்படும் வகையில் தேசிய இயக்கத்தைத் திசை திருப்பியது'' என்று நேரு எழுதினர்.*

காந்தியக் கோட்பாடுகளின் ஜனநாயகச் சாரங்களை இழக்கச் செய்வதற்கான முயற்சிகளுக்குத் தடையாக இருப்பதில் இந்திய முற்போக்கு வட்டங்கள் அக்கறை கொண்டுள்ளன. காந்தியின் ஜனநாயக மனித நேயத்தையும் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வையும் புறக்கணித்து மக்களின் நலன்களுக்கு எதிராகச் செயல்படும், இந்திய பூர்ஷ்வா நில உடைமை பிற்போக்காளர்களால் காந்தியின் பெயரும், அவருடைய கருத்துக்களும் கையாளப்படக் கூடாது.

இந்திய முற்போக்காளர்களிடம்—புரட்சியாளர்கள், விஞ்ஞான சோஷலிசவாதிகளிடம்—காந்தியத்துடனன அடிப்படையான கருத்து மற்றும் நடைமுறைத்தந்திர வேறுபாடுகள் நிலவுகின்றன. ஆனல் குறிப்பாக அவர்கள்தான் காந்தியின் சேவைகளையும் உயர்ந்த கருத்துக்களையும் உண்மையான மரியாதையுடன் அணுகுகின்றனர். குறிப்பாக அவர்கள்தான் காந்தியின் ஜனநாயக, சமூகத் தத்துவத்தை, அதற்கு உண்மையான விஞ்ஞான சாரத்தைக் கொடுத்து, இந்திய மக்களின் சிறந்த எதிர்காலத்திற்கான தங்களுடைய போராட்டத்தில் பயன்படுத்துகின்றனர். குறிப்பாக அவர்கள்தான் காந்தியப் போராட்ட முறைகள் எல்லாவிதமான புரட்சி இயக்கங்களாலும் வகுக்கப்பட்ட வெகுஜன தேசிய விடுதலைப் போராட்ட, வர்க்கப் போராட்ட முறைகளின் அங்கமாக விளங்குகின்றன என்பதைப் புரிந்து கொண்டு, அவருடைய போராட்ட அமைப்பு முறைகளையும் வெகுஜன இயக்கங்களின் நடைமுறைத் தந்திர வழிகளையும் நடைமுறையில் பயன்படுத்துகின்றனர்.

* * *

சோவியத் ஆராய்ச்சியாளர்கள் காந்தியத்தைப் பல முறை ஆராய்ந்துள்ளனர். காந்திய ஆராய்ச்சி என்பது ஒரு

---

* Jawaharlal Nehru. *India and the World*. L., 1936, pp. 172-173, 174-175. — ப-ர்.

சரித்திரத்தைக் கொண்டுள்ளது. கடந்தகால சோவியத் நூல்களில் காந்தியத்தைப் பற்றிய விளக்கங்களில் பல தவறு களைச் சந்திக்க நேரிட்டிருக்கலாம் அவை காந்தியத்தை ஒரு தலைப்பட்சமாக அணுகியதால் ஏற்பட்டவை. அதன் காரணங் களில் முக்கியமானவை: சோவியத் ஒன்றியத்திலிருந்தும், சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்திலிருந்தும் இந்தியா நீண்டகாலத்திற்குத் தனித்திருந்ததும், இந்தியாவைப் பற்றிய அறிவுப் பற்றுக்குறையும், காந்தியத்தில் பலமாகப் பிரதி பலித்த அதனுடைய விசேஷ நிலைகளும், ஆழ்ந்த தனிப்பட்ட தேசிய வழக்கங்களும் ஆகும்.

காந்தியின் சித்தாந்த நிலையையும், அவரின் வரலாற்றுப் பாத்திரத்தையும் மதிப்பிடுவதற்கான மார்க்சியவாதிகளின் முயற்சிகள், தேசிய விடுதலை இயக்கச் சூழ்நிலைகளில் விஞ் ஞான சோஷலிசம், காந்தியம் இரண்டின் முக்கியமான பிரச்சினைகளையும், காலனியாதிக்கச் சார்பு நிலையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட இளையபாரதத்தின் வாழ்க்கை நிலையையும் தங்களுக்குள் கொண்டுள்ளன. இங்கே இரண்டு சித்தாந்தங்களையும் ஒப்பிட்டுப் பேசவில்லை. ஏனெனில் இரண் டும் ஒன்றுக்கொன்று இணையானவை மட்டும் அல்ல என் பதுடன் அவை இரண்டும் விஞ்ஞானத் தன்மையிலும் கற்பனு வாதத்திலும் ஆழ்ந்து வித்தியாசப்படுகின்றன. எனவே இந்திய தத்துவ, அரசியல் வாழ்க்கையின் வளர்ச்சிப் போக்கு களைப் பற்றியே இங்கு பேசப்படுகின்றது.

விஞ்ஞான சோஷலிசத்தின் செல்வாக்கை விட காந்தியத் தின் செல்வாக்கு இந்தியாவில் அதிகமாக இருந்த போதிலும் வெகு ஜனங்களின்மீது தாக்கம் செலுத்துவதில், முன்னணி யில் இந்த இரண்டு கருத்துப் போக்குகளே போட்டியிட்டன. இந்திய முதலாளித்துவம் சுதந்திரத்திற்கான போராட்ட காலங்களிலே இதை நன்கு புரிந்து கொண்டது. அத்துடன் நகர்ப்புறங்களில் உருவாகிக் கொண்டிருந்த புரட்சிகர வட்டங் களின் மத்தியிலும், இடதுசாரி ஜனநாயக இளைஞர்களுக் கிடையிலும் காந்தியத்தை விஞ்ஞான சோஷலிசத்திற்கு எதிராகப் பயன்படுத்தக் கூடிய ஒரு தத்துவமாக சுதந்திரப் போராட்ட வருடங்களிலேயே அது உணர்ந்து கொண்டது. இந்திய தேசிய காங்கிரசின் வடிவில் தேசிய முதலாளித்துவம், உழைப்பாளர்கள் மத்தியில் விஞ்ஞான சோஷலிசம் பரவு வதற்கு எதிரான உத்தரவாதத்தை காந்தியத்தில் காண

முயன்றது. அதே சமயம் பொதுத் தேசிய ஏகாதிபத்திய எதிர்ப்பு நலன்களும் காந்தியத்தின் மூலம் வெளிப்பட்டன.

இன்றும் கூட காந்தியமும், விஞ்ஞான சோஷலிசமும் இந்திய சமுதாயத்தின் அரசியல்-சித்தாந்த வாழ்க்கையின் முக்கியமான இரண்டு போக்குகளாக உள்ளன.

காந்தியத்தையும் விஞ்ஞான சோஷலிசத்தையும் இந்தியாவில் எவ்விதம் நோக்குகிறுர்கள்? தற்கால இந்தியாவில் காந்தியத்தை இருவிதமாகப் புரிந்து கொள்கிறுர்கள் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு புறத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு, விவசாய சோஷலிசம் ஆகியவை அடங்கிய காந்தியின் கண்ணேட்ட தொகுப்பாக இதைப் புரிந்து கொள்கின்றனர். மறு புறத்தில் பூர்ஷ்வாக்களின் வர்க்க நலன்களைக் காப்பதற்காக காந்தியின் சில கருத்துக்கள் மட்டும் எடுத்துக் கொள்ளப்பட்டு, பல விஷயங்களில் ஒன்றுடன் ஒன்று (காந்தியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுடனும் கூட) முரண்படும் விதத்தில் முதலாளித்துவக் கொள்கைவாதிகளால் திரிக்கப்பட்டு, புரிந்து கொள்ளப்படுகின்றன. மேலோட்டமாகப் பார்க்கும் போது, காந்தியம்—இந்திய மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் படைப்பாக அதைக் கொள்ளும் போது—முக்கியமான பொது ஜனநாயகக் கருத்துக்களை அது தன்னுள் கொண்டுள்ளதை உணர முடியும். எல்லாவிதமான உண்மையான ஜனநாயக, முற்போக்கு இயக்கங்களுடனும் காந்தியம் கொண்டுள்ள தொடர்பைப் புரிந்து கொள்ள இது இடமளிக்கிறது. இதன் மூலம் ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம், நிறவெறி, போர்வெறி, நில உடைமை, ஏகபோக மூலதனம் ஆகியவற்றிற்கு எதிரான பரந்த அளவில் வெகுஜன மக்களின் நலன்களைக் காக்கும் ஜனநாயக முற்போக்கு சக்திகளின் ஒன்றிணைந்த போராட்டத்திற்கான சாத்தியத்தை எதிர்நோக்குவது எளிதேயாகும். விஞ்ஞான சோஷலிசத்தின் ஆதரவாளர்களும் காந்தியவாதிகளும் ஒன்றுக இணைந்து சமாதானம், தேசிய சுதந்திரத்தை உறுதியாக்குதல், ஜனநாயகம், சமூக முன்னேற்றம் ஆகியவற்றிற்கான போராட்டத்தில் ஒரு பலம் மிக்க தேசிய ஜனநாயக ஐக்கிய முன்னணியை உருவாக்க முடியும். இந்தியாவில், குறிப்பாக தற்காலத்தில், எல்லா ஜனநாயக, முற்போக்கு இயக்கங்களும் தங்களுடைய பொதுவான குறிக்கோள்களினுல் ஒன்றிணைக்கப்படுகின்றன. அன்னிய, உள்நாட்டு ஏகபோக முதலாளித்

துவத்தைக் கட்டுப்படுத்தி பின் அவற்றை முழுமையாக ஒழித்தல், மெதுவாக நாடு முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையிலிருந்து விலகுவதற்கான சூழ்நிலைமைகளை உருவாக்குதல் என்ற இந்திய மார்க்சியவாதிகளால் முன்வைக்கப்பட்ட குறிக்கோள் அத்தகையவற்றில் ஒன்ருக விளங்குகிறது. இத்தகைய மாபெரும் குறிக்கோள்கள் நிறைவேற ஒன்றிணைந்த முயற்சிகள் தேவை. ஆனல் இவை காந்தியவாதிகளுக்கிடையில் பல பாகுபாடுகளை ஏற்படுத்தும், சமூக முன்னேற்றத்திற்கு ஆதரவாக நிற்பவர்களை ஒன்று சேரச் செய்யும்.

ஜனநாயக இயக்கங்களின் முதலாளித்துவ எதிர்ப்புச் சாரத்தை நீக்கும் சுயநல எண்ணத்துடன், காந்திய சமூகக் கொள்கைகள் அத்தகைய இயக்கங்களுக்கு எதிரானவை எனக் காட்ட பெரிய இந்திய பூர்ஷ்வாக்களும், பிற்போக்குவாத சக்திகளும் முயல்கின்றன. அவர்களின் இத்தகைய முயற்சிகளுக்குச் சாதகமான வகையில் காந்தியத்திற்கும் விஞ்ஞான சோஷலிசத்திற்கும் இடையில் ஏதாவது தத்துவப் பொதுமையைக் கண்டறிய முயற்சிப்பது பலனற்றதாகும்.

விஞ்ஞான சோஷலிசத்தின் நிலையிலிருந்து காந்தியத்தை ஆராய்வது, முதலாளித்துவத்தின் நலன்களுடனை காந்தியத்தின் கணிசமான உறவை வெளிப்படுத்துகிறது. இத்தகைய உறவு எந்த ஒரு தேசிய சீர்திருத்தவாதத்திலும், கற்பனுவாத சோஷலிசத்திலும் இயல்பானதும் தவிர்க்க முடியாததும் ஆகும். அத்துடன் பூர்ஷ்வா, காந்தியத்தைத் தன்னுடைய வர்க்க நலன்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய தன்மையையும் அது வெளிப்படுத்துகின்றது. நீதி-மத நிலைகளிலிருந்து முதலாளித்துவ சமுதாயத்தின் கேடுகளைக் காந்தியம் தீவிரமாகக் கண்டனம் செய்தாலும், சமுதாய மாற்றத்திற்கென சாராம்ச ரீதியாக புரட்சி எதிர்ப்புத் தன்மையைக் கொண்ட முறைகளை முன்வைப்பதானது, முதலாளித்துவ நீதிமுறைக்கும், முதலாளித்துவ வாழ்க்கை முறைக்கும் எதிரான காந்தியின் விமர்சன நிலையையும் மீறி பூர்ஷ்வாக்கள் அவரை ஆதரிப்பதற்கு வழி வகுத்தன.

ஆனல் காந்தியம் விஞ்ஞான சோஷலிசத்துடனும் தொடர்புடையதாகும். இத்தொடர்பு தேசிய சுதந்திரப் போராட்டத்தில் மட்டுமின்றி, வெகுஜன மக்கள் நலன்களின் மீதான உண்மையான அக்கறை, உழைப்பாளிகளின் நிலையை சிறப்பாக்குவதிலான நாட்டம், சமூக நீதி நிறைந்த சமுதாயத்தை

நிறுவுதல் ஆகியவை காந்தியத்தின் கற்பனுவாத தத்துவமான சர்வோதயத்தில் வெளியிடப்படுகின்றன. அதில், பிற எந்த ஒரு கற்பனுவாத அல்லது தேசிய சோஷலிசக் கருத்திலும் வெளியிடப்படுவது போன்றே, நூருண்டுகளுக்கும் முன்பு விஞ்ஞான சோஷலிச சிருஷ்டிகர்த்தாக்களால் முன்வைக்கப் பட்ட பல கோட்பாடுகள் பிரதிபலித்தன. அவையாவன: அனைவருக்கும் உழைப்புக்கான உத்தரவாதம், மனிதனை மனிதன் சுரண்டுவதையும் சமுதாயத்தில் உள்ள வர்க்கப் பிரிவுகளையும் ஒழித்தல், முக்கிய உற்பத்திச் சாதனங்களின் அடிப்படை யிலான சமுதாய உடைமை, உழைப்புக்கேற்ற விதத்தில் பொருளாயத நலன்களைப் பிரிப்பது இத்தியாதி. இன்றைய இந்திய சமுதாயத்தின் முன் நிற்கும் முக்கியப் பிரச்சினைகளை அணுகுவதில் காந்தியம், விஞ்ஞான சோஷலிசம் இரண்டிற் கும் உள்ள பொதுத் தன்மை இத்துடன் முற்றுப்பெறுகிறது. மற்ற எல்லாவற்றிலும் அவை வேற்றுமைகளைக் கொண்டுள் ளன. முதலாளித்துவ சமுதாயத்தை விமர்சிப்பது, சோஷலிச இலட்சியங்களைப் புரிந்து கொள்வது, அதை உண்மையாக்கு வதற்கான போராட்ட முறைகள், வர்க்கங்களையும் வர்க்கப் போராட்டத்தையும் புரிந்து கொள்ளுதல், எதிர்கால அரசாங் கம், வரலாற்று ரீதியாக உத்தேசிக்கப்பட்ட, பூமியில் சமூக நீதியை உண்மையில் நிறைவேற்றக் கூடிய திறமைவாய்ந்த சமூக, கட்சி-அரசியல் சக்திகள் ஆகிய அனைத்தையும் பற்றிய கருத்துக்களில் இரண்டிற்கும் இடையேயான வேற்றுமைகள் ஊடுருவி நிறைந்துள்ளன. நவீன சமுதாயத்தை உருவாக்கக் கூடிய இந்த எல்லா தத்துவ நடைமுறை மூலப் பிரச்சினை களிலும் விஞ்ஞானம் கற்பனுவாதத்திற்கு எதிராயும் பொருள் முதல்வாதம் கருத்துமுதல்வாதத்திற்கு எதிராயும் இயக்க இயல் இயக்கமறுப்பியலுக்கு எதிராயும் இருப்பதைப் போன்றே விஞ்ஞான சோஷலிசம் காந்தியத்திற்கு எதிராக நிற்கின்றது.

பூர்ஷ்வா, நிலச்சுவான்தார்களின் சுரண்டலைப் பல விதங்களில் காந்தி அம்பலப்படுத்தினர். இதோ ஒரு உதார ணம்.

இந்திய சிற்றரசர்களும், நிலச்சுவான்தார்களும், கோடீ சுவர்களும், வட்டிவாங்குவோரும் இத்தகைய பிறரும் பணக் காரர்களாகிக் கொண்டே செல்வதன் காரணம் என்ன என்று அவரைக் கேட்டபோது அவர். ''தற்சமயம் மக்களைச் சுரண் டுவதன் மூலம்தான்'' என பதிலளித்தார். மேலும் செல்

வந்தர்களை உருவாக்கும் தொழிலாளர், விவசாயிகளைவிட அதிக வசதியில் வாழும் இவர்கள், சமுதாயத்திற்கு முன் அதை நியாயப்படுத்த முடியாது என்று குறிப்பிட்டார்.* ஆனால் சுரண்டல் சமுதாயத்தைப் பற்றிய காந்தியின் விமர் சனங்களை நிர்ணயிக்கக் கூடியதாக இது இருக்கவில்லை. ''ஐரோப்பிய'' நாகரிகத்தைப் பற்றிய காந்தியின் கண்டனம், அவரால் சரியாகக் குறிப்பிடப்பட்ட சமுதாயக் குறைகளை நீக்குவதற்கான உண்மையான முறைகளையும், வழிகளையும் அறியாத் தன்மையாலும் சமூக அமைப்பைப் பற்றிய தெளி வற்ற கருத்தைக் கொண்டிருந்த தன்மையாலும் சித்திரிக் கப்படுகின்றன. அவருடைய இந்தத் தன்மைகள் அவர் தன்னுடைய விமர்சன இலக்காக பூர்ஷ்வா நாகரிகத்தைத் தேர்ந்தெடுக்காமல் ''ஐரோப்பிய'' இயந்திர நாகரிகத்தை நிர்ணயித்ததில் தெளிவாகத் தெரிகின்றன. ''இயந்திரங்களை நம்மால் கண்டுபிடிக்க முடியவில்லை என்பது அல்ல காரணம். ஆனால் இத்தகைய இயந்திரங்களைச் செய்தால் நாம் அவற்றின் அடிமைகளாகி விடுவோம், நம்முடைய ஒழுக்க நெறிப் பண்பு களை இழந்து விடுவோம் என்பதை நம்முடைய முன்னோர்கள் புரிந்து கொண்டனர். அதனால் நீண்டகாலச் சிந்தனைக்குப் பின்பு நாம் நம்முடைய சொந்த கைகால்களின் உதவியுடன் தான் உழைக்க வேண்டும் என்ற முடிவுக்கு அவர்கள் வந் தனர்''** என்று காந்தி கூறினார். இதிலிருந்துதான் முதலாளித் துவ உற்பத்தி முறை காந்திய விமர்சனத்தின் மையமாக விளங்கவில்லை என்பதும், தற்கால இந்தியர்களின் முன்னோர் களால் முழுதும் ஒதுக்கப்பட்டிருந்த இயந்திர உற்பத்தி முறையே விளங்குகின்றது என்பதும் தெளிவாகிறது. வேலை யின்மை, சுரண்டல், செல்வம் அதிகாரம் ஆகியன ஒரு சிலரிடமே குவிந்திருப்பது போன்ற இன்னும் பிற எல்லா சமுதாயக் கேடுகளுக்குமான காரணத்தை, குறிப்பாக இயந் திரங்களில் காந்தி கண்டார். பெரிய தொழிற்சாலைகளின் வளர்ச்சியால் விளையும் இத்தகைய எல்லா விளைவுகளும் வரலாற்றுப் பரிணமிப்பு வர்க்கத் தன்மைகளைக் கொண்டிருப் பதைக் காந்தி கூறவில்லை. எதிரியின் இடத்தில் சுரண்டும்

---

* Gandhi M.K. *Towards Non-violent Socialism*. Ahmedabad, 1957, p. 161.

** Gandhi M.K. *The Collected Works*. Vol. X. Ahmedabad, 1963, p. 37.

வர்க்கத்தை அல்லாமல் இயந்திரங்களேயே அவர் கண்டார். ''கேடு நிறைந்த இயந்திர உற்பத்தியின்'' நிகழ்ச்சிப் போக்கில் வர்க்கங்களுக்கு இடையிலான உறவுகளேப் பொறுத் தவரையில் அவர் தீவிரமாகக் கண்டித்த சுரண்டும் சமுதாயத் தின் தீயவிளேவுகளின் எதார்த்த அடிப்படைகளே காந்தி புரிந்து கொள்ளவில்லே. வர்க்க முரண்பாடுகளே அவர் அறிந் திருந்தாலும் திடமான மனித உறவுகளின் மேல்கட்டுமானமே அவை எனக் கருதி, அவற்றிற்கு நிர்ணயமான முக்கியத் துவத்தை அவர் தரவில்லே. ''வர்க்கப் போராட்டம் இந்தி யாவின் ஆன்மாவிற்கு அன்னியமானது''* என்று கூறினுர் காந்தி. பேராசை, தன்னலம், அறநெறி வழுவுதல், மக்களின் தவருன நம்பிக்கைகள் ஆகியவற்றின் விளேவாகவே வர்க்க முரண்பாடுகள் தோன்றி, தீவிரமடைகின்றன என அவர் கருதினுர். அவர் கருத்துப்படி ஜமீன்தார்களுக்கும் விவசாயி களுக்கும், முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையி லான சகஜமான உறவுகள் தொடர்ந்த ஒத்துழைப்புடன் நிலவ வேண்டும். சமுதாய வளர்ச்சியின் வர்க்க, பொருளா தார விதிகளே காந்தி புறக்கணித்தார். சமுதாய வளர்ச்சி என்பதற்கு அவர் தந்த பொருள் மிகவும் கற்பனுவாதமா னதும். வரலாற்று நிகழ்ச்சிப் போக்கின் அரசியல்-பொரு ளாதார வளர்ச்சி விதிகளேப் புறக்கணிப்பதன் மேல் அமைந் ததாகவும் இருந்தது. ஆகவே சிறந்த, நீதி நிறைந்த சமூக சீர்திருத்தங்களேப் பற்றிய காந்தியக் கருத்துக்களில் அகநிலேப் போக்குகளும் தன்னிச்சைப் போக்குகளும் தென்படுகின்றன. காந்தியின் கருத்துப்படி மக்கள் அனேவரும் உயர்ந்த அற நெறிக் கருத்துக்களேக் கொண்டவர்களாளுல், காலப் போக் கில் சமூக நியாயம் கண்டிப்பாக நிலேநிறுத்தப்படும். வர்க்கங் களுக்கிடையில் அமைதி, உடைமையற்ற வர்க்கத்தை உடமை யுள்ள வர்க்கம் அரவணேத்து ஆதரிப்பது ஆகியவை காந் தியத்தின் உட்பகுதிகளாகும். ஒருவேளே வர்க்கப் போராட் டம் தோன்றுமேயாளுல், முதலாளிகளும், நில உடைமை யாளர்களும் ''குடும்பத்தின் தந்தையைப்'' போன்ற தங் களுடைய பொறுப்பைத் தவிர்ப்பதும், தாங்களும் ''குடும் பத்தின்'' ஒரு பகுதி என்பதை மறப்பதும் தான் காரண

* Gandhi M.K. *Sarvodaya (The Welfare of All)*. Ahmedabad, 1954, p. 89.

மாக இருக்கும். ''மேற்கே முதலாளிகளுக்கும் தொழிலாளர் களுக்குமிடையே தொடர்ந்த பிணக்கு இருந்து வருகின்றது. ஒவ்வொரு சாராரும் அடுத்தவரை இயற்கையான எதிரி யாகக் கருதுகின்றனர். இது இந்தியாவிலும் ஊடுருவி விட் டதைப் போலத் தோன்றுகின்றது. இப்படியே இது நிலைத்து நின்று விடுமேயானுல், நமது இயந்திரத் தொழில், வாழ்க்கை முறை ஆகியவை நாசமாகி விடும். தாங்கள் ஒருவரை அடுத்தவர் சார்ந்திருப்பதை இருசாராரும் புரிந்து கொண் டார்களேயானுல் அவர்களுக்கிடையே சச்சரவுக்கான காரணங் கள் குறைந்து விடும்''* என்று காந்தி குறிப்பிட்டார்.

மக்களின் சமுதாய, தனிப்பட்ட வாழ்க்கையின் சமூக, பொருளாதார நிலைகளும் முதலாளித்துவ அல்லது நில பிரபுத்துவ உற்பத்தி முறைகளின் மூலம் பொருளாயத கலாச் சார நலன்களை உற்பத்தி செய்வதும் சமுதாயத்தில் உயர்ந்த அறநெறிக் கோட்பாடுகள் பரவுவதற்கு எதிரான தடைகளைத் தங்களுக்குள் கொண்டுள்ளதை காந்தி கவனத்தில் கொள்ள வில்லை. உலகத்தை மாற்றி அமைக்கும் காந்தியின் அஹிம்சா முறையானது பழைய, நேர்மையானதும் உண்மையானது மான ஒரு கோஷமாகும்; இது பல நூற்றுண்டுகளாக—இந்திய வரலாற்றிலும்கூட—சுரண்டும் வர்க்கத்திற்கு எதிராக பலத்தை உபயோகிக்கக் கூடாது என்று சுரண்டப்படும் வர்க்கத்திற்கு அறிவுறுத்தி, சுரண்டும் வர்க்கத்தை சுரண்டப் படுவோரிடம் நல்லவர்களாக நடந்து கொள்ளக் கேட்டுக் கொண்ட ஒரு கோஷமாகும்.

காந்தியின் அஹிம்சாவாதக் கோட்பாட்டைப் பூரண மாக்கிக் காட்டுவதைத் தன் **சுயசரிதையில்** விமர்சிக்கையில் நேரு எழுதினுர்: ''அறிவூட்டக் கூடியதாக வரலாற்றில் ஏதோ ஒன்று உள்ளது எனில் அது இதுதான்: வர்க்கங்கள், தனிக் குழுக்கள் ஆகியவற்றின் அரசியல் கண்ணேட்டங்கள் அவற்றின் பொருளாதார நலன்களாலேயே நிர்ணயிக்கப் படுகின்றன... நாம் தொலை தூரத்திற்கு முன்னேற அஹிம்சா வழி செய்யலாம். ஆனுல் நம்முடைய முடிவான குறிக் கோளுக்கு நம்மை அது கொண்டு செல்லும் என்பதை நான் சந்தேகிக்கின்றேன்... சமுதாயத்தில் உள்ள இன்றைய தேசிய,

---

* Gandhi M.K. *Towards Non-violent Socialism*, p. 42.

வர்க்க முரண்பாடுகளை நிர்ப்பந்தத்தின் மூலம் மட்டுமே நீக்க முடியும்''°.

**கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையும்** கார்ல் மார்க்சின் **மூலதனமும்** வெளிவந்து கிட்டத்தட்ட நூற்றாண்டுகளுக்குப் பின் காந்தியால் வளர்க்கப்பட்ட அவருடைய கோட்பாடு களும் ''ஐரோப்பிய'' நாகரிகத்தைப் பற்றிய காந்தியின் விமர்சனங்களின் பொது அம்சங்களுமே மேற்கூறப்பட்டவை ஆகும். முதல் சோஷலிச நாடு உலகில் தோன்றிய பின்பு, காந்தி வெறுத்த ''இயந்திர நாகரிகம்'' அதாவது முதலாளித்து வம் புரட்சியால் தூக்கி எறியப்படும் சகாப்த நிலைகளில், இத்தகைய கோட்பாடுகள் கற்பனுவாதமாகத் தோன்றின. விஞ்ஞானத் தத்துவமான மார்க்சிய-லெனினியத்தின் பின்ன ணியில் பார்க்கும் போது முதலாளித்துவத்தைப் பற்றிய காந்திய விமர்சனம் அர்த்தமற்றதாகவே இருந்தது.

மார்க்சும் ''ஐரோப்பிய'' நாகரிகத்தின் கேடுகளை வெளிப் படுத்துவதில் தீவிரமானவராக இருந்தார். அது மட்டுமின்றி அதை ஆழ்ந்து ஆராய்ந்த அவர் ஐரோப்பாவைப் பற்றிப் பேசவில்லை. முதலாளித்துவ நாகரிகத்தையே கண்டனம் செய்தார். இயந்திர உற்பத்தி முறை, உழைக்கும் வெகு ஜனங்களுக்குக் கொண்டு வந்த பெருங்கேடுகளை விஞ்ஞான ரீதியில் அம்பலப்படுத்தினர். ஆனல் மார்க்சின் கருத்துப்படி இந்தக் கேடுகள் இயந்திரத்தினுல் ஏற்பட்டவை அல்ல. முத லாளித்துவ முறை இயந்திரத் தொழில் வளர்ச்சியே இவற் றிற்குக் காரணம் ஆகும். இந்த முறையை அவர் வெளிப் படுத்தியதுடன் முதலாளித்துவத்தின் காலனி ஆதிக்க வெறி யின் வரலாற்று விதி முறையையும், குறிப்பாக இந்தியாவைப் பிரிட்டன் தன் அடக்குமுறையின்கீழ் கொணர்ந்ததையும், ''ஐரோப்பிய நாகரிகத்தைக் கொணர்ந்ததன்'' மூலம் இந்நாட்டில் அவர்கள் நிகழ்த்திய கொடுமைகளையும் தெளி வாக்கிக் காட்டினர். பூர்ஷ்வா நாகரிகத்தின் வர்க்க இயல்பை யும் இயந்திரத்தைப் பயன்படுத்துவதிலான வர்க்கத் தன்மை யையும் மார்க்ஸ் வெளிப்படுத்தினர்.

மார்க்சின் முதலாளித்துவ சமுதாயத்தைப் பற்றிய விமர் சனத்தின் விஞ்ஞானத் தன்மை முதலாளித்துவ அமைப்பின்

---

° ஜவகர்லால் நேரு. சுயசரிதை. மாஸ்கோ, 1955, பக்கங்கள் 567, 575. (ருஷ்ய மொழியில்.)

எல்லா முரண்பாடுகளேயும் தீர்க்கும் திறன்பெற்ற சமுதாய மாக சோஷலிசத்தை நிர்ணயிக்கும் முடிவுக்கு அவரைக் கொணர்ந்தது. ஆனல் அதே சமயம், இந்தச் சோஷலிச சமுதாயம், முதலாளித்துவத்தின் பொருளாதாரக் கலாச்சார அடிப்படையின்மீதுதான் உதிக்கிறது. அத்துடன் தொழில் நுணுக்க முன்னேற்றத்தின் எல்லாப் பக்கங்களேயும், குறிப் பாக முதலாளித்துவம் தன்னேடு கொணரும் இயந்திர உற்பத்தி முறையையும், அது பயன்படுத்திக் கொள்கிறது. இதற்குமாருக உணர்வு பூர்வமான ரொமாண்டிக் (Romantic) முறையில் அணுகி பூர்ஷ்வா நாகரிகத்தை காந்தி விமர்சனம் செய்தது அவரை சோஷலிசத்தைப் பற்றிய மாயையான, கற்பனுவாதம் நிறைந்த கருத்தாக்கத்திற்குக் கொணர்ந்தது.

இந்திய விவசாய சமூகத்திற்கு, இந்தியாவின் ''பொற் காலத்திற்குத்'' திரும்பினல் பூரண நீதிக் கருத்துக்கள் சமு தாயத்தில் நிலேநிறுத்தப்படும் என்று கருதிய ஆரம்பகால கற்பனுவாதிகளின் அதே மரபைக் காந்தியும் தொடர்ந்தார். இந்தச் சமூகம், தன்னுள் அடங்கியுள்ளச் சமூக உறுப்பினர் களே, கொடுங்கோலர்களின், படையெடுப்பாளர்களின் மற்றும் நிலச்சுவான்தார்களின் சுரண்டலிலிருந்து எப்போதுமே மீட்க முடியாத சமூகம் ஆகும். இச்சமூகம் எல்லாக் காலகட்டத் திலும் கொடூரமான சாதி அமைப்பு விதிகளின்மீது கட்டப் பட்டிருந்ததும் பல நூற்ருண்டுகளாக இந்நாட்டையும் நாட்டு மக்களேயும் வெளி உலகத்திலிருந்து பிரித்து வைத்திருந்ததும் ஆகும். இத்தகைய சமூகம் வெகுகாலத்திற்கு முன்பே இந்தி யாவில் சிதைந்து விட்டது. முதலில் வியாபாரச் சரக்கு மூலதனத்தின் தாக்கத்திஞலும் பின்னர் பிரிட்டன் காலனி யாதிக்கவாதிகளின் தலேமையிலான முதலாளித்துவம், தற்கா லத்தில் தேசிய பூர்ஷ்வாவின் தலேமையிலான நில உடைமை முதலாளிகள், விரைந்து பணக்காரர்களாகும் கிராம விவ சாயச் செல்வந்தர்கள் ஆகியோரின் தாக்கங்களிஞலும் அச்ச மூகம் படிப்படியாகச் சிதைந்து விட்டது.

சீரிசைவான வரலாற்று வளர்ச்சியைப் பற்றியும் கீழ் மட்டத்திலிருந்து மேல்மட்டத்திற்கு மனித சமுதாயம் செல் வதைத் தவிர்க்க முடியாது என்பதைப் பற்றியும் போதுமான அளவு திட்டவட்டமாகக் கருத்து கொள்ளாதிருந்தால் மட் டுமே—இது காந்திக்கு உரித்தானது—சர்வோதயத்தின் புரா தன சமுதாய நிலேக் கற்பனேயை எதிர் காலத்திற்கான இலட்சி

யமாக ஏற்றுக் கொள்ள முடியும். காந்தியின் கருத்துப்படி, முன்னேற்றமும் நவீன இயந்திர நாகரிகமும் அறநெறிச் சீர்கேடுகளையும் மக்களுக்குத் துன்பங்களையும் தங்களுடன் கொண்டு வருவதால், உறுதியுடன் புராதனகாலத்திற்குச் செல்வதைத் தவிர வேறுவழியில்லை. உண்மையில் காந்தி எதிர்காலத்திற்கு அழைக்காமல் கடந்தகாலத்திற்கு அழைக்கிறார். புதிய சமுதாயத்தின் ஆதாரத்தை நவீனகால முதலாளித்துவம் தன்னையறியாமலேயே கொணரும் சமூக முன்னேற்ற அம்சங்களில் தேடாமல், வரலாற்று ரீதியில் கைவிடப்பட்டு விட்ட உற்பத்தி வழிகளிலும், சமுதாய வாழ்க்கையிலும் தேடக் கோருகிறார்.

அப்படியே நடக்க முடியாதது நடந்தது என்று வைத்துக் கொண்டாலும், அதாவது சர்வோதய முறைச் சமுதாயத்தைச் செயற்கையான முறையில் ஏற்படுத்தினாலும், அத்தகைய சமுதாயத்தின் கடுமையான இயந்திரத் தொழில் தேக்கம் பொருளாதார, கலாச்சார முன்னேற்றங்களுக்குப் பெரும் தடையாக இருந்து, அதிலும் நிறைவு, கலாச்சார வளர்ச்சி போன்ற இன்னும் பிற உண்மையான கொள்கைகளை இழந்திருக்கும். இத்தகைய செயற்கையாக உருவாக்கப்பட்ட, சுற்றியுள்ள உலகத்திலிருந்து தனியே பிரிக்கப்பட்ட சமுதாயத்தில், நெடும் வரலாற்று மாற்றங்களினால் ஏற்கெனவே இந்தியப் புராதன சமூகங்களைச் சீரழித்த அதே அம்சங்கள், சமுதாய வளர்ச்சியின் மாறாத உள் விதிகளின் தாக்கத்தினால் மறுபடி வளர ஆரம்பித்திருக்கும்.

விஞ்ஞான சோஷலிசத்தின் நிலையிலிருந்து காந்தியத்தை ஆராய்கையில், முக்கியமாகச் சமுதாய மாற்றத்திற்கான வழி முறைகள், சாதனங்கள் ஆகியவற்றின் பிரச்சினைகளின் மீது வழக்கமாக விசேஷ கவனம் செலுத்தப்படுகின்றது. காந்தியம் கேடுகளைப் பலத்தால் எதிர்க்காதது, அதாவது அஹிம்சா முறையைத் தன்னுடைய ஆயுதமாக்கிக் கொண்டது. இந்த வழி முறையைக் கண்டுபிடித்துச் செயல்படுத்தியதற்காகக் காந்தியைப் பலரும் பாராட்டுகின்றனர். மார்க்சியத்தைப் பற்றிய செய்திகளை இரண்டாந்தர மூல ஊற்றுகளிலிருந்து (இவை இப்போதனையை அடிக்கடி திரித்துரைக்கின்றன) பெறும் ஒரு சில காந்தியச் சீடர்கள் உட்பட மார்க்சிய விமர்சகர்கள் சிலருக்கு—மார்க்சியமானது அஹிம்சா கோட்பாட்டையே உறுதியாக மறுப்பதாயும் முற்றிலும்

இரத்தக் களறியான ஆயுதப் போராட்டம் மற்றும் ஆயுதந் தாங்கிய வன்முறை இயக்கமாகவும் படுகிறது. பலாத்காரத் தையும், பலாத்காரமின்மையையும் பற்றிய காந்திய, விஞ் ஞான சோஷலிசக் கண்ணேட்டங்களின் வித்தியாசங்களை இவ்விதத்தில் வியாக்கியானப் படுத்துவது விஞ்ஞான சோஷ லிசத்தின் கொள்கை எதிரிகளை, நிச்சயமாக, முற்றிலும் திருப்திப்படுத்தும். ஆனல் இத்தகையக் கற்பனைகளுக்கு உண்மை நிலையுடன் எந்தத் தொடர்பும் இல்லை. இவை விஞ்ஞான சோஷலிசத்தின் தேசிய, சமூக விடுதலைப் போராட்ட சாதனங் கள், வழி முறைகள் ஆகியவற்றின் உண்மைச் சாரத்தைப் புரிந்து கொள்ளாததால் விளைந்தவை.

விஞ்ஞான சோஷலிசத்தைச் சார்ந்தோர்—வறட்டு வேதாந் திகளோ, முரட்டுத்தன்மை கொண்டோரோ அல்லாமல் உண்மையான புரட்சியாளர்கள்—எப்போதும் எங்கும் ஆயுத மேந்திய பலாத்காரப் போராட்டத்தைப் பிரயோகிப்பதையே ஆமோதிக்கின்றனர் என்று யாரையும் தற்காலத்தில் நம்ப வைக்க இயலாது. அத்தகைய கண்ணேட்டங்கள் வரலாற்று உண்மையுடனும், மார்க்சியத் தத்துவத்துடனும், புரட்சிகரச் செயல் முறையுடனும் முரண்படுகின்றன. மார்க்சிய-லெனினிய வாதிகள் தேசிய விடுதலை இயக்கத்தின், சமூகப் புரட்சியின் சமாதான வளர்ச்சியின் குறைந்த பட்ச சாத்தியங்களைக் கூட பயன்படுத்திக் கொண்டனர். தொழிலாளர், உழைக்கும் வர்க்கத்தின் மூல நலன்களின் கண்ணேட்டத்திலிருந்து ஆயுத மேந்திய போராட்டத்தை விட அமைதி வழியே சிறந்தது என்றும் கருதினர். காந்தியின் அஹிம்சா முறைப் போராட் டங்களிலிருந்து அவற்றின் இயக்க மறுப்பியல் மற்றும் மத அடிப்படைகளை நீக்கிப்பார்க்கும் போது, அவை அமைதியான, ஆயுதமேந்தாப் போராட்ட முறைகளே ஆகும். அவற்றை விரிவுபடுத்தி, அச்சாதனங்களை பிரிட்டிஷ் காலனியாதிக் கவாதிகளின் ஆட்சிக்கும், தென் ஆப்பிரிக்க நிறவெறியாளர் களுக்கும் எதிராக வெற்றிகரமாகப் பயன்படுத்துவதிலும், இவற்றை வெகுஜனப் போராட்ட சாதனங்களாக மாற்றி உண்மையான பயனுள்ளவையாக்கியதிலும் உள்ள சாதனைகள் அவரைத்தான், சாரும் என்ருலும், இம்முறைகளைக் கண்டு பிடித்த பெருமை காந்தியைச் சாராது. சத்தியாகிரகக் கோட்பாட்டின் கிட்டத்தட்ட எல்லா சாதனங்களும்—உண்ணு விரதம் இருத்தல், ஊர்வலங்கள் நடத்துதல், தனித்தனியான

அல்லது பொது வேலை நிறுத்தங்களில் ஈடுபடுதல், வரிகொடுக்காமல், காலனி ஆதிக்க, நிறவெறியாளர் ஆட்சிகளைப் பகிஷ்காரம் செய்தல் ஆகிய எல்லாமே—காந்திக்கு முன்பே நெடுங்காலமாக எல்லா மக்களாலும், சர்வதேசத் தொழிலாளர் இயக்கங்கள், தேசிய-விடுதலை இயக்கங்கள் ஆகியவற்றில் பரந்த அளவில் நடைமுறையில் பயன்படுத்தப்பட்டன. 17—19ம் நூற்றூண்டுகளில் மேற்கு ஐரோப்பா, ருஷ்யா, தென் அமெரிக்கா, இன்னும் ஆசியாவின் பல நாடுகளிலும் வளர்ந்த விவசாய இயக்கங்களும், 18ம் நூற்றூண்டிலிருந்து ஆரம்பித்த தொழிலாளர் இயக்கங்களும் மேலே குறிப்பிடப்பட்ட போராட்ட முறைகளுடனும், அமைப்புகளுடனும் அறிமுகமாயிருந்தன. காந்தியின் தனித்தன்மை இத்தகைய வெகுஜனப் போராட்ட சாதனங்களைக் கண்டுபிடித்ததில் அடங்கியிருக்கவில்லை. அனைத்திற்கும் மேலாக அவற்றை மத வழக்கங்களுடனும் அறநெறிகளுடனும் இணைத்து பூரணப்படுத்தி, பிரிட்டிஷ் காலனி ஆதிக்கவாதிகளுக்கு எதிராகப் பரந்த அளவில் பயன்படுத்தியதிலேயே அவரின் சிறப்பு அடங்கியுள்ளது.

உறுதியான காலனியாதிக்க எதிர்ப்புப் போராட்டங்களையும், பாட்டாளிகளின் பொது வேலை நிறுத்தங்களையும், வெகுஜன விவசாய இயக்கங்களையும், பரந்த அளவிலான மாணவ, இளைஞர் இயக்கங்களையும் இந்திய தேசிய விடுதலைப் போராட்ட வரலாறு அறியும். அதில் தொழிலாளர், விவசாயிகள், இந்திய கப்பற்படைவீரர்கள், ஆங்கிலோ-இந்தியப் படைவீரர்கள் ஆகியோரின் ஆயுதம் தாங்கிய எழுச்சிகளும் அடங்கியுள்ளன. ஆண்மை, தியாகம் ஆகியவற்றிற்கான சிறந்த உதாரணங்களை இந்திய விடுதலை இயக்கம் தன்னுள் கொண்டுள்ளது. பாட்டாளி வர்க்க, புரட்சிகரப் போராட்ட முறைகள் இயக்கத்தில் பெரும்பங்கு வகித்தன. காந்தியைப் பின்தொடர்ந்த விவசாயிகளும் குட்டி முதலாளி வர்க்கமுமே வெகுஜன இயக்கத்தின் முதுகெலும்பாக விளங்கிய போதிலும், மேற்கூறப்பட்டவை முழுமையான இயக்கத்தின்மீது பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தின.

காந்தியம் வர்க்கச் சமுதாயத்தில் அல்லது சுரண்டப்படும் நாட்டில் உள்ள எல்லா தேசிய, சமூக முரண்பாடுகளையும் சுலபமான வழியில் தீர்ப்பதற்கான பொதுவான ஒரே போராட்ட முறையாக அஹிம்சா முறையைப் பிரகடனப்படுத்தியது. ஆனல் இது சரியானதல்ல என்று வரலாறு காட்டியது.

விஞ்ஞான சோஷலிசமோ உண்மையான வரலாற்றின் அடிப் படையில், மனிதகுலத்தின் பல நூற்ருண்டு அனுபவத்தின் பேரில், அனைத்திற்கும் மேலாக, தொழிலாளர் வர்க்க, அனைத்து நாட்டு விவசாயிகளின் போராட்ட அனுபவத்தின் அடிப் படையில், எந்த ஒரு போராட்ட முறையையும், ஒரே போராட்ட வழிமுறையாக உருவகப்படுத்துவதையும், அர சியல் நிலைகளையும், வரலாற்று, தேசிய சூழ்நிலைமைகளையும் கணக்கில் கொள்ளாமல் அதை வெகு ஜனங்களின்மீது திணிப் பதையும் மறுக்கின்றது.

சமாதான வழி முறைகள் அன்னிய காலனி ஆதிக்க வாதிகளுக்கு, அல்லது உள்நாட்டு பூர்ஷ்வா மற்றும் நிலச் சுவான்தார்களுக்கு எதிரான வலிமை மிக்க எதிர்ப்பு முறை களாகத் திகழாத போது, சுரண்டும் வர்க்கம் மக்களுக்கு எதிராக ஆயுதம் தாங்கிய அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விடும் போது, திட்டமான நிலைமைகளைக் கணக்கில் கொண்டு மேலும் தீர்மானமான வர்க்கப் போராட்ட முறைகளுக்கு அவற்றின் கடைசி வழி முறையான ஆயுதம் தாங்கிய எழுச்சி வரையும், உள்நாட்டுப் போருக்குக்கூட மாற வேண்டும் என்ற கருத்தையே மார்க்சியவாதிகள் முன் வைக்கின்றனர். ஆனால் காந்தியவாதிகளோ, காலனி ஆதிக்கவாதிகளின் பலாத்கார வழி முறையினால் தங்களுடைய இலட்சியங்களும் கோரிக் கைகளும் நிறைவேற முடியாத போது, வெற்றியை அடை வதில் வெகு ஜனங்களில் தயாரற்ற நிலைமையை, பலாத் காரத்தைப் பிரயோகிக்காத இயக்கத்தின் மதக் கொள்கை களை, அறநெறிகளை அவர்கள் கடைபிடிக்காததை முன் வரி சையில் காரணமாகக் காட்டுகின்றனர். அதனால் முடிவான குறிக்கோளில் அக்கறை காட்டாமல் இருக்க அறை கூவிய ழைத்து இயக்கத்தின் வேகத்தைக் குறைப்பதுடன், போராட் டக் குறிக்கோள்கள் நிறைவேற முடியாதவை என்னும் கருத் துடன் ஒத்துப் போகவும், மத, அறநெறிக் கடமைகளில் அதற்கான சமாதானத்தைத் தேடவும் வெகு ஜனங்களைக் கோருகின்றனர். இதில்தான் வெகுஜனப் போராட்ட முறை களைப் புரிந்து கொள்வதில் விஞ்ஞான சோஷலிசத்திற்கும் காந்தியத்திற்கும் இடையிலான உண்மையான வேற்றுமை அடங்கியுள்ளது.

போராட்ட வழி முறைகளின் பிரச்சினையை ஜவகர்லால் நேரு அணுகியவிதம் ஆர்வத்தைத் தூண்டுவதாகும். பெரும்

மரியாதையைக் காந்திக்குச் செலுத்தியதுடன் அவர் கீழ்க்கண்டவாறு அறிவித்தார்: ''நமக்கும் தேசிய காங்கிரசுக்கும் பலாத்காரமற்ற போராட்ட முறை மாற்ற முடியாத வேதாந்தமாகவோ, மதமாகவோ இருக்கவில்லை. அவ்வாறு இருக்கவும் முடியாது. அது சில நிர்ணயமான முடிவுகளை நமக்கு உறுதியளிக்கும் ஒரு வழி முறையும் கொள்கையுமே ஆகும். அதனுல் கிடைக்கும் முடிவுகளைச் சார்ந்து அது மதிப்பிடப்படும். தனிப்பட்டவர்கள் அதை மதமாகவோ அல்லது என்றுமே மாருத வேதாந்தமாகவோ கருதலாம். ஆனுல் எந்தவொரு அரசியல் கட்சியும் அது அரசியல் தன்மை கொண்டதாக உள்ளவரை, அவ்விதமாகச் செயல் படாது*''.

இது போதுமான அளவு தெளிவானதும் விவரமானதும் ஆகும். வெகுஜனப் போராட்ட முறைகள் நிலைத்த தன்மை உடையவை அல்ல. அவை அரசியல் நிலைமைகளையும், போராட்டத்தின் குறிக்கோள்களையும், விளைவுகளையும், இவற்றுடன் எதிரியின் நடவடிக்கைகளையும் சார்ந்து மாறக் கூடியவை. எதிரி தோல்வியை ஒப்புக் கொள்ளவில்லை என்ருல் மனிதாபிமான அடிப்படையில் தேவையான போது ஆயுதத்தைப் பயன்படுத்தி அவனைத் தோல்வியை ஒப்புக் கொள்ளச் செய்தல் வேண்டும்.

அரசியல் அமைப்பானது ஜனநாயக முற்போக்கு சக்திகளுக்கு பெரும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஆகவே முற்போக்கு அரசியல் கட்சியையும், சோஷலிச அரசையும், அவற்றுடன் தேசிய விடுதலைக்காகவும் சமூக நீதிக்காகவும் போராடும் வீரர்கள் கொண்டுள்ள உறவையும் பற்றிய பிரச்சினை மையமானதாக விளங்குகின்றது. காந்தி அடிக்கடி பூர்ஷ்வா அரசையும், பூர்ஷ்வா ஜனநாயகத்தையும், குறிப்பாகக் காலனியாதிக்கவாதிகளின், நிறவெறியாளர்களின் அரசுகளையும் சரியாக விமர்சனம் செய்திருக்கும் பட்சத்திலும் கூட, காந்தியம் இந்தப் பிரச்சினையிலும் உழைப்பாளிகளின் நம்பிக்கைக்கு கந்த தலைமையாகச் செயல்பட முடியாது.

விஞ்ஞான சோஷலிசம், சமுதாயத்தை மாற்றி அமைப்பதற்கான முக்கிய ஆயுதமாக சோஷலிச அரசையும், புரட்சிகர மாற்றங்களைத் தயார் செய்து செயலாக்கும் எண்ணம் கொண்டவர்களை ஒன்றிணைக்கக் கூடிய ஒரே சாத்தியமான

* Nehru J. *Mahatma Gandhi*. Calcutta, 1966, pp. 49-50.

அரசியல் அமைப்பாகக் கட்சியையும் கருதுகிறது. அது சிக்கலான அணிதிரட்டும் பொறுப்பை உழைப்பாளிகளுக்குக் கொடுக்கின்றது. கட்சியைச் சார்ந்து அரசியல் ரீதியில் ஒன்றுகத் திரளவும் அதன் தலைமையின்கீழ் எந்தவொரு புரட்சியின் மூலப்பிரச்சினையான அரசு அதிகாரத்தைப் பற்றிய பிரச்சினையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவும், இதன் மூலம் வாழ்க்கையின் மீதான செயல்பாட்டைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும், சுரண்டப்படும் மக்களுக்கு, உழைப்பாளிகளுக்குப் பயனுள்ள வகையில் சமுதாயத்தை மாற்றி அமைக்கவும் ஆகிய சிக்கலான பிரச்சினைகளை உழைப்பாளிகளின் முன் நிறுத்துகிறது.

அராஜகவாதிகளுக்குரிய கோட்பாட்டைப் போன்றே அரசு என்பது சந்தேகத்திற்கு இடமற்ற கேடு என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது காந்தியம். சார்பற்ற தேசிய அரசானது முற்போக்கு நலன்களுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்துடன் காந்தி ஒப்புக்கொண்ட போதிலும் ஆட்சியுடன் எந்தத் தொடர்பும் இல்லாமல் இருக்க வேண்டும் என்பதே காந்தியின் அபிப்ராயமாக இருந்தது. ஏனெனில் எந்த வகைப் பதவியும் மனிதனைச் சீர்கேடு அடையச் செய்யும் என்று அவர் கருதினர். உழைப்பாளிகள் தங்களுக்கென அரசியல் கட்சி அமைத்துக் கொள்வதை காந்தியம் ஆதரிக்கவில்லை. ஆனல் ஸ்தாபன ரீதியான அமைப்புகளைக் கொண்டிருப்பதை அது எதிர்க்கவில்லை. இவ்வகையில் அரசியல் துறையானது பூர்ஷ்வா அறிவு ஜீவிகளுக்கென, பூர்ஷ்வாக்களுக்கென ஒதுக்கப்பட்டு, அரசியல் கட்சியைக் கொண்டு ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் வர்க்க எதிரியின் முன்னிலையில் உழைப்பாளிகளைப் பாதுகாப்பற்றவர்களாக்கி விடுகின்றது.

சமூக இயக்கங்களில் மக்களை ஈடுபடச் செய்ததே காந்தியின் மிகப் பெரிய சாதனையாகும். காந்தியின் ஏகாதிபத்திய எதிர்ப்பு வழிகளும் உபாய முறைகளும், போராட்டத்தில் கலந்து கொள்ள மக்களை அறைகூவியழைத்ததும் தான் அவர் காங்கிரசில் சேர்வதற்கு முன் இந்திய தேசிய காங்கிரஸ் இருந்த நிலையிலிருந்து—அதாவது அதன் பூர்ஷ்வாத் தலைமை காலனி ஆதிக்கவாதிகளிடம் காட்டிய விசுவாச வழியிலிருந்தும், பிரிட்டன் ஆட்சியாளர்களை மரியாதையுடன் அணுகிய முறையிலிருந்தும், மற்றும் தேசிய தீவிரவாதிகளின்,

குட்டி முதலாளித்துவ பயங்கரவாதிகளின் பாதையிலிருந்தும்— உண்மையான வெகுஜன மக்கள் இயக்கமாக, இந்திய விடுதலே இயக்கத்தை மாற்றியது என்ருல் அது மிகையாகாது. ஆனல் வெகு ஜனங்களின் பங்கைக் காந்தியமும் விஞ்ஞான சோஷலிசமும் வெவ்வேறு விதமாகப் புரிந்து கொள்கின்றன. விஞ்ஞான சோஷலிசவாதிகள் உழைக்கும் வர்க்கங்களின் புரட்சி ஆற்றலேத் தட்டி எழுப்புவதையும், வளர்ப்பதையும் அத்துடன் அதை முழுமையாகப் பயன்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டவர்கள். அவர்களின் புரட்சி ஆற்றலேக் குறிக்கோளேக் கொண்ட பயனுள்ள பலவிதமான போராட்டங்களில் திசை திருப்பி விடுவதிலும், வெகு ஜனங்களின் படைப்புத் தன்மையிலும் நம்பிக்கை கொண்டவர்கள். மேலும் முன்னேற்றத்திற்கான தடைகளே அழிப்பதிலும், சுரண்டல் அற்ற புதிய சமுதாயத்தைப் படைப்பதிலும் வெகு ஜனங்கள் கொண்டுள்ள சக்தியில் நம்பிக்கை கொண்டவர்கள் விஞ்ஞான சோஷலிசவாதிகள். ஆனல் காந்தியவாதிகளோ அஹிம்சாவின் எல்லேக்குள் வெகு ஜனங்களேக் கட்டுப்படுத்துகின்றனர். தலேமையில் இருப்போரின் எண்ணங்களே நிறைவேற்றுபவர்களாகவும், அமைதியான எதிர்ப்பு முறையின் எல்லேக்குள் மட்டுமே செயல்படுவோராகவும்தான் வெகு ஜனங்கள் காந்தியவாதிகளுக்குத் தேவைப்படுகின்றனர். விடுதலே இயக்கங்களில் பங்கு கொள்ளும் வெகு ஜனங்களின் சுயமான புரட்சிகர படைப்புத் தன்மையில் ஆழ்ந்த நம்பிக்கையின்மையின் அம்சம் காந்தியத்தில் எப்போதும் இருந்தது. வெகு ஜனங்களுடன் காந்தியம் கொண்டுள்ள தொடர்பு அவர்களுக்கு உபகாரம் செய்யும் தன்மையின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுவதற்கான காரணம் இதிலிருந்து தெளிவாகும்.

இந்திய மக்களேக் காலனியாதிக்கவாதிகளுக்கு எதிராகத் தூண்டி விடுவதில் பிறர் எவரையும் விட காந்தி திறம் பெற்றவராக இருந்தார். ஆனல் அதே சமயம் காலனி ஆதிக்க ஆட்சியாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தக் கூடிய சாத்தியங்களே உருவாக்கி, வெகு ஜனங்களே வெளிப்படையான புரட்சியிலிருந்தும், புரட்சி நடவடிக்கைகளிலிருந்தும் தடுத்து நிறுத்துவதையும் பிறர் எவரையும் விட நன்கு அறிந்தவராக இருந்தார். குறிப்பாக அவருடைய இந்த உபாய வழிதான் பூர்ஷ்வா தலேமை தாங்கிய விடுதலே இயக்கத்தின் புகழ் பெற்ற தலேவராக காந்தியை உயர்த்தியது. தொழி

லாளர் வர்க்கத்தை இரு வேறுபட்ட வகைகளில் அணுகு வதின் தொடக்க நிலை இதில்தான் அடங்கியுள்ளது. மார்க்சிய-லெனினியம், சமூக ஒழுங்கு நிறைந்த சமுதாயத்திற்கான போராட்டத்தைத் தலைமை தாங்கும் வர்க்கமாக, வரலாற்றால் நிர்ணயிக்கப்பட்ட, முற்போக்கு வர்க்கமான தொழிலாளர் வர்க்கத்தைக் கருதுகின்றது. ஆனால் காந்திக்கோ அது ''கேடு நிறைந்த ஐரோப்பிய நாகரிகத்தால்'' விளைந்த ஒன்று. அரசியல் ஞானமற்றதும், அரசியலில் தன்னுடைய இடத்தைப் புரிந்து கொள்ளாததும், தேசியத்தின் தேவையை அறியாததும் ஆகும். விஞ்ஞான சோஷலிசம் பாட்டாளி வர்க்கத்திற்கு அனைத்திலும் முதலிடம் தருகின்றது. காந்தியமோ அஹிம்சாக் கோட்பாட்டின் மறைவான எதிரியைப் பாட்டாளி வர்க்கத்தில் பார்க்கிறது. அவர்களின் அரசியல் தீவிரத் தன்மையில் அச்சம் கொண்டு அவர்களின் போராட்டத்தை, வாழ்க்கையின் பொருளாதாய நலன்களை மெதுவாக உயர்த்துவதை நோக்கமாகக் கொண்ட, பொருளாதாரத் தன்மை கொண்ட சீர்திருத்தத் தேவைகளுக்கான போராட்டமாக மட்டுமே அதைக் கட்டுப்படுத்துவதில் நாட்டம் கொண்டது. ''வேலை நிறுத்தங்கள் அரசியல் குறிக்கோள்களுக்கு உதவலாம் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் அவை பலாத்காரத் தன்மையற்ற ஒத்துழையாமையின் எல்லைக்குள் இருக்க வேண்டும். தொழிலாளர்கள் நாட்டின் அரசியல் நிலைமையைப் புரிந்து கொண்டு சமுதாய நலன்களுக்காக உழைப்பதற்குத் தயாராகாத வரையில் அவர்களை அரசியல் குறிக்கோள்களுக்குப் பயன்படுத்துவது மிகவும் அபாயமானது என்பதை எளிதில் புரிந்து கொள்ளலாம். இதை அவர்களிடம் உடனடியாக எதிர்பார்ப்பது பயனற்றது. முதலில் அவர்கள் தங்கள் உடலையும் ஆன்மாவையும் பலப்படுத்தக் கூடிய வகையில் அவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துதல் வேண்டும். ஆதலால் தங்களுடைய வாழ்க்கை நிலைகளை உயர்த்த வேண்டும் என்பதே அரசியலில் அவர்கள் செய்யக் கூடிய பெரிய பங்கு ஆகும்'' என்று காந்தி கூறினார்.* முற்போக்கு அரசியல் கட்சியைப் பாட்டாளிகள் அமைத்துக் கொள்வதை காந்தி ஆதரிக்கவில்லை என்பது இதிலிருந்து விளங்கும்.

---

* Gandhi M.K. *The Collected Works.* Vol. X, pp. 6-63.

விஞ்ஞான சோஷலிசம், காந்தியம் இரண்டினுடைய மேலே குறிப்பிடப்பட்ட அம்சங்கள் இந்திய ஆளும் வர்க்கங்கள் அவற்றுடன் கொண்டிருந்த உறவை நிர்ணயிக்கின்றன.

விஞ்ஞான சோஷலிசத்துடன் இந்த வர்க்கங்கள் சமாதானப்படுத்த முடியாத உறவைக் கொண்டுள்ளன. முதலாளித்துவ அமைப்பின் அடிப்படைகளின் எதிரியாக விஞ்ஞான சோஷலிசத்தை அவை எப்போதும் கருதின. காந்தியத்தையோ குறிப்பிட்ட ஒரு அனுதாபத்துடனே ஆளும் வர்க்க கொள்கைவாதிகள் அணுகினர். இன்றும் நிலைமை அவ்வாறே உள்ளது. அவர்களில் பலர் காந்தியின் அகநிலை முதலாளித்துவ எதிர்ப்புத் தன்மையைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் காந்தியத்தை பொதுத் தேசியக் கண்ணோட்டமாக நிரூபிப்பதில் நாட்டம் கொண்டவராக உள்ளனர். அதற்கென்ன காரணம்? காந்தியம் முதலாளித்துவ எதிர்ப்புத் தன்மையைக் கொண்டிருந்த போதிலும் மேலே விவாதிக்கப்பட்ட அதனுடைய கொள்கை அம்சங்களின் காரணமாக, இந்தியாவில் முதலாளித்துவ வளர்ச்சியை நடைமுறையில் எந்த வகையிலும் பாதிக்கவில்லை என்பதே காரணம். பல பொருளாதார வட்டங்களில் ஏற்கெனவே ஏகபோக முதலாளித்துவ நிலையை அடைந்து விட்ட இன்றைய இந்தியாவின் பூர்ஷ்வா ஒழுங்கு முறைகளின் இயல்பான பங்காக காந்தியம் மாறி விட்டது. இன்று முதலாளித்துவக் கொள்கைவாதிகள் சுரண்டும் வர்க்கங்களின் ஆளுகையில் உள்ள தற்கால சமுதாய அமைப்பைப் பாதுகாக்கும் வகையில் காந்தியத்தைப் புதுவகையில் பயன்படுத்துவதில் நாட்டம் கொண்டுள்ளனர்.

காந்தியின் அஹிம்சா வழி எதிர்ப்பு முறைகள் நாட்டின் தேசிய விடுதலைக்கான, காலனி ஆதிக்கவாதிகளின் சுரண்டலுக்கு எதிரான போராட்டத்தில் வெகுவாகப் பலனளித்தன. காந்தியின் படிப்பினைகளுக்கு மாருக வெகு ஜனங்கள் பற்பல சமயங்களில் மேற்கொண்ட பலாத்காரப் போராட்ட முறைகளுடன் ஒன்றிணைந்து, அவை சுய இந்திய அரசு நிறுவப்பட வழிவகுத்தன. ஆனல் தேசிய சுதந்திரச் சூழ்நிலைகளில் காந்தியக் கோட்பாடுகள், துரதிருஷ்டவசமாக பல கோடி உழைப்பாளிகளின் நிலையை நல்ல நிலைக்கு மாற்ற முடியாதவையாகவே உள்ளன.

தற்கால இந்திய சமுதாயத்தின் ஆளும் வர்க்கங்கள் உழைப்பாளிகளின் இயக்கங்களை உடைப்பதற்கும் இடது

சாரிகளின் செல்வாக்கையும், விஞ்ஞான சோஷலிசக் கொள் கைகளின் செல்வாக்கையும் பலவீனப்படுத்துவதற்கும் தங் களால் முடிந்த வரை அனைத்தும் செய்கின்றன. இதுவே பூர்ஷ்வாக்களின் பலதரப்பட்ட வர்க்கப் போராட்ட சாதனங் களின்—அதாவது ஒரு புறத்தில் அரசியல் பலன்களைக் கோரு வதிலிருந்து கடுமையான அடக்குமுறை வரையிலும், மறு புறத்தில் காந்தியக் கற்பனாவாதக் கருத்துக்களை, ''இந்திய சோஷலிசமாகப்'' பிரச்சாரம் செய்வதிலிருந்து, பாஸிஸ்ட் இயக்கமான ''சிவசேனை''யின் (பம்பாய் ஏகபோக முதலாளி களால் தொழிலாளர்களைப் பயமுறுத்தும் நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்ட அமைப்பு) பயங்கரவாதம் வரையிலுமான அனைத்தின்—பச்சோந்தித் தனம் நிறைந்த ஒன்றிணைப்புக்கும் காரணமாகும். உழைப்பாளிகளின் சமூக-பொருளாதார சமு தாய அரசியல் தேவைகளை உறுதிப்படுத்த, சத்தியாகிரகப் போராட்டங்களில் இடதுசாரி வட்டங்கள் காந்திய முறை களைப் பயன்படுத்துவதே இன்றைய இந்தியாவில் உழைப் பாளிகளின் நலன்களுக்காக—பூர்ஷ்வா நலன்களுக்கு எதிராக, காந்தியத்தை அதனுடைய உண்மையான அர்த்தத்தில் புரிந்து கொண்டதாக இருக்கும்.

அமெரிக்க மூலதனமும் அதனுடைய ராணுவ மயமாக்கும் எண்ணங்களும் இந்தியாவில் ஊடுருவிய நிலைமைகளில், அதே சமயத்தில் இந்திய ஏகபோக முதலாளித்துவம் வளர்ந்து கொண்டிருக்கும் சூழ்நிலைமைகளிலும் தங்களுடைய பொருளை இன்னும் இழக்காத பொது ஜனநாயக அம்சங்கள் இன்றைய காந்தியத்தில் அழியாமல் நிலைத்துள்ளன. இதனுடைய அடிப் படையில்—ஏகாதிபத்திய எதிர்ப்பு, ஏகபோக முதலாளித்துவ எதிர்ப்பு—இயக்கங்களுக்கு ஜனநாயக முற்போக்கு சக்திகளின் பரந்த ஒத்துழைப்பு சாத்தியமாகும். ஆனால், துரதிருஷ்ட வசமாக, காந்திக்குப் பின்னர் காந்தியத்தின் வளர்ச்சி இந்த நிலைகள் வலிமை அடைவதிலும், வளர்வதிலுமான வகையில் செல்லவில்லை.

இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய காலகட்டத் தில், குறிப்பாகக் கடைசி வருடங்களில் தேசிய விடுதலை இயக்கங்களில் இருக்கும் மார்க்சியமல்லாத (தேசிய ஜனநாயக) சித்தாந்தப் போக்குகள் விஞ்ஞான சோஷலிசத்துடன் நெருங்கும் வகையில் வளர்கின்றன. ஆனால் காந்தியத்தின் வளர்ச்சி இந்தப் பாதையில் செல்லவில்லை. காந்தியத்தின்

ஜனநாயக உள்ளடக்கத்தை முன்னிடத்தில் காட்டும் அதே வேளையில், அதனுடைய இன்றைய ஆதரவாளர்கள், துரதிருஷ்டவசமாக, அதை விஞ்ஞான சோஷலிசத்திலிருந்து மேலும் மேலும் பிரிக்கும் போக்குகளை ஆழப்படுத்துகின்றனர் என்பதை கவனிக்காமல் இருக்க இயலாது.

* * *

காந்தியத்துடன் ஒப்புக்கொள்ளாமல் இருக்கலாம். ஒப்புக் கொள்ளவும் கூடாது. ஆனல் அதை நன்கு அறிந்திருக்கவும் ஆராயவும் வேண்டும். அதே சமயத்தில் இந்திய சரித்திரத்தின் கணிசமான ஒரு எதார்த்த நிகழ்ச்சிப் போக்காக அதனை மதிக்கவும் வேண்டும்.

அதனுடன் மாறுபடுவது அதனை மதிக்காதது ஆகாது. காந்தியே இத்தகைய பண்புக்கு உதாரணமாக விளங்கினர். ருஷ்யாவின் மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் எல்லாக் கருத்துக்களுடனும் அவர் சம்மதிக்கவில்லை. கம்யூனிஸ்டுகளை அவர்களின் நாத்திகவாதத்திற்காகவும் வர்க்கப் போராட்டத்தை ஆதரித்தமைக்காகவும் கண்டித்தார். ஆனலும் போல்ஷிவிக்குகளின், தீர்க்கமான குறிக்கோள்களின் நியாயத்தை அவர் அங்கீகரித்ததுடன் புரட்சியின் மாபெரும் தலைவரான லெனினையும் அவர் மிக உயர்த்தி மதிப்பிட்டார்.

இந்திய மக்களின் சிறப்பான அங்கீகரிப்பை காந்தி பெற்றிருந்தார், இன்றும், தொடர்ந்து பெற்று வருகின்ருர். ஆதலால் தான் காந்தியத்தின் அனைத்து முரண்பாடுகளையும், அம்சங்களையும் ஆராய்தல் வேண்டும். காந்தியத்தை அதற்குச் சாதகமாக விமர்சனம் செய்யவும், இன்றைய இந்தியாவின் சிக்கலான சமூக, பொருளாதார அரசியல் பிரச்சினைகளை விஞ்ஞான முறையில் அணுகவும் இது மிகவும் அவசியம்.

* * *

அன்னியரின் ஆட்சியிலிருந்து சொந்த நாட்டை விடுவிப்பதிலும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்திலும் காந்தி செய்த மகத்தான பணிகளைச் சோவியத் மக்கள் போற்றுகின்றனர். காந்தி கடைசிவரை இந்திய மக்களுடன், இந்திய வாழ்க்கையில் ஒன்றியிருந்தார் என்பதை சோவியத்

மக்கள் புரிந்து கொள்கின்றனர். பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுடன் நடந்த கடுமையான போராட்டமும் சாதாரண மக்களின் தன்னலமற்ற பண்பும், வீரமும் அவரின் உயிர்மூச்சாக இருந்தன. அவர்களின் வாழ்க்கை நிலையை எளிதாக்குவதிலும், அவர்களை ஏழ்மையிலிருந்து விடுவித்து புதிய, பூரண சமுதாயத்திற்குக் கொண்டு செல்வதிலும் அவர் நாட்டம் கொண்டிருந்தார்.

ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடந்த உறுதியான பல்லாண்டுகாலப் போராட்டத்தில் இந்திய மக்கள் வெற்றி அடைந்தனர். அவர்களின் நினைவில் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி பெரும் மரியாதையுடன் எப்போதும் நிலைத்து நிற்பார். வெகு ஜனங்களின் புரட்சிகர படைப்பாற்றல் தன்மை வாய்ந்த முயற்சிகளை எப்போதும் அங்கீகரிப்புடன் அணுகும் சோவியத் மக்கள் இந்திய மக்களின் உணர்வுகளை உண்மையாக அவர்களுடன் பகிர்ந்து கொள்கின்றனர்.

# ஜவகர்லால் நேரு

இந்தியாவின் புகழ் மிக்க அரசியல்வாதியும் அரசுப் பிரமுகரும் ஆவார். இந்திய தேசிய காங்கிரசின் தலைவராக இருந்தவர்.

1889ம் வருடம் நவம்பர் 14ம் தேதி அலகாபாத் நகரில், காஷ்மீர் பிராமணக் குரும்பம் ஒன்றில் பிறந்தார். இவருடைய தந்தை—மோதிலால் நேரு—வழக்கறிஞராகவும், இந்திய தேசிய காங்கிரசில் சீர்திருத்தப் பிரிவின் ஒரு பெரிய பிரமுகராகவும் இருந்தார்.

இங்கிலாந்தில் கல்வி பெற்ருர். 1905—1912ம் வருடங்களில் ஆங்கில உயர்குடி வர்க்கத்தினரின் பள்ளியான ஹார்ரோவிலும் பின்னர் கேம்பிரிட்ஜ் பல்கலைகழகத்திலும் படித்தார். வழக்கறிஞராக இருந்தார்.

1912ம் வருடம் இந்திய தேசிய காங்கிரசில் சேர்ந்தார். 1916ம் வருடத்தில் இருந்து இந்திய தேசிய சுதந்திர இயக்கத்தில் தீவிரமாகப் பங்கேற்ருர். இந்திய தேசிய காங்கிரசின் தலைமையை காந்தி ஏற்றுக் கொண்டதிலிருந்து (1919) அவரின் ஆதரவாளராகவும் நெருங்கிய உதவியாளராகவுமாஞர். 1921ம் வருடம் காலனியாதிக்க எதிர்ப்புப் பிரசாரத்திற்காக முதல்முறையாகக் கைது செய்யப்பட்டார். மொத்தமாகப் பத்து வருடங்களுக்கும் மேலாக சிறையில் இருந்தார். இந்திய தேசிய காங்கிரசின் தலைவராகப் பலமுறை தேர்ந்தெடுக்

கப்பட்டார் (1929-30, 1936-37, 1946, 1951-1954). 1946ம் வருடம் இந்தியாவின் தற்காலிக அரசாங்கத்தின் துணைப் பிரதமராக ஆனார். (பிரதம மந்திரியாக வைஸ்ராய் இருந்தார்.)

1947ம் வருடம் ஆகஸ்ட் மாதத்தில் இந்தியா சுதந்திரம் அடைந்ததில் இருந்து, தன் வாழ்நாள் முடியும் வரை பிரதம மந்திரியாகவும், அயல்துறை அமைச்சராகவும் இருந்தார். இந்தியாவின் எதிர் காலத்தைச் சோஷலிசத்தில் கண்டார். ஆனால் காந்தியைப் போலவே, சமூக சமரசத்தின் மூலமாக அதை அடைய முடியும் என நினைத்தார்.

நேருவின் தலைமையின் கீழான இந்திய அரசாங்கம், காலனியாதிக்க காலகட்டத்தின் பொருளாதாரத் தேக்கத்தையும் பின்தங்கிய நிலையையும் போக்குவதற்கான முக்கியமான நடவடிக்கைகளை மேற்கொண்டது. திட்டக் கமிஷனின் தலைவராக இருந்து, இந்தியாவின் வளர்ச்சிக்கான முதல் மூன்று ஐந்தாண்டு திட்டங்களைத் தயாரிப்பதில் தொடர்ந்து பங்கேற்றார்.

அயல்துறை அரசியலில் அணிசேராக் கொள்கையையும் வேறுபட்ட சமுதாய அமைப்புகளுக்கிடையிலான சமாதானச் சகவாழ்வுக் கொள்கையையும் கடைபிடித்தார். அரசுகளுக்கிடையிலான சமாதானச் சகவாழ்வுக்கான ஐந்து அம்சங்களைக் கொண்ட பஞ்சசீலக் கொள்கையை உருவாக்குவதில் பங்கேற்றார். ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் பான்துங் மகாநாட்டை (1955) கூட்ட முன்முயற்சி எடுத்தவர்களிலும் அம்மாநாட்டில் கலந்து கொண்டவர்களிலும் ஒருவர்.

இந்திய-சோவியத் உறவுகளின் சர்வாம்ச வளர்ச்சியை முக்கியமாகக் கருதினார். இரண்டாம் உலகப் போரின் போது சோவியத் யூனியனின் சார்பாகத்

தீவிரமாகச் செயல்பட்டார். சோவியத் யூனியனிற் குப் பலமுறை விஜயம் செய்தார். (1927, 1955, 1961ம் வருடங்கள்.)

1955ம் வருடம் ''பாரத ரத்ண'' பதக்கம் அளித்து கௌரவிக்கப்பட்டார். அவருடைய மறை வுக்குப் பின் உலக அமைதிச் சபையின் உயர்ந்த விருதான பிரெடெரிக் ஜோலியோ-க்யூரீ ''அமைதிக் கான தங்கப் பதக்கம்'' அளித்து கௌரவிக்கப் பட்டார். (1970 வருடம் அக்டோபர் மாதம்.)

1964ம் வருடம் மே 27ம் தேதி தன்னுடைய 75ம் வயதில் டெல்லியில் காலமானர்.

இந்தியாவின் மாபெரும் அரசியல் பிரமுகர், தேசிய சுதந்திர இயக்கத்தின் புகழ் மிக்க தலைவர்களில் ஒருவர், ஜனநாயகம், சமூக முன்னேற்றம், சமாதானம் ஆகியவற்றிற்காகப் போராடியவர், சமூக அநியாயம், தேசிய சுரண்டல் ஆகியவற்றின் தீவிரமான எதிர்ப்பாளர், சோவியத் யூனியனின் நண்பர்—ஜவகர்லால் நேரு இப்படிப்பட்டவராக சமகாலத்தவர்களின் நினைவில் நிற்கிறார்.

ஜவகர்லால் நேரு மறைந்ததற்குப் பிந்திய காலகட்டம், அவருடைய வாழ்க்கையை மேலும் தெளிவாகப் புரிந்து கொள்ளவும், அவருடைய பல்துறைச் சேவைகளின் முக்கியத்துவத்தையும், பலன்களையும் எதார்த்தமாக மதிப்பிடவும் இடமளிக்கிறது. இந்த வருடங்களில் கொந்தளிப்பான வரலாற்றுச் சம்பவங்கள் ஏராளமாக நடந்தன. அவற்றின் விளைவாக பல பெரிய அரசியல், கட்சிப் பிரமுகர்கள், அரசியல் அரங்கிலிருந்து விலகிய உடனே விரைவில் தங்களுடைய மதிப்பை இழந்தனர். ஆனால் நேருவுடன் இது நிகழவில்லை. இந்தியாவின் புகழ் மிக்க தலைவராக, தேசிய விடுதலை, சமூக முன்னேற்றம் ஆகிய கருத்துக்களை எடுத்துக் காட்டிய சிறப்பு மிக்கவர்களில் ஒருவராக அவருடைய புகழ் மாறாமல் நிலைத்து நிற்கிறது.

நேரு ஒரு சிந்தனையாளராக, இன்றுவரை மனிதகுலத்தை ஆட்டிப்படைக்கும் பல பிரச்சினைகளை ஆராய்ந்தார் என்பதே நேருவின் மீதும் அவருடைய கீர்த்தி மிக்க வரலாற்றுப் பங்கின் மீதுமான மாறாத கவனத்திற்கான முக்கிய காரணம் ஆகும். நேருவின் மீதான இந்த ஆர்வம், கணிசமான அளவு, அவருடைய தனிச்சிறப்பினால் விளைந்ததாகும். அது அவரை நேராகச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றவர்களை மட்டுமின்றி, அவருடைய சிறந்த இலக்கியத் தொகுப்புகளையும், நினைவுக் குறிப்புகளையும் விஞ்ஞானப் பதிப்புகளையும் படிப்பவரையும் வசீகரிக்கிறது.

வரலாற்றுச் சம்பவங்களைத் தனி மனிதர்களின் சேவைகளின் மூலமாக விளக்குவது தவருக இருக்கலாம். ஆனால் வரலாற்றின் சில கட்டங்கள் நமது நினைவிலும், உணர்விலும் அவற்றின் சின்னங்களாக விளங்கியவர்களின் பெயர்களோடு இணைந்திருப்பதும் தற்செயலானது அல்ல. இப்படி, தன்னலமற்ற, புகழ் மிக்க தலைவர்களையும் அரசியல் நோக்கங்கள் கொண்ட அரசியல் பிரமுகர்களையும் உருவாக்கிய பல்லாண்டு கால இந்திய சுதந்திரப் போராட்டம் அனைத்திற்கும் மேலாக மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியின் பெயரோடு தொடர்புடையது என்றால் சுதந்திர இந்தியாவின் சுய வளர்ச்சி ஜவகர்லால் நேருவின் பெயரோடு தொடர்புடையது. பிறர் எவரையும் விடப் பெரிய அளவில், இந்நாட்டின் அரசியல் அமைப்பு, அரசியல் பாதையின் படைப்பாளியாக அவர் இருந்தார். இந்தியாவின் முதல் பிரதம மந்திரியின் செல்வாக்கைக் குறைத்து அரசியல் ஆதாய நோக்கம் பெற நினைக்கும் சிலத் தனிப்பட்ட இந்தியப் பிரமுகர்களின் எத்தகைய முயற்சிகளும் இதில் எதையும் மாற்ருது.

காலனி ஆதிக்க அடிமைத்தனத்திலிருந்து இந்தியா விடுதலை பெறுவதற்காகவும் அந்நாடு புத்தெழுச்சி பெறவும் ஆசியாவின் மகத்தான சுய உரிமை கொண்ட அரசாக அது மாறவும் நடைபெற்ற போராட்டத்துடன் பல பத்தாண்டுகளாக நேருவின் பெயர் உறுதியாக இணைந்துள்ளது. 1947ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 15ம் தேதி டெல்லியில் சரித்திரப் புகழ் மிக்க செங்கோட்டையில் அவர் மூவர்ணத் தேசியக் கொடியை ஏற்றிய நாள் முதல் கிட்டத்தட்டப் பதினேழு வருடங்கள் சுதந்திர இந்தியாவின் தலைமையில் இருந்து, காலனி ஆதிக்கம், நிலப்பிரபுத்துவச் சமுதாயத்தின் தேக்கம், பல நூற்ருண்டுகாலப் பின்தங்கிய நிலைமை ஆகியவற்றை நீக்கி, நாட்டைப் புதுப்பிக்கும் வழியில் அதை நடத்திச் சென்ருர்.

நேருவின் தலைமையின்கீழ் அரசு முறை மாற்றியமைக்கப்பட்டது. அதாவது தேசிய, மொழி அடிப்படையில் மாநிலங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இது பிரிட்டிஷ் நிர்வாகத்தின் ''பிரித்தாளும்'' கொள்கைக்கு முற்றுப்புள்ளி வைத்ததுடன், நாட்டின் நிலப்பிரபுத்துவச் சமுதாயப் பிரிவுகளை நீக்கியது. பெரிய நிலச்சுவான்தார்களை அடியோடு ஒழிக்கும் முகமாக முதல் கட்ட வேளாண்மைச் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன.

பொருளாதாரத்தைச் சீர்திருத்தி அமைப்பதைத் திட்டமிடப் பட்ட பொருளாதார வழியில் நேரு நடத்திச் சென்றார். இந்தியாவின் பொருளாதாரச் சுதந்திரத்தை நிர்ணயித்த இயந்திரத் தொழில் திட்டத்திற்கு அடி கோலினர். நேருவின் முன்முயற்சியால் சக்தி வாய்ந்த, தொடர்ந்து உறுதிப்படும் அரசுப் பிரிவு தோற்றுவிக்கப்பட்டது.

ஜவகர்லால் நேரு தொர்டர்ச்சியான ஜனநாயகவாதியாக வும், சம உரிமைக்காகவும், சாதி அமைப்புகளின் மிச்ச சொச்சங்கள், மத-சமுதாய பிற்போக்குச் சக்திகள் ஆகியவற் றிற்கு எதிராகப் போராடியவராகவும், இந்தியாவின் ஜனநா யகம், மையப்படுத்துதல் ஆகியவற்றின் அடிப்படையிலான உறுதியான தேசிய ஒற்றுமைக்காகப் பாடுபட்டவராகவும் விளங்கினர்.

ஆனல் நேரு இந்தியாவிற்கு மட்டுமே சொந்தமானவர் அல்ல. அவர் மனிதகுலம் முழுவதற்கும் உரித்தானவர். தன்னு டைய அரசியல் கொள்கையில் அவர் ஆசிய, ஆப்பிரிக்க அரசுகளுக்கே உரித்தான போக்குகளின் சில மாதிரிகளை மட்டும் கொண்டிருக்கவில்லை. அத்துடன் அவ்வரசுகளின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகள் உருவாவதன் மீதும் தாக்கம் செலுத்தினர்.

புதிதாகச் சுதந்திரம் அடைந்த நாடுகள் மேன்மேலும் அதிகப் பங்காற்றும் தற்கால சர்வதேச உறவுகளின் படைப் பாளிகளில் ஒருவராக நேரு விளங்கினர். கூட்டு சேரா அரசி யலுக்கும், சர்வதேச பதட்டநிலைத் தணிவதற்கும் அவர் மூலகாரணமாக இருந்தார். ஏகாதிபத்திய அடக்குமுறைக்கு எதிராகப் போராடும் மக்களின் அபிலாஷைகளை எடுத்துக் காட்டிய அதே வேளையில், அம்மக்களை ஐரோப்பிய, அமெரிக்க மக்களுக்கு எதிராகக் காட்டுவதையும், கடந்த காலத்திற் காகப் பழிவாங்குவது போல அவர்களிடமிருந்து தனியாகப் பிரித்து வைப்பதையும், தேசிய பேதத்தையும் அவர் ஆத ரிக்கவில்லை. அவர் மனிதகுலத்தின் ஒருமித்த வளர்ச்சியிலும், கீழ்த்திசை நாடுகளுக்கும் மேலை நாடுகளுக்கும் இடையிலான நெருக்கத்திலும் நம்பிக்கை கொண்டிருந்தார். முடிவில் இடது சாரித் தேசிய சீர்திருத்தவாத நிலையில் இருந்த போதிலும் அவர் தேசிய நெருக்கம், அகந்தை, குறுகிய மனப்பான்மை ஆகியவை இல்லாதவராக இருந்தார். சம உரிமை கொண்ட சர்வதேச ஒத்துழைப்புக்காக முழுமனத்தோடு செயல்பட்

டார். வல்லரசு தேசியவெறி எத்தகைய கோஷங்களில் மறைந்து கொண்டு, எந்தத் திசையிலிருந்து வந்த போதிலும், அதற்கு எதிராகச் சமரசப்படுத்த முடியாத போராளியாக அவர் விளங்கினுர்.

* * *

ஜவகர்லால் நேருவின் அரசியல் உலகக் கண்ணேட்டப் பரிணமம் சிக்கலும் முரண்பாடும் நிறைந்தது. அவருடைய தீவிரமான அரசியல்-சமுதாயப் பணி இந்த நூற்ருண்டின் இரண்டாவது பத்தாண்டுகளில் ஆரம்பித்தது. இங்கிலாந்தில் மேற்குடி வர்க்கத்தினரின் கல்லூரியில் படிக்கும் போது பூர்ஷ்வா மிதவாதக் கருத்துக்களே ஏற்றுக் கொண்டார். அவற்றை தன்னுடைய தந்தையுடன்—தேசிய விடுதலேப் போராட்டத்தின் புகழ் மிக்கத் தலேவர்களில் ஒருவரான மோதிலால் நேருவுடன்—பகிர்ந்து கொள்ளவும் செய்தார். அதே சமயத்தில் அவர் கேள்விப்பட்டிருந்த ஃபேபியன் முறைச் சோஷலிச இயக்கங்களே* அறிவதிலும் அவர் ஆர்வம் கொண்டிருந்தார். முதல் உலகப் போரின் முடிவில் இந்தியாவில் சுதந்திரப் போராட்டம் புத்துணர்ச்சி பெற ஆரம்பித்தது. இக்காலகட்டத்தில் நேரு இந்திய தேசிய காங்கிரசின் வேலேகளில் இணேந்து, தேசிய விடுதலேப் போராட்டத்திற்கான புதிய முறைகளேயும், வடிவங்களேயும் தேடினுர். அந்தச் சமயத்தில் அரசியலில் தன்னுடைய முதல் முயற்சிகளேச் மேற்கொண்டிருந்த காந்தி அவரைக் கவர்ந்தார். காந்தியின் தீவிரத் தன்மையும் தைரியமும், அவர் திறமையாக மக்களே அணுகும் முறையும் புதிய வகை எதிர்ப்பு முறைகளும், அவ்வாறே இந்திய தேசிய காங்கிரசை ஒரு அரசியல் மன்றமாக இருந்த நிலேயிலிருந்து போராட்ட சக்திபடைத்த, வெகுஜன அமைப்பாக மாற்ற அவர் கொண்டிருந்த நாட்டமும் நேருவை வசீகரித்தன. இதன் விளேவாக அவர் காந்தியின் அஹிம்சா வழி முறைகளே, குறிப்பாக ஏகாதிபத்திய

* பாட்டாளி வர்க்கப் போராட்டமும் சோஷலிசப் புரட்சியும் இன்றியமையாதவை என்பதை ஃபேபியன்கள் மறுத்தார்கள். சிறு சீர்திருத்தங்களின் வாயிலாகவும் சமுதாயத்தைப் படிப்படியாகப் புனரமைப்பதன் மூலமாகவுமே முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கான மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்றனர். — ப-ர்.

எதிர்ப்பு, காலனி ஆதிக்க எதிர்ப்பு முறைகளைப் பின்பற்றுபவராக மாறினர். முதல் பொதுத் தேசிய சத்தியாகிரகப் போராட்ட வருடங்களில், போராட்டத்தில் கலந்து கொண்ட பலரைப் போன்றே விரைவான வெற்றியில் நம்பிக்கை கொண்டு, தீவிரமாகப் பணியாற்றினர். காந்தியும் அவரை நம்பினர். ஆனல் போராட்டம் உடனே வெற்றியடையாமையால், காந்தி எதிர்ப்பைக் குறைத்தார். தேசிய இயக்கம் குழப்பத்தில் வீழ்ந்தது. தேசிய விடுதலைப் போராட்ட காந்தியக் கொள்கைகளின் மீதான நேருவின் நம்பிக்கை ஆட்டம் கண்டது. பலவீனப்பட்டிருந்த இந்திய தேசிய காங்கிரஸ் பழைய நிலைக்குத் திரும்பத் தேவையான வேலைகளைச் செய்த அதே நேரத்தில், 20வது வருடங்களில் நேரு சுதந்திரப் போராட்ட இயக்கம் இருந்த நிலையில் அதிருப்தி கொண்டு, அந்த நெருக்கடியில் இருந்து வெளிவருவதற்கான வழிகளைத் தேடினர்.

1927ம் ஆண்டு பிரஸ்ஸெல்ஸ் நகரில் நடைபெற்ற ஒடுக்கப்பட்ட மக்களின் மாநாட்டிற்கு இந்திய தேசிய காங்கிரசின் பிரதிநிதியாக நேரு அழைக்கப்பட்டார். இந்த மாநாட்டின் வேலைகளில் பங்கு கொண்டதும், மேலும் அங்கே தோற்றுவிக்கப்பட்ட ஏகாதிபத்திய எதிர்ப்புச் சங்க வேலைகளும், அவ்வாறே 1927ம் ஆண்டு நவம்பர் மாதம் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்ததும் நேருவின் அரசியல் உலகக் கண்ணேட்டப் பரிணமத்தின்மீது கணிசமான அளவு தாக்கம் செலுத்தியது. சோவியத் யூனியனில் ஐரோப்பிய, ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் புரட்சி மற்றும் தேசிய-விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்த அவர், அவர்களை ஒன்றிணைக்கவும், அவர்களின் ஒத்துழைப்புக்குமான அவசியத்தைக் கண்டார். அங்கே ஃபேபியன் சோஷலிசத்தை அல்லாமல், தத்துவமாக மட்டுமே இருந்த நிலையிலிருந்து மாறி, வாழ்வில் நிறைவேறத் தொடங்கிவிட்ட புரட்சிகர, விஞ்ஞான சோஷலிசத்தைக் கண்டார்.

மார்க்சிய, லெனினியக் கருத்துக்கள் அவருடைய மிதவாத, சமூக-சீர்திருத்த மற்றும் காந்திய எண்ணங்களை கணிசமாக ஒதுக்கி வைத்தன. இருந்த போதிலும் நேருவின் மீது மார்க்சிய-லெனினியம் முழுமையான தாக்கம் செலுத்தவில்லை. அவர் பொருள்முதல்வாதத் தத்துவவாதியாக என்றுமே விளங்கவில்லை. தத்துவஞானத்தின் உயர் மட்டப் பிரச்சினைகளான வாழ்நிலை, உணர்வு, அறிதலின் தத்துவம், ஆன்மா

மற்றும் தனிப்பட்டவரின் மன வளர்ச்சி ஆகியவற்றைப் பற்றிய எண்ணங்கள் முதலானவை கருத்துமுதல்வாதம், அறியொணுவாதம் ஆகியவற்றின் கலப்பாக, இந்து மதத்தின் மத-நெறி வழக்கங்களும் ஐரோப்பிய பகுத்தறிவுவாதமும் கலந்த கலப்பாகவே அவருள் இருந்தன. ஆனல் சமுதாய-அரசியல் பிரச்சினைகளில் விஞ்ஞான சோஷலிசத்தின் தாக்கம் பலமாகவும், பயனுள்ளதாகவும் இருந்தது. அடிப்படையில், வரலாறு, உற்பத்தி முறை, வெகுஜன மக்களின் பங்கு, சமூக அமைப்புகள், வர்க்க முரண்பாடுகள் மற்றும் வர்க்கப் போராட்டம் ஆகியவற்றைப் பற்றிய மார்க்சிய விளக்கங்களை அவர் ஏற்றுக் கொண்டார். வரலாறு கீழ்மட்ட சமுதாய-பொருளாதார அமைப்பு முறையிலிருந்து உயர்மட்ட அமைப்புக்கு தொடர்ந்து செல்வதைக் கண்ட அவர் முதலாளித்துவம் ஒரு நிலை குலைந்த அமைப்பென்பதையும், பொருளாதார, சமூக, அரசியல் அமைப்புகளில் அதன் அடக்குமுறைத் தன்மையையும் புரிந்து கொண்டார். அதன் விளைவாக உலகம் முழுவதிலும் உள்ள புரட்சி சக்திகள் மீதும், குறிப்பாக உலகிலேயே முதல் சோஷலிச அரசின் மீதும் அனுதாபம் கொண்டார்.

மேலும் தேசிய இயக்கங்களின் வரையறுக்கப்பட்ட தன்மையை அவர் ஒப்புக்கொண்டதும், உழைப்பாளிகளின் நலன்களைக் காக்கும் விதத்தில் அவற்றைத் திசை திருப்பவும், மூலச் சமூக மாற்றங்களுக்கான அடிப்படையைத் தயார் செய்யவும் அவர் அறை கூவியழைத்ததிலிருந்து அரசியல் பணிகளில் நேருவின்மீது மார்க்சிய-லெனினியம் தாக்கம் செலுத்தியிருந்ததைப் புரிந்து கொள்ளலாம். நேரு தன்னை விஞ்ஞான சோஷலிச ஆதரவாளராக அறிவிப்பதில் எந்தத் தயக்கமும் காட்டவில்லை. அத்துடன் விடுதலை இயக்கத்தின் முடிவான குறிக்கோள் சோஷலிசத்தை நிறுவுவதே என்று கருதினர். அவர், இந்திய தேசிய காங்கிரசில் விவசாயிகள், தொழிலாளர்களின் பங்கை அதிகப்படுத்தவும், அவர்களைக் காங்கிரசின் ஆதரவாளர்களாக மாற்றவும், அவர்களின் சமூக, பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் போராட்டத்தை வளர்ப்பதிலும் நாட்டம் கொண்டார்.

சர்வதேச ஒற்றுமை, தேசிய சுதந்திரத்திற்காகப் போராடும் மக்களினங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு முதலிய கருத்துக்களையும், முதலாளித்துவ தேசங்களின் தொழிலாளர்

மற்றும் ஜனநாயக இயக்கங்களையும் உறுதியாக ஆதரித்தார். அவ்வாறே ஏகாதிபத்தியத்தின் நிலையான எதிரியாகவும், அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையான நண்பனாகவும் விளங்கும் சோவியத் யூனியனை மதித்து, அதனுடன் ஒத்துழைப்பதைப் பற்றிய கருத்தையும் ஆதரித்தார்.

20வது வருடங்களின் கடைசியில் நேரு ஏற்றுக் கொண்ட அரசியல் நிலை, பெரும்பாலும் முழுமையாகவும் சரியாகவும் இந்திய தேசிய காங்கிரசின் இடதுசாரி வட்டத்தின் கண்ணோட்டங்களை வெளிப்படுத்தியது. இந்த அரசியல் நிலையை முன்வைத்ததுடன், அவர் அந்த இடதுசாரி வட்டத்தின் தலைவரானார். நேருவின் உலகக் கண்ணோட்டத்தில் புரட்சிகர மற்றும் சோஷலிசக் கருத்துப் போக்குகள் தீவிரமடைவது 30வது வருடங்களின் மத்தியகாலம் வரை தொடர்ந்தது. 60வது வருடங்களின் தேசிய ஜனநாயகச் செயல் திட்டத்தைப் பலவிதங்களில் முன்னறிவித்ததும், சில விதங்களில் நிர்ணயிக்கவும் செய்த செயல் திட்டத்தை அவர் இந்த நேரத்தில் தயாரித்து பிரச்சாரம் செய்தார்.

ஆனால் நேருவின் நிலை மிகவும் சிக்கலானதாக இருந்தது. ஒருமித்த கருத்து கொண்டவர்கள் நிறைந்த அரசியல் அமைப்பை அவர் கொண்டிருக்கவில்லை. அடிப்படையில் பூர்ஷ்வா ஸ்தாபனமாகவும், காந்தியின் அரசியல், நீதிக் கொள்கைகளின் செல்வாக்கு முழுமையாகவும் நிறைந்திருந்த காங்கிரசின் எல்லைக்குள் அவர் செயல்பட்டார். ஆனால் காந்தியோ நேருவின் தீவிரவாதத்தை ஆதரிக்கவில்லை. அத்துடன் காங்கிரசில் தங்களின் நிலையைப் பலப்படுத்திக் கொள்வதற்கான கன்சர்வேடிவ் சக்திகளின் போராட்டத்திற்கு, புரட்சிகர இளைஞர்களின் எதிர்ப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கும் அவர்களின் நாட்டத்திற்கு காந்தி பலமுறை ஆதரவு தந்தார் என்பதைப் பற்றிக் கூறத் தேவையில்லை. நேருவின் பங்கு ஏதோ ஒரு விதத்தில் இரட்டையானதாக இருந்தது. ஒரு புறத்தில் இடதுசாரிகளின் தலைவராகவும் மறு புறத்தில் காந்தியின் நம்பிக்கைக்கும் அன்புக்கும் உரியவராகவும், எத்தகைய அரசியல் கருத்து வேறுபாடுகளும் பிரிக்க முடியாத, விசேஷமான சொந்த பிணைப்புகளால் அவருடன் தொடர்பு கொண்டவராகவும் காங்கிரசின் வலதுசாரித் தலைவர்களுடனான தொடர்பை நிலைத்து வைத்துக் கொண்டிருப்பவராகவும் விளங்கினார். காந்திக்கோ நேரு இடதுசாரிகளின் கருத்தை எடுத்துரைப்

பவராக மட்டுமல்லாமல், காங்கிரசில் தங்களுடைய பணி களையும் செல்வாக்கையும் அதிகப்படுத்துவதன் மூலம் காங் கிரசையே முழுமையாக ஆட்கொள்ள நாட்டம் கொண்ட இடதுசாரிகளை காங்கிரசுக்குள் நிறுத்தி வைத்து, காங்கிரசின் ஒற்றுமையைப் பாதுகாக்கக் கூடிய, எல்லோராலும் பொது வாக அங்கீகரிக்கப்பட்டிருந்த அரசியல் தலைவராக விளங் கினர். அதே போல் நேருவும் காங்கிரசின் ஒற்றுமையைக் காப்பதில் நாட்டம் கொண்டார். காந்தி இல்லாத, அவரு டைய விருப்பத்திற்கு மாருன ஒரு அரசியல் இயக்கத்தை இந்தியாவில் நேருவால் கற்பனை செய்ய இயலவில்லை. ஒற்று மைக்காகப் பாடுபட்ட அதே நேரத்தில் அவர் காந்தியையும், காங்கிரசின் பெரும்பான்மையாக இருந்த கன்சர்வேடிவ் களையும் புரட்சிகர மற்றும் சோஷலிசக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளச் செய்ய முடியும் என்று நம்பினர். காங்கிரசின் ஒற்றுமையின் அவசியத்தை அங்கீகரித்ததில் காந்தி, நேரு இருவருமே சரியாக இருந்தனர். ஏனெனில் அதன் பிளவு ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளுக்குப் பெரும் பாதகமாக முடிந்திருக்கும். இருந்த போதிலும் தன்னுடைய கருத்துக் களுக்குச் சார்பாக காங்கிரசைத் திருப்ப நேருவால் முடிய வில்லை. காந்தியின் நிர்ப்பந்தத்திற்குத் தன்னைத்தானே ஆளாக்கிக் கொண்டு, அவருடைய தவறற்ற உள்ளுணர்வில் நம்பிக்கை கொண்டு, புரட்சிகரமாக ஒலிக்கும் அறிக்கைகளின் செல்வாக்கை வலதுசாரிகள் பலனற்றதாக்க விட்டுக் கொடுத் தார். வலதுசாரிகள் இடதுசாரிகளை தீவிரமாக எதிர்த்து நின்றனர். திரிபுராவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் இது முற்றி, அதன் விளைவாக காங்கிரஸ் பிளவுபடும் நிலை தோன்றியது. தன்னுடைய அரசியல் நிலையிலேயே தொடர்ந்து நின்ருல் அது காங்கிரசின் ஒற்றுமைக்குப் பாதகமாக முடியும் என்பதை உணர்ந்த நேரு சமரசத்திற்குச் சென்ருர். இதனுல் 30ம் ஆண்டுகளின் இரண்டாவது பாதியிலிருந்து சோஷலிச, புரட்சிப் போக்குகள் அவருடைய செயல்களில் மந்தமடையத் தொடங்கின.

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, அதன் அரசாங் கத்தின் தலைமையை நேரு ஏற்றுக் கொண்டபோது இது தெளிவாகத் தெரிந்தது. அவருடைய சமூக-அரசியல் கண் ணேட்டங்களில் குறிப்பிடத்தக்க மாறுதல் தோன்றியது. மார்க்சிய-லெனினியக் கருத்துக்கள் இரண்டாவது இடத்

திற்குத் தள்ளப்பட்டன. அவை நடைமுறைப் பிரச்சினைகளில் இருந்து கிட்டத்தட்ட முற்றும் மறைந்து சமூக-வரலாற்று நிகழ்ச்சிப் போக்கின் மிகவும் பொதுவான மதிப்பீடுகளில் மட்டுமே பிரதிபலித்தன. காந்தியத்துடன் இணைந்த மிதவாத, மற்றும் சமூக-சீர்திருத்தக் கருத்துக்கள் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தன. தன்னுடைய (காந்தியின்) மரணத்திற்குப் பிறகு நேரு தன்னைப் பின்தொடர்வார் என்று காந்தி தீர்க்கதரிசனமாகக் கூறியது உண்மையானது.

நேரு பிரதம மந்திரியான பின்பு ''சோஷலிசம்'' என்ற சொல் அவருடைய அரசியல் பேச்சுக்களில் இருந்து முற்றிலுமாக மறைந்து விட்டது. மறுபடி 50வது வருடங்களில் அவருடைய பேச்சுக்களில் அச்சொல் மீண்டும் தோன்றியது என்பது உண்மை. ஆனால் இப்போது அதன் தன்மை வேறுபட்டு—புரட்சித் தன்மையோடு அல்லது தேசிய-ஜனநாயகத் தன்மையோடு அல்லாமல் சீர்திருத்தப் போக்காக இருந்தது. நேரு தயாரித்த உள்நாட்டு அரசியல் செயல் திட்டம் தேசிய-சீர்திருத்த எல்லைக்குள் அடங்கியிருந்தது என்பதுடன் தங்களுடைய பொருளாதார, அரசியல் ஆதிக்க நிலையைக் காத்து நின்ற தேசிய முதலாளி வர்க்கத்தையும் அது எந்த விதத்திலும் அச்சுறுத்தவில்லை.

அவருடைய முன்னுக்குப் பின் முரணான, தவறான இவ்வியக்கங்களுக்காக நேருவை நிந்திப்பது எளிது. அடிப்படையில் இத்தகைய விமர்சனத்திற்கு அவரை உள்ளாக்கலாம். ஆனால் இந்தியாவின் புதிய வரலாற்றிலும், அவருடைய பணிகளிலும் இருந்த புரட்சிகர, சோஷலிசப் போக்குகளைக் கட்டுப்படுத்திய, நிர்ணயித்த எதார்த்தக் காரணிகளின் சக்தியைக் கணக்கில் கொள்ளாமல் இவ்விதத்தில் விமர்சித்தால் அது நியாயமற்றதும் தவறானதுமாகும்.

30வது வருடங்களிலிருந்து அவரின் வாழ்நாள் முடிய, நேருவின் உலகக் கண்ணோட்டத்தில் இருந்த மாறுதல்கள் எதார்த்த நிலையின் ஆழ்ந்த முரண்பாடுகளில் தென்படுகின்றன. நேருவே குறிப்பிட்டது போல, அவருடைய நோக்கங்கள் இந்திய தேசிய காங்கிரசின் அரசியல் உணர்வைத் தாண்டிச் சென்றன. ஒரு அகநிலைச் சோஷலிசவாதி பூர்ஷ்வா அரசியல் ஸ்தாபனத்தின் தலைமையில் இருந்தார். தத்துவம், நடைமுறை இரண்டின் இணைப்புமே ஒரு புரட்சியாளருக்கு மிகவும் முக்கியமாகும். நேருவும் இதற்காகவே முயன்றார்.

குறிப்பாக 20வது வருடங்களின் கடைசிப் பகுதியிலும் 30வது வருடங்களின் ஆரம்பக் கட்டத்திலும் இதற்கெனப் பாடு பட்டார். ஆனால் அப்படிப்பட்ட ஒரு இணைப்பை அடைய அவரால் முடியவில்லை. வலதுசாரித் தலைவர்களின் ஆதிக்கத் திலிருந்த ஸ்தாபனத்தில் இயங்கிக் கொண்டு, காலனி ஆதிக் கத்தின் உறுதியான மிச்சசொச்சங்களோடு இருந்த அரசாங்க அமைப்பைத் தலைமை தாங்கிக் கொண்டு, தன்னுடைய நோக்கங்களையும் கருத்துக்களையும் நிறைவேற்ற அவரால் இயலவில்லை.

தத்துவத்தில், கோட்பாடுகளில் சமரசமற்ற, புரட்சி நிலையை வகிக்க முடியும். நடைமுறையில் போலல்லாமல் நாசகர முடிவுகளுக்கு இது கொண்டு செல்வதில்லை. 30வது வருடங்களின் ஆரம்பத்தில் இருந்து தன்னுடைய நோக்கங் களிலேயே மிகுந்த உறுதியோடு நின்றிருந்தால், நேரு காந்தி யுடனும் காங்கிரசின் வலதுசாரிகளுடன் சமரசம் செய்யாம லிருந்திருந்தால் என்ன நடந்திருக்கும்? காந்தியின் மன உறுதி யையும் காங்கிரசின் கன்சர்வேடிவ் வட்டங்களின் செல்வாக் கையும் அவரால் மாற்றியிருக்கவோ தன்னுடைய பாதை யில் அவர்களையும் கொண்டு செல்லவோ முடிந்திருக்காது. சுபாஷ் சந்திர போஸைப் போன்று அரசியல் கொள்கையில் தவறியவராகவும் எம். என். ராய் அல்லது பிற இடதுசாரி அதிசாகசவாதப் பிரதிநிதிகளில் ஒருவராகவும் மாறியிருப் பார். காங்கிரசை எதிர்த்து நிற்கக் கூடிய ஒரு அரசியல் ஸ்தாபனத்தைத் தோற்றுவிக்க அவரால் முடிந்திருந்தால், அது ஏகாதிபத்திய எதிர்ப்பு அணி பலவீனமடையவும், பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகள் அத்தகைய நிலையை தங் களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவும் வழிகோ லியிருந்திருக்கும்.

தான் சோஷலிசத்தின் ஆதரவாளராக இருந்த போதிலும், அந்தக் குறிக்கோளை காங்கிரசின் பெரும்பான்மை ஆதரிக் காததால்தான் அதை நாட்டின் முன் பிரேரிக்கவில்லை என்று நாற்பதாவது வருடங்களின் கடைசியில் நேரு கூறினார். விஞ்ஞான சோஷலிசத்திற்கு ஆதரவாக இருந்த அவருடைய லக்னோ காங்கிரஸ் மாநாட்டுச் (1936) சொற்பொழி வின் நிலையிலேயே நாற்பதாவது வருடங்களிலும் அவர் திரும்பவும் நின்றிருந்தால், இந்தியாவின் பிரதமராகவும், காங்கிரஸ் அரசின் தலைவராக ஆகவும் அவரால் முடிந்திருக்

காது. அவருடைய ஆடம்பரமற்ற, சீர்திருத்தத் தத்துவமான முதலாளித்துவத்திற்குப் பதிலாகச் சோஷலிச மாதிரியில் அமைந்த சமுதாயத்தைப் பற்றிய கருத்தை மக்கள் ஏற்றுக் கொள்வதற்கான நிலையை உண்டாக்க நேருவிற்கு பத்தாண்டு காலம் தேவைப்பட்டது.

இந்தியா சோஷலிச சமுதாய அமைப்புக்கு மாறத் தயாராக இருக்கவில்லை என்பதையும், எதிர்கால சோஷலிச மாற்றங்களுக்கான நிலைகளைத் தயார் செய்ய வேண்டிய இடைக்கால கட்டத்திலேயே இந்தியா உள்ளது என்பதையும் நேரு சரியாகக் கணித்தார். ஆனால் இந்தக் காலகட்டத்தின் அளவையோ, அதன் பிரச்சினைகளையோ, வர்க்கச் சக்திகளின் ஒழுங்கு முறையையோ அவர் நிர்ணயிக்கவில்லை. அத்துடன் சோஷலிச சீர்திருத்த மாற்றங்களுக்கான ஸ்தாபன, அரசியல் மற்றும் தத்துவ ரீதியான அடிப்படை நிலைகளை அவர் தோற்றுவிக்கவில்லை. காங்கிரசின் பிரச்சாரங்களில் சோஷலிசத்தைப் பற்றிய பொருள் தெளிவற்றதாகவும், வர்க்கச் சாரம் நீக்கப் பட்டும் இருந்தது. உண்மையில் உழைப்பாளிகளின் வாழ்க்கை நிலையில் சில நல்ல மாறுதல்களை ஏற்படுத்தி, நாட்டுக் குடிமக்கள் ''அனைவருக்கும் சம உரிமை'' அளிக்கும் கோட்பாடாக சோஷலிசம் புரிந்து கொள்ளப்பட்டது. நேருவின் அரசியல் இந்தியாவில் முதலாளித்துவத்தின் அடிப்படையைத் தகர்க்கவோ, ஏகபோக முதலாளிகளை நீக்கவோ, தீவிரமான சமூக முரண்பாடுகளை தீர்க்கவோ செய்யவில்லை. அதற்குமாறாக, நேருவே ஒப்புக் கொண்டது போல, ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் இடையிலிருந்த இடைவெளி அதிகமானதுடன், ஏகபோக மூலதனம் தன்னுடைய நிலையை உறுதிப்படுத்திக் கொண்டது.

இந்திய அரசாங்கத்தின் தலைமையில் இருந்த போது நேரு தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும், நாட்டை இயந்திரத் தொழில் மயமாக்குவதிலும், அரசுப் பிரிவை ஏற்படுத்துவதிலும், கல்வி மற்றும் சுகாதாரப் பிரிவுகளில் மிகுந்த முன்னேற்றத்தைக் காண்பதிலும் கணிசமான அளவு வெற்றி அடைந்தார். அத்துடன் பெரிய, மத்தியதர நிலச் சுவான்தார்களுக்கு முடிவு கட்டினர். ஆனால் இவையனைத் தையும் பூர்ஷ்வா அடிப்படையிலேயே அவர் செய்தார். ஏழை விவசாயிகளுக்கு நிலங்கள் வழங்கப்படவில்லை. நல்ல வாழ்க்கையைப் பற்றிய இந்திய நிலக் குத்தகைக்காரர்களின்

கனவு நனவாக்கப்படவில்லை. முதலாளித்துவ-ஜனநாயக, மத சார்பற்ற அரசாங்கத்தை உறுதிப்படுத்த நேரு தீவிர மாகவும் வெற்றிகரமாகவும் செயல்பட்டார். அத்துடன் இந்தியா சமாதானத்தை விரும்பும் பெரிய நாடாக அங்கீ காரம் பெறக் காரணமாக இருந்த வெளி உறவு அரசியல் கொள்கையைத் தயாரித்தார். சந்தேகமின்றி நேருவின் சேவை கள் சிறந்தவையே. ஆனல் அவர் பேசுவதற்கு மிகவும் ஆசைப் பட்ட சோஷலிசம் அவருடைய நல்ல ஒரு விருப்பமாகவே இருந்தது.

சோஷலிச மாற்றங்களை இந்தியாவில் உடனடியாக நிறை வேற்ற நேருவால் முடியவில்லை. அதற்குத் தேவையான அர சியல் காரணிகள் இருக்கவில்லை. மேலும் பூர்ஷ்வாக்களுடனும் கன்சர்வேடிவ்களுடனும் கடினமான சமரசங்களைச் செய்து கொள்ளும்படி வாழ்க்கை நேருவைக் கட்டாயப்படுத்தாது இருந்திருந்தால்—இவை அவருடைய புரட்சிகர ஜனநாயகக் கருத்துக்களை மாற்றிக் கொள்ளும்படி நிர்ப்பந்தித்தன—நம்முடைய கண்ணேட்டத்தில், சோஷலிசக் கருத்துக்களின் பிரச்சாரத்திற்கும், வர்க்க, அரசியல் சக்திகளின் உருவாக் கத்திற்கும் ஒன்றிணைப்பிற்கும், நாட்டு அரசியலின் மீதும் அரசுப் பணிகளின் மீதுமான சுரண்டும் வர்க்கங்களின் தாக் கத்தைப் பலவீனப்படுத்தவும் அவரால் பலவற்றைச் செய்ய முடிந்திருக்கும்.

ஆனுல் அவருடைய வாழ்நாளிலும் மரணத்திற்குப் பின்பும் அவருடைய பாதைக்கு உண்மையான மாற்றுப் பாதையாக, புரட்சிகர இடதுசாரிகள் அல்லாமல் வலதுசாரி அரசாங்கமே இருந்தது. இந்த வலதுசாரிகள் பக்கமாகச் செல்வதைத் தவிர்த்து, இந்தியாவில் கன்சர்வேடிவ்களின் மற்றும் சமூக பிற்போக்கு சக்திகளின் நிலையை நேரு அடியோடு தகர்த்தார். இதில்தான் அவருடைய உயர்ந்த பங்கும், நிலையான வரலாற் றுப் பணியும் அடங்கி உள்ளது.

நேருவிடம் பல முரண்பாடுகளிருந்தாலும் அவருடைய பெயர் இந்தியாவின் முற்போக்கு வளர்ச்சியுடன் உறுதியாகப் பிணைந்து நம் உணர்வில் நிற்கிறது.

* * *

நேருவின் பணிகள் அரசியல் துறைக்குள் மட்டும் அடங் கிவிடவில்லை. அவர் உயர்ந்த கலாச்சாரம் உடையவராக,

கலைக்களஞ்சிய ஞானம், ஆழ்ந்த தத்துவஞான அறிவு நிறைந்தவராகவும் இருந்தார். அவரால் எழுதப்பட்ட நூல்களில் உலக ஞானம், பரவலான அக்கறைகள், தன்முதன்மை, கூர்மையான அறிவு மற்றும் வாழும் மனிதனை உள்ளவாறே அணுகும்முறை ஆகியவை நிறைந்திருந்தன. சில சமயம் சந்தேகப்படவும், பின்வாங்கவும் செய்த ஆனால் எப்போதும் மனிதனின் முன்னேற்றத்தில் நம்பிக்கை கொண்டவராக அவர் இருந்தார். ஒரு சிந்தனையாளராகவும் புலவராகவும் விளங்கிய நேரு தன்னுடைய உற்சாகத்தாலும் இரக்கத் தன்மையாலும் மக்களை மிகவும் கவர்ந்தார். புகழ் பெற்ற அரசியல் சேவைகளுக்காக இல்லாவிட்டாலும் தன்னுடைய நூல்களினால் அவர் பல சந்ததிகளின் கவனத்தையும் ஆர்வத்தையும் தன் பக்கம் கவர்ந்திருப்பார். ஆனால் நேருவின் இலக்கியப் படைப்புகளை அவருடைய அரசியல் வரலாற்றில் இருந்து பிரிக்க இயலாது. ''எண்ணமும் செயலும் எந்த அளவுக்கு நெருங்கியும் உறுதியாகவும் பிணைந்துள்ளதோ அந்த அளவுக்கு அவை தீவிரமானவை. யாருடைய எண்ணங்களும் செயல்களும் ஒன்றுானவையாக உள்ளனவோ அவனே சந்தோஷமான மனிதன்''* என்று நேரு கூறினார். அவருடைய தத்துஞான சிந்தனைகள் அவைகளுக்குள்ளேயே முற்று பெற்றவையாக அவருக்கு இருக்கவில்லை. அவருடைய தாய் நாட்டையும் மனிதகுலத்தையும் கொந்தளிக்க வைக்கும் முக்கியப் பிரச்சினைகளுக்கான பதிலைத் தேடுபவையாகவே அவை இருந்தன. நேரு நிகழ்காலத்தைப் புரிந்து கொள்ளவும், எதிர்காலத்தை முன்நோக்கவும் பழமையை அணுகினார்.

ருஷ்ய மொழியில் முதலில் வெளியான நேருவின் **இந்தியாவைக் கண்டறிதல்**, **சுயசரிதை** ஆகிய இரு புத்தகங்களும் இத்தகைய நிலையிலிருந்தே எழுதப்பட்டவை. கால் நூற்றாண்டுகளுக்கும் முன் சோவியத் யூனியனில் பதிப்பிடப்பட்ட இந்நூல்கள் சோவியத் வாசகர்களின் ஆழ்ந்த ஆர்வத்தைத் தூண்டியதுடன், சுதந்திர இந்தியாவின் பிரச்சினைகளையும் வரலாற்றுப் பழமையையும் அவர்களுக்கு அறிமுகப்படுத்துவதில் பெரும் பங்கு வகித்தன.

**உலக வரலாற்றைப் பற்றிய கண்ணோட்டம்** என்ற அவரு

---

* *J. Nehru's Speeches*. Vol. III. Delhi, 1958, p. 472.

டைய புத்தகத்தைப் பற்றியும் இவ்விதமாகக் கூற முடியும். இதில் ஆசிரியரின் வீச்சு இன்னும் பரந்தது. ஆங்காங்கே உலகச் சரித்திரத்தில் நிகழ்ந்த முக்கியமான சம்பவங்களைப் பற்றி விரிவாகக் கூறிக் கொண்டே வரலாற்று நிகழ்ச்சிப் போக்கின் முக்கியமான கட்டங்களை ஒன்று திரட்டியும், விரிவுபடுத்தியும் மனித சமுதாய வளர்ச்சியின் வரலாற்றைப் பற்றிய உருவத்தை முழு உலக அளவில் இப்புத்தகத்தில் அவர் தருகிறார். உலகின் பிற பகுதிகளிலும் நாடுகளிலும் நிகழ்ந்த சம்பவங்களுடன் ஒப்பிடப்பட்டு ஒன்றாக இந்தியாவின் வரலாறு தரப்பட்டுள்ளது. இது ஒரு சரித்திர ஆசிரியரின் ஆழ்ந்த, சுயமான வேலையே தவிர ஒரு விஞ்ஞான ஆராய்ச்சி அல்ல. **இந்தியாவைக் கண்டறிதல்** புத்தகத்தில் போன்றே, இதிலும் நேரு தன்னுடைய நாட்டின் பழமையைப் புரிந்து கொள்ள முயற்சிக்கிறார். அதே சமயம் இந்தச் சந்தர்ப்பத்தில் உலகச் சரித்திரத்தின் நிகழ்காலத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவும், அதனுடைய முன்னேற்றத்தின் பாதையைக் குறிக்கவும் வேண்டி அதனுள் ஊடுருவிச் செல்கிறார். நேருவிற்குப் பழமை என்பது ''எதிர்காலத்தைச் சுட்டிக் காட்டுவது'' ஆகும். அவருக்குச் சரித்திரம் என்பது வாழ்க்கை, அனுபவம், போராட்டம், உலகக் கண்ணோட்ட வளர்ச்சியின் மூல ஆதாரம் ஆகியவற்றின் பள்ளி ஆகும். நடைமுறைத் தேவைகளால் தூண்டப்பட்டு, ஒரு தீவிர அரசியல் பிரமுகராக நேரு அதை நெருங்கினார். ''சரித்திரத்தின் மீதான என்னுடைய விருப்பம், இறந்தகாலத்தில் நிகழ்ந்த தொடர்பற்ற பல சம்பவங்களைப் படித்ததனால் உண்டானது அல்ல. ஆனால் நிகழ்காலத்திற்கு அதனைக் கொண்டுவந்தவற்றுடன் சரித்திரம் கொண்டிருந்த தொடர்பினால் ஏற்பட்டது. இவ்விதத்திலேயே சரித்திரம் எனக்கு உயிரோட்டம் கொண்டதாக இருந்தது. இல்லாவிட்டால் அது என்னுடைய வாழ்க்கையுடனும் அல்லது தற்கால உலகத்துடனும் தொடர்பற்ற தற்செயலான ஒன்றாகவே இருந்திருக்கும்''* என்றார் நேரு.

இது தேசிய விடுதலை இயக்கத்தின் புகழ் பெற்ற தலைவராயிருந்து சுதந்திர இந்தியாவின் அரசைத் தலைமை தாங்கி, அதன் நிகழ்காலத்தின் மீதும் எதிர்காலத்தின்மீதும் மிகுந்த

---

* *J. Nehru's Speeches*. Vol. II, Calcutta, 1957, p. 383.

தாக்கத்தைச் செலுத்திய ஒரு மனிதர் சரித்திரத்தின்மீது கொண்டிருந்த ஆர்வமூட்டக் கூடிய கண்ணோட்டமாகும்.

வரலாற்றின் மீதான நேருவின் கருத்தோட்டங்களை, அவர் வரலாற்றை அணுகியது போலவே அணுகலாம். அதாவது அவருடைய கருத்தோட்டங்களில் நம்முடைய நிகழ் காலத்திற்குத் தேவையானவை எவை எதிர் காலத்திற்கு அவர் என்ன தந்தார் என்பதை அவற்றில் ஆராயலாம்.

மனித வரலாற்றையும், தன் நாட்டின் சரித்திரத்தையும் அவர் ஒரு பகுத்தறிவுவாதியைப் போல் ஆராய்ந்தார். வர லாற்றை அவர் ஏற்கெனவே உருவாக்கிக் கொண்ட, சரித்திரத் திற்கு அப்பாற்பட்ட கருத்தினங்களுடன் இதை அணுகாமல் அதனுடைய வளர்ச்சிக்கான உள் அர்த்தத்தை, தர்க்கத்தை அதிலேயே தேடுகிறார். தன்னுடைய நாட்டைப் பற்றிய நேருவின் ஆராய்ச்சியும் அவ்வாறுனதே. பழமையை விமர் சிக்காமல் ஒப்புக்கொள்ளும் தன்மை அவரிடம் இல்லை. அதே சமயம் இந்தியாவின் வரலாறு தனிச்சிறப்பு கொண்டதும் தனித்ததும் என்றோ, அந்த நாட்டிற்கு மட்டுமே உரித்தான அகநிலை விதிகளுக்குள் அடங்கியது என்ற கருத்தும் அவரிடம் இருக்கவில்லை. அத்துடன் நேருவின் கருத்தோட்டங்கள் மதம் மற்றும் இந்தியாவில் பரந்திருந்த நீதிமுறை மாயாவாதங் களிலிருந்து தூர விலகியிருந்தன. ஐரோப்பாவில் வளர்ந்த நேருவால் விமர்சன அணுகுமுறையில் கிரகித்துக் கொள்ளப் பட்ட ஐரோப்பிய பகுத்தறிவுவாதப் பாரம்பரியம் கலாச்சாரம் ஆகியவை வரலாற்று வளர்ச்சியைப் பற்றிய அவருடைய கருத்துக்களின்மீது, குறிப்பாக இந்தியாவிற்குப் பயன்படுத்தும் வகையில் தாக்கம் செலுத்தின. அத்துடன் பட்சபாதமும், நாட்டு வெறியும் இல்லாமல் தன்னுடைய நாடு அது பிற நாடுகளுடன் ஒன்றுக இருப்பதைப் போலவே பார்க்க, புரிந்து கொள்ள இவை உதவின. ''இந்தியா என்னுடைய இரத்தத் தில் ஊறி இருந்தது. என்னைக் கிளர்ச்சி அடையச் செய்த பல அம்சங்கள் இந்நாட்டில் இருந்தன. இருந்த போதிலும் நிகழ்காலத்தையும் நான் கவனித்த பழமையின் மிச்சசொச் சங்களையும் வெறுத்து, கிட்டத்தட்ட ஒரு அன்னிய விமர்சகனு கவே இந்நாட்டை ஆராய்ந்தேன். சில அம்சங்களில் நான் மேலே நாடுகளின் மூலமாக இந்தியாவை நெருங்கினேன் என்று கூறலாம். தோழமை மிக்க ஒரு மேலை நாட்டினன் பார்வை

யிலேயே இந்நாட்டைப் பார்த்தேன்''* என்று நேரு எழுதினர்.

வரலாற்றின் பொருளே அதற்கு வெளியே தேடுவதை மறுத்து, அதனுடைய வளர்ச்சியின் உள்விதிகளேப் புரிந்து கொண்டதுடன் நேரு யதார்த்தவாதத்தை நோக்கி கோட்பாட்டு ரீதியில் ஒரு படி முன் செல்கிருர். வரலாற்று வளர்ச்சியின் பொருள்முதல்வாத விளக்கத்திற்கு அருகில் வருகிருர் என்று கூடக் கூறலாம். ''கடந்த வருடங்களில் ஆசியாவில் பலவகையான வரலாற்றுச் சக்திகள் செயல்பட்டன. பாரபட்சமில்லாத வரலாற்றுச் சக்திகள் செயல்படும்போது எப்போதும் நிகழ்வதைப் போன்றே பல நல்லவைகளும், பல அவ்வளவாக நல்லதல்லாதவைகளும் நிகழ்ந்துள்ளன. அச்சக்திகள் இன்னும் செயல்படுகின்றன. அவற்றின் மீது தாக்கம் செலுத்தவும், நிர்ணயிக்கப்பட்ட பாதையில் அவை செல்லவும் தேவையானதைச் செய்ய நாம் முயற்சிக்கிறேம். இதில் தலேயாயது என்னவென்ருல் அவை தங்களுடைய வரலாற்றுப் பணியைச் செய்து முடிக்கும் வரையில், தங்களுடைய குறிக்கோளே அடையும் வரையில் தங்களுடைய வழியிலேயே செயல்படுவதை நிறுத்த மாட்டா''** என்று கூறினர் ஜவகர்லால் நேரு. இவ்விதமாக எதார்த்த விதிமுறைகளே அவர் அங்கீகரித்தது வரலாற்று நிகழ்ச்சிப் போக்கு முன்நோக்கிச் செல்வதைப் புரிந்து கொள்ளவும், நிகழ்ச்சிகளேப் புறவய ரீதியான நிகழ்ச்சிப் போக்குகளாக, கீழ் நிலேயிலிருந்து மேல் நிலேக்குச் செல்வதாகப் புரிந்து கொள்ளவும் உதவியது.

உலகக் கண்ணேட்டத்தைப் பற்றி நேரு கொண்டிருந்த இக்கருத்துகள் அவருடைய அரசியல் பணிகளின்மீது நல்ல தாக்கத்தை ஏற்படுத்தின. அவர் அரசியலே தன் சுயவிருப்பப்படியோ, ஒழுக்க நெறி உபதேசங்களின் படியோ, மதத் தேவைகளின் படியோ அணுகாமல் அதை விஞ்ஞானக் கண்ணேட்டத்தில் அணுகினர். மேலும் அதை வரலாற்றின் பொதுவான எதார்த்த வழியுடனும் முற்போக்கு முறைகளின் வழியுடனும் இணேக்க முயன்ருர். மனிதகுலத்தின் முந்தைய

---

* ஜவகர்லால் நேரு. இந்தியாவைக் கண்டறிதல். மாஸ்கோ, 1955, பக்கம் 47. (ருஷ்ய மொழியில்.)

** ஜவகர்லால் நேரு. இந்தியாவின் வெளி உறவுக் கொள்கை. தேர்ந்தெடுக்கப்பட்ட சொற்பொழிவுகள். 1946—1964. மாஸ்கோ, 1965, பக்கம் 59. (ருஷ்ய மொழியில்.)

வளர்ச்சிகளினுல் நிர்ணயிக்கப்பட்ட காலத் தேவையுடன் ஒப்பிட்டே தன்னுடைய அரசியல் வழியின், அரசியல் போராட்டத்தின் நியாயத்தையும், எதார்த்தத்தையும் நேரு புரிந்து கொண்டார். ''நம்முடைய லட்சியமும் குறிக்கோளும் வரலாற்றுப் போக்கிற்குக் குறுக்காகச் செல்ல முடியாது''* என்முர் நேரு. அவர், வரலாற்றின் உண்மையான படைப்பாளிகள் மக்களே, அரசியல் தலைவர்களின் சேவைகளோ வெகுஜன மக்களின் குறிக்கோள்களையும், அபிலாஷைகளையும் நிறைவேற்றும் போராட்டங்களுக்கு அடங்கியே இருக்க வேண்டும் என்ற முற்போக்கு விஞ்ஞானக் கோட்பாட்டைத் தொடர்ந்து கடைபிடித்தார். ''முக்கியமான, செயல்படும் நபராக இருந்தது மக்களே. மாபெரும் வரலாற்று சக்திகளோ அவர்களை முன்நோக்கித் தள்ளிக் கொண்டு அவர்களின் பின்னுல் நின்றன... இத்தகைய வரலாற்று நிலையோ, அரசியல், சமூகச் சக்திகளோ இல்லாமல் எத்தகைய தலைவர்களாலும், பிரச்சாரகர்களாலும் மக்களைச் செயல்பட வைத்திருக்க முடிந்திருக்காது''** என்று நேரு குறிப்பிட்டார்.

நேருவின் உலகக் கண்ணேட்டம் பல போக்குகளின் தாக்கத்தினுல் உருவானது. வரலாற்று நிகழ்வுப் போக்குகளின் விதிமுறை மற்றும் வெகு ஜனங்களின் பங்கு ஆகியவற்றைப் பற்றிய அவருடைய கண்ணேட்டங்களில் விஞ்ஞான சோஷலிசத்தின் தாக்கம் தெளிவாகத் தெரிந்தது.

நேரு சுய ஆற்றல் கொண்டவர் அல்ல, பல இடங்களில் கண்டவற்றில் நல்லதைத் தேர்ந்து எடுத்துப் பயன்படுத்தியவர் என்று இந்த வகையில் நேருவைப் பற்றிச் சிலர் நினைக்கலாம். ஆனுல் அவர் இன்னும் சிக்கலானவர். அவருடைய கண்ணேட்டங்களை ஆராயும் போது இப்படிப்பட்ட மிகக் குறுகிய அணுகுமுறை அனுமதிக்கப்படலாகாது. அவர் மனிதகுலம் இதுவரை அடைந்த அனுபவம் அனைத்தையும் அறிவதிலும், அவற்றில் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்து, தேர்ச்சி பெறுவதையும் நாட்டமாகக் கொண்டிருந்தார். சில சமயங்களில் நேரு தன்னுடைய அரசியல் போராட்டத்தில் பலவகையான தத்துவஞான அமைப்புகளின் தனிப்

---

* J. Nehru. *On Socialism. Selected Speeches and Writings.* New Delhi, 1954, p. 26.

** ஜவகர்லால் நேரு. சுயசரிதை. மாஸ்கோ, 1955, பக்கம் 304.

பட்ட நிலைகளைப் பயன்படுத்தினார். அவற்றின் விரோதத் தன்மையையும் சமரசப்படுத்த முடியாத தன்மையையும் அவர் கவனிக்காமலிருந்ததுடன் அவர் தவிர்க்க விரும்பிய நிற்கூறுதிரட்டுவாதத்திற்கே (Eclecticism) இது அவரைக் கொண்டு சென்றது. ''பல்வேறு மதங்கள், கருத்துக்கள், அரசியல், சமூக மற்றும் பொருளாதார அமைப்புகளைப் புரிந்து கொண்டு அவற்றில் தேர்ச்சி பெற உதவக் கூடிய, மேலும் வேறுபாடுகளையும் எதிர்மறையானவற்றையும் தொகுக்கக் கூடிய அறிவுப் பூர்வமான அணுகுமுறையில்'' அவர் எப்போதும் விருப்பமுடையவராக இருந்தார்*.

''சித்தாந்தங்களின் இணைப்பைத்'' தோற்றுவிக்க யாராலும் முடியவில்லை. நேரு இதையும் அறிந்திருந்தார். முரண்பாடான அம்சங்கள் அவருடைய கருத்தோட்ட அமைப்பில் ஒன்றுபடவோ, சமரசப்படவோ இல்லை. ஒன்றுக்கொன்று எதிர்மறையான, விரோதமனப்பான்மை நிறைந்த, எப்போதும் ஒன்று சேராத வர்க்க எதிர்மறைகளை ஒன்றிணைக்க யாராலும் இயலாது. நேரு தன்னுடைய கருத்தோட்டங்களை முழுமைப் படுத்துவதிலும், முன்நோக்கிச் செல்வதிலும் நாட்டம் கொண்டு தன்னுடைய உலகக் கண்ணோட்ட அமைப்பைச் சுய விமர்சன முறையில் அடிக்கடி திருப்பிப்பார்த்தார். ஜவகர்லால் நேருவின் அரசியல் மற்றும் சமூகத் தேடல்களின் முடிவுகள் மிகவும் பயனுள்ளவையாக இருந்தன. அவை இன்று வரையும் முக்கியமானவையாகத் திகழ்கின்றன. ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் நடைமுறைப் பிரச்சினைகளையும், காலனி ஆதிக்க நாடுகளின் எதிர்காலத்தையும் பற்றிய பதில்களை அவற்றின் இறந்தகாலத்திலிருந்து தரத் தன்னுடைய தத்துவத் தேடல்களில் நேரு முயன்றார்.

இந்தியாவின் பழமையான கலாச்சாரத்தின் பழக்க வழக்கங்களையும், அதன் தேசிய விடுதலை இயக்கத்தின் அனுபவத்தையும், குறிப்பாக காந்தியத்தின் செயல்முறையையும் கருத்துக்களையும் அவர் தன்னுள் கொண்டிருந்தார். மேலே குறிப்பிட்டது போல மேற்கு ஐரோப்பிய பூர்ஷ்வா மிதவாதத்தை ஏற்றுக் கொண்ட நேரு சோஷலிசத்தில், அதைப் பற்றிய ஃபேபியன்களின் விளக்கத்தில் ஆர்வம் கொண்டார். ஆனால் பின்னர் சம உரிமை மற்றும் சமூக நீதி ஆகிய இலட்

---

* *The Mind of Mr. Nehru.* L., 1960, p. 89.

சியங்களுக்காக, தன்னுடைய மிகுந்த அறிவின், மேலும் விமர்சனவாதத்தின் அழுத்தத்தினுல், விஞ்ஞான சோஷலிசத் தின் பல நிலைகளை ஏற்றுக் கொள்ள ஆரம்பித்தார். அவர் விஞ்ஞான சோஷலிசத்தின் தத்துவத்தையும், செயல்முறை களையும் தீர்க்கமாக ஆராய்ந்து, இந்தியாவிற்கு தேவையான பல அம்சங்களை அவற்றில் கண்டறிந்தார். மார்க்சிய-லெனி னியத்தின் முக்கியத்துவத்தை முதன்முதலில் எடுத்துக் கூறிய, மேலும் இந்தத் தத்துவத்தில் வரலாற்று வளர்ச்சியின் தர்க் கத்தை, இத்தத்துவத்தின் காலத் தேவையைப் புரிந்து கொண்ட தேசிய விடுதலை இயக்கத் தலைவர்களில் ஒருவராக நேரு விளங்கினுர்.

தன்னுடைய உலகக் கண்ணேட்டத்தின்மீது விஞ்ஞான சோஷலிசம் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியதைப் பற்றி ஜவகர்லால் நேரு பலமுறைக் குறிப்பிட்டார். ''... என் னுடைய உணர்வின் பல இருண்ட பக்கங்களுக்கு மார்க்சியத் தத்துவமும் தத்துவஞானமும் ஒளியூட்டின. சரித்திரம் என் னுள் புதிய பொருளைப் பெற்றது. மார்க்சியத் தத்துவம் அதன்மேல் ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சியதால், சரித்திரம் எனக்கு ஒரு கட்டவிழ்க்கப்பட்ட, ஒழுங்கு முறையும், குறிக் கோளும் கொண்ட, அதை நாம் உணராவிட்டாலும் ஒரு தொடர்ச்சியுள்ள நாடகமாக மாறியது. இறந்த காலமும் நிகழ்காலமும் மிகவும் மோசமானவையாகவும் துயரங்கள் நிறைந்தவையாக இருந்த போதிலும், முன்னுல் எதிர் காலத்தில் பல அபாயங்கள் தென்பட்ட போதிலும் எதிர் காலத்தில் நம்பிக்கை ஒளியும் தெரிந்தது. மொத்தத்தில், மார்க் சியத்தில் வறட்டுவாதத் தன்மை இல்லாமல் விஞ்ஞான அணுகுமுறை இருப்பதே என்னுடைய கவனத்தைச் சிறப் பாகக் கவர்ந்தது''* என்று நேரு எழுதினுர். மற்றெரு இடத்தில் ''மார்க்சையும் லெனினையும் படித்தது என்னுடைய உணர்வின்மீது மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியது. அத்துடன் வரலாற்றையும் தற்கால வாழ்க்கையையும் புதிய முறையில் புரிந்து கொள்ள உதவியது. வரலாற்றுச் சம்பவங்களின் மேலும் சமுதாய வளர்ச்சியின் நீண்ட சங்கிலித் தொடரில் ஏதோ ஒரு வகை பொருள் ஏதோ ஒரு வகைத் தொடர்ச்சி

---

* ஜவகர்லால் நேரு. சுயசரிதை, பக்கங்கள் 383—384. (ருஷ்ய மொழி யில்.)

தெரிந்தது. எதிர்காலமோ அவ்வளவாக தெளிவற்றதாகத் தெரியவில்லை''* என்று குறிப்பிடுகிறார்.

விஞ்ஞான சோஷலிசம் தத்துவமாக மட்டுமே அவரது கவனத்தைக் கவரவில்லை. அதனுடைய தாக்கம் விசேஷ பலமுடன் இருந்ததிற்குக் காரணம், நேரு சோவியத் ருஷ்யாவில் நடைமுறையாக்கப்பட்டுக் கொண்டிருந்த பழைய உலகத்தின் புரட்சிகரமான மாற்றத்திற்கான பிரம்மாண்டமான, முன்னுதாரணம் இல்லாத சோதனையில் அவர் கிளர்ச்சி அடைந்ததும், அதை நோக்கிக் கவரப்பட்டதுமே ஆகும். ''உலகம் முழுமையும் உற்சாகமின்மையின் பிடியில் சிக்கியிருந்த போது, சில விஷயங்களில் பிற நாடுகள் பின் நோக்கிச் சென்று கொண்டிருந்த நேரத்தில் சோவியத் நாட்டிலோ நம் கண்களுக்கு முன்பாகவே பிரம்மாண்டமான புதிய உலகம் தோற்றுவிக்கப்பட்டது. பிற நாடுகள் பழமையின் மரணப்பிடியில் சிக்கிக் கொண்டும் நடப்பு காலகட்டத்தின் பயனற்ற சின்னங்களைப் பாதுகாப்பதில் தங்களுடைய பெரும்பான்மைப் பலத்தைச் செலவழித்துக் கொண்டும் இருக்கையில் ருஷ்யாவோ மாபெரும் லெனினின் கட்டளைகளை மேற்கொண்டு, என்னென்ன இருக்க வேண்டும் என்பதை பற்றி மட்டுமே நினைத்தபடி எதிர்காலத்தை எதிர்நோக்கியது. மத்திய ஆசியாவின் பின்தங்கிய பகுதிகள் சோவியத் ஆட்சியின் போது அடைந்த பெரும் வெற்றிகளைப் பற்றிய செய்திகள் என் மனதில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தின. எனவேதான் கடைசியாக, முற்றிலும் நான் ருஷ்யாவின் தரப்பில் நின்றேன். இருண்ட, துயரங்கள் நிறைந்த இந்த உலகத்தில் சோவியத் யூனியன் இருப்பதும், அதன் உதாரணமும் பிரகாசமாகவும் மகிழ்ச்சியைத் தருவதாகவும் இருந்தது''**.

சோவியத் ருஷ்யாவில் செயல்படுத்தப்படும் சமூக மாறுதல்களை அசாதாரணமான ஆர்வத்துடன் நேரு கவனித்தார். சோவியத் ஆட்சியின் முதல் பத்தாண்டு காலத்தில் தன்னுடைய தந்தையும் இந்திய தேசிய காங்கிரசின் பெரிய பிரமுகருமான மோதிலால் நேருவுடன் சோவியத் யூனியனுக்கு

---

* ஜவகர்லால் நேரு. இந்தியாவைக் கண்டறிதல், பக்கம் 24. (ருஷ்ய மொழியில்.)

** ஜவகர்லால் நேரு. சுயசரிதை, பக்கம் 383. (ருஷ்ய மொழியில்.)

முதல்முறையாக விஜயம் செய்தார். அப்போது அங்கே கண்டவை அவரை கீழ்க்கண்ட முடிவுக்கு வர வைத்தன: ''... சோவியத் புரட்சி மனித சமுதாயத்தை முன்னல் தள்ளி வைத்து, எப்போதுமே அணைக்க முடியாத பிரகாசமான தீபத்தை ஏற்றி வைத்தது. அது உலகம் மேற்கொண்டு எந்த நாகரிகத்திற்குச் செல்ல முடியுமோ, அதற்கான அடிப்படையை உருவாக்கியது''* என்று நேரு குறிப்பிட்டார்.

மேலும் வி. இ. லெனினின் தனித்தன்மை, அவருடைய தத்துவ, நடைமுறைச் சேவைகள் ஆகியவற்றிலும் நேரு ஆழ்ந்த ஆர்வம் கொண்டிருந்தார். லெனினின் வரலாற்றுப் பங்கைக் குறிப்பிட்டு எழுதுகையில், ''பல மில்லியன் மக்கள் தம்மை மீட்டுக் காப்பற்றுபவராகவும் இந்த யுகத்தின் மாபெரும் மனிதனுகவும், அவரைக் கருதுகின்றனர்''** என்று எழுதினர். வி. இ. லெனினை மாபெரும் ஞானி எனவும் புரட்சி மாமேதை எனவும் நேரு அழைத்தார்.***

சிந்தனை—செயல், தத்துவம்—நடைமுறை ஆகியவற்றின் ஒற்றுமையே நேருவின் லட்சியமாக இருந்தது. விஞ்ஞான சோஷலிசத்தின் தாக்கமும் அவர் மிகவும் மதித்த சோவியத் யூனியனின் வரலாற்று வெற்றிகளும் இந்தியாவில் தீவிரமான சமூக-பொருளாதார மாற்றங்களைச் செய்ய வேண்டியதன் அவசியத்தை முறையாக உணரவும் அதே சமயம் சோஷ லிசத்தை முதலில் சமுதாய அமைப்பு லட்சியமாகவும், தொடர்ந்து அரசியல் பணிகளின் முடிவான குறிக்கோளா கவும் பிரகடனப்படுத்தவும் வழி செய்தன.

1936ம் ஆண்டு லக்னேவில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மகாநாட்டில் தன் சொற்பொழிவில் நேரு கூறினர்: ''இந்தியாவின் முன்னும் உலகத்தின் முன்னும் நிற்கும் பிரச்சினைகளின் தீர்வுக்கான ஒரே வழி சோஷலிசம்தான் என்று நான் நம்புகிறேன். சோஷலிசம் என்று நான் கூறும் போது

---

* ஜவகர்லால் நேரு இந்தியாவைக் கண்டறிதல் பக்கம் 24. (ருஷ்ய மொழியில்.)

** ஜவகர்லால் நேரு. இந்தியாவைக் கண்டறிதல், பக்கம் 308. (ருஷ்ய மொழியில்.)

*** ஜவகர்லால் நேரு. உலக வரலாற்றைப் பற்றிய கண்ணேட்டம் (சிறையிலிருந்து தன்னுடைய மகளுக்கு எழுதிய கடிதங்கள். இளைஞர்களுக்கான சரித்திரத்தின் விளக்கவுரையைக் கொண்டது). மாஸ்கோ, 1975, தொகுதி 3, பக்கம் 5.

நான் அதில் மனிதாபிமான பொருளே மட்டுமே மனதில் கொண்டு கூருமல், சரியான விஞ்ஞானப் பொருளாதாரப் பொருளிலேயே கூறுகிறேன்... வேலையில்லாத் திண்டாட்டத்தையும், ஏற்றத் தாழ்வுகளையும் ஒழிப்பதற்கு வேறு ஒரு வழியையும் நான் காணவில்லை. அதே சமயம் தங்களுடைய சார்பு நிலையை ஒழிக்க இந்திய மக்களுக்கும் சோஷலிசத்தைத் தவிர வேறு வழி எதுவும் இல்லை. நம்முடைய அரசியல், சமுதாய அமைப்பில் பரந்த புரட்சிகர மாறுதல்களும், வேளாண்மையிலும் இயந்திரத் தொழிலிலும் பணக்காரர்களை ஒழிப்பதும் இதற்குத் தேவை... தனி உடைமையை (ஒரு சில விதிவிலக்குகளோடு) ஒழிப்பது, லாபத்தின் பின்னுல் ஓடும் பண்பின்மீது கட்டப்பட்டுள்ள இன்றைய சமுதாய அமைப்பை, உயர்ந்த கூட்டுறவு உற்பத்தி லட்சியத்தினுல் மாற்றுவது என்பவற்றையே இது குறிக்கும்... சுருக்கமாகக் கூறினுல் தற்போதைய முதலாளித்துவ அமைப்பிலிருந்து தீவிரமாக வித்தியாசப்படும் ஒரு புதிய நாகரிகத்தைப் பற்றியே இங்கு பேசப்படுகிறது''*.

சோஷலிச அமைப்பிற்கான சமுதாயத்தின் மாறுதலில் மனிதகுலத்தின் நியமமான வளர்ச்சியை நேரு கண்டார். ''நம்முடைய நூற்ருண்டிற்கு முதலாளித்துவம் ஒத்துவராது'' என்றும், உலகம் அதிலிருந்து மாறி விட்டது என்றும் அவர் குறிப்பிட்டார். விஞ்ஞானத் தொழில்நுட்பப் புரட்சி சோஷலிசத்தை விசேஷத் தெளிவுடன் காட்டுகிறது என்றும், தற்கால விஞ்ஞான அணுகுமுறை—சோஷலிச அணுகுமுறையே என்றும் அவர் குறிப்பிட்டார்**.

சோஷலிசத்தை நோக்கிய பாதைதான் விடுதலை அடையும் நாடுகளின் தனித்தேவையாக உள்ளது, என்றும் குறிப்பாக இந்தியாவிற்கும், ஏகாதிபத்தியத்தைத் தூக்கி எறியும் பிற அரசுகளின் முன்னேற்றத்திற்கும் முன் கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட பாதையாக அது உள்ளது என்றும் மிகுந்த தெளிவுடனும் மதி நுட்பத்துடனும் முதன் முதலில் குறிப்பிட்ட காலனி ஆதிக்க எதிர்ப்பு இயக்கங்களின் தலைவர்களில் ஒருவராக ஜவகர்லால் நேரு விளங்கினுர். பல ஆசிய, ஆப்பிரிக்க அரசியல் பிரமுகர்களால் பின்னுல் கூறப்பட்ட பல கருத்து

---

* Nehru J. *India's Freedom*. L., 1962, p. 35.

** Nehru J. *India Today and Tomorrow*. New Delhi, 1959, p. 38.

நிலைகளைத் தன்னுடைய மேற்கூறிய இந்தக் கருத்திலும், விவாதத்திலும் நேரு முன் கூட்டியே தெரிவித்தார். மேற்கு நாடுகள் முன்னேற்றத்தை அடைந்த அதே முறைகளிலும், அதே வேகத்துடனும் முன்னேற்றத்தை அடைய விடுதலை அடையும் நாடுகளுக்குக் காலம் போதாது என்பதால், முதலாளித்துவம் விடுதலை அடையும் நாடுகளில் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது என்பதைத் தெளிவாகக் கூறினார். ''ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள் அல்லது அமெரிக்கர்களின் வழியிலேயே நாம் செல்ல வேண்டுமா? நம்முடைய குறிக்கோளை அடைய 100—150 ஆண்டு காலத்தை நாம் கொண்டுள்ளோமா? இது ஏற்றுக் கொள்ளப்பட முடியாத ஒன்று. அதை நாம் ஏற்றுக் கொண்டால், அது நம்முடைய அழிவைக் குறிக்கும்''* என்று அவர் கூறினார்.

காலனியாதிக்கத்திலிருந்த மக்களுக்கு, அவர்களுடைய பின்தங்கிய நிலையின் பிடியிலிருந்து வெளிவருவதற்கான வாய்ப்பைச் சோஷலிசம் மட்டுமே கொடுக்கும் என்ற சிந்தனை அவருடைய ''அடிப்படை அணுகுமுறை'' என்ற புகழ் பெற்ற கட்டுரையில் வெளியானது. ''சோஷலிசம் அல்லது முதலாளித்துவ முறையை ஏற்றுக் கொண்டதுடன் ஏதோ மந்திரம் போல வறுமையை மாற்ற அவற்றினால் முடியாது என்பதை மறக்கக் கூடாது. கடுமையான வேலையிலும் உழைப்பின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதிலும் மற்றும் உற்பத்திப் பொருட்களை நியாயமான முறையில் விநியோகிப்பதிலும்தான் அதற்கான ஒரே வழி அடங்கி உள்ளது. இது நீண்டகால, கடினமான நிகழ்ச்சிப் போக்கு. வளர்ச்சி குறைந்த நாட்டில் முதலாளித்துவம் அத்தகைய சாத்தியங்களை அளிக்காது. இதற்குக் காலம் மிகவும் தேவைப்பட்டாலும் திட்டமிட்ட சோஷலிச அணுகுமுறையின் உதவியுடன் மட்டுமே தொடர்ந்த, தடையில்லாத முன்னேற்றத்தை அடைய முடியும்''**.

முதலில் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் வெற்றியின் தாக்கத்தினாலும், சோவியத் யூனியனின் சோஷலிச நிர்மாணத்தின் வெற்றிகள் பின்னர் இரண்டாம் உலகப் போரில்

---

* Nehru J. *Towards a Socialist Order*. New Delhi, 1956, p. 64.

** Nehru J. *Congressmen's Primer for Socialism*. A Socialist Congressmen Publication. New Delhi, 1963, p. 197.

ஜெர்மன் பாசிஸ்டுகளின் மற்றும் ஜப்பானிய ராணுவ ஆதிக்கத்தின் மீதுமான வெற்றி ஆகியவற்றின் தாக்கத்திலுைம், இந்தியாவிற்கு அதனுடைய தேசிய விடுதலைப் போராட்டத்தில் வெற்றிப் பாதையைத் திறந்த, இந்திய ஜனநாயக சமுதாயச் சிந்தனையாளர்களின் சிந்தனை வளர்ச்சியில் ஏற்பட்ட, பெரிய முக்கியமான ஒரு மாற்றத்தை, சோஷலிசத்தின் மீதான நேருவின் அனுதாபம் பிரதிபலித்தது.

சுதந்திரம் அடைந்த பிறகு ஆட்சியில் அமர்ந்த இந்திய தேசிய காங்கிரசின் சமூக-பொருளாதாரத் திட்டங்களைப் பற்றிய பேச்சுக்களில், நாட்டை இயந்திரத் தொழில் மயமாக்குவதன் முக்கியத்துவத்தையும் சுதந்திரமான தேசிய வளர்ச்சியையும், பொருளாதார வளர்ச்சியையும், மக்களுக்கு நல்ல வாழ்க்கை நிலையையும் தர, ஐந்தாண்டு திட்டத்தைக் கடைபிடிக்க வேண்டியதன் அவசியத்தையும் பற்றி நேரு குறிப்பிட்டார். ''அதனுடைய பரந்த பொருளில் நம்முடைய குறிக்கோளாக விளங்குவது—வருமானத்தில் அதிக வித்தியாசங்கள் இல்லாத, அனைவருக்கும் சம வாய்ப்புகளை அளிக்கும் சோஷலிச சமுதாய மாதிரியில் அமைந்த ஒரு நல்ல அரசாங்கத்தைத் தோற்றுவிப்பதே ஆகும்''* என்று அவர் கூறினுர்.

இந்திய சமுதாயத்தைச் சோஷலிசப் போக்கில் மாற்றி அமைப்பதற்கான புறவயத் தேவையை நேரு அங்கீகரித்தாலும், இந்த நிகழ்ச்சிப் போக்கைப் புரிந்து கொள்வதிலும், இந்த மாறுதல்களை நிறைவேற்றுவதற்கான அவருடைய முறைகளும், அமைப்புகளும் அவருடைய தனித்தன்மையை, முக்கியமாக அகநிலைக் கருத்துமுதல்வாதத் தன்மையைக் கொண்டவையாக இருந்தன. அவை இவ்வகையில் உருவானதற்கு இந்தியாவில் இருந்த வர்க்கங்களுக்கிடையிலான முரண்பாடுகள் மிகச் சிக்கலான முறையில் பின்னிப் பிணைந்திருந்ததும் ஏராளமான சமூக அமைப்புகள் நிறைந்திருந்ததும்தான் காரணம் ஆகும். இதில் முக்கியமானது விஞ்ஞான சோஷலிசக் கொள்கைகளை உண்மையாக்கும் தொழிலாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பங்கை நேரு சரியாக மதிப்பிடாததே ஆகும். காலனி ஆதிக்க எதிர்ப்பு இயக்கத்தில் வர்க்கச் சக்திகள் கொண்டிருந்த பரஸ்பரத் தொடர்பு இதன் தொடர்ச்சியாக சுதந்திர இந்தியாவின் அரசியல் நிலைமைகள் ஆகியவை

* *J. Nehru's Speeches.* 1957-1963. Vol. IV. Delhi, 1964, p. 151.

நேருவை அவருடைய அகநிலைக் கொள்கைகளை நடைமுறையில் செயலாக்க விடாமல் கட்டுப்படுத்தின.

இந்தியாவின் முன் நின்ற எண்ணற்ற தீர்க்கப்படாத பொது ஜனநாயகப் பிரச்சினைகளாலும், பரந்த அளவில் தேசிய சக்திகளை ஒன்றிணைக்க வேண்டிய அவசியத்தினாலும் நேருவின் எண்ணங்களும், குறிப்பாக அவருடைய நடைமுறை அரசியலும் பெருமளவில் பாதிக்கப்பட்டன. ஜனநாயக இயக்கத்தின் முக்கியமான கட்டங்களில் நிர்ணயிக்கப்பட்ட, அந்தந்தக் காலகட்டங்களின் குறிக்கோள்களுடன் மட்டுமே பொருந்திய, வர்க்கச் சக்திகளின் தற்காலிக வரிசைக் கிர மத்தை நேரு அப்படியே ஏற்றுக் கொண்டார் எனத் தோன்றலாம். ஆனால் அந்த வரிசைக் கிரமம் சோஷலிச மாற்றங்களைப் பற்றிய விவாதங்கள் பெருகிய போது நிலைத்து நிற்கவில்லை. இந்திய சமுதாயத்தைப் பற்றிய தன்னுடைய ஆய்வில் நேரு புரட்சியின் பொது ஜனநாயகக் காலகட்டத் தில் இருந்து வெளியே வர விரும்பவில்லை. வர்க்கச் சக்தி களின் வேறுவகையான தீவிரமான மாறுதலை சோஷலிசத் திற்கான போராட்டம் வேண்டுகிறது என்பதை அவர் அங்கீ கரிக்க விரும்பவில்லை. அதாவது பொது ஜனநாயகக் குறிக் கோள்களிலிருந்து சோஷலிசக் குறிக்கோள்களுக்கு மாறும் போது, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்ட காலகட்டத் திலிருந்த ஒன்றிணைந்த தேசிய முன்னணியின் உள்ளமைப்பும் விகிதமும் அடிப்படை சாரத்தில் மாறும் என்பதை அங்கீ கரிக்க அவர் விரும்பவில்லை.

வர்க்கங்களும், வர்க்கப் போராட்டங்களும் இருப்பதை நேரு ஒப்புக்கொண்டார். ஆனால் வர்க்கங்களுக்கிடையிலான ஒத் துழைப்பின்மீது கட்டப்பட்ட சமரசத்தின் மூலமாகவும், சீர் திருத்தத்தின் மூலமாகவும் வர்க்க முரண்பாடுகளை ஒழிப்பதன் சாத்தியத்தைப் பற்றிய கோட்பாட்டை அவர் தன்னுடைய வாழ்வின் கடைசிக் கட்டத்தில் முன்வைத்தார். நாட்டின் பொருளாதார, அரசியல் வாழ்வில் சுரண்டும் வர்க்கங்களின் செல்வாக்கை மக்களை நம்ப வைப்பதன் மூலம் குறைக்கலாம் என்று எண்ணினார்.

இதில் மிதவாத பூர்ஷ்வாக் கருத்துக்களின் எதிரொலி யையும், அவ்வாறே காந்தியக் கற்பனாவாத நீதி முறைக் கோட்பாடுகளின் பிரதிபலிப்பையும் உணராமல் இருக்க முடியாது.

சோவியத் யூனியனின் சரித்திரத்திலிருந்த சில தனிப்பட்ட நிலைகளையும் விஞ்ஞான சோஷலிசத்தின் சில கருத்து நிலைகளையும் இந்தியாவில் கம்யூனிஸ்டு இயக்கத்தையும் பற்றிய நேருவின் ஆதாரமற்ற அகநிலை விமர்சனத்திற்குக் குறிப்பாக இந்தக் கருத்துக்களும் கோட்பாடுகளுமே காரணமாக விளங்கின. ஜவகர்லால் நேருவின் உலகக் கண்ணோட்டத்திலிருந்த முரண்பாடுகளும் இதில்தான் அடங்கியுள்ளன. இவற்றை அவர் தவிர்க்கப் பார்த்தாலும் கடைசிவரை அவரால் முடியவில்லை. சோவியத் யூனியனிலும் பிற சோஷலிச நாடுகளிலும் மார்க்சிய-லெனினியத் தத்துவம் மற்றும் செயல்முறைகளின் வெற்றிகளை நீண்டகாலமாக இந்தியாவும், அதனுடைய சமுதாய சிந்தனையாளர்களும், குறிப்பாக நேருவும் அறியாமல் தனித்து இருந்தது, புதிய சோஷலிச உலகத்தை உருவாக்கும் நிகழ்ச்சிப் போக்குகளை முழுமையாக அறிந்து கொள்வதன் சாத்தியத்தை—இவற்றை அறிந்து கொள்வதற்காகவே நேருவும் தன்னுடைய அகநிலைவாதத்துடனும் விளக்கக் குறிப்புடனும் முயன்ற போதிலும்—குறைத்தன. வர்க்கப் போராட்டம் மற்றும், தொழிலாளி வர்க்கத்தின் பங்கைப் பொறுத்தவரையில் இது விசேஷமாக நிகழ்ந்தது.

ஒரு புறத்தில் வரலாற்றைப் பற்றிய மார்க்சியவாதத்தை, வர்க்கப் பகைமைகளை வெளிப்படுத்துவதன் பேரில் அமைந்த அதனுடைய விஞ்ஞானக் கருத்தை நேரு அங்கீகரித்தார். ''மார்க்ஸ் சுரண்டலைப் பற்றியும், வர்க்கப் போராட்டத்தைப் பற்றியும் தொடர்ந்து பேசுகிறுர்... மார்க்சைப் பொறுத்த வரையில் இது ஆத்திரப்படுவதற்கான அல்லது நீதி முறை கண்டிப்புக்களுக்கான விஷயம் அல்ல. சுரண்டலுக்கான குற்றம் சுரண்டுவோர் மீது இல்லை. ஒரு வர்க்கத்தின்மீது மற்றொரு வர்க்கம் செலுத்தும் ஆதிக்கம், வரலாற்று நிகழ்வுப் போக்கின் இயல்பான விளைவு ஆகும்... மார்க்ஸ் வர்க்க மோதலுக்கு அறைகூவியழைக்கவில்லை. ஆனல் இந்த மோதலுக்கான காரணிகள் யதார்த்த நிலையில் உள்ளன. தொடர்ந்து ஏதோ ஒரு வகையில் இருந்து வந்தன என்பதைச் சுட்டிக் காட்டினுர்''*. ''தங்களுடைய விசேஷ சலுகைகளை மறுத்து

---

* J. Nehru. *Glimpses of World History*. Bombay, 1964, p. 565.
மேலும் பார்க்க: ஜவகர்லால் நேரு. **உலக வரலாற்றைப் பற்றிய கண்ணோட்டம்** (சிறையிலிருந்து தன்னுடைய மகளுக்கு எழுதிய, இளைஞர்களுக்கான சுருக்

ஒதுக்கிவிடத் தனிப்பட்ட மனிதர்களை இணங்க வைக்க முடியும், இது மிகவும் அபூர்வமானது. ஆனால் வர்க்கங்களும் வகுப்புகளும் இவ்விதத்தில் செயல்படுவதில்லை. ஆகையால் சலுகை பெற்ற ஆளும் வர்க்கத்தை அது அனுபவிக்கும் நியாயமற்ற சலுகைகளை மறுத்து அதனுடைய ஆட்சியிலிருந்து விலகும்படி கேட்டுக் கொள்ளும் முயற்சி எப்போதுமே வெற்றி அடைந்ததில்லை. எதிர்காலத்திலாவது அது நடக்கலாம் என்று கூற இப்போதைக்கு எந்தச் சாத்தியமும் இல்லை''*.

ஆனால் 50–60வது வருடங்களில் வர்க்கப் போராட்டத்தைத் தான் ஒப்புக்கொண்டதை காந்தியின் வர்க்கச் சீரிசைவைப் பற்றிய கோட்பாடுகளுடன் இணைக்க முயன்றார். முந்தையை வருடங்களின் அவர் கொண்டிருந்த சொந்த எதார்த்த மதிப்பீட்டுடன் இது முரண்பட்டது. ''வர்க்க முரண்பாடுகளை மறுக்கவோ தூக்கி எறியவோ செய்யாமல், ஒத்துழைப்பின்மீது அமைந்த சமாதான வழியில் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முயல்கிறோம். வர்க்க மோதல்களைத் தீவிரப் படுத்தாமல் அவற்றைத் தணிப்பதில் நாட்டம் செலுத்துகிறோம். மக்களைப் போராட்டத்தையும் அழிவையும் காட்டி பயமுறுத்தாமல் அவர்களை எங்கள் பக்கம் மாற்ற முயல்கிறோம்... வர்க்க மோதல்களைப் பற்றிய தத்துவம் நம்முடைய காலகட்டத்தில் மிகவும் ஆபத்தானதாக மாறி விட்டதால் அது பழமையாகிவிட்டது.''** என்று கூறினர்.

வர்க்கப் போராட்டத்தையும் போரையும் ஒன்றாகக் கலந்த குழப்ப நிலையையும், அஹிம்சாவையும் பலாத்காரத்தையும் ஒன்றுக்கொன்று எதிராக வைப்பதையும், வர்க்க முரண்பாடுகளை தீர்ப்பதற்கான அமைதி வழி மற்றும் அமைதியற்ற வழியையும் பற்றிய குழப்பத்தையும் சற்று தள்ளி வைப்போம். ஜவகர்லால் நேருவின் வாழ்நாளின் கடைசிக் காலத்திலான நம்பிக்கைப் பரிணாம வளர்ச்சி இவைகளில் காணப்படலாம். இது வெளிப்படும் அரசியல் வழி முறையை நிர்ணயிப்பதில் பல வர்க்கங்கள் நிறைந்திருந்த ஆளும் கட்சியான இந்திய தேசிய காங்கிரசின் தலைமையில் இருந்த

---

கமான சரித்திரத்தைக் கொண்ட கடிதங்கள்). மாஸ்கோ, 1977, தொகுதி 2, பக்கம் 376. (ருஷ்ய மொழியில்.)

* ஜவகர்லால் நேரு. சுயசரிதை, பக்கம் 567. (ருஷ்ய மொழியில்.)

** *The Mind of Mr. Nehru*. On Interview by R.K. Karanjia, L., 1961, pp. 76-77.



7–909

பழமைவாத சக்திகள் பெரிய பங்கு வகித்தன. அந்தக் கால கட்டத்தில் தங்களுடைய செல்வாக்கை உறுதிப்படுத்திக் கொண்டிருந்த, பின்னர் காங்கிரசின் பிளவுக்கும் வழிவகுத்த சக்திகளும் இவையே ஆகும்.

ஆனால் அரசியல் போராட்டத்தின் நடைமுறையும், நாட்டின் சமூக-பொருளாதார வளர்ச்சியும் ஜவகர்லால் நேருவின் கண்ணேட்டங்களின்மீது மாற்ற முடியாத தாக் கத்தை ஏற்படுத்தின. அவை ''வர்க்கங்களுக்கிடையேயான ஒத்துழைப்பு'' கோட்பாட்டையும், இந்திய நிலப்பிரபுக் களையும் முதலாளிகளையும் ''திருத்துவதற்கான'' சாத்தியக் கூறுகளையும் உறுதிப்படுத்தவில்லை. அதற்கு மாருக, தீவிரமான சமூக மோதல்கள் அவற்றில் நிறைந்திருந்தன. இதன் காரண மாக உழைப்பாளிகளின் எதிர்ப்பை அடக்க எந்த விதமான சாதனங்களையும் பயன்படுத்தவும் தங்களுடைய நலன்களைக் காக்கும் விதத்தில் பலாத்காரத்தை பயன்படுத்தவும் சலுகை பெற்ற வர்க்கங்கள் தயங்கவில்லை.

வர்க்கப் போராட்டத்தின் தீவிரமும், சுரண்டப்பட்ட வர்க்கங்களின் மீதான நேருவின் உண்மையான அனுதாபமும், அவற்றின் நிலையை மாற்றுவதற்கான அவருடைய விருப் பமும், சோஷலிசக் கருத்துக்களின் மீதான அவருடைய அகநிலை விசுவாசமும் ஜவகர்லால் நேருவை இந்திய சமுதாயத் தில் இருந்த வர்க்க முரண்பாட்டின் யதார்த்தத் தன்மை யையும் அதன் ஆழத்தையும் மறுபடி மதிப்பிட வேண்டிய நிலைக்குக் கொணர்ந்தன.

முடிவில் முற்போக்கான மாற்றங்களை எதிர்க்கும் ''சலுகை பெற்ற வகுப்புகளும் வர்க்கங்களும்'' இந்தியாவில் இருப்பதை நேரு ஒப்புக்கொண்டார். தங்களின் சுயநல நலன்களைக் காப் பதற்காக இந்தச் சமூக சக்திகள் (நில உடைமையாளர்களை மட்டுமின்றி முதனிலையில் ஏகபோக முதலாளிகளின்மேல் மட்டங்களை இத்தகைய சக்திகளாக நேரு குறிப்பிட்டார்) நாட்டின் சமூக முன்னேற்றத்திற்கு எதிராகச் செல்லலாம் என்று அவர் சுட்டிக் காட்டினர். சோஷலிசக் கோஷங்களை இந்திய தேசிய காங்கிரஸ் பறைசாற்றுவது இந்திய சமுதா யத்தை ஒரு இலட்சிய சமுதாயமாக மாற்றும் நிலைக்கு நேரு வைக் கொணரவில்லை. அவருடைய மதிப்பீட்டில் எதார்த்த வாதியாகவே நிலைத்து நின்ற அவர், ''இது அரசாங்கத்தின் கணிசமான கட்டுப்பாட்டில் அடங்கிய முதலாளித்துவப்

பொருளாதாரம் அல்லது முதலாளித்துவ பொருளாதாரத் துடன் இணைந்த அரசுப் பிரிவால் தொடர்ந்து நிர்வகிக்கப் படும் சமுதாயப் பொருளாதாரம். ஆனால் சாரத்தில் இது முதலாளித்துவப் பொருளாதாரம் ஆகும்''* எனக் கூறினர்.

நாடு சோஷலிசப் பாதையில் செல்வதற்கும், அதன் முன்னேற்றத்திற்கும், ஜனநாயகத்திற்குமான பயமுறுத்தல் இந்திய சமுதாயப் பாரம்பரியத்திற்கே உரித்தான நிலப்பிர புத்துவ, அல்லது மத-சமுதாய வேற்றுமைகள் ஆகிய சக்தி களிடமிருந்து மட்டுமல்லாமல் வளர்ந்து வரும் ஏகபோக முதலாளிகளிடமிருந்தும் வருவதை அவர் கண்டார். தன்னு டைய மரணத்திற்கு சில காலம் முன்பு 1963ம் வருடம் இலையுதிர் காலத்தில் அவர் எழுதினர்: ''கடைசி வருடங் களில் எவ்வளவுக்கெவ்வளவு பலம் மிக்கதாக ஏகபோக முத லாளித்துவம் வளர்ந்ததோ அவ்வளவுக்கவ்வளவு இந்தியா சோஷலிசத்தை விட்டு விலகிச் சென்று விட்டது. ஏனெனில் ஏகபோக முதலாளித்துவம் சோஷலிசத்தின் எதிரியாகும்''**.

* * *

ஜ. நேருவின் வெளி உறவு அரசியல் கண்ணோட்டங்கள் தொடர்ந்து முற்போக்கானவையாக இருந்தன. ஏனெனில் சோஷலிசம் மற்றும் உள்நாட்டு அரசியலையும் பற்றிய அவரு டைய கருத்துக்களிலிருந்த மாறுபாடு இந்தத் துறையில் இல்லை. ஒரு சிந்தனையாளராகவும் அரசாங்கப் பிரமுகராக வும் நேரு ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்திற்கும் உலக அமைதியை நிலைப்படுத்தவும் பெரும் சேவை புரிந்தார். போருக்குப் பிந்தைய வருடங்களில் தேசிய விடுதலைச் சக்தி கள், முற்போக்கு மற்றும் சோஷலிசச் சக்திகளுக்குப் பயனுள்ள வகையில் உலக அரங்கில் அரசியல் சக்திகளின் உறவை மாற் றினர்.

அமைதிக்காகவும் சர்வதேச பாதுகாப்பிற்காகவும் தொடர்ந்து போராடியவராக ஜவகர்லால் நேரு விளங்கினர். சமாதானச் சகவாழ்வை ஆதரித்து நின்ற அதே வேளையில் சர்வதேசப் பதட்டநிலையைத் தணிக்கவும் ஆயுதக் குவிப்பை

---

* *A. I. C. C., «Economic Review».* Delhi, 15 September 1957, pp. 6-7.
** *Congress Bulletin*, 1963, NN 9-11, p. 55.

நிறுத்தவும் பொதுவான ஆயுதக் குறைப்புக்காகவும் அவர் தீவிரமாகச் செயல்பட்டார். அவர் கூட்டு சேரா அரசியலின் முக்கியப் படைப்பாளிகளில் ஒருவர் ஆவார். இது நிச்சயமாகப் பிற்போக்கான நடுநிலைமையைக் குறிக்காது. சுதந்திரமும் நியாயமும் மிரட்டலுக்கு ஆளாக்கப்படும் போதும், ஆக்கிர மிப்பு நிகழ்த்தப்படும் போதும் இந்தியா நடுநிலையில் இருக் காது, அதனால் இருக்கவும் முடியாது என்று நேரு கூறினர்.

நேரு பயனுள்ள நடுநிலைத் தன்மையை காலனி ஆதிக் கத்திற்கு எதிரான போராட்டத்துடன் தொடர்ந்து இணைத் தார். அதனுடைய நடைமுறைத் தன்மையை கீழ்க் கண்ட விதத்தில் குறிப்பிட்டார். ''ஏகாதிபத்தியம் அல்லது காலனி யாதிக்கம் முற்போக்கான சமுதாய சக்திகளை நசுக்கியது. தொடர்ந்து நசுக்கவும் செய்கிறது. சமுதாய, பொருளாதார வாழ்வில் அது தன்னுடைய நிலையை பாதுகாப்பதில் விருப்ப முடையதாய் தவிர்க்க முடியாமல் சலுகை பெற்ற வர்க்கங் களுடன் அல்லது சலுகை பெற்ற வகுப்புகளுடன் உடன் பாட்டில் இறங்குகின்றது. சுதந்திரம் பெற்ற பின்பும் கூட ஒரு நாடு பொருளாதாரத்தில் பிற நாடுகளைச் சார்ந்து இருக்கும் நிலை ஏற்படலாம்''* என்று நேரு எழுதினர். ஏகாதி பத்திய நாடுகளைப் பொருளாதாரத்தில் சார்ந்திருப்பதைப் பற்றிய நேருவின் எச்சரிக்கை இந்தியாவிற்கும் விடுதலை அடையும் பிற நாடுகளுக்கும் இன்று வரையும் முக்கியமான தாக உள்ளது.

ஆசிய நாடுகளுக்கிடையேயான சமாதானச் சகவாழ் வுக்கென முன்வைக்கப்பட்ட ஐந்து அம்சக் கொள்கைகளை (பஞ்சசீலக் கொள்கைகளை) முன்வைத்தவர்களில் நேருவும் ஒருவர். அவர் விடுதலை அடையும் ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் ஏகாதிபத்தியம், புதுக் காலனி ஆதிக்கம் மற்றும் நிறவெறிக்கு எதிராகவும், அமைதி, சுதந்திரம் மற்றும் சமூகப்-பொருளா தார முன்னேற்றத்திற்கு ஆதரவாகவும் ஒன்றிணையும் நிகழ்வுப் போக்கின் முக்கியமான கட்டமாக விளங்கிய வரலாற்றுப் புகழ் பெற்ற பான்துங் மாநாட்டை (1955ம் ஆண்டு) கூட்ட முன்முயற்சி எடுத்தவர்களில் ஒருவராக விளங்கினர்.

சர்வதேச அரங்கில் எல்லா முற்போக்கு சக்திகளின் ஒற்றுமைக்கும் ஐக்கியத்திற்கும் இடைவிடாமல் பாடுபட்

---

* J. Nehru. *Congressmen's Primer for Socialism*, p. 196.

டதே ஜவகர்லால் நேருவின் மாபெரும் வரலாற்றுப் பணியாக விளங்குகிறது. இது 1927ம் ஆண்டில் பிரஸ்ஸெல்சில் நடைபெற்ற ஒடுக்கப்பட்ட மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புக் காங்கிரசில் தீவிரமாகப் பங்கு கொள்ள வைத்தது. ''ஒடுக்கப்பட்ட மக்களின் ஏதாவதொரு ஒன்றிணைந்த செயல்பாட்டிற்கும் மற்றும் இந்த மக்களுடன் தொழிலாளர் இயக்கத்தின், இடதுசாரி வட்டங்களின் ஒன்றிணைந்த செயல்பாட்டிற்குமான அவசியத்தைப் பற்றியக் கருத்துக்கள் மிகுந்த பிரசித்தி பெற்றவையாக இருந்தன. சுதந்திரத்திற்கான போராட்டம் பொதுவான விரோதிகளுக்கு எதிரான பொதுவான போராட்டம் என்பது மேன் மேலும் தெளிவானது. அந்தப் பொதுவான விரோதி ஏகாதிபத்தியமே என்பதும் இந்தக் குறிக்கோளை அடைய செயல் திட்டத்தை ஒன்ருக இணைந்து தயாரிப்பதும் சாத்தியக் கூறுகளைச் சார்ந்து ஒன்றிணைந்த செய்கைகளில் முன்கூட்டியே ஈடுபடுவதும் உசிதமானது என்பதும்கூட மேலும் மேலும் தெளிவானது''*. இது தேசிய விடுதலைப் போராட்டங்களை உலகம் முழுவதிலுமான புரட்சி இயக்கங்களுடன், குறிப்பாக தொழிலாளர் இயக்கங்களுடன் ஐக்கியப்படுத்துவதை அங்கீகரிப்பதாக அமைந்தது. நேருவின் புரட்சிகரத் தேசியவாதம், பாட்டாளி வர்க்கப் புரட்சியின் தலைவரான லெனின் பிரகடனப்படுத்திய ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் பல சக்திகளை ஒன்றிணைப்பது, பரந்த அளவில் ஒத்துழைப்பது ஆகியவற்றின்மீது அமைந்ததாக இருந்தது. ''பாசிஸத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிரான போராட்டத்தில் உலகம் முழுமையிலும் உள்ள முற்போக்குச் சக்திகளுடன் சரிசமமான நிலையை இந்தியாவில் நாங்கள் வகிக்கிறோம்... மேற்கத்திய நாடுகளில் சோஷலிசமும், கீழை நாடுகளிலும் பிற சார்பு நாடுகளிலும் புத்தெழுச்சி பெற்று வரும் தேசியவாதமும், பாசிஸம் மற்றும் ஏகாதிபத்தியத்தின் கூட்டிற்கு எதிராகப் போராடுகின்றன''** என்று கூறினர் ஜவகர்லால் நேரு.

இந்தக் கருத்து, சோவியத் யூனியனுடனை பரஸ்பர கருத்து ஒற்றுமையை பயனுள்ள ஒன்ருக நேரு கருதியதன்

* ஜவகர்லால் நேரு. சுயசரிதை, பக்கம் 180. (ருஷ்ய மொழியில்.)

** J. Nehru. *The First Sixty Years*. Vol. I, *The John Day Company*, New York, 1965, p. 427.

மூலம் தெளிவாகிறது. இந்திய-சோவியத் ஒத்துழைப்பு ஏற்படவும், அது தொடர்ந்து வெற்றிகரமாக வளர்வதற்கும் நேருவின் அரசியல் பாதை வழிவகுத்தது. சோவியத் யூனியனிற்கும் இந்தியாவிற்கும் இடையேயான நேச உறவுகள், 1973ம் ஆண்டு லியானீத் இலியீச் பிரெஷ்னெவ் குறிப்பிட்டது போல, ''சோஷலிச உலகம் தேசிய விடுதலை இயக்கத்தால் பிறந்த நாடுகளுடன் கொண்டுள்ள மாபெரும் ஐக்கியத்திற்கு எடுத்துக் காட்டாக நெடுங்காலமாக உள்ளன''*. சர்வதேச பாதுகாப்பு, அமைதிக்கான போராட்டம் ஆகிய பொது நலன்களால் ஒன்றிணைந்த வேறுபட்ட சமூக-பொருளாதார அமைப்புகளைக் கொண்ட அரசாங்கங்களுக்கிடையேயான பயனுள்ள ஒத்துழைப்பிற்கும் சமாதானச் சகவாழ்விற்கும் இந்த உறவுகள் உதாரணமாக திகழ்கின்றன.

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகான காலகட்டத்தில் சோவியத்-இந்திய உறவுகளின் அனுகூலமான வளர்ச்சி, 1971ம் ஆண்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட சமாதானம், நட்பு மற்றும் ஒத்துழைப்பு பற்றிய சோவியத்-இந்திய உடன்படிக்கையில் வெளியானது. தொடர்ந்து வந்த வருடங்களில் சோவியத் யூனியனும் இந்தியாவும் உயர்மட்ட பிரதிநிதிக் குழுக்களை பரஸ்பரம் பரிமாறிக் கொண்டதானது இரு புறங்களிலுமான நட்புறவுகளின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தன. அவ்வாறே சர்வதேச ஆயுதக் குறைப்பு, சமாதானம், ஆசியாவிலும் மற்றும் உலகம் முழுமையிலும் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்தவும் செய்தது. சோவியத் யூனியனிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான உறவுகளின் அடிப்படைக் கோட்பாடுகளை வளர்ப்பதாகவும், இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பின் தலையாயப் போக்கை நிர்ணயிப்பதாகவும் அமைந்த, இந்தப் பிரதிநிதிக் குழுக்களின் பரஸ்பர விஜயங்களின் போது ஏற்றுக் கொள்ளப்பட்ட பத்திரங்கள் இந்த இரு நாடுகளிலும் பலத்த வரவேற்பைப் பெற்றதுடன் உலக மக்களின் உயர்ந்த மதிப்பீட்டையும் பெற்றன.

---

* லி. இ. பிரெஷ்னெவ். 1937ம் வருடம் நவம்பர் 27ம் தேதி இந்திய-சோவியத் நட்புறவுக் கூட்டத்தில் டெல்லியில் ஆற்றிய சொற்பொழிவு. லெனினியப் பாதையில், *மாஸ்கோ, 1974, தொகுதி 4, பக்கம் 360. (ருஷ்ய மொழியில்.)*

* * *

நேருவின் கருத்துக்களும், வழி முறைகளும் தொடர்ந்து நடைமுறையில் உள்ளன. ஆனால் எந்த அரசியல் நிலையும் காலத்தின் தேவைக்குப் பதிலளிக்காவிடில் தன்னுடைய மதிப்பை இழந்து விடும்.

காலத்தின் தேவைகளைத் துல்லியமாக உணரும் திறமை நேருவிடம் நிறைந்திருந்தது. அவருடைய பணிகளும் உலகக் கண்ணோட்டமும் தொடர்ந்த வளர்ந்து மாறி வந்தன. நேருவின் மரணத்திற்குப் பின் இந்தியாவின் வாழ்க்கையில் பல மாறுதல்கள் நிகழ்ந்து விட்டன. உழைப்பாளி மக்களின் அரசியல் உணர்வும் சமூகச் செயற்பாடும் வளர்கின்றன. ஜனநாயகச் சக்திகள் பக்குவம் அடைகின்றன. இத்தகைய நிலைமைகளில் முற்போக்குக் காரணிகளாக நிலைத்து நிற்பதற்கு நேருவின் வழிமுறைகள் வளரவும் விரிவுபடுத்தப் படவும் வேண்டும்.

இந்திய சமுதாயத்தின் வளர்ச்சி எத்திசையில் செல்கிறது என்பதை நேரு புரிந்து கொண்டார். சீர்திருத்த நடைமுறை வருடங்கள் அவருடைய உலகக் கண்ணோட்டத்தின்மீது மிகுந்த தாக்கம் செலுத்தினாலும் அவர் தன்னுடைய புரட்சிகர கருத்துக்களையோ, தன்னுடைய அரசியலை மூன்றாம் இடத்திலிருந்து பார்த்துத் தெளிவாக மதிப்பிடும் திறனையோ இழந்து விடவில்லை. ஜவகர்லால் நேரு உண்மையான சோஷலிசம் என்றால் என்னவென்று தெளிவாகப் புரிந்து கொண்டார். அதனாலேயே ''சோஷலிச மாதிரியில் அமைந்த சமுதாயத்தைப்'' பற்றிய கோட்பாட்டின் நிபந்தனைக்குட்பட்ட சார்புநிலைத் தன்மையை அவர் நன்கு உணர்ந்திருந்தார். இந்தக் கோட்பாட்டை உறுதிப்படுத்தவும் தொடர்ந்து வளப்படுத்தவும் அவர் காட்டிய ஆர்வம் தற்செயலானது அல்ல. குறிப்பாக புவனேஸ்வரில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரசின் மாநாட்டில் இது வெளியானது. சமூக அரசியலின் முடிவுகள் மக்களைத் திருப்திப் படுத்தவில்லை என்பதை அவர் உணர்ந்தார். சொல்லப் போனால் நேருவே அவற்றினால் திருப்தியடையவில்லை.

நேரு 20—30வது வருடங்களில் ஆதரித்துப் பேசிய புரட்சி நிலைகளை, எந்தக் கருத்தை அவர் என்றுமே மறுக்கவில்லையோ அதே புரட்சி நிலைகளை மறுபடியும் கணக்கில்

கொள்ள வேண்டியதன் தேவையைக் காலம் வற்புறுத்து கின்றது. இதன் மூலம் மட்டுமே அவருடைய அகநிலேவாதச் சோஷலிசத்தை உண்மையான சாரத்தால் நிறைவுபடுத்தவும், மேலும் வெறும் பிரச்சார, கோஷ நிலேயிலிருந்து மக்கள் செயல்பாட்டுத் திட்டமாக அதை மாற்றவும் முடியும்.

நேருவின் மரணத்திற்குப் பின் முதலாளித்துவ சக்திகள் ''நேருவின் வழியில்'' செல்வதாகக் கூறிக் கொண்டு, அவரு டைய பொது ஜனநாயக சீர்திருத்தங்களின் செயல்பாட் டைக் கட்டுப்படுத்தவும், அவருடைய வழியின் மக்களே நோக்கிய தன்மையைக் கட்டுப்படுத்தவும் செய்தன. மேலும் வர்க்கச் சுயலாபத்தையும், மேற்குடி வர்க்கக் குறுகிய கண் ணேட்டத்தையும் வளர்த்தன. உழைப்பாளிகளின் தீவிரமான வர்க்கப் போராட்டங்கள் அதிகரித்தன. தேசிய மூலதனத்தின் வலதுசாரி வட்டங்களோ, நகரங்களில் உள்ள பெரிய முதலாளி களுக்கும் கிராமங்களில் உள்ள குலாக்குகள், நிலச்சுவான் தார்—முதலாளிகளுக்கு அனுகூலமான பூர்ஷ்வா அரசியலேத் தொடர்ந்து நடத்துவதில் தமக்குள்ள நாட்டத்தை மேன் மேலும் வெளிப்படுத்தினர். இந்திய ஏகபோக முதலாளிகள் தங்களுடைய சுதந்திரத்திற்கும் தடங்கலற்ற வளர்ச்சிக்கும், நேருவின் சோஷலிசக் இலட்சியங்களும் நாட்டின் பொருளா தாரத்தை மையப்படுத்தும் திட்டம் மற்றும் வலிமை வாய்ந்த அரசுத் துறை கோட்பாடுகளும் அச்சுறுத்துகின்றன என்பதால் ''நேருவின் வழியை'' மறுக்கத் தலேப்பட்டனர். இந்திய தேசிய காங்கிரஸ் தன்னுடைய செயல் திட்டங்களில் சோஷ லிச அம்சங்களே இணேக்க மறந்ததைத் தொடர்ந்து ஜனநாயக சக்திகள் மேன்மேலும் தீவிரமாக விமர்சனம் செய்தன. இந்த விமர்சனம், ஏற்கெனவே ''சோஷலிச மாதிரியில் அமைந்த சமுதாயம்'' நிறைவேருதது என்பதை உணர்ந்து கொண்ட, ஏழைகள் மேலும் மேலும் ஏழைகளாகவும், பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகவும் ஆகிக் கொண்டிருக்கிருர்கள் என்பதைப் புரிந்து கொண்ட மக்களுக்கிடையே ஆமோதிப் பைப் பெற்றது.

1967ம் வருடம் நான்காவது அனேத்திந்தியத் தேர்தல் கள் இந்தியாவின் அரசியல் வளர்ச்சியில் முக்கியமான திருப்பு முனேயாக அமைந்தன. மத்திய அரசாங்கத்தில் காங்கிரஸ் பலவீனமடைந்ததும் ஏழு மாநிலங்களில் காங்கிரஸ் அல்லாத கட்சிகள் ஆட்சிக்கு வந்ததும் காங்கிரசின் ஆதிக்க அமைப்பின்

மீது பலத்த இடியாக விழுந்தது. மேலும் நாட்டில் உருவாகி யிருந்த கட்சி-அரசியல் அமைப்பில் ஏற்பட்ட கணிசமான மாறுதலேயும் இது குறித்தது.

காங்கிரசுக்குப் பாதகமான தேர்தல் முடிவுகளும், இந்தத் துரதிருஷ்டத்தின் காரணங்களேயும் அவற்றைச் சரிப்படுத்து வதற்கான முக்கியமான நடவடிக்கைகளேயும் பற்றிக் கட்சித் தலேமைக்குள் நடந்த சண்டைகளும் இந்திய தேசிய காங்கிரசின் பிளவுக்கு அறிகுறியாக விளங்கின.

1971-72ம் வருடங்களில் நடைபெற்ற அனேத்திந்தியத் தேர்தல்களில் வலதுசாரி எதிர்கட்சிகளின் பெரிய கூட்டின் மீது காங்கிரஸ் அடைந்த வெற்றி, அதனேப் பழைய நிலேக்கு, அதாவது 50வது வருடங்களில், 60வது வருடங்களின் ஆரம் பத்திலிருந்த அரசியல் ஆதிக்க நிலேக்கு காங்கிரசை மறுபடி கொண்டு சென்றது. இருந்த போதிலும் அதன் ஆதிக்க நிலையைக் கெடுக்கக் கூடிய எதார்த்த மற்றும் அகநிலேக் காரணிகள் ஒன்று சேர்வது தீவிரமாகத் தொடர்ந்தது.

1975-77ம் வருடங்களின் அவசர நிலேயும், இந்திரா காங்கிரசின் அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்ட அனே வரும் நன்கறிந்த நடவடிக்கைகளும், குறிப்பாக, முற்போக் கான ''20 அம்ச திட்டத்தை'' நடைமுறைக்குக் கொணரு வதும் காலம் தவறியவையாக அமைந்தன. கீழ் மட்டத்தில் இருந்த மக்கள் காங்கிரசுக்கு எதிராகத் திரும்பினர். இந்திய தேசிய காங்கிரசால் அவசரகால நிலேயின் போது மேற்கொள் ளப்பட்ட நடவடிக்கைகள் பயனற்றவையாக முடிந்தன என்பதையும் அதனுடைய ஆட்சியின் போது நெருக்கடியை உண்டாக்கிய எதார்த்த மற்றும் அகநிலேக் காரணிகளேத் தூக்கி எறிவது அதனல் முடியாமல் போய்விட்டது என்பதை யுமே இது குறிக்கிறது. 1977ம் ஆண்டு தேர்தலில் இந்திய தேசிய காங்கிரஸ் கடுமையாகத் தோற்கடிக்கப்பட்டது.

காங்கிரசின் பலவீனத்திற்கும் அதனுடைய செல்வாக்கின் வீழ்ச்சிக்கும் 1977ம் வருட தேர்தல்களில் அது தோல்வி அடையும் நிலேக்கும் அதைக் கொணர்ந்த காரணங்கள் என் னென்ன? 70வது வருடங்களின் இரண்டாவது பாதியில் இந்தியாவில் இருந்த திட்டவட்டமான அரசியல் நிலேமைகளில் அவற்றைத் தேடாமல், சமூக நிகழ்வுமுறைகளில் தேடினல் அவை தெளிவாகும். வெகுஜன மக்களுக்குப் பெரும் துன்பத் தைக் கொடுத்த, முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையின்

முரண்பாடுகளும் கஷ்டங்களுமே இதற்குக் காரணம் ஆகும். அவற்றை எளிதாக்க இந்திய தேசிய காங்கிரஸ் முயன்றதும், தேசிய மூலதனம் பொதுத் தேசிய நலன்களின் எல்லேக்குள் மட்டுமே வளரவும், அதன் குறிக்கோள்களே அடக்கவும், மக்களின் வாழ்க்கை நிலேயை உயர்த்தவும், ஏகபோக முதலாளித்துவத்தின் வளர்ச்சியை நிதானப்படுத்தவும், இதன் மூலம் வர்க்க மோதல்களேச் சரி கட்டவும் இந்திய தேசிய காங்கிரஸ் எடுத்த முயற்சிகள் பலனற்றவையாக முடிந்தன. ஆளும் வர்க்கத்துக்குள் இருந்த முரண்பாடுகள்—அதன் வலதுசாரி, மத்திய, இடதுசாரி வட்டங்களுக்கிடையேயான முரண்பாடுகளும்—தேசிய முதலாளித்துவ வர்க்கத்திற்கும் வெகுஜன மக்களுக்கும் இடையிலான முரண்பாடுகளும் வளரத் தொடங்கின. உழைக்கும் வெகு ஜனங்களின் எதிர்ப்பு நடவடிக்கைகள் முன் எப்போதும் இல்லாத அளவிற்குப் பெருகின. இந்திய மக்களின் பொறுமை அளவைத் தாண்டிச் செல்வதை இந்திய தேசிய காங்கிரஸ் துல்லியமாக உணர்கிறது என்றும், தற்போது நாட்டில் உள்ள அமைப்பு மக்களின் நியாயமான அபிலாஷைகளே நிறைவேற்ருவிடில் அவர்கள் வேறு வழிமுறைகளேத் தேர்ந்தெடுக்கலாம் என்றும் இந்திரா காந்தி 1973ம் ஆண்டு கூறினுர். குறிப்பாக இதுதான் நடந்தது.

இருந்த போதிலும் காங்கிரசுக்கு அடுத்தபடியாக ஆட்சிக்கு வந்த ஜனதா கட்சியும் இந்திய மக்களேத் திருப்திபடுத்தும் மாறுதலாக இருக்கவில்லே. மக்களின் திருப்தியின்மையைக் கடைசிவரைப் பயன்படுத்த நாட்டம் கொண்டு காங்கிரசின் ஒழுங்கு முறைகளே விமர்சனம் செய்வதில் ஜனதா முனேந்திருந்தது. ஆனுல் பலனளிக்கக் கூடிய இயக்கமுள்ள செயல் திட்டத்தைத் தயாரிக்க அதனுல் முடியாமல் போய்விட்டது. முப்பது வருடகாலம் காங்கிரசால் பாதுகாக்க முடிந்த வாக்காளர்களின் நம்பிக்கையை, முப்பதே மாதங்களில் ஜனதா இழந்தது. 1980ம் வருடம் நடந்த பாராளுமன்றத் தேர்தல்களில் இந்திரா காந்தியின் தலேமையிலான இந்திய தேசிய காங்கிரஸ் பெரும் வெற்றியை அடைந்தது.

இந்திய அரசியல் நிலே வளர்ச்சியின் சாத்தியக் கூறுகளேப் பற்றிப் பலவித கருத்துகள் நிலவுகின்றன. ஆட்சி ஒருவரின் அதிகாரத்திற்குள் முழுமையாக ஒரு முனேப்படுத்தப்படும் போக்கு பலம் பெறுவதாக அரசியல் விமர்சகர்கள் ஆரூடம் கூறுகின்றனர். இதற்கு, உதாரணமாக, தேசிய மூலதனத்தின்

செல்வாக்கு மிக்க வட்டாரங்கள் முழு உறுதியுடன் முனேந்துள்ளன. இந்தக் குறிக்கோளே அடையும் எண்ணத்துடன் அரசியல் சட்டத்தை மாற்றச் சிபாரிசுகள் பலமுறை முன் வைக்கப்பட்டன. அவற்றைச் சுற்றி சமுதாய இயக்கங்களேத் தூண்டிவிடவும் முயற்சிகள் செய்யப்பட்டன. ஆட்சியைத் தன் பிடியிலேயே வைத்திருப்பதற்கு அத்தகைய முறையை நாடி காங்கிரஸ் செல்லுமா, அல்லது ஜவகர்லால் நேருவால் அஸ்திவாரமிடப்பட்ட ஜனநாயக முறைகளிலான நம்பிக் கையைப் பாதுகாக்குமா? பின்ஞல் கூறப்பட்டது நிகழ்ந்தால், நேருவின் முற்போக்குக் கருத்துக்களே, இந்திய உழைப்பாளி களின் பெரும் பகுதி மக்களின் நலன்களுக்கான சமூக முற் போக்கு அரசியலே நிறைவேற்றுவதன் மூலம் அக்கருத்துக் களுக்கு உண்மையான சாரத்தைக் கொடுத்து அவற்றை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழி இருக்காது என்றே தோன்றுகின்றது.

நேருவின் வழி முறைகளின் மீதான விமர்சன அணுகு முறையையும், அத்தகைய விமர்சனங்களின் வளர்ச்சியையும் ஏற்றுக் கொள்ளாமல் அவற்றை முற்போக்கு அரசியலே உருவாக்குவதற்குப் பயன்படுத்துவது என்பது முடியாது. இந்த விமர்சனம் அவருடைய நினேவுக்கோ அல்லது வழி முறைகளுக்கோ எதிரானவை அல்ல. அதற்கு மாருக, அவர் மீதுள்ள மதிப்பு, நேருவின் சித்தாந்த-அரசியல் கொள்கையின் மீதான நம்பிக்கை இதனுடைய சாதகமான வாய்ப்புகள் நீண்டகாலத்திற்கு நிலேத்து நிற்கும் என்ற உறுதி ஆகியவற் றின் விளேவால் எழுந்ததே ஆகும்.

* * *

ஜவகர்லால் நேரு அரசியல், சமுதாயப் பிரமுகராகவும், தத்துவஞானியாகவும் மற்றும் வரலாற்று அறிஞராகவும் ஆற்றிய பலதரப்பட்ட பணிகளில் சிறந்தவற்றிற்கு, அவரு டைய உலகக் கண்ணேட்டத்தின் மீதும் அரசியலின் மீதும் தாக்கம் செலுத்திய விஞ்ஞான சோஷலிசத் தத்துவத்தின் மீது அவருக்கு இருந்த ஆர்வத்திற்கும் சோஷலிசம், முன் னேற்றம் ஆகியவற்றின் பாலான அவருடைய விருப்பத்திற் கும்தான் அவர் கடமைப்பட்டுள்ளார் என்று ஆசிரியர் உறுதியாக நம்புகின்ருர்.

சோஷலிசத்தின் பாலான நேருவின் நாட்டமே முற்போக்கு சக்திகளுடன் கூட்டு சேரும் மற்றும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கங்களுடன் ஒன்றிணையும் கருத்தையும், அத்துடன் சோவியத் யூனியனுடன் ஒத்துழைக்கும் கருத்தையும் அவருக்குத் தந்தது.

சோஷலிச வழியிலான சமுதாயத்தை உருவாக்குவதை இந்திய தேசிய காங்கிரஸ் தன்னுடைய குறிக்கோளாக அறிவிக்கவும் சோஷலிசத்தின் மீதான நேருவின் நாட்டமே காரணம் ஆகும்.

நேருவின் சோஷலிசக் கருத்துக்கள் தெளிவற்றதாக இருந்த போதிலும், ஏகாதிபத்திய எதிர்ப்புத் தேசியவாதத்தின் குறுகிய தன்மையைப் புரிந்து கொண்டு, அதை சோஷலிசப் போக்கிற்குத் திருப்ப வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து கொண்ட முதல் தேசிய விடுதலை இயக்கத் தலைவர்களில் ஒருவராக அவர் விளங்கினர். இதில்தான் அவருடைய மாபெரும் வரலாற்றுப் பணி அடங்கியுள்ளது. சோவியத் மக்கள் இந்தியாவின் மாபெரும் புதல்வனை ஜவகர்லால் நேருவின்மீது இன்றுவரை காட்டும் பெரும் மதிப்புக்கும் இதுவே காரணமாகும்.

# சுகர்ணோ

சுகர்ணோ இந்தோனேசியத் தேசிய விடுதலை இயக்கத்தின் புகழ் பெற்ற தலைவர் ஆவார். இவர் 1901ம் வருடம் ஜூன் மாதம் 6ம் தேதி ஜாவா தீவிலுள்ள சுரபாயா என்ற நகரத்தில் ஒரு பள்ளி ஆசிரியரின் குடும்பத்தில் பிறந்தார். தன்னுடைய இளமைப் பருவத்திலேயே ''நெதர்லாந்து இந்தியா'' என்று ஹாலந்து காலனியாதிக்கவாதிகளால் அழைக்கப்பட்ட இந்தோனேசியாவின் தேசிய விடுதலைக்கான போராட்டக் கருத்துக்களைக் கொண்டிருந்தார்.

1926ம் ஆண்டு பான்துங் நகரத்தில் தொழிற் கலைக் கல்லூரியில், (காலனி ஆதிக்கவாதிகளால் நிறுவப்பட்ட முதல் கல்லூரியில்) படித்து, கட்டிடக் கலை என்ஜினியராகப் பட்டம் பெற்றார். கல்லூரியில் படிக்கும் போதே பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பிரபல சிந்தனையாளர்களின் படைப்புகளைப் படித்து, சரித்திரம் மற்றும் சமூக இயல் ஆகிய துறைகளிலும் பரந்த அறிவைப் பெற்றார்.

அதே வருடத்தில் ஹாலந்துக் காலனியாதிக்க ஆட்சியுடன் ஒத்துழைக்க மறுத்த ''பான்துங் ஆராய்ச்சியாளர் மன்றம்'' என்ற ஸ்தாபனத்தில் பங்கு கொண்டார். இந்த ஸ்தாபனத்தை அடிப் படையாகக் கொண்டு 1927ம் வருடம் ஜூலை 4ம் நாள் இந்தோனேசியத் தேசியக் கட்சி தோற்று விக்கப்பட்டது. சுகர்ணோ அதன் முதல் தலைவரானார். குறிப்பாக இந்தக் காலகட்டத்தில்தான் அவருடைய கருத்தோட்டங்களின் அடிப்படை அம்சங்கள் உருவாயின. சுகர்ணோவால் ''மார்க்கா

யேனிசம்'' என்று பெயரிடப்பட்ட இக்கருத்தோட்டங்கள் குட்டி முதலாளித்துவ சோஷலிசத்தின் பல கூறுகளைத் தன்னுள் கொண்டிருந்தன.

1929ம் ஆண்டு டிசம்பரில் காலனி ஆதிக்க எதிர்ப்புப் பணிகளில் பங்கு கொண்டதற்காக சுகர்ணோ ஹாலந்துக்காரர்களால் கைது செய்யப்பட்டார். நீதிமன்றத்தில் தமது சுதந்திரத்தை அடைவதற்காக இந்தோனேசியர்களுக்கு உள்ள உரிமையைப் பற்றி ஆற்றிய சொற்பொழிவில் காலனி ஆதிக்கவாதிகளின் குற்ற நடவடிக்கைகளை அம்பலப்படுத்தினார். சுகர்ணோவின் இந்தத் தெளிவான சொற்பொழிவு, அவருடைய புகழ் பல மடங்கு உயர்வதற்கும், அவர் இந்தோனேசியத் தேசிய விடுதலை இயக்கத்தின் புகழ் பெற்ற தலைவராக உயரவும் உதவியது. 1932ம் ஆண்டு சிறையிலிருந்து விடுதலை அடைந்த அவர், தன்னுடைய அரசியல் பணிகளைத் தொடர்ந்தார். ஆனால் ஒரு வருடத்திற்குள்ளாகவே மறுபடி கைது செய்யப்பட்டார். அதன் பின்னர் ஒன்பது வருடங்கள்—இரண்டாம் உலகப் போரின் போது 1942ம் ஆண்டு ஜப்பான் இந்தோனேசியாவில் நுழையும் வரை—சிறையிலும், நாடுகடத்தப்பட்டும் இருந்தார்.

இந்தோனேசியாவை ஜப்பான் ஆக்கிரமித்திருந்த வருடங்களில், வெளிப் பார்வைக்கு ராணுவ ஆட்சியாளர்களுடன் விசுவாச உறவைக் காட்டினார். நாடு மறுபடியும் ஹாலந்துக் காலனியாதிக்க நுகத்தடியின்கீழ் திரும்பாமலிருக்க ஜப்பானுடனான தொடர்பைப் பயன்படுத்திக் கொள்ளத் திட்டமிட்டார். அதே சமயம் தலைமறைவான தேசிய-தேசபக்த ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொண்டு உதவி புரிந்து கொண்டிருந்தார்.

1945ம் ஆண்டு மார்ச் மாதம், போரில் ஜப்பா

னத் தோல்வி நெருங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்து கொண்ட ஜப்பானிய நிர்வாகத்தால் தோற்றுவிக்கப்பட்ட ''சுதந்திர ஆயத்தக் கமிஷனுக்கு'' சுகர்ணோ தலைமை தாங்கினர். இந்தோனேசியத் தீவுகளில் நடந்த தீவிரமான தேசிய விடுதலை இயக்கத்தின் தாக்கத்தினுல் ஜப்பானிய நிர்வாகம் இந்த முடிவுக்கு வந்தது.

சோவியத் யூனியனும் பிற பாசிஸ எதிர்ப்பு நேச நாடுகளும் பாசிஸ்டு ஜெர்மனியையும் ஜப்பானிய ராணுவாதிக்கத்தையும் முறியடித்த சூழ்நிலைமைகளில் 1945ம் ஆண்டு ஆகஸ்ட் 17ம் நாள் இந்தோனேசிய மக்களின் சார்பாக நாடு சுதந்திரம் அடைந்ததாகச் சுகர்ணோ பிரகடனப்படுத்தினர். அப்போது தோற்றுவிக்கப்பட்ட இந்தோனேசியக் குடியரசின் முதல் ஜனதிபதியாக அவர் பதவியேற்ருர்.

1945-49ம் வருடங்களில் இந்தோனேசியாவில் தனது காலனியாட்சியை மறுபடி நிலைநாட்ட முயற்சித்த ஹாலந்துக் காலனியாதிக்கவாதிகளுக்கு எதிராக இந்தோனேசிய மக்கள் தீவிரமாகப் போரிட்டனர். 1948ம் வருடம் டிசம்பரில் கைது செய்யப்பட்ட சுகர்ணோ 1949ம் வருடம் ஜூலையில் விடுதலை செய்யப்பட்டார். இந்தோனேசிய மக்கள் சுதந்திரத்திற்காகத் தீவிரமாகப் போராடி வந்ததாலும் உலக ஆதரவின் உதவியாலும், ஹாலந்துக்காரர்களைப் பேச்சுவார்த்தைகளுக்கு வரக் கட்டாயப்படுத்த இந்தோனேசிய அரசால் முடிந்தது. இந்தப் பேச்சுவார்த்தைகளின் முடிவில் 1949ம் வருடம் டிசம்பரில் இந்தோனேசியாவின் சுய உரிமை அங்கீகரிக்கப்பட்டது.

இந்தோனேசியக் குடியரசின் தலைமையில் இருந்து கொண்டு, நாட்டின் தீவிரமான சார்பற்ற வெளி விவகாரக் கொள்கையை உருவாக்குவதற்கு மிகுந்த

சேவை புரிந்தார். சுகர்ணோ பான்துங் நகரில் 1955ம் ஆண்டு நடந்த ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் மகாநாட்டைக் கூட்ட முன்முயற்சி எடுத்தவர்களில் ஒருவரும், கூட்டு சேரா இயக்கத்தைத் தோற்றுவித்தவர்களில் ஒருவரும் ஆவார்.

உள்நாட்டு நிலைமைகள் சீரழிந்த நிலைகளில் அரசாங்கத்தின் தலைவர் மற்றும் ராணுவத்தின் முதல் தலைவர் என்ற முறையில் 1957ம் ஆண்டு மார்ச் 14ம் தேதி நாட்டில் அவசர நிலையைப் பிரகடனப்படுத்தினார். இதையடுத்து ஆட்சியதிகாரம் முழுமையாக அவருக்குக்கீழ் வந்தது.

1957-59ம் வருடங்களில் முக்கியமான அரசியல் கட்சிகளின் ஒப்புதலுடன் சுகர்ணோ அரசாங்க அமைப்பில் வரிசையாகப் பல சீர்திருத்தங்களைச் செய்தார். நிர்வாக ஆட்சியின் பங்கையும் அதன் தலைவராகிய ஜனாதிபதியின் முன்னுரிமையையும் அதிகப்படுத்தினார். நாட்டில் நடைமுறையிலிருந்த எல்லா வகையான அரசியல் செயல்முறைகளும் அரசாங்கத்தின் அரசியல், சித்தாந்தம் ஆகியவற்றின் எல்லைக்குள் கட்டுப்படுத்தப்பட்டது இத்தகைய சீர்திருத்தத்தால் விளைந்த ஒன்றாகும்.

1950ம் ஆண்டுகளின் இரண்டாவது பகுதியில் இந்தோனேசிய அரசு சோவியத் யூனியனுடனும் பிற சோஷலிச நாடுகளுடனுமான உறவுகளை வளர்ப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டது. 1956, 1959, 1961, 1964ம் வருடங்களில் சுகர்ணோ சோவியத் யூனியனிற்கு விஜயம் செய்தார். ஹாலந்துக்காரர்கள் சட்டத்திற்குப் புறம்பாகத் தங்களின் ஆளுகைக்குள் வைத்திருந்த இந்தோனேசிய நிலப்பரப்பான மேற்கு இரியானை இந்தோனேசிய மக்கள் 1962ம் ஆண்டு சோவியத் யூனியனின் உதவியுடன் மீண்டும் பெற்றனர்.

1963ம் ஆண்டு அரசாங்க அதிகாரத்தின்மேல் மட்ட உறுப்பினர்கள்—இந்தோனேசியத் தற்காலிக மக்கள் ஆலோசனைக் காங்கிரசின் உறுப்பினர்கள்—''இந்தோனேசியப் புரட்சியின் மாபெரும் தலைவர்'' என்ற பட்டத்தைச் சுகர்ணோவிற்கு அளித்து அவரை ஆயுள் ஜனாதிபதியாக நியமித்தனர்.

சமூக-அரசியல் முரண்பாடுகளின் சீர்கேடும், பொருளாதார நெருக்கடி வளர்ந்ததும் அரசாங் கத்தில் 1965ம் வருடம் அக்டோபர் மாதம் ஆரம்பித்த தீவிரமான நெருக்கடியில் முடிந்தன. அதில் எதிர்க்கட்சிகள் செல்வாக்கு மிக்க ராணுவ வட்டங்களின் ஆதரவுடன் சுகர்ணோவிற்கு எதிராகப் பங்கு கொண்டன. 1966ம் வருடம் மார்ச் 11ம் நாள் தரைப்படையின் முதல் தலைவரான ஜெனரல் சுகர்த்தோவிடம் நாட்டின் நிர்வாக அதிகாரத்தைக் கொடுக்க வேண்டிய நிலைக்குச் சுகர்ணோ நிர்ப்பந் திக்கப்பட்டார். 1966ம் ஆண்டு ஜூலை 5ம் நாள் ஆயுள் ஜனாதிபதியாகச் சுகர்ணோவை நிர்ணயித்த தீர்மானத்தைக் காங்கிரஸ் மாற்றியது. 1967ம் வருடம் மார்ச் 12ம் தேதி அவருடைய எல்லா பட்டங்களையும் ரத்து செய்து, அரசாங்கத் தலைமை யின் அதிகாரத்தில் இருந்து அவரைப் பூரணமாக நீக்கியது.

1970ம் வருடம் ஜூன் 21ம் நாள் ஜாகர்த்தா நகரில் ஒரு ராணுவ மருத்துவமனையில் சுகர்ணோ கால மானார். ஜூன் 22ம் நாள் பிலித்தாரே நகரில் அரசாங்க மரியாதைகளுடன் அவர் அடக்கம் செய்யப்பட்டார். ஒன்பது வருடங்களுக்குப் பின் ஜூன் 21ம் நாள் பிலித்தாரேயில் ஜனாதிபதியின் சாசனத்தின்படி கட்டப்பட்ட சுகர்ணோ சமாதியின் திறப்பு விழா நடந்தது.

இந்தோனேசியக் குடியரசின் முதல் ஜனாதிபதியின் தனிச் சிறப்புகளைப் பற்றியும், அரசியல் சேவைகளைப் பற்றியும் ஜாகர்த்தாவின் வார சஞ்சிகை எழுதிய போது ''மீண்டும் அவரைப் பற்றிப் பேசுகிறோம்'' என்று தலைப்பில் குறிப்பிட்டது. கடந்த வருடங்களில் இந்தோனேசியச் சமுதாயத்தில் தமது மறைந்த தலைவரின்மீது பரந்த அளவில் காட்டப்படும் ஆர்வம், முதல் பார்வையில் எதிர்பாராத ஒன்றாகத் தோன்றலாம். 1965ம் ஆண்டின் வருத்தத்திற்குரிய சம்பவங்களுக்குப் பிறகு, அதைத் தொடர்ந்து அரசுத் தலைமையிலேற்பட்ட மாற்றத்தைக் கொணர்ந்த அரசியல் நெருக்கடிக்குப் பின்பு, சுகர்ணோவின் எதிரிகள் அவருடைய அரசியல் பாதையின் நற்பெயரைக் கெடுக்க எடுத்துக் கொண்ட பல வருட முயற்சிகளுக்குப் பின்பு, அவருடைய கருத்தோட்டங்களைப் பிரச்சாரம் செய்வதை நேரடியாகத் தடை செய்த பின்னரும் கூட—பத்து வருடங்களுக்கும் உள்ளாக அவருடைய அரசியல்-சித்தாந்தக் கருத்தோட்டங்கள் தீவிரமான ஆர்வத்திற்கு மட்டுமல்லாது பலத்த விவாதங்களுக்கும் உள்ளாகும் என்று ஊகிப்பது மிகவும் கடினமாக இருந்தது. இதற்கான காரணத்தைத் தெளிவாக்கிக் கொள்ள மூன்று கேள்விகளுக்குப் பதிலளித்தோமேயானால் போதுமானதாகும். முதலாவது—சுகர்ணோவின் கருத்தோட்டங்களின் சாரம் என்ன; இரண்டாவது—தற்கால இந்தோனேசியாவின் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் வளர்ச்சியின் எத்தகைய நிகழ்ச்சிப் போக்குகள் சம்பவங்கள், முழுமையாக நிறைவேற்றப்படாத இந்தக் கோட்பாடுகளை இன்று கையாள நிர்ப்பந்திக்கின்றன; கடைசியாக, சுகர்ணோ தன்னுடைய வாழ்நாளை அர்ப்பணித்த அந்தக் கோட்பாடுகளை, சரித்திரத்தின் கடுமையான திருப்பு முனைகளிலும், சிக்கல் நிறைந்த அரசியல் உடன்படிக்கைகளிலும், சமரசங்களிலும் அவர் விட்டுக் கொடுக்காத அந்தக்

கோட்பாடுகளை அவரால் ஏன் நிறைவேற்ற முடியாமல் போனது? என்பவையே அக்கேள்விகளாகும்.

சுகர்ணோ ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் நடைபெற்ற தேசிய-விடுதலை இயக்கத்தின் முதல் கட்டத்தில், போருக்குப் பிந்திய காலகட்ட வளர்ச்சியில் செயல்பட்ட மாபெரும் தலைவர்களில் ஒருவர். லியோ தல்ஸ்தோயின் உலகக் கண்ணோட்டத்தின் முரண்பாடு நிறைந்த உள்ளடக்கத்தை ஆராயும்போது வி. இ. லெனின் கீழ்க்கண்டவாறு எழுதினார்: ''தல்ஸ்தோயின் கருத்தோட்டங்களில் இருக்கும் இந்த முரண்பாடுகள் தனிப்பட்ட அவருடைய சொந்தக் கருத்தோட்டங்களுக்கு மட்டுமே உரித்தான முரண்பாடுகள் அல்ல; மாறாக, சீர்திருத்தத்துக்குப் பிற்பட்ட, ஆனால் புரட்சிக்கு முற்பட்ட சகாப்தத்தில் ருஷ்ய சமுதாயத்தின் பற்பல வர்க்கங்களின், பற்பல பிரிவுகளின் மனப்பாங்கை நிர்ணயித்த மிகமிகச் சிக்கலான, முரண்பாடான நிலைமைகள், சமூகச் சக்திகளது செல்வாக்குகள், வரலாற்று மரபுகள் ஆகியவற்றின் பிரதிபலிப்புகளாகும்''*. சுகர்ணோவின் உலகக் கண்ணோட்டத்தையும் ஆராய இந்த ஆராய்ச்சி முறை மிகவும் பொருத்தமானது ஆகும்.

தேசியத் தொழில்களின் வளர்ச்சிக்கும் உருவாக்கத்திற்கும் தேவையான சூழ்நிலைகள் காலனி ஆதிக்கக் காலகட்டத்தில் இந்தோனேசியாவில் பிற காலனி நாடுகளுடனான ஒப்பீட்டில் கூட அவற்றை விட மிகவும் மோசமானவையாக இருந்தன. ஹாலந்து ஏகாதிபத்தியத்தால் கையாளப்பட்ட கொடுமையான சுரண்டலே இதற்குக் காரணமாகும். இதன் முடிவாக தேசியப் பூர்ஷ்வா அதீதமாகப் பலவீனப்பட்டது மட்டுமல்லாமல் (இன்று வரையும் தேசியப் பூர்ஷ்வா இந்த நிலையைக் கடக்கவில்லை) இந்தோனேசியச் சமுதாயத்தில் தங்களின் பல்வேறு மட்டங்களுக்கிடையில் பரம்பரை வழக்கங்களிலான உறுதியான பிடிப்பு மிக்க தன்மை கொண்ட வர்க்கங்களுக்கிடையில் கிட்டத்தட்ட வித்தியாசமே இல்லாத நிலையும் ஏற்பட்டது. இருபதாம் நூற்றாண்டின் இருபதாவது வருடங்களின் கடைசியிலும் முப்பதாவது வருடங்களின் ஆரம்பத்திலும் காலனியாதிக்கத்திற்கு எதிரான தேசிய விடுதலை

---

* வி. இ. லெனின். **சோஷலிஸ சித்தாந்தமும் கலாசாரமும் குறித்து**, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1974, ப. 99.

இயக்கம் இந்தோனேசியாவில் மேலோங்கியது. தேசியச் சுதந்திரக் கருத்துக்கள் எல்லா வர்க்கங்களேயும், சமுதாய வகுப்புகளேயும் ஒன்றிணேத்தன. எல்லாவகையான அரசியல் செயற்பாடுகளின் ஒரே குறிக்கோளாக இக்கருத்துக்கள் விளங்கின.

தேசிய விடுதலேக்கான போராட்ட காலத்தில் உருவான, விடுதலே அடையும் நாடுகளின் அரசியல் தலேவர்களில் சுகர்ணுேவும் ஒருவர். சமுதாய வாழ்க்கை மற்றும் அரசியல் சாரத்தின் முதல் அடிப்படை என தேசிய விடுதலேயை இத் தலேவர்கள் கருதினர். பிற எல்லா சித்தாந்தங்களேயும் அவர் கள் தேசியவாதம் என்ற முப்பட்டகக் கண்ணுடியின் மூலமே ஆராய்கிருர்கள். மேலும் தேசியவாதத்திலிருந்தே தங்களுடைய சொந்த சமூகக் கோட்பாடுகளேயும் அவர்கள் உருவாக்குகின் றனர். அவர்களின் தொடர்ந்த கருத்துப் பரிணுமம், அவர் களுடைய நாட்டின் விடுதலே இயக்கத்தின் வளர்ச்சியை மட்டுமே சார்ந்திராமல், போராட்டத்தின் ஒவ்வொரு கட்டத் திலும் சமுதாய நிலேமைகளேச் சரியாகப் புரிந்து கொள்ளும் அவர்களின் சொந்தத் திறமையையும் சமுதாய வளர்ச்சியின் தொடர்ந்து மாறிக் கொண்டே இருக்கும் தேவைகளேப் புரிந்து கொள்ளும் மற்றும் வெகு ஜனங்களின் உண்மையான நலன்களேக் காணும் அவர்களின் திறமையையும் சார்ந்துள் ளது.

சுகர்ணுேவின் சமூகக் கருத்தோட்டங்கள் காலனி ஆதிக்க எதிர்ப்புத் தன்மையை மட்டுமல்லாமல் முதலாளித்துவ எதிர்ப் புத் தன்மையையும் கொண்டிருந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக சுகர்ணுேவின் இத்தன்மைகள் மனிதத் தன்மையற்ற முதலாளித்துவ உறவுகளின் முக்கியப் பிரதிநிதிகளான ஹாலந் துக் காலனியாதிக்கவாதிகளுக்கு எதிரானவையாக இருந்தது. ''கட்டோங்-ரயோங்,'' அதாவது ஒத்துழைப்பு-பரஸ்பர உதவி என்ற கோட்பாட்டைக் கொண்டிருந்த இந்தோனேசியக் கிராமச் சமுதாயம் சுகர்ணுேவின் இலட்சிய சமூக அமைப் பாக விளங்கியது. இந்தோனேசியச் சமுதாய வளர்ச்சியைப் பற்றிய தன்னுடைய கருத்துக்களே ''இந்தோனேசியச் சோஷ லிசம்'' என்ற கோட்பாடாக உருவாக்கி, அதற்கு மார்க் காயேனிசம் என்று பெயரிட்டார். இந்த வகைத் தத்துவ ஆராய்ச்சியில் தான் செல்லக் காரணமாக இருந்த, ஒரு சாதாரணமான ஜாவா விவசாயியான மார்க்காயேனின்

பெயரையேத் தன்னுடைய கோட்பாட்டிற்குத் தந்ததாகச் சுகர்ணே குறிப்பிட்டார். 1960ம் வருடங்களில் இந்தக் கோட்பாட்டைப் பற்றிக் கீழ்க் கண்டவாறு கூறினர்: ''மார்க்காயேன்—வரையறுக்கப்பட்ட உற்பத்திச் சாதனங்களைக் கொண்டுள்ள, வரையறுக்கப்பட்ட தனி உடைமையுடன் தனக்கு எவ்வளவு தேவையோ அவ்வளவு மட்டுமே ஆரம்ப நிலைச் சாதனங்களைக் கொண்டுள்ள சாதாரணமான மனிதன். தங்களுக்காக மட்டுமே உழைக்கும் பல கோடி ஏழை மக்களைத் தன்னுள் கொண்டது நமது நாடு. எவரும் பிறருக்காக உழைப்பதில்லை. மனிதனை மனிதன் சுரண்டுவதும் இல்லை. மார்க்காயேனிசம்—நடைமுறையில் இது இந்தோனேசியச் சோஷலிசம்... இந்தோனேசியாவின் சுய வாழ்க்கைக்குத் திரும்புதலே இதில் அடங்கியுள்ளது''*.

மனிதன் மனிதனல் சுரண்டப்படுவதை ஒழிப்பதுதான் தேசியச் சுய வாழ்க்கைக்குத் திரும்புவது ஆகும் எனக் கூறியிருப்பது முக்கியமாகக் கவனிக்கத்தக்க ஒன்ருகும். சுகர்ணேவின் கருத்துப்படி, வர்க்கச் சுரண்டலானது இந்தோனேசியச் சமுதாய வளர்ச்சியில் விளைந்தது அல்ல. அது வெளியிலிருந்து கொணரப்பட்டது. அதனல் தேசிய சுய உணர்வு வளர்ந்தால் எல்லாச் சமூகப் பிரச்சினைகளும் தீர்ந்து விடும்.

ஆனல் சுகர்ணேவின் கருத்தோட்டங்களாலும் 1917ம் வருடம் ருஷ்யாவில் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் வெற்றியுடன் ஆரம்பித்த புதிய யுகத்தின் தாக்கத்திலிருந்து உலகம் முழுவதிலும் வளர்ந்து கொண்டிருந்த மார்க்சிய-லெனினியக் கருத்துக்களின் செல்வாக்கிலிருந்து தப்பிக்க இயலவில்லை. சுகர்ணேவின் முதலாளித்துவ எதிர்ப்பு, மற்றும் சமத்துவக் கண்ணேட்டங்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் அவருடன் இருந்த பெரும்பான்மையினரின் கண்ணேட்டங்களிலிருந்து தங்களுடைய மிகுந்த தீவிரவாதத்தால் வேறுபடுகின்றன. உதாரணமாக, இந்தோனேசியச் சமுதாயத்தில் மூலதனத்தைக் குவிப்பதற்கான எண்ணத்தைத் தான் எதிர்ப்பதைப் பற்றி 1933ம் வருடம் எழுதும் போது** அவர், ''இந்தோனேசியப் பூர்ஷ்வாவை நோக்கி, இந்தோனேசிய

---

* Bung Karno. *Penjambung Lidah Rakjat Indonesia.* Ðjakarta, 1966, pp. 84-85.

** சுகர்ணே. இந்தோனேசியா குற்றம் சாட்டுகிறது. மாஸ்கோ, அயல் மொழி இலக்கியப் பதிப்பகம், 1956, பக்கம் 211. (ருஷ்ய மொழியில்.)

முதலாளித்துவத்தை நோக்கிப் போகும் பாதையில்'' இந்தோனேசியா செல்லுமேயானல் இந்தோனேசிய மக்களின் தலைவிதி துக்ககரமாக முடியும்[*] என்று எச்சரிக்கிருர். சுகர்ணோவின் சொற்பொழிவுகளிலும், கட்டுரைகளிலும் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரின் நூல்களிலிருந்தும் சோவியத் யூனியனின் அனுபவத்திலிருந்துமான மேற்கோள்களைக் காணலாம். இந்தோனேசியப் பாட்டாளிகளின் மற்றும் அவர்களின் கட்சியான கம்யூனிஸ்டுக் கட்சியின் வளர்ந்து வந்த அரசியல் பங்கையும் சுகர்ணோ கவனித்தார். 1920ம் வருடம் தோற்றுவிக்கப்பட்ட இந்தோனேசியக் கம்யூனிஸ்டுக் கட்சி 20வது வருடங்களின் மத்தியிலேயே, நாட்டின் விடுதலை இயக்கத்தின் தலையாயச் சக்தியாக வளர்ந்ததுடன் காலனியாதிக்கவாதிகளுக்கு எதிரான பொதுத் தேசிய எழுச்சிக்குத் தலைமை தாங்கியது. குறிப்பாக, இந்த வருடங்களில்தான் நாட்டின் மூன்று அடிப்படை சித்தாந்த-அரசியல் போக்குகளை (தேசியவாத, மத [பெரும்பாலும் முஸ்லிம்], கம்யூனிஸ்டு ஆகிய போக்குகளை) மக்களின் தேசிய விடுதலைக்கான போராட்டத்தில் ஒன்றிணைக்க வேண்டியதன் அவசியத்தைத் தான் உணர்ந்ததாக சுகர்ணோ குறிப்பிடுகிருர். இதைத் தொடர்ந்து நாசகோம் (Nasakom) என்ற கோட்பாடு உருவானது. நாசகோம் என்பது தேசியவாதம் (nasionalis) மதம் (agama) மற்றும் கம்யூனிசம் (komunis) ஆகியவற்றிற்கான இந்தோனேசிய மொழியின் வார்த்தைகளின் முதல் எழுத்துக்களால் ஆனது. நிச்சயமாக, இந்தோனேசியாவின் ஜனத்தொகையில் 90 மக்கள் இஸ்லாமில் நம்பிக்கை உடையவர்களாக உள்ள நிலையில், மதம் ஒரு போக்காக மட்டுமே குறிப்பிட்டுள்ளதைப் போலவே—தேசியவாத, மத (முக்கியமாக இஸ்லாமிய) மற்றும் கம்யூனிஸ்டுப் போக்குகளில்—தேசியவாதம் முன்னிடத்தில் நிற்பது தற்செயலானது அல்ல. இதற்கும் காரணம் சுகர்ணோவும் அவருடைய ஆதரவாளர்களும் ஆவார்கள். அவர்கள்—பெரும்பான்மை முஸ்லிம்கள்—இந்தோனேசியாவில் ஒரு இஸ்லாமிய அரசைத் தோற்றுவிப்பதை எப்போதுமே விரும்பவில்லை. சுதந்திரம் அடைவதற்கு முன்பும், அடைந்த பின்னரும் கூட இஸ்லாமிய

---

[*] அதே நூல், பக்கம் 239.

அரசைத் தோற்றுவிக்கும் கருத்திற்கு ஆதரவான முயற்சிகளை அவர்கள் கடுமையாக எதிர்த்தனர். ஆனுல் சுகர்ணோ தேசிய விடுதலை இயக்கத்தின் பல தலைவர்களுக்கிடையில் அவர்களுக்கும் மேலாக உயர்ந்ததற்குக் காரணம், தொழிலாளர் இயக்கத்தின் திறமையையும், தொழிலாளர்கள் தங்களுக்கென ஒரு சித்தாந்தத்தையும் ஒரு அரசியல் கட்சியையும் கொண்டிருப்பதற்கு அவர்களுக்கு உள்ள வரலாற்று உரிமையையும் அவர் அங்கீகரித்ததே ஆகும். மொத்தமாக தேசிய இனத்தின் பால் பாட்டாளியின் கடமையை அவர் புரிந்து கொண்டார் என்று இதற்குப் பொருளாகாது. ஆனுல் பொதுத் தேசிய-நரோதிய அமைப்பைப் பற்றிய அவருடைய பிற கருத்தோட்டங்களுடன் ஒப்பிடுகையில் குறிப்பாக இதில் தான் அவர் சந்தேகமில்லாமல் ஒரு படி முன் செல்கிறுர். இந்தச் சொல்லைப் பயன்படுத்த ஆதாரமுண்டு என்று நாங்கள் கருதுகிறோம் (ஆனுல் மார்க்காயேனிசம் இந்தோனேசியாவின் மார்க்சியம் என்று சுகர்ணோ கருதினுர்). ஏனெனில் சுகர்ணோவின் சித்தாந்தம் வி. இ. லெனின் வெளிப்படுத்திய நரோதியத்தின் அடிப்படைகளைத் தன்மையாகக் கொண்டது (கண்டிப்பாக, ருஷ்யா 19ம் நூற்றுண்டிலும், இந்தோனேசியா 20வது நூற்றுண்டின் மத்தியிலும் இருந்த நிலைமைகளின் அவசியமான வித்தியாசங்களுடன்தான் இதைக் கருத்தில் கொள்கிறோம்). ''நரோதியம்* என்பது பின்வரும் மூன்று அம்சங்கள் அடங்கிய கருத்துக்களின் ஓர் அமைப்பு என்று பொருள் கொள்கிறோம்: 1) ருஷ்யாவில் முதலாளித்துவம் வீழ்ச்சியடைவதை, பின்னடைவதை அங்கீகரிப்பது. எனவே முதலாளித்துவம் காலகாலமான அடித்தளங்களை தகர்க்க முயல்வதை ''தடுத்து'', ''நிறுத்தி'', ''முற்றுப்புள்ளி வைப்பதற்கான'' ஆர்வம், விருப்பம் இது போன்ற பிற்போக்கான கூச்சல்கள். 2) பொதுவாக ருஷ்யப் பொருளாதார அமைப்பின், குறிப்பாக விவசாயி வர்க்கம் அதன் கிராமியக் குடிவாழ் கூட்டுகள், ஆர்ட்டல் இத்தியாதிகளின் தனிச்சிறப்பான தன்மையில் நம்பிக்கை. பல்வேறு சமுதாய வர்க்கங்கள் மற்றும் அவற்றின் மோதல்கள் சம்பந்தமாக நவீன விஞ்ஞானம் விரித்துரைத்துள்ள கருத்துருக்களை ருஷ்யப் பொருளாதார உறவுகளுக்குப் பிரயோகிக்க வேண்டுவது அவசியம்

* நரோதியம்: இப்புத்தகத்தின் 32 பக்கத்தைப் பார்க்க. — ப-ர்.

என்று கருதப்படவில்லை. விவசாயிகளின் கிராமக் குடிவாழ் கூட்டு, முதலாளித்துவத்தைவிட உயர்ந்தது, சிறந்தது என்று கருதப்படுகிறது; ''அடித்தளங்களை'' லட்சியமயமாக்கும் நாட்டம் இருக்கிறது. ஒவ்வொரு பண்ட உற்பத்தி மற்றும் முதலாளித்துவப் பொருளாதாரத்திலும் தனி இயல்பாக உள்ள முரண்பாடுகள் விவசாயிகளிடையிலும் நிலவுகின்றன என்பது மறுக்கப்படுகிறது அல்லது மறைக்கப்படுகிறது, இந்த முரண்பாடுகளுக்கும் முதலாளித்துவத் தொழிற்துறை மற்றும் முதலாளித்துவ விவசாயத்தின் மேலும் அதிக வளர்ச்சியடைந்த வடிவங்களுக்கும் இடையே நிலவும் எந்த ஒரு தொடர்பும் மறுக்கப்படுகிறது. *3)* ஒரு புறம் ''படிப்பாளிப் பகுதியினர்'' நாட்டின் சட்ட மற்றும் அரசியல் நிறுவனங்களுக்கு இடையிலும் மறு புறம் திட்டவட்டமான சமூக வர்க்கங்களின் பொருளாயத நலன்களுக்கு இடையிலுமான தொடர்பைப் புறக்கணிப்பது''*. (''நாம் கைவிடும் மரபுரிமை'' என்ற கட்டுரையிலிருந்து.) நரோதியமானது தேசியவாதத்துடன் ஏதோ ஒரு வகையில் நெருங்கிய தன்மையைக் கொண்டுள்ளது என்று ருஷ்ய நரோத்னிக்குகளைப் பற்றிக் கூறும்போது வி. இ. லெனின் குறிப்பிட்டார்**. இது காலனியாதிக்கவாதிகளால் பல வருடங்களாகச் சுரண்டப்பட்டும், இழிவுபடுத்தப்படும், கீழடைந்த நிலையில் இருந்த ஒரு நாட்டில் காலனியாதிக்க எதிர்ப்பு அடிப்படையின்மீது வளர்ந்த, தெளிவான காலனி ஆதிக்க எதிர்ப்புத் தன்மையைக் கொண்டிருந்த சுகர்ணோவின் தேசியவாதத்திற்கும் பொருந்தும். இதில்தான் தேசிய விடுதலைப் போராட்ட, ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்ட காலகட்டத்தில் சுகர்ணோவின் பணிகள் தங்களுக்குள் கொண்டிருந்த மாபெரும் முற்போக்கு உள்ளாற்றலின் மூல காரணங்களில் ஒன்று அடங்கியுள்ளது. ஆனால் ருஷ்ய நரோத்னிக்குகளைப் போலல்லாமல், இவர் இந்தோனேசியாவில் இருந்த இத்தகையவர்களில் முதலாவது தலைவராக இருக்கவில்லை. அவருக்கு முன்பே தமது சொந்தத் தளங்களிலிருந்து கொண்டு இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் முஸ்லிம்-தேசியவாத இயக்கமும், 1920ம்

---

* வி. இ. லெனின். தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி *1*, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, *1979*, பக்கங்கள் *160–161*.

** அதே நூல், பக்கம் *158*.

வருடங்களில் இந்தோனேசியக் கம்யூனிஸ்டுக் கட்சியும் இதைச் செய்தன. ஆனல் 1925-26ம் வருடங்களில் காலனியாதிக்க எதிர்ப்பு எழுச்சியை ஹாலந்துக்காரர்கள் முறியடித்த பின்பு 1945ம் வருடம் புரட்சி வரை கம்யூனிஸ்டுகள் தலைமறைவாக இருந்த படியால், வெகு ஜனங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் சாத்தியம் கம்யூனிஸ்டுகளுக்குக் குறைவாகவே இருந்தது. காலனியாதிக்கவாதிகளின் தொடர்ந்த கண் காணிப்பு இருந்த போதிலும் இத்தகைய சாத்தியம் சுகர்ணே வுக்குப் பரந்த அளவில் இருந்தது. அதனல் நீண்டகாலத் திற்கு குறிப்பாக சுகர்ணேவும் அவருடைய சார்பாளர்களுமே முதலாளித்துவத்தை விமர்சித்தனர் (பெரும்பாலும் அன்னிய ஆட்சியைப் பற்றிய விமர்சனமாகவே இது இருந்தது). சுகர்ணே வின் கருத்துக்கள் பரவவும் இது வழி செய்தது. கடைசியாக, அவருடைய கிட்டத்தட்ட எல்லாச் சொற்பொழிவுகளிலும் செயலாக்கங்களிலும் சிவப்புச் சாயத்துடன் இருந்த ஏகாதிபத் திய எதிர்ப்புத் தேசிய ஒற்றுமைக் கருத்துக்கள் தங்களுடைய நடைமுறை, எதார்த்தத் தன்மையை 1945ம் வருடத் தேசி யப் புரட்சி வரை மட்டுமில்லாமல், காலனியாளர்களை நாட் டைவிட்டு வெளியேற்றிய பின்பும் பல வருடங்களுக்குத் தொடர்ந்து தங்களுக்குள் கொண்டிருந்தன. நாடு விடுதலையை அடையும் தருணத்தில், காலனி நுகத்தடியைத் தூக்கி எறியக் கூடிய இந்தோனேசியாவின் சுதந்திரத்திற்கானப் போராட்டத் தில் எல்லா தேசியச் சக்திகளையும் ஒன்றிணைக்கக் கூடிய வகையில் ஒரு செயல் திட்டத்தை உருவாக்கவல்ல ஒரே தலைவராகச் சுகர்ணே விளங்கினர். அவரே இந்தோனேசிய அரசின் அதிகார பூர்வமான அடிப்படைச் சித்தாந்தமான பஞ்சசீலக் கொள்கையை உருவாக்குவதில் தலையாய பங்கை வகித்தார். இந்தக் கருத்துக்களின் அடிப்படையில்தான் இந் தோனேசியத் தேசியவாதம், சர்வதேசியவாதம் அல்லது மனிதாபிமானம், விவாதம் அல்லது ஜனநாயகம், சமூக நல்வாழ்வுக் கொள்கைகள், சமய சகிப்புடன் கூடிய மதத் தன்மை ஆகியவை அமைய வேண்டும் என்று 1945ம் வருடம் ஜூன் மாதம் முதல் தேதி ''சுதந்திர ஆயத்தக் கமிஷனில்'' சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார்.* பஞ்சசீலக் கொள் கைகளும், 1945ம் வருடம் ஆகஸ்ட் மாதம் ஏற்றுக் கொள்

* சுகர்ணே. இந்தோனேசியா குற்றம் சாட்டுகிறது, பக்கம் 269.

ளப்பட்ட, மேற்கூறப்பட்ட அவருடைய கருத்துக்களின்மீது அமைக்கப்பட்ட அரசியல் சட்ட அமைப்பும் பொதுவான தன்மைகளைக் கொண்டிருந்தன. அவற்றை நடைமுறையில் செயலாக்குவதும், சுதந்திர இந்தோனேசியா எந்தப் பாதையில் செல்லும் என்பதையும் அந்தப் பாதையின் சமூக-அரசியல் உள்ளடக்கங்களை எத்தகைய வர்க்கச் சக்திகள் நிர்ணயிக்கும் என்பதையுமே முற்றிலும் சார்ந்துள்ளன.

தற்போது நடைமுறையில் இருக்கும் 1945ம் வருட அரசியல் சட்ட அமைப்பு நிர்வாக ஆட்சியைக் கணிசமான அளவில் சட்ட சபைகளின் கண்காணிப்பில் வைத்து அவற்றிற்குப் பூரண அதிகாரத்தைக் கொடுக்கிறது. அரசாங்கத்தின் தலைவரான ஜனதிபதி, பிரதம மந்திரியாகவும், ராணுவத்தின் தலைவராகவும் ஒரே சமயத்தில் விளங்குகிருர். நாட்டின் தினசரி ஆட்சியிலும் சட்டமியற்றும் துறையிலும் அவர் பரந்த அதிகாரங்களை உடையவராக இருக்கின்ருர். சுதந்திர இந்தோனேசியக் குடியரசின் முதல் ஜனதிபதியைத் தேர்ந்தெடுக்கும் போது, அதற்கு நீண்ட விவாதங்கள் தேவைப்படவில்லை. சுதந்திரத்திற்கான போராட்டத்தில் இருபது ஆண்டுகளுக்கும் மேலாகப் பங்கு கொண்டு அதன் மூலம் அடைந்த பெரும் அரசியல் செல்வாக்கும், தேசியப் புரட்சியில் பங்கெடுத்துக் கொண்ட பல்வேறு சமூக-அரசியல் சக்திகள் ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்தோட்ட அமைப்பும் கொண்டிருந்த சுகர்ணேவுடன் இந்தப் பதவிக்குப் போட்டியிடக் கூடியவராக வேறு எவரும் இருக்கவில்லை*.

அரசின் தலைமையை ஏற்றுக் கொண்டதுடன் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் பிரச்சாரம் செய்த, தான் உருவாக்கிய சமூக வாழ்வு மற்றும் வர்க்க ஒத்துழைப்புக் கருத்துக்களை நடைமுறையில் செயல்படுத்த சுகர்ணே முனைந்திருக்கலாம் எனத் தோன்றலாம். 1945-48ம் வருட காலனி ஆக்கிரமிப்புக்குப் பின்பு உறுதியடைந்திருந்த அவருடைய செல்வாக்கை அடிப்படையாகக் கொண்டு அவர் இதைச் செய்திருக்கலாம். இந்தோனேசியாவின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாதை அந்த நாட்டிற்கும், நாட்டின் தலைவருக்கும் சர்வதேச அரங்கில்—

* இந்தக் கட்டுரையில், சுகர்ணே ஆட்சியில் இருந்த முழுக் காலகட்டத்திலுமான அவருடைய கண்ணேட்டங்களையும் அரசியலையும் படிப்படியாகத் தொடர்ந்து ஆராய்வது என்ற குறிக்கோள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் முன் வைக்கப்படவில்லை. — ஆ-ர்.

குறிப்பாக 1955ல் நடைபெற்ற பான்துங் மகாநாட்டிற்குப் பிறகு—மிகுந்த மதிப்பையும் சர்வதேச அங்கீகரிப்பையும் அளித்தது. இந்த மகாநாட்டைக் கூட்டிய முக்கியமான தலை வர்களில் ஒருவராக மட்டும் அல்லாமல், தற்காலத்திலும் தங்களுடைய நடைமுறைத் தன்மையைக் கொண்டுள்ள சமாதானச் சகவாழ்வு மற்றும் அரசாங்கங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு ஆகியவற்றைப் பற்றிய பத்து கொள்கைகளையும் ஏற்றுக் கொண்ட அந்த மகாநாட்டின் கொள்கை மூலகர்த் தாவாகவும் அவர் விளங்கினுர்.

உள்நாட்டு அரசியல் துறையில் மிகவும் கடினமான நிலை சுகர்ணுவின் முன் நின்றது. 1950வது வருடங்களின் மத்தியில் இந்தோனேசியாவில் நிலைமை கடுமையாகச் சிக் கலடைந்தது. கட்சிகளுக்கிடையில் சண்டை தீவிரமடைந்தது. இளைய அரசாங்கத்தின் ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய பிற்போக்குவாதப் பிரிவினைக் கிளர்ச்சிகள் பல தீவு களில் ஆரம்பித்தன. இந்தோனேசியச் சமுதாயத்தின் எதிர் கால வளர்ச்சிப் பாதையைப் பற்றிய கருத்துக்களுக்கிடையி லான வித்தியாசங்கள் இத்தகைய கடின நிலைமைகளின் அடிப் படையில் இருந்தன. குறிப்பாக, இந்தக் கருத்துக்களின் அடிப்படையில்தான் 1955ம் வருடப் பாராளுமன்றத் தேர் தல்களின் முடிவுகளையும், 1957-58ம் வருடங்களில் நடை பெற்ற பஞ்சாயத்துத் தேர்தல்களின் முடிவுகளையும் ஆராய வேண்டும். இத்தேர்தல் முடிவுகள் இடதுசாரி சக்திகளுக்குச் சார்பான வெகு ஜனங்களின் பொதுவான மன நிலைப் போக் கையும், இந்தோனேசியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் வளர்ந்து வரும் செல்வாக்கையும், அவ்வாறே ஏகாதிபத்திய எதிர்ப்பு, ஜனநாயக நிலையிலிருந்து கொண்டு தீவிரமான சமூக சீர்திருத் தங்களுக்காகப் போராடிய பிற கட்சிகள் மற்றும் அரசியல் குழுக்களின் வளர்ந்து கொண்டிருந்த புகழையும் எதிரொ லித்தன.

இந்தோனேசியாவின் எதிர்காலம், இக்காலகட்டத்தில் தான் நிர்ணயிக்கப்படுகின்றது என்பதைச் சுகர்ணு உணரா மல் இருந்திருக்க முடியாது. எந்தப் பாதையைத் தேர்ந் தெடுப்பது என்ற பிரச்சினை அவர் முன்னும் நின்றது. சிறி தளவும் தயங்காமல் பிரிவினைவாதிகளைக் கண்டித்த அவர், அப்பிரிவினைவாதிகளின் போராட்டத்தை ஆயுதத்தின் உதவி யுடன் அடக்கினுர். (இதன் பேரில் இரத்தப் பெருக்கு மிகவும்

குறைவாகவே இருந்தது என்பது உண்மையே.) ஆனால் இந்தப் பதட்ட நிலையின் உண்மையான மூலத்தைச் சுகர்ணோ உணர வில்லை. 1950ம் வருடம் ஏற்றுக் கொள்ளப்பட்ட தற்காலிக அரசியல் சட்ட அமைப்பின்படி இயங்கிய பாராளுமன்ற அமைப்பு முறையே எல்லாத் துன்பங்களுக்கும் காரணம் என்று அவர் அறிவித்தார். சுகர்ணோவின் கருத்துப்படி, பாராளுமன்ற ஜனநாயகமும் அத்துடன் தொடர்பு கொண் டுள்ள அரசியல் சக்திகளின் போராட்டமும், அன்னிய வழி யைப் பின்பற்றுவதாக இருந்தது. அது இந்தோனேசிய மக் களுக்கும் இந்தோனேசியச் சமுதாய வழக்கங்களுக்கும் ஒத்து வராதது என்று அவர் கருதினார். வலது சக்திகளின் பய முறுத்தல் இன்னும் இருந்த நிலைமைகளில், அவர்களுக்கு எதிராக எடுக்கும் முக்கியமான நடவடிக்கையே இது என் பதாகச் சுகர்ணோவின் இந்த நடவடிக்கையைப் பற்றி முற் போக்கு சக்திகளும் கருதின. எனவேதான் அவர்கள் 1957-59ம் வருடங்களில் அவரால் செய்யப்பட்ட அரசியல் அமைப் புச் சீர்திருத்தங்களை, சில திருத்தங்களுடன் ஆதரித்தனர். சுகர்ணோ 1945ம் வருட அரசியல் சட்ட அமைப்பைப் புனர மைத்தார். பாராளுமன்றத்தின் முன்னிலையில் அரசின் பொறுப்புக்களை நீக்கினார். முடிவாக, நாட்டின் முழு அதி காரத்தையும் தனக்குக்கீழ் கொணர்ந்தார். குறிப்பாக இந்த நேரத்தில்தான் தன்னுடைய பொது சகோதரத்துவம் மற்றும் ஒத்துழைப்புக்கோட்பாடுகளை — மார்க்காயேனிசத்தை — இந்தோனேசிய மக்களின் நலன்களுக்காக நடைமுறையில் செயல்படுத்தவும், நாட்டின் முன் நிற்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான தன்னுடைய வழிமுறைகளை நடைமுறைக்குக் கொணரவும், இந்தோனேசியச் சமுதாய வளர்ச்சியைப் பற்றிய தன்னுடைய திட்டங்களை முன்வைக்கவும் கூடிய வகையில் தன்னுடைய அதிகாரத்தின் உச்சியில் இருந்தார் எனத் தோன்றலாம்.

சுகர்ணோவின் வாழ்க்கை மற்றும் அரசியல் பாதையை இப்போது இறந்த காலத்திற்குரியதாக பார்ப்போமேயானால், குறிப்பாக அப்போதுதான் — அதாவது 1950ம் வருடங்களின் கடைசியில்தான் அவருடைய தேசியவாத-நரோதியக் கருத் தோட்டங்கள் முன்பு எப்போதும் இருந்திராத அளவுக்குக் கடினமான சோதனைக்கு உள்ளாக்கப்பட்டது. குறிப்பாக, அப்போதுதான் அதனுடைய கோட்பாட்டு உள்பலவீனம்

வெளிப்பட்டது. சுகர்ணோ தன்னுடைய வாழ்நாளின் இறுதி வரையும் தன்னுடைய கருத்துக்களில் மிகுந்த நம்பிக்கைக் கொண்டிருந்தார். அவற்றின் நடைமுறைத் தன்மையில் எவ்வகையான சந்தேகத்தையும் கொள்ளவில்லை என்பதுடன் கடைசிவரை எத்தகைய மாற்றத்தையும் அவர் அவற்றில் செய்யவில்லை. ஆனால் குறிப்பாக அவருடைய இந்தத் தன்னிலை வாத நம்பிக்கையே சுகர்ணோவின் அரசியலிலும் மேலும் அவருடைய அரசாங்கத்திலும் ஆழ்ந்த முரண்பாடுகள் தவிர்க்க முடியாமல் தோன்றக் காரணமாக இருந்தது.

இந்த முரண்பாடுகள், எல்லாவற்றிற்கும் மேலாக நாட்டின் பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினைகளை அணுகிய முறையில் வெளிப்பட்டன. சுகர்ணோவின் எதிரிகளும் விமர்சகர்களும் பொருளாதாரத் துறையில் மாஜி ஜனாதிபதியின் தகுதியின்மையையும் பொருளாதாரப் பிரச்சினைகளை அவர் அலட்சியம் செய்ததையும் தொடர்ந்து கூறிக் கொண்டிருக்கின்றனர். ஒரு தனிப்பட்ட புரட்சிகர கற்பனைப் புத்தார்வ வாதியாக (Revolutionary Romantist) வளரும் மனப்போக்கு கொண்டவராகவே இருந்தார் சுகர்ணோ.

''நான் பொருளாதாரம் போன்ற பொருளாயதப் பிரச்சினைகளைப் பற்றி அதிகம் சிந்திப்பதில்லை. தேசியவாத உணர்ச்சி இல்லாதவர்கள் மட்டுமே இத்தகைய சாதாரண விஷயங்களில் தங்களை அசிங்கப்படுத்திக் கொள்வர்'' என்று சுய மதிப்புடன் தன்னுடைய சுயசரிதையில் எழுதுகிறார்'''*. ''உண்மையைச் சொன்னால்—நான் ஒரு பொருளாதார நிபுணன் அல்ல. பொருளாதாரத்தின் உள்விஷயங்களில் கைதேர்ந்தவன் அல்ல... பொருளாதாரப் பிரச்சினைகளைப் பற்றிய என்னுடைய கருத்துக்கள் மிகவும் சாமானியமானவை. அவற்றை இவ்வகையில் கூறலாம்: பாலைவனத்தில் வாழும் மக்கள் கூட தங்களின் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும் என்றால் அதைச் செய்ய நம்மால் முடியாதா?'''** என்று நாடு ஏற்கெனவே ஆழ்ந்த பொருளாதார, சமூகச் சிக்கலில் சிக்கியிருந்த சூழ்நிலையின் போது 1963ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 17ம் தேதி அவர் கூறுகிறார். மேலே கூறப்பட்டதைப் போன்ற பல அபிப்பிராயங்

---

* Bung Karno. *Penjambung Lidah Rakjat Indonesia*, p. 161.
** Genti Suara. *Revolusi Indonesia*. Djakarta, 1963, p. 30.

களை இங்கே கூறலாம். ஆனால் பரபரப்பு மிக்க பொருளா யதப் பிரச்சினைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு மீட்போனாகத் தன்னைக் காட்டிக் கொள்ள சுகர்ணோ முயன்றார் என்ற வாதத்தால் அவற்றை விளக்க முற்படுவது குழந்தைத்தனம் ஆகும். பொருளாதாரப் பிரச்சினைகளை ஆராய்வதற்கு சுகர்ணோ விருப்பப்படாததற்கான காரணங்கள் இன்னும் ஆழமானவை.

சுரண்டடப்படும் சமுதாயத்தில் உள்ள எல்லாவிதமான பொருளாதார வளர்ச்சியும் புதிய முரண்பாடுகளைத் தோற்று விப்பதுடன் சமூக ஒற்றுமை பற்றிய கற்பனையை உடைக் கிறது. அதுவே வர்க்க முரண்பாடுகளை வெளிப்படுத்துவதுடன் முடிவில் வர்க்கச் சக்திகள் அணி சேரவும் அவற்றின் போராட் டம் தீவிரமடையவும் காரணமாக உள்ளது. இத்தகைய நிலைமையின் முன் குட்டி பூர்ஷ்வாக்களுக்கு உள்ள உள்பயம், தெளிவான வர்க்கச் சார்பு நிலையைத் தேர்ந்தெடுப்பதன் தேவை, ஆகியவை நிர்ணயமான நிலைமைகளில் சமூக நிகழ்வுப் போக்குகளை நிறுத்தவும், அதன் வளர்ச்சியை தடை செய் யவும் முயற்சி செய்ய குட்டி முதலாளித்துவத்தைத் தூண்டு கின்றது. இவ்வாறு வளர்ச்சியைத் தடைசெய்வது முடியாத காரணத்தால் அத்தகைய முயற்சி பிற்போக்குவாதத்திற்கு வழிவகுக்கிறது. அத்துடன் சமுதாய வளர்ச்சியைக் கெடுத்து சமுதாயத் தொல்லைகள் நிறைந்த நெருக்கடி நிலைக்குக் கொணருகிறது. இது இந்தோனேசியாவில் முதலாளித்துவ அம்சங்கள் அவற்றின் ஒட்டுண்ணித் தன்மையுடனும் தேசிய வாத எதிர்ப்புத் தன்மையுடனும் வளர்வதற்கு வழிவகுத்தது; அதாவது சுகர்ணோவின் தலைமையில் இந்தோனேசிய மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் நடந்து கொண்டிருந்த அதே சமயத்தில் பிரிட்டிஷ், ஹாலந்து மற்றும் பிற அன்னிய உடைமையாளர்களிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட நிறு வனங்களும், தோட்டங்களும் நிறைந்த அரசுப் பொருளா தாரப் பிரிவுகளைக் கொள்ளையடிப்பதன் மூலம் ஆரம்ப மூல தனத்தைச் சேர்ப்பதில் ஈடுபட்டிருந்த அதிகார வர்க்கப் பூர்ஷ் வாக்கள் தோன்றுவதற்கு வழிவகுத்தது. ஏகாதிபத்திய எதிர்ப்பு ஒற்றுமை என்று காரணம் கூறப்பட்டு, வேலை நிறுத் தங்கள் தடை செய்யப்பட்டதால் நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார அமைப்புகளில் நுழைந்து கொண்டிருந்த, மக்களுக்கு எதிரான பூர்ஷ்வாக் கும்பலுக்கு முன் தொழிலாளர்

கள் பாதுகாப்பற்றவர்களாக இருந்தனர். ஏகாதிபத்திய எதிர்ப்புப் போக்கைக் கொண்டிருந்த பரந்த, தீவிரமான கூட்டங்களின் திரைமறைவில், இந்தோனேசியப் பொருளாதாரத்திற்கு நெருக்கடி நிலேயும், தேக்க நிலேயும் ஏகாதிபத்தியத்தைச் சார்ந்து தீவிரமடைந்தது. அத்துடன் எதார்த்தத்தில் இந்தோனேசியாவின் அரசியல் உள்ளாற்றலேயும் அது தகர்க்கச் செய்தது. தயாரற்ற நிலேயில் அன்னிய தனி உடைமைகளே தேசிய மயமாக்கியது நாட்டில் உற்பத்தியின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது என்பதை தன்னுடைய கடைசிக் காலகட்டத்தில் சுகர்ணே ஒப்புக்கொண்டார்*.

இந்தோனேசியச் சமுதாயத்தில் ஒன்றுக்கொன்று விரோதமான முரண்பாடுகள் இருக்க முடியாது என்பதில் மிகுந்த நம்பிக்கை கொண்டு சமுதாயத்தின் மேற்கட்டு வட்டாரத்தில் எல்லாப் பிரச்சினேகளேயும் தீர்க்கும் முறையாக சமரச முறையை சுகர்ணே தேர்ந்தெடுத்தார். இவ்வகையில் பொருளாதார அடிப்படை வளர்ச்சியை கட்டுப்பாடின்றி விட்டு விட்டார். இந்த நிகழ்ச்சிப் போக்கில் தலேயிடாமல் இருந்தது மட்டுமின்றி, உண்மையில் மக்களின் கவனத்தை அதிலிருந்து திசை திருப்பினர். விவசாயிகளின் வறுமை நிலேயும் ஜாவாவின் பெரும் ஜனத் தொகையும் நாடுமுழுவதும் வளர்ந்து வந்த வேலேயில்லாத் திண்டாட்டமும், நிலமற்ற விவசாயிகள் தொகையும் உணவுப் பொருள் மற்றும் பிறவற்றின் பற்றுக் குறையும் சுகர்ணேவையும் அவருடைய அரசாங்கத்தையும் நில உடைமை மற்றும் குத்தகை அளவின் வரம்பையும் பற்றிய சட்டங்களே வகுக்கத் தூண்டின. இந்தச் சட்டத் தொகுப்பின் மிதவாதத் தன்மையைப் பற்றிக் கூற முற்பட்டால் அறுவடை, குத்தகையாளர்களுக்கும் நில உடைமையாளர்களுக்கும் இடையில் 1:1 என்ற விகிதத்தில் பிரிக்கப்பட்டது என்பதை மட்டும் கூறினுல் போதுமானது. இது ஜனநாயக முறையிலும், தொடர்ந்தும் செயல்படுத்தப்பட்ட போது அதிகபட்சம் நில உடைமையாளர்களேயும் பணக்கார விவசாயிகளேயும் கணிசமான அளவு கட்டுப்படுத்துவதுடன் நில உடைமைச் சமுதாயத்தின் மிச்சசொச்சங்களிலிருந்து வேளாண்மைத் துறையில் விவசாயிகளே விடுவித்திருக்க முடியும். ஆனுல் இத்தகைய சீர்திருத்தங்களேச் செயல்படுத்துவதிலான முதல்

---

* Bung Karno. *Penjambung Lidah Rakjat Indonesia.* Djakarta, p. 416.

முயற்சிகளே பலத்த முரண்பாடுகளையும் எதிர்மறை விரோத மனப்பான்மையையும் கிராமப் புறத்தில் சமூகக் கொந்தளிப்பையும் ஏற்படுத்தின. அத்துடன் நாட்டுப் புறத்தில் அரசியல் மற்றும் வர்க்க எல்லைகளில் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியது. இது மேற்கொண்டு இத்தகைய போக்கில் தொடர்வது நாட்டில் வர்க்கச் சக்திகளின் நேரடியான தாக்குதலுக்கு வழிவகுத்தது. சுகர்ணோ இதில் பின்வாங்கினாலும் தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு அதையே செய்வதாக இடதுசாரி சக்திகளின் தலைவர்களை நம்பவைத்தார். மறுபடியும் வேளாண்மைப் பிரச்சினையானது சுகர்ணோவின் கருத்துப்படி ''இந்தோனேசியச் சோஷலிச சமுதாயத்தின்'' ஆதாரமாக யார் இருக்க வேண்டுமோ அதே மார்க்காயேனின் வாழ்க்கை நலன்களுக்கு பெரும் சேதம் விளைவிக்கும் வகையில் தற்காலிகமாகத் தள்ளி வைக்கப்பட்டது.

தன்னுடைய ஆட்சிமுறையின் அரசியல் அமைப்பை உருவாக்கும் போதும் இதே தொடர்ச்சியற்ற தன்மையை அவர் வெளிப்படுத்தினார். தன்னுடைய அரசாங்கச் சேவைகளின் முடிவில் அவர் சர்வாதிகாரி என்ற குற்றச்சாட்டை மிகவும் நியாயமான முறையில் மறுக்கையில் கூறினார்: ''சர்வாதிகாரிக்குப் பின்னால் ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்ள எப்போதும் தயாராக இருக்கும் ஒரு கட்சி இருக்கும். ஆனால் என்னிடமோ என்னை ஆதரிக்கக் கூடிய ஒரு ஸ்தாபனம் இல்லை''*. 1933ம் வருடம் தன்னுடைய சுதந்திர இந்தோனேசியாவிற்கு என்ற நூலில் மார்க்சிடமிருந்து மேற்கோள்களைக் காட்டி, தன்னோடு வெகு ஜனங்களைக் கொண்டுவந்து வழி நடத்தும் திறம் பெற்ற, கருத்து ஒற்றுமையும், ஸ்தாபன ஒற்றுமையும், உறுதியான ஒழுங்கும் கொண்ட ஒரு புரட்சிகர கட்சியை—முன்னணிப்படையை இந்தோனேசியாவில் உருவாக்கும் அவசியத்தைப் பற்றிய கருத்தை வளர்த்த** அதே சுகர்ணோ இவ்வார்த்தைகளைக் கூறினார். சர்வஜன ஜனாதிபதியாக இருப்பதில் நாட்டம் கொண்டு 1945ம் வருடப் புரட்சிக்குப் பின்பு அவர் எந்த ஒரு கட்சியுடனும் தன்னுடைய

---

* Bung Karno..., p. 416.

** சுகர்ணோ. இந்தோனேசியா குற்றம் சாட்டுகிறது, பக்கங்கள் 203—206, 227—229. (ருஷ்ய மொழியில்.)

பெயரை இணைத்துக் கொள்ளவில்லை. சிறப்பான அரசாங்க நிர்வாகத்தைப் பற்றிய தன்னுடைய கருத்துக்களைப் பின்வருமாறு அவர் சுருக்கிக் கூறினர்: ''இந்தோனேசியர்களுக்கு நாட்டின் தலைவர், குடும்பத் தலைவரைப் போன்றவர்தான். முஸ்லிம்களின் வழக்கப்படி தந்தை குடும்பத்தின் சார்பில் எல்லா முடிவுகளையும் எடுக்கிறார். கிராம நிர்வாகத்தைக் கிராமத் தலைவர் தன் பொறுப்பில் எப்போதும் கொண்டுள்ளார். இந்தோனேசியாவில் இவ்வழக்கம் பல நூற்றாண்டுகளாக இருந்து வருகிறது''*. இங்கே மறுபடியும் நரோதியத் தன்மையின் அம்சம் வெளிப்படுகின்றது. அதாவது சமூகப்-பொருளாதாரத் தேக்கம், சமுதாயத்தின் வளர்ச்சி குன்றிய நிலை ஆகியவற்றின் முடிவாக சமுதாயத்தில் இருந்த ஒரு வெளிப்பாடு, வரலாற்றில் எக்காலத்திற்கும் ஏற்றதாக—''அன்னியர்களின்'' முன்னேற்றத்திற்கு எதிராகக் காட்டப்பட்டதைப் போலவே—காட்டப்படுகிறது. சுரண்டப்பட்ட தேசியத்தின் தேசியவாத வெளிப்பாடுகளில் ஒருவகை என்பதாக இதைப் புரிந்து கொள்ள முடியும்: சமூக, பொருளாதார மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம் ஆகியவை ஆட்சித் தலைமையில் இருந்த நாடுகளிலிருந்து அடக்குமுறையாளர்களின் மூலம் மிகவும் உருக்குலைந்த முறையில் இந்தோனேசியாவிற்கு வந்ததால் அதை எதிர்ப்புணர்ச்சியுடனேயே நோக்கினர். இது முற்றிலும் புரிந்து கொள்ளக் கூடியது என்றாலும் நியாயப்படுத்த முடியாதது.

1950ம் வருடங்களின் கடைசியில் இந்தோனேசியாவில் நிலைநாட்டப்பட்ட சுகர்ணோவின் தனிப்பட்ட அதிகார வரம்பு முறையானது சாரத்தில் போனப்பார்ட்டிசமாக—லெனின் போனப்பார்ட்டிசம் என்று விவரித்த அதே வகையில்—விளங்கியது. ''இதற்கு ஆதாரமாக நிர்ணயிக்கப்பட்ட வர்க்கங்கள் அல்லது அவைகள் மட்டுமே அல்லாமல், அவை தலையாயனவையாக அல்லாமல் செயற்கையான முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கியமாக பல்வேறு அடுக்குகளிலிருந்து சேர்க்கப்பட்ட அம்சங்கள்''** என்று லெனின் போனப்பார்ட்டிசத்தை விவரிக்கிறார். மேலும் அவர் வர்க்கப் போராட்டக்

---

* Bung Karno..., p. 393.

** வி. இ. லெனின், முழுத் திரட்டு நூல்கள், தொகுதி 22, பக்கங்கள் 130—131. (ருஷ்ய மொழியில்.)

கண்ணேட்டத்திலிருந்து இத்தகைய நிகழ்ச்சியின் சாத்தியக் கூறு ''விரோத சக்திகள் அல்லது போட்டியிடும் சக்திகளின் சமநிலைப்படுத்தப்படுதல்'' என்பதன் மூலம் விளக்கப்படலாம் என்று கூறுகிறுர். இந்தத் தற்காலிகச் சமநிலை பெரிய நில உடைமையாளர்களுடன் ஒன்ருயிருந்த அதிகார வர்க்கப் பூர்ஷ்வாக்களுக்குச் சாதகமாக முடிந்ததால், மேலும் சுரண் டும் மேல் வர்க்கத்தினருக்கும், சுரண்டப்பட்ட உழைப்பாளி களுக்கும் இடையிலான முரண்பாடுகள் முற்றத் தொடங் கியதன் விளைவாகவும் சுகர்ணேவின் அரசியல் அதிகாரத்தின் சமூக அடிப்படை (அவர் அதை ''வழி நடத்தப்படும் ஜன நாயகம்'' என்றழைத்தார்) மேன்மேலும் நிலை தடுமாற ஆரம் பித்தது.

இந்தோனேசியாவின் அரசியல் அரங்கில் எதிரெதிராக நிற்கும் இரண்டு சக்திகள் மேலும் மேலும் தெளிவாகத் தோன்ற ஆரம்பித்தன: ஒன்று இந்தோனேசியக் கம்யூனிஸ்டுக் கட்சி தொடர்ச்சியாகவும் தீவிரமாகவும் பங்கு கொண்டிருந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு, முற்போக்கு சக்திகளின் கூட்டணி, மற்றென்று, ராணுவ சக்திகளின் தலைமையின்கீழ் வளர்ந்த, கம்யூனிஸ்டு எதிர்ப்புப் பிரிவு தலைமையில் இருந்த வலது சாரிக் குழுக்களின் கூட்டணி ஆகியவை ஆகும். ராணுவமோ இந்த வலதுசாரிக் குழுக் கூட்டணியின் சக்தி மிகுந்த கைப் பொம்மையாக மாறியது.

ஜனதிபதியின் கருத்தோட்டங்களோ, கோட்பாடுகளோ அவரை ஆதரிக்க வலதுசாரி குழுக்களை தூண்டவில்லை. அதற்கு மாருக, ஆட்சியில் அவர் இருந்ததால், அவ்வேளையில் இன்னும் கொஞ்ச காலத்திற்கு தேசிய ஒற்றுமையைப் பற்றிய கற் பனையை வளர்த்து அதன் மூலம் தவிர்க்க முடியாத முடிவான ஆட்சி கவிழ்ப்பிற்கான சக்தியைச் சேகரித்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையே அவரை ஆதரிக்கத் தூண்டியது. சுகர்ணே இதைப் புரிந்து கொண்டாரா இல்லையா? புரிந்து கொள்ள ஆரம்பித்தார் என்றே தோன்றுகிறது. 1963ம் ஆண்டு ஆயுள் ஜனதிபதியாக அவரை நிர்ணயிக்கத் தூண் டியக் காரணங்களைப் பற்றிப் பின்னர் விவரிக்கும் போது கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்: ''என்னுடைய ஆலோசகர் களின் கருத்துப்படி அதீத வலதுசாரித் தீவிரவாதிகள் ஆட்சி யைக் கைப்பற்றிக் கொள்ள மாட்டார்கள் என்று கம்யூ னிஸ்டுகளை நம்பவைப்பதற்கும், தீவிர இடதுசாரிகள் ஆட்சிக்கு

வர மாட்டார்கள் என்று முஸ்லிம்களுக்குக் காட்டவும், மேலும் ராணுவம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளாது என்று எல்லோருக்கும் உறுதியளிக்கவும் வேண்டியே எல்லாக் கட்சிகளுக்கும், வகுப்புக்களுக்கும் மேலே நின்ற ஒரே அரசியல் பிரமுகரான சுகர்ணோவை ஆயுள் ஜனதிபதியாக நியமிக்க வேண்டியிருந்தது.'' சுகர்ணோவுக்கு மிகவும் நெருங்கியவர்களில் ஒருவரான உதவிப் பிரதம மந்திரி கேயிருல் சாலஹ் (Chaerul Saleh): ''இது அரசியல் தேவை. இல்லாவிட்டால் நாம் அனைவரும் உள்நாட்டுப் போரில் சிக்கிக் கொள்ள நேரிடும்'' என்று சுகர்ணோவிடம் நேரடியாக அறிவித்தார்*. சமூக ஒற்றுமை நிறைந்த ஒரு சமுதாயத்தை உருவாக்க அவரால் முடியவில்லை என்பதையும், அவரால் செய்ய முடிந்தது பிளவைத் தாமதப் படுத்துவது மட்டுமே என்பதையும் கண்ட போது சுகர்ணோ எத்தகைய உணர்ச்சிகளை அனுபவித்தார் என்று யாராலும் கூற இயலாது.

வளர்ந்து வரும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான வழி முறைகளை ஜனதிபதி தன்னுடைய அரசியல் பணிகளின் போது தேடவில்லை என்று கூறுவது தவறாகும். 1950ம் ஆண்டுகளில் சோஷலிச நாடுகளுடன் கூட்டு, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்ட அடிப்படையில் இந்தோனேசியாவின் தொடர்பை வளர்த்த அதே நேரத்தில், அந்நாடுகளின் சமுதாய வளர்ச்சி அனுபவங்களில் மேலும் மேலும் ஆர்வம் கொண்டார். சோஷலிச நாடுகளின் நியாயமான அரசியல் ஒற்றுமை, தேசியப் பிரச்சினையில் அவை கண்ட பயனுள்ள தீர்வு, ஆசியாவிலிருந்த சோஷலிச நாடுகள் தங்களின் தேசிய சுதந்திரத்தை உறுதியாக்க மேற்கொண்ட வழி முறைகள் ஆகியவை அவரைக் கவர்ந்தன. ஆனல் இங்கும் சமுதாய மேற்கட்டுமானத்திலிருந்த நிகழ்ச்சிப் போக்குகளே அவருடைய கவனத்தைக் கவர்ந்தன. சோஷலிச அரசுகளில் இருந்த ஒரே இயல்புள்ள வர்க்க அமைப்புக்கும், சாரத்தில் சுரண்டும் சமுதாயமாக இருந்த இந்தோனேசியச் சமுதாயத்திற்கும் இருந்த அடிப்படை வித்தியாசங்களை அவர் காணவில்லை. அல்லது காண விரும்பவில்லை. ஏகாதிபத்தியத்திற்கு எதிரான இந்தோனேசியாவின் போராட்டத்திற்கு சோஷலிச நாடுகள்

---

* Bung Karno..., p. 416.

அளித்த அரசியல் ஆதரவுக்கு விசேஷமான முக்கியத்துவத்தைக் கொடுத்த ஜனாதிபதியும் அவருடைய அரசாங்கமும் அந்நாடுகளிலிருந்து வந்த பொருளாதார உதவிகளைப் பெற்று பயனுள்ள வகையில் பயன்படுத்திக் கொள்வதில் மிகவும் குறைந்த கவனமே செலுத்தினர். தன்னுடைய சாரத்திலும் அளவிலும் இந்த உதவியானது மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதில் மட்டுமின்றி அரசு பொருளாதாரச் சுதந்திரம் அடையவும் வழிவகுத்திருக்கும். அதே சமயத்தில் ஏகாதிபத்திய வட்டாரங்களின் தாக்கத்தைக் கணிசமான அளவு குறைப்பதன் மூலம் ஏகாதிபத்திய எதிர்ப்பாளரான சுகர்ணோவிற்குப் பெருமளவு உதவி புரிந்திருக்கும்.

இந்தோனேசியாவிலும் வேறு நாடுகளிலும் இருந்த ஜனாதிபதியின் அரசியல் எதிரிகள், அறுபதாம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் இந்தோனேசியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலிருந்த நெருக்கத்தைப் பல ஆதாயங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டனர். அந்த காலகட்டத்தின், இந்தோனேசிய-சீன நட்புறவின் பல்வேறு அம்சங்களும் அதன் விளைவுகளும் மேலும் இந்த நட்புறவின் திட்டங்களும் குறிக்கோள்களும் தனியாக ஆராயப்பட வேண்டியவை. சீனாவுடனான தொடர்பைப் பொறுத்த வரையில் சுகர்ணோவின் நிலையை நிர்ணயித்த காரணிகள் வேறுபட்ட பல திட்டங்களைக் கொண்டவையாக இருந்தன என்பதை மட்டும் இங்கே குறிப்பிடுவோம். இதில் சுகர்ணோ தன்னுடைய சிந்தாந்த முன்னோடிகளில் ஒருவராகக் கருதிய சுன்-யாட்-சென்னைப் பற்றிய நினைவுகள் முக்கியப் பங்கு வகித்தன*. அதனுடைய சமூக அம்சத்திலும் சரி, அதே போல் சீன மக்களை, அவர்களைச் சுரண்டும் ஏகாதிபத்தியத்திடமிருந்தும் அதன் கையாள்களிடமிருந்தும் விடுவித்த செய்கையிலும் சரி, 1949ம் வருட சீனப் புரட்சி அக்கால முற்போக்காளர்களின்மீது செலுத்திய அதே தாக்கத்தை சுகர்ணோவும் உணர்ந்தார். முடிவாக, 1950ம் வருடங்களில் பிற சோஷலிச நாடுகளுடனான நெருங்

---

* குறிப்பாக, 1945ம் வருடம் ஜூன் மாதம் முதல் தேதி **பஞ்சசீலக் கொள்கைகளின் பிறப்பு** என்ற தன்னுடைய சொற்பொழிவில் குறுகிய காஸ்மோபாலிட்டிசக் கருத்துக்களுக்கு எதிரான தேசியவாதக் கருத்துக்களை அவர் சுன்-யாட்-சென்னின் **மூன்று மக்கள் கோட்பாடுகள்** என்ற புத்தகத்தின் மூலமே பெற்றதாகச் சுகர்ணோ கூறினர்.— **இந்தோனேசியா குற்றம் சாட்டுகிறது**, பக்கம் 264. (ருஷ்ய மொழியில்.)

கிய ஒத்துழைப்புடன் ஏகாதிபத்தியவாதிகளின் முற்றுகையை எதிர்த்து சீன மக்கள் அடைந்த வெற்றிகளைப் பற்றிய செய்திகள் இந்தோனேசியாவில் பரந்திருந்திருந்தன.

மறு புறத்தில் அவருடைய அரசியல் ஞானத்தின் விசேஷ அம்சத்தால் அப்போது சீனுவில் மிகவும் புகழ் பெற்றிருந்த கோட்பாடுகளான ''அரசியல்—தலைமை வகிக்கும் சக்தி'', ''அனைத்து ஏகாதிபத்தியவாதிகளும் பிற்போக்காளர்களும் காகிதப் புலிகள்'' போன்ற இன்ன பிறவற்ருல் கவரப் பட்டார். அவை அவருடைய சொந்தக் கருத்தோட்டங் களுடன் ஒத்துச் சென்றதுடன் அவற்றை உறுதிப்படுத்தவும் செய்தன என்று அவர் கருதினுர். ஆனுல் அறுபதாம் ஆண்டு களின் ஆரம்பத்தில் இருந்த திட்டமான உலக அரசியல் நிலைமைகளில் இந்தக் கோட்பாடுகளை இந்தோனேசிய அரசின் வெளி உறவு அரசியல் கோட்பாடுகளாக நடைமுறையில் ஏற்றுக் கொண்டது*, அந்த நாட்டின் வெளி உறவுக் கொள்கை நிலையில் சிக்கல்களை உண்டாக்கியதுடன், சோஷலிச அரசு களுடன் கொண்டிருந்த தொடர்பிலிருந்து விலகும் அம்சங் களைத் தோற்றுவித்தது. அத்துடன் உலக அரங்கில் ஏகாதிபத் திய எதிர்ப்புப் போராட்டத்தில் இந்தோனேசியாவின் பங்கு பலவீனமடையக் காரணமாகவும் இருந்தன. மேலும் இந்தோ னேசியாவின் அடிப்படை தேசிய நலன்களுக்கு மிகுந்த சேதத்தை அது ஏற்படுத்தியதுடன் உள்நாட்டு அரசியல் முரண்பாடுகள் தீவிரமடையவும் காரணமாக இருந்தது.

சுகர்ணேவின் கருத்தோட்டங்களுக்கும், நடைமுறை அரசியலுக்கும் இடையிலான ஆழ்ந்த முரண்பாடுகள் இந் தோனேசியக் கம்யூனிஸ்டுக் கட்சியுடன் அவர் கொண் டிருந்த உறவின் நிலைகளில் பிரதிபலித்தன. அவருடைய கோட்பாடான நாசகோம் (Nasakom) பொதுவாகக் கூறினுல், தேசிய-ஜனநாயகப் புரட்சிக் கட்டத்தின் பிரச்சினை

---

* குறிப்பாக இந்தச் சமயத்தில்தான் இந்தோனேசியாவின் வெளி உறவுக் கொள்கையில் சமாதானத்திற்கான போராட்டம், ஆயுதக் குறைப்பு மற்றும் அணு ஆயுதக் கட்டுப்பாடு ஆகிய கருத்துக்களில் ஆதாரமற்ற தவறுகள் மேலும் மேலும் தோன்ற ஆரம்பித்தன. வேறுபட்ட சமூக அமைப்புகளுடைய அரசுகளுக்கு இடையிலான சமாதானச் சகவாழ்வைப் பற்றிய கோஷங்கள் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்திற்கு எதிராகக் காட்டப்பட்டன. மேலும் எகாதிபத்தியத்திற்கும் புதிதாக விடுதலை அடைந்த நாடுகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் மற்ற எல்லா தற்கால முரண்பாடுகளையும் விட முக்கியமானது என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

களைத் தீர்க்கும் வகையிலும் மேலும் இந்தோனேசியாவை சோஷலிச திசையமைவுப் பாதைக்கு மாற்றும் வகையிலும் நாட்டிற்குத் தலைமை தாங்கும் திறன் பெற்ற தேசபக்த சக்திகளின் ஐக்கிய முன்னணியின் முற்போக்கு அடிப்படை யாக விளங்கியிருக்க முடியும். 1955—1958ம் ஆண்டுகளில் நடைபெற்ற பாராளுமன்ற மற்றும் வட்டாரத் தேர்தல்களின் முடிவுகள் ஒவ்வொரு வருடமும் கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு மாறுமல் வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதைக் காட்டின. சுகர்ணேவால் இதைக் கவனிக்காமல் இருக்க முடியவில்லை. 1957ம் வருடத்திலிருந்தே இந்தோனேசியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பிரதிநிதிகளை அரசாங்க அமைப்பில் இணைக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார். காலனியாதிக்க எதிர்ப்புப் போராட்டத்தில் கம்யூனிஸ்டுக் கட்சி புரிந்த சேவை அவரைக் கவர்ந்தது. கட்டுப்பாடு மிக்க, போராட்டத் தன்மைவாய்ந்த ஒரு மாறுத ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்தியைக் கம்யூனிஸ்டுக் கட்சியில் அவர் கண்டார். அதனு லேயே, தனது சொந்தக் கட்சி ஒன்று இல்லாத நிலையில் கம்யூனிஸ்டுகள் தனது கூட்டாளிகளாக இருக்க வேண்டும் என்பதில் அவர் விசேஷ ஆர்வமுடையவராக இருந்தார். இந்தோனேசிய மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட் டத்தில் ஒத்துழைக்க வேண்டும் என்ற அழைப்போடு சர்வதேச முற்போக்குச் சமுதாயத்தைக் கம்யூனிஸ்டுக் கட்சி வெற்றிகர மாக அணுகியதற்குக் காரணமான அதனுடைய சர்வதேச உறவுத் தன்மை, சுகர்ணேவின் கருத்துப்படி, அதனுடைய சிறப்பான தகுதியாக விளங்கியது. அவ்வாறே கம்யூனிஸ்டு களின் இலட்சியங்களான மக்களுக்கிடையே சம உரிமை மற்றும் சகோதரத்துவம், மனிதனுல் மனிதன் சுரண்டப்படு வதை ஒழித்தல், சர்வதேச நல்வாழ்வை அடைதல் ஆகிய பல லட்சியங்கள் தேசபக்தரான சுகர்ணேவின் நாட்டமாகவும் விளங்கின. ஆனல் வர்க்கங்கள் மற்றும் வர்க்கப் போராட்டப் பிரச்சினைகளை அகநிலைவாதத்துடன் சுகர்ணே அணுகியதும், முழுமையான சமூக அமைப்பின் அடிப்படையில் புரட்சிகர மாறுதல் இல்லாமலேயே, இந்தோனேசியச் சமுதாயத்தில் முதலாளித்துவ மாற்றத்தைத் தவிர்க்க முடியும் என்பதிலான அவருடைய நம்பிக்கையும், அவருக்கும் இந்தோனேசியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் இடையிலான ஒத்துழைப்பின் சாத் தியங்களைக் கடுமையான வரம்பிற்குள் கட்டுப்படுத்தின.

1960ம் வருடம் இந்தோனேசியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமை அரசாங்கத்தின் சமூக-பொருளாதார அரசியலை வெளிப்படையாக விமர்சித்த போது கட்சித் தலைவர்கள் ராணுவ நிர்வாகத்தின் அடக்கு முறைக்கு ஆளாக்கப்பட்டனர். சிறிது காலம் கழித்தே ஜனாதிபதி ''வழி நடத்தப்படும் ஜன நாயக'' அமைப்பின் உள்ளிருந்து கொண்டு கம்யூனிஸ்டுக் கட்சி இயங்கக் கூடிய நிலைமைகளில் ஒன்றாக அவருடைய அரசியலை நிபந்தனையில்லாமல் ஆதரிக்க வேண்டும் என்பதைக் குறிப்பிட்டு கம்யூனிஸ்டு எதிர்ப்புக் குழுவை அடக்கினார்.

அரசாங்கத்தின் கொள்கைகளைச் செயல்படுத்தும் மற்றும் ஆதரிக்கும் வகையில் நாட்டின் முக்கியமான கட்சிகளின் பணிகளை, அதுவும் தலைமை அளவில் மட்டுமே ஒன்றிணைக்கச் செய்வதிலேயே நாசகோம் (Nasakom) கோட்பாட்டை நடைமுறையில் செயலாக்குவது என்பது இருந்தது. இதனால் இந்த மூன்று சித்தாந்த-அரசியல் போக்குகளின் ஒத்துழைப்பு, எங்கே சமூக முன்னேற்றத்திற்கான போராட் டத்திலும் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்திலும் சக்தி வாய்ந்த காரணியாக விளங்கியிருக்க முடியுமோ அங்கே பரவ—அதாவது இந்தப் போக்குகளின் ஜனநாயக வெகுஜனச் சார்பாளர்களுக்கிடையில் பரவ—இடம் தரப்படவில்லை. வலது சாரிப் பூர்ஷ்வாக்களின் தீவிர எதிர்ப்பும், மற்றும் சுகர்னோ வின் உலகக் கண்ணோட்டத்தின் விசேஷ அம்சமான—வெகு ஜனங்கள் தலைவர்கள், வழிநடத்துபவர்கள், ரட்சகர்கள் ஆகியோரால் தலைமை தாங்கப்படுபவர்கள் மட்டுமே என்ற கருத்தும் இதற்குக் காரணமாக விளங்கின. அதனால், அரசியல் கூட்டங்கள், கோஷங்கள் ஆகியவற்றால் மக்களின் செயல் வன்மையைத் தொடர்ந்து தூண்டிய போதும், அரசுக் கொள்கைகளை நிர்ணயிப்பதிலான பொது ஜனங்களின் பங்கைப் பற்றிய கற்பனையை ஏற்படுத்திய போதும், வெகு ஜனங்களின் பங்கு ஒரு வரலாற்றுப் பூர்வமான நிகழ்ச்சிப் போக்கு என் பதையும், அரசியல் மற்றும் புரட்சிகர உருவாக்குதலில் அவர்கள் கொண்டுள்ள உரிமைகளையும் அவர் என்றுமே அங்கீகரித்ததில்லை.*

---

* 1982ம் ஆண்டு ஏப்ரல் 16ம் தேதி மெர்டேக்கா (*Merdeka*) என்ற செய்தித்தாள் ஒரு ரிக்ஷாக்காரரின் பேட்டியை வெளியிட்டது. அப்பேட் டியில் ''பழைய ஆட்சி முறை'' காலத்தில் தான் பங்கு கொண்ட கூட்டங் களையும், அமெரிக்க எதிர்ப்புப் பிரச்சாரங்களையும் ரிக்ஷாக்காரர் பெருமையுடன்

நாட்டை நிர்வகிப்பதில் உழைப்பாளி மக்களின் கட்சியான இந்தோனேசியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் யதார்த்தப் பங்கெடுப்பை சுகர்ணோ கவனத்தில் கொள்ளவில்லை. ஏகாதிபத்திய ஒன்றிணைப்பு என்ற சாக்கில் வேலை நிறுத்தங்கள் தடை செய்யப்பட்டதையும், வேளாண்மைச் சீர்திருத்தங்களைக் கோரி விவசாயிகள் நடத்திய இயக்கங்களைக் கவிழ்த்ததையும் ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தோம். இவ்வகையான நடவடிக்கைகளைப் பூர்ஷ்வாக்களும் நிலச்சுவான்தார்களும் முழு மூச்சுடன் ஆதரித்தது ஒரு புறம் இருக்க, மறு புறத்தில் விரும்பியோ, விரும்பாமலோ ஜனதிபதி தன்னுடைய அரசியல் கொள்கைகளால் மக்களின் மத்தியில் கம்யூனிஸ்டுகளின் செயல்களைத் தடுத்தும், உழைப்பாளிகளின் அடிப்படை நலன்களுக்கான கம்யூனிஸ்டுகளின் போராட்டங்களை அடக்கியும் வந்தார். இதன் மூலம் இந்தோனேசியத் தொழிலாளி, உழைப்பாளி-விவசாயிகளின் வர்க்க வழிகாட்டியாக விளங்கும், அதே சமயம் பயனுள்ள வகையில் முழு தேசியத்தின் நலன்களுக்காகத் தீவிரமாகப் போராடும் திறனும் கொண்ட இந்தோனேசியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் நிலையைத் தகர்க்கும் வகையில் செயல்பட்டார். இதன் விளைவாக ''வழி நடத்தப்படும் ஜனநாயகக்'' கோட்பாட்டின் சமூக அடிப்படை பலவீனமடைந்ததுடன் அது மக்களின் ஆதரவையும் இழந்தது. ஆனல் இந்த நிகழ்ச்சிப் போக்கு முன் கூட்டியே திட்டமிடப்பட்டதா அல்லது தவிர்க்க முடியாத தன்மை கொண்டதா என்பதைப் பார்ப்போம். இந்தோனேசியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தற்கால தஸ்தாவேஜுகளில் குறிப்பிடப்படுவதைப் போல, கட்சித் தலைமையின் ஒரு பகுதி அபாயகரமான வலதுசாரி சந்தர்ப்பவாதத் தவறுகளைச் செய்யாமல் இருந்திருந்தால் இதைத் தவிர்த்திருக்க முடிந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது. இந்தோனேசியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் Vவது (1954ம் ஆண்டு), VIவது (1959ம் ஆண்டு) கட்சி காங்கிரஸ்களில் கட்சியின் சித்தாந்த-அரசியல் மற்றும் ஸ்தாபன ரீதியான சுய உரிமையைப் பாதுகாக்கும் வகையில் நாட்டின் தேசபக்த, ஏகாதி

---

நினைவு கூர்ந்தார். அத்துடன் புதிய ஆட்சி முறையில் தன்னைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை என்றும் நாட்டின் அரசியலில் தான் பங்கு கொள்வதற்கான தன்னுடைய உரிமையை யாரும் அங்கீகரிப்பதில்லை என்றும் வருத்தப்பட்டார்.

பத்திய எதிர்ப்புச் சக்திகளை ஒன்றிணைக்கக் கோரி, மார்க்சிய-லெனினியப் பாதையில் எடுக்கப்பட்ட முடிவுகள் சுகர்ணோவிற்குக் கொடுக்கப்பட்ட நிபந்தனையற்ற ஆதரவாலும், அவருடைய பாதையின் எல்லா வகையான விமர்சனங்களையும் மறுக்கும் தன்மையாலும் நிராகரிக்கப்பட்டன. இந்தப் பாதை கட்சிக்குப் பேரிழப்பை ஏற்படுத்தியது. ஆனால் நடைமுறையில் இது ஜனதிபதிக்கும் பெரும் கேட்டை உண்டாக்கியது: ஜனதிபதியின் சித்தாந்தப் பரிணமத்தைத் தீவிர வாதத் திசையில், விஞ்ஞான சோஷலிசத்தின் திசையில் தங்களுடைய பணிகளால் தூண்டக் கூடிய சக்திகள் நாட்டில் இல்லாமல் போய்விட்டன.

1967ம் வருடம் ஜனதிபதிப் பதவியில் இருந்து சுகர்ணோ நீக்கப்பட்ட பின்பு, சிறப்பும், புகழும் வாய்ந்த இத்தலைவர் படுதோல்வி அடைந்ததற்கான காரணங்களைப் பற்றி பல வித அபிப்பிராயங்கள் கூறப்பட்டன. குறிப்பாக சோவியத் வரலாற்று நூல்களில் சுகர்ணோவின் நிலையைக் குறிக்கும் வகையில் கையாளப்பட்ட முதல் சொல் ''சோக நாடகம்'' ஆகும்°. தன்னுடைய சொந்த நாட்டையும், சொந்த மக்களையும் நேசித்த அதே வேளையில் இந்தோனேசியச் சமுதாயத்தின் முன் நிற்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாத கருத்தோட்ட அமைப்பிலிருந்து வெளிவர அவருக்குத் தெரியவில்லை என்பதிலேயே சுகர்ணோவுடைய நிலையின் ''சோகம்'' அடங்கியுள்ளது. அந்தக் கருத்தோட்ட அமைப்பு, பல முரண்பாடுகள் நிறைந்த நிலைக்கு அவரைக் கொண்டு சென்றது. அதாவது நரோதிய முதலாளித்துவ எதிர்ப்பு ஒரு புறமும் மிகவும் வேதனை தருகின்ற ஒட்டுண்ணித்தனம் நிறைந்த அதிகார வர்க்கப் பூர்ஷ்வாப் பாதைக்கு சமுதாயத்தின் மாறுதல் என்பது மற்றொருபுறமும்; உள்ளடக்கத்தில் விவசாயச் சோஷலிசமான மார்க்காயேனிசம் ஒரு புறமும் மறுபுறத்தில் ஜமீன்தார்கள், குலாக்குகள் மற்றும் வட்டி வாங்குவோரிடம் விவசாயிகளைப் பாதுகாப்பற்றவர்களாக்கும் வகையில் வேளாண்மைச் சீர்திருத்தங்களைத் தள்ளிப் போட்டதும்; வெகு ஜனங்களின் செயற்பாட்டைத் தூண்டும் வகையில்

° பேலென்கி அ.ப., இலிச்சேவ் ப.இ. இந்தோனேசியாவில் நிகழ்ந்த சம்பவங்களின் சில பாடங்கள். — ''கம்யூனிஸ்ட்'' எனும் சஞ்சிகை, 1968, № 15. (ருஷ்ய மொழியில்.)

அவர்களிடம் தொடர்ந்து அப்பீல் செய்தது ஒரு புறமும், மறு புறம் முற்றிலும் தலைவரைச் சார்ந்திருக்கும் பழமையான ஆட்சி முறையில் நாட்டை நிர்வகிக்க முயற்சித்ததும்; போர்க் குணம் மிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு ஒரு புறமும், நாட்டைச் சர்வதேச ஏகாதிபத்தியத்தின்மீது சார்ந்திருக்கும் வகையில் கொண்டு சென்ற பொருளாதாரக் குழப்பம் மறு புறமும்; தேசபக்த, சுய தேசியக் கௌரவக் கருத்து, சர்வதேச அரங்கில் இந்தோனேசியாவின் விசேஷமான பங்கில் நம்பிக்கை ஆகியவை ஒரு புறமும், அடிப்படை தேசிய நலன்களை வரையறுக்கும் வகையிலான வெளி உறவுக் கொள்கைகள் மறு புறமும்; ஆக இப்படிப்பட்ட முரண்பாடுகள் நிறைந்த நிலைக்கு அவரைக் கொண்டு சென்றது. தன்னுடைய மக்களை சுகர்ணோ மிகவும் நேசித்ததால் அவர் தேசிய-நரோதியத்திலிருந்து பூர்ஷ்வாக் கோட்பாடுகளுக்குப் பின்வாங்கவில்லை. ஆனால் அதே சமயம் தீர்மானமான மற்றும் அவசியமான விஞ்ஞான சோஷலிசத்தை நோக்கிய பாதையில் முன்னேக்கிச் செல்வதற்கான சக்தியையும் அவர் தன்னுள் கண்டறியவில்லை.

அரசியல் மற்றும் சமூகச் சீரிசைவிற்கு வகை செய்ய வேண்டி அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் அமைப்பு ஆழ்ந்த மாறுதலுக்கு உள்ளாக்கப்படுகின்றது என்பதையும், அதனுடைய உட்பகுதியில் தங்களுடைய நிலையைப் பிரமாண்டமாக வளர்த்துச் செல்லும், மேலும் தங்களுடைய நிலையைப் பாதுகாத்து வளர்ப்பதைத் தவிர வேறு எதுவுமே செய்யாத அதிகார வர்க்கத்தைச் சார்ந்த பூர்ஷ்வா மேற்குடி வர்க்கம் பிறந்து விட்டது என்பதையும் சுகர்ணோ காலப் போக்கில் புரிந்து கொண்டார். இந்த மேற்குடி வர்க்கத்தினர் தீவிரவாத கோஷங்களுக்கும், ''வழி நடத்தப்படும் ஜனநாயகக்'' கொள்கைகளின் பலத்த பிரச்சாரங்களுக்கும் பின்னிலையில் மறைந்து கொண்டு, சுகர்ணோவால் தோற்றுவிக்கப்பட்ட அமைப்பைத் தங்களின் சுய நலன்களுக்காகப் பயன்படுத்திக் கொண்டு அவரைச் சுற்றி வளரவும், பெருகவும் செய்தனர். மேலும் அவரைத் தங்களுடைய வலைகளால் பின்னி, மக்களிடமிருந்து அவரைப் பிரித்து, அவர்களிடையே சுகர்ணோவின் பெயரைக் கெடுத்தனர். ஆனாலும் அவரைத் தங்களின் பக்கம் மாற்றவோ, முழுமையாக அவரைச் ''சாதுவாக்கவோ'' அவர்களால் முடியவில்லை. அதிகார வர்க்கப் பூர்ஷ்வாவால், சுகர்ணோ தோற்றுவித்த அமைப்பைத் தன்னு

டைய நலன்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ள முடிந்தாலும் சுகர்ணேவையே தங்கள் பக்கம் திருப்ப முடியவில்லே. 1965ம் வருடம் ஜனதிபதி—ஆயுதப் படைகளின் மேலதிகாரம் பெற்ற தலேவர்—உயர்மட்ட ராணுவ ஜெனரல்களுக்கிடையே அவ ரைக் கவிழ்ப்பது அல்லது குறைந்த பட்சம் அவருடைய அதி காரங்களேத் தீவிரமாகக் கட்டுப்படுத்துவது, இடதுசாரி சக்திகளே, முக்கியமாக, கம்யூனிஸ்டு மற்றும் இடதுசாரி தேசிய இயக்கங்களே ஒழிப்பது, மேலேய ஏகாதிபத்தியத்துடன் நெருங்கி வருவது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட வலதுசாரி சதித் திட்டம் இருப்பதைப் பற்றி அறிந்து கொள் கிருர்.

ஆயினும் சுகர்ணே மிகுந்த சுய நம்பிக்கையுடன் இருக் கிருர். மேலோட்டமான நடவடிக்கைகளினல் இம்மோதலின் அளவுகளே முடிந்தவரை கட்டுப்படுத்த முயல்கிருர். இரகசியச் சூழ்ச்சியின் காரணத்தைச் சமுதாயத்தில் உள்ள பொது வர்க்க நிகழ்ச்சி போக்குகளுடன் சம்பந்தப்படுத்தாமல், அவருக்கு நம்பகமான காவற்படை, இராணுவம், விமானப் படை மற்றும் கப்பற்படை அதிகாரிகளின் உதவியுடன் இரகசியத் திட்டத்தை ஒடுக்கி விடலாம் எனவும் இரத்தப் பெருக்கைத் தவிர்த்துவிடலாம் எனவும் நம்பினர். தொடர்ந்து ஜனதிபதியும் அவருடைய ஆதரவாளர்களும் இடதுசாரி சக்திகளின் உதவியைப் பெற முயன்றனர். ஆனல் இங் கும் அவருடைய குட்டி முதலாளித்துவ அச்சம்—வெகு ஜனங்களே அரசியல் போராட்டத்தில் ஈடுபடுத்துவதிலான பயம்—அவரைத் தடுத்தது. சுகர்ணேவும், அவருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான ராணுவ அதிகாரிகளும் இடது சாரி சக்திகளின் பங்கு, முக்கியமாக இந்தோனேசியக் கம்யூ னிஸ்டுக் கட்சியின் பங்கு, இரண்டாம் பட்சமானதாக இருக்கும்படி பார்த்துக் கொண்டு, தகராறு ராணுவ நட வடிக்கைகளின் எல்லேகளே மீறிச் சென்று விடாமலிருக்க அனேத் தையும் செய்தனர்.

துரதிருஷ்டவசமாக, இந்தோனேசியக் கம்யூனிஸ்டுக் கட்சி யின் தற்கால தஸ்தாவேஜுகளில் குறிப்பிடப்படுவதைப் போல, ஜனதிபதியின் திட்டங்களேப் பற்றி அறிந்திருந்த அப்போதைய இ. க. கட்சியின் சிறிய தலேமைக் குழு தேவை யான அரசியல் சுய தன்மையைக் காட்டவில்லே என்பதுடன் முக்கியமற்ற, சாதாரணமான சார்பு நிலேயையே வகித்தது.

அதாவது முன் யோசனையின்றி ஜனாதிபதி சுட்டிக்காட்டியதை நிறைவேற்றும் பாதையை மேற்கொண்டது. அத்துடன் வலதுசாரி அபாயத்திலிருந்து குடியரசைக் காப்பாற்றுவதற்காக வெகு ஜனங்களை அணுகவுமில்லை.

ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தோல்வியடைந்ததும் முன் எப்போதும் கண்டிராத அளவுக்கு இடதுசாரி சக்திகளின்மீது கட்டவிழ்க்கப்பட்ட அடக்கு முறையும் இதன் விளைவே ஆகும். வலதுசாரிகளின் திட்டங்கள், முதல் கட்டத்தில் கம்யூனிஸ்டுக் கட்சியையும், இடதுசாரி தேசியவாதிகளையும் ஒழிப்பது, பின்னர் சுகர்ணோவின் எல்லா ஸ்தாபன ஆதரவுகளையும் நீக்கி விட்டு அவருடைய புகழையும் அவரையும், தங்களுடைய நலன்களுக்காகப் பயன்படுத்திக் கொள்வது என்ற விதத்தில் தீட்டப்பட்டிருந்தன. இவ்வாறு, முதல் கட்டத்தில் ஜனாதிபதியின் விதி முழுமையாக முடிவாகவில்லை. அவரை எதிர்த்து நின்ற எதிரிகளில் ஒரு பகுதியினர் அவரைப் பெயரளவுக்கு அரசாங்கத் தலைவராக வைத்திருக்கத் தயாராக இருந்தனர். இதனால் சுகர்ணோவின் ஆதரவாளர்களில் மிதவாதப் பகுதியினரின் ஆதரவை அவர்கள் பெற்றிருக்க முடிந்திருக்கும் என்பதுடன், முக்கியமாக, வலதுசாரிகளின் புதிய ஆட்சி சட்டரீதியாகத் தொடர்ந்து ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்திருக்கும். ஆனால் இதற்காக சுகர்ணோ சில நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டியிருந்தது: அதிகார வரம்பிற்கு உட்படுவது, தன்னுடைய செல்வாக்கினால் கம்யூனிஸ்டுகளை முறியடிக்கும் திட்டங்களை அங்கீகரித்துச் செயல்படுத்துவது, இந்தோனேசியக் கம்யூனிஸ்டுக் கட்சி ஆட்சியைக் கைப்பற்ற முயன்றது என்று அறிவிப்பதன் மூலம் வெளி உறவுக் கொள்கையின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போக்கை மறுப்பது என்பவையே அந்நிபந்தனைகள்.

இந்தப் போராட்டத்தில் சுகர்ணோவின் போக்கு அதனுடைய எல்லா முரண்பாடுகளுடனும் வெளிப்பட்டது. முரண்பாடுகளின் சமரசப்படுத்த முடியாத தன்மை வெளிப்பட்டுவிட்ட நேரத்திலும் கூட, வர்க்க விரோதத் தன்மை தீவிர வடிவத்தை மேற்கொண்டுவிட்ட பின்னும் கூட, நாடு முழுதும் கம்யூனிஸ்டுகள், தொழிற்சங்க மற்றும் விவசாய சங்கங்களின் உறுப்பினர்கள் ஆகியோரின் இரத்தம் பெருக்கெடுத்தோடிய போதும் கூட தன்னுடைய நிலையைத் தெளிவாக நிர்ணயித்து, தனக்கும் தன் எதிரிகளுக்கும் இடையில் ஒருவரைத் தேர்ந்

தெடுக்க வேண்டி மக்களை அறைகூவியழைக்கும் துணிவு அவரிடம் இருக்கவில்லை. அவர் கடைசிவரை உறுதியாக, ஆனால் தன்னுடைய நிலையிலேயே போரிட்டார்: அவருடைய சொற்பொழிவுகளில் தேசிய ஒற்றுமைக்கான அறைகூவலும், நாட்டில் அரசியல் ஒழுங்கு முறையைக் கொணருவதாகவும் இன்ன பிற இத்தகைய போக்குகளும் நிறைந்திருந்தன. எதிரிகள் அவரை உண்மையான ஆட்சியின் ஒவ்வொரு பிடிப்பிலிருந்தும் நீக்குகையில், அவரோ கிட்டத்தட்ட எல்லாக் கூட்டங்களிலும், ''நான் முன்போலவே ஜனதிபதி, பிரதம மந்திரி, ராணுவத்தின் மேலதிகாரம் பெற்ற தலைவர்'' என்று கூறி வந்தார். ஆனால் உடன்பாடும் யுக்தியும் நிறைந்த இத்தலைவர் தான் கடைபிடித்த கோட்பாடுகளை விட்டுக் கொடுக்கவில்லை. அவர் தன் நம்பிக்கைகளைக் கடைசிவரை இழக்கவில்லை; கம்யூனிஸ்டுகளை அவர் கண்டிக்கவில்லை (எதிர் ஆட்சிக் கவிழ்ப்பைப் பற்றிய உண்மையை எடுத்துரைக்க அவருக்குத் துணிவு போதவில்லை என்பது இருக்கட்டும், ஆனால் நேரடியான துரோகத்திற்கு அவர் தயாராக இருக்கவில்லை); வெளி உறவுக் கொள்கைகளைப் பற்றிய கேள்விகளில் தன்னுடைய கருத்தோட்டங்களை மாற்றிக் கொள்ளவும் அவர் தயாராக இருக்கவில்லை. தன்னுடைய அரசியல் வாழ்க்கை முழுவதிலும் சுகர்னோ பலமுறை உடன்பாட்டுக்குச் சென்றார். ஆனால் எப்போதும், சரியோ, தவறோ, அவற்றைத் தன்னுடைய நாட்டு மக்களின் நலன்களுக்காகச் செய்வதாகக் கருதினார். அவருடைய மனித பலவீனங்கள் எப்படிப்பட்டவையாக இருந்த போதிலும், ''தேசத் தந்தையாக'' ஆடம்பரமும் அமைதியும் நிறைந்த வாழ்க்கைக்காகத் தன்னுடைய கொள்கைகளை அவர் விட்டுக் கொடுக்கவில்லை. 1967ம் ஆண்டு தான் அவருடைய எதிரிகள் அவரைத் தங்கள் பக்கம் திருப்ப முயற்சிப்பதைக் கைவிட்டு, அரசின் தலைமைப் பதவியிலிருந்து அவரை அதிகாரப் பூர்வமாக நீக்கும் முயற்சிகளை மேற்கொண்டனர். இவற்றை அடுத்து மூன்று வருட இல்லச் சிறைவாசம், குறுக்கு விசாரணைகள், மேலும் அவரை இழிவுபடுத்தும் வகையில் பத்திரிகைகளில் பிரச்சாரம் செய்வது ஆகியவை தொடர்ந்தன. சுகர்னோவின் உடல் நலம் விரைவில் சீரழிந்து 1970ம் ஆண்டு ஜூன் 21ம் நாள் தன்னுடைய 70வது வயதில் அவர் காலமானார்.

பின்னர் எதிர்பாராதது நிகழ்ந்தது—சுகர்னோவின் பெயர்

மறுபடியும் பிரபலமடைந்தது. மறைந்த தலைவரின்மீது மக்களிடையே ஆழ்ந்த அனுதாபம் தோன்றியது; இது கிழக்கு ஜாவாவிலிருக்கும் அவருடைய கல்லறையின்மீது ஒரு சமாதி கட்டப்பட்டது முதல் நாட்டின் புத்தகக் கடைகளில் அவருடைய நினைவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட புத்தகங்களும், கட்டுரைகளும் நினைவுக் குறிப்புகளும் நிரம்பியது வரைப் பல்வேறு வகைகளில் வெளிப்பட்டது. அரசின் முடிவுப்படி, குடியரசின் முதல் ஜனதிபதியின் கல்லறையில் ஒரு நினைவுச் சின்னம் (mausoleum) கட்டப்பட்டு, ''சுதந்திர இந்தோனேசியாவின் வழிகாட்டி'' என்ற பட்டமும் அரசாங்கப் பூர்வமாக அவருக்கு அளிக்கப்பட்டது.

பிரச்சினையின் உணர்ச்சிப் பூர்வமான பக்கத்தை வேறு புறம் தள்ளி வைத்து ஆராய்ந்தால், சுகர்ணோவின் பணிகள் மற்றும் சித்தாந்தங்களின் மீதான ஆர்வம் புத்துணர்ச்சி பெற்றதானது, இந்தோனேசியாவின் வளர்ச்சிப் பாதையைப் பற்றிய கேள்வியைச் சுற்றி எழுந்த சித்தாந்தப் போராட்டத்தின் ஒரு வகையே என்பதைக் காணலாம். மறைந்த தலைவரின் ஆதரவாளர்களும் அவர் மீது மரியாதை கொண்டிருப்பவர்களும் கூட, 1960ம் வருடங்களின் முதல் பாதியில் செயல்படுத்தப்பட்ட ''வழி நடத்தப்படும் ஜனநாயக'' அரசியல் கொள்கையை, மறுபடியும் இப்போது நடைமுறைக்குக் கொணருவதை ஏற்றுக்கொள்வார்களா என்பது சந்தேகமே. கடந்த இருபது ஆண்டுகளில் இந்தோனேசியச் சமுதாயம் அடைந்த அரசியல் அனுபவம் பிரம்மாண்டமானது ஆகும். சுகர்ணோவின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்த 1965ம் வருடக் கடும் நெருக்கடி நிலையே, அவருடைய அரசியல் கொள்கையின் பல அம்சங்களின் விமர்சன மதிப்பீட்டின் தேவையை எடுத்துரைக்கின்றது. எனவேதான் 1982ம் வருடம் பாராளுமன்றத் தேர்தல்களில் சுகர்ணோவின் பெயரைத் தன்னுடைய சின்னமாகவும், பதாகையாகவும் கொண்டு போட்டியிட்ட இந்தோனேசிய ஜனநாயகக் கட்சியானது, இதன் பேரில் முழுமையான, பலனுள்ள ஒரு செயல் திட்டத்தை முன் வைக்காததனால் கணிசமான அளவு வாக்காளர்களின் ஆதரவைப் பெறவில்லை. ஆனால் இந்தோனேசியாவில் புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கு தீவிரமாகத் தடைப்படுத்தப்பட்ட நிலையில், தேசிய அரசுரிமை பன்னாட்டு வணிக நிறுவனங்களின் (Transnational corporations) மிரட்டலுக்குத் தொடர்ந்து

உள்ளாகியுள்ள நிலைமைகளில், மேலும் சமுதாய, வர்க்கச் சமமின்மையும், சமூக-உடைமை வேறுபாடுகளும் பெருகும் சூழ்நிலைகளில் சுகர்ணோவால் பிரகடனப்படுத்தப்பட்ட பல இலட்சியங்கள் மக்களின் கவனத்தை மறுபடியும் கவர்ந்தது. இந்தோனேசியன் அப்சர்வர் *(Indonesian Observer)* ஒரு தலையங்கத்தில் (1970ம் ஆண்டு ஜூலை 9ம் தேதி) எழுதியது: ''... அரசியல் சுதந்திரம், சொந்த சக்திகளின் (சுய பொருளாதாரத்தின் — அ. யூ.) மீதான ஆதாரம் மற்றும் சுய தேசியக் கலாச்சாரம் போன்ற சுகர்ணோவின் அபிலாஷைகளின் மதிப்பீட்டுடன் பல்வேறுபட்ட தேசியவாதிகள் ஒப்புதல் தெரிவிக்கின்றனர்''. இந்தோனேசியப் பாராளுமன்றத்தின் உறுப்பினர் யூசுப் ஹசீம், ''... தேசியக் கௌரவம், பொருளாதாரச் சுதந்திரம், அரசியல் செல்வாக்கு ஆகியவற்றுக்காக மக்கள் மறுபடியும் பாடுபட ஆரம்பித்துள்ளனர். இவை அனைத்தையும் பாங் கர்ணோவின் (சுகர்ணோவின் — அ.யூ.) கோட்பாடுகளில் காண முடியும்'' என்று குறிப்பிட்டார்*.

கிராமப்புற மற்றும் நகர உழைப்பாளிகளைச் சுரண்டுவது பெருகியதும், வெறும் பண உறவுகள் முதலிடத்திற்கு வந்ததும், ஆகிய இரண்டும் சுகர்ணோவின் முதலாளித்துவ எதிர்ப்பு மற்றும் அனைவருக்கும் சம உரிமை அளிப்பது என்ற கோஷங்களையும், மேலும் அவரால் சட்டமாக்கப்பட்ட வேளாண்மைச் சீர்திருத்தங்களையும் பற்றிய நினைவுகளை அளித்ததுடன் அவை நிறைவேறவில்லையே என்ற ஏக்கத்தையும் ஏற்படுத்தின. முடிவாக, அவர் ஆட்சியில் இருந்தபோது நாட்டில் வெகுஜன கம்யூனிஸ்டுக் கட்சியும், பல மில்லியன் ஜனநாயக ஸ்தாபனங்களும், அவற்றின் நடைமுறைப் பணிகளில் பல கடினங்களும், தவறுகளும் இருந்த போதிலும் அவை நடைமுறையில் இயங்கின என்ற உண்மையே உடைமை வர்க்கங்களைச் சிறிது கட்டுப்படுத்தியதுடன், அவ்வுடமை வர்க்கங்கள் தங்களின் போக்கை மாற்றிக் கொள்ளவும் நிர்ணயமான சில சமூக இணக்கங்களுக்கு இடம் தரவும் அவற்றை நிர்ப்பந்தித்தன என்பவற்றையும் நினைவுபடுத்துகின்றன. வேறு விதத்தில் கூற முற்பட்டால் சுகர்ணோவின் ஆட்சி காலத்தில் அவரால் அறிவிக்கப்பட்ட, ஆனால் நடைமுறையில் செயலாக்கப்படாத குறிக்கோள்களும் லட்சியங்களும், அவற்றுடன்

---

* *Matahari*, 1978, N 2, p. 6.

அவருடைய காலத்தில் அடைந்த உண்மையான ஜனநாயக வெற்றிகளுமே, இந்தோனேசிய ஜனநாயக வட்டங்களைச் சுகர்ணோவின் அரசியல் பணிகளையும், கொள்கைகளையும் மறுபடி அணுகத் தூண்டுகின்றன எனக் கூறலாம். மேலும் விஞ்ஞான சோஷலிச சித்தாந்தத்தைப் பிரச்சாரம் செய்வதை நாட்டில் தடை செய்த பின்பு சுகர்ணோவின் நரோதியக் கருத்துக்கள் இடதுசாரிகளுக்கு சட்டபூர்வமான அரசியல் அளவுகோல் (Political Spectrum) ஆகியது. அத்துடன் இது அவற்றிற்கு, சந்தேகமின்றி, கூடுதலான கவர்ச்சியை அளிக்கிறது.

இத்தகைய நிலைமைகளில், இந்தோனேசிய ஆளும் வட்டாரங்கள் மறைந்த ஜனாதிபதியின் தனிச்சிறப்புகளை ஓரளவு மறுபடி பழைய நிலைக்குக் கொண்டு வருவதன் தேவையையும், தங்களின் செய்கைகளை அவருடைய கருத்தோட்டங்களின் மாதிரியில் மாற்றி அமைப்பதன் தேவையையும் வெளிப்படுத்தின. இந்த நிகழ்ச்சிப் போக்கு, ஆளும் வட்டாரங்கள் தங்களின் அரசியலின் தேசியவாதப் போக்குகளை தீவிரப்படுத்தும் தன்மையை நோக்கிய குறிப்பிட்ட பரிணாமத்துடன் தொடர்பு கொண்டதா இல்லையா என்பதைக் காலம் காட்டும். அதே வேளையில் 1945ம் வருட அரசியல் சட்ட அமைப்பு மற்றும் பஞ்சசீலக் கொள்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தோனேசியாவின் சமுதாயச் சக்திகளை ஒன்றிணைக்கும் நோக்கத்துடன் தற்கால இந்தோனேசியாவின் அதிகாரப் பூர்வமான சித்தாந்தவாதிகள் இந்தக் கொள்கைகளை உருவாக்கியவரிடமிருந்து தனித்து விலகுவது பயனுள்ளது அல்ல எனக் கருதுகிறார்கள். இன்னும் அவற்றை இன்று நடைமுறையில் புகுத்துவதைப் பற்றியும், தற்காலத்தில் அவர்கள் தரும் அவற்றிற்கான விளக்கங்களையும் பற்றி கருத்து கூற அவரால் முடியாது அல்லவா? முஸ்லிம் வட்டாரங்களின் எதிர்ப்புத் தீவிரமடைவது, மதத்தை அரசியல் வாழ்க்கையிலிருந்து பிரிக்க வேண்டும் என்ற சுகர்ணோவின் கருதோட்டங்களின் சிறப்புத் தன்மைக்கு விசேஷ முக்கியத்துவத்தைக் கொடுக்கின்றது. மறு புறத்தில் இந்தோனேசியாவில் வர்க்க விரோதங்கள் வேகமாக முற்றி வரும் நிலைமைகளில், மற்றும் கடந்த வருடங்களில் தொழிலாளர் இயக்கங்கள் வளர்ந்துள்ள நிலைமைகளில் வர்க்க சமரசம், இந்தோனேசியச் சமுதாயத்தின் சமூக ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பற்றிய சுகர்ணோ

வின் முறையிலான பிரச்சாரம் உழைப்பாளிகளின் வர்க்க உணர்வு வளர்வதைத் தடுக்கும் சாதனமாகவும் மாறுகிறது.

சுகர்ணோவின் உண்மையான கற்பனுவாதம் நிறைந்த புரட்சிகர உள்ளாற்றலுக்காகவே அவரைத் தூக்கி எறிந்த காரணத்தால், சுகர்ணோவின் எதிரிகள் அவருடைய மற்ற எல்லாவிதத் தவறுகளேயும் தவருன நம்பிக்கைகளேயும் பொருளாதாரக் குழப்பத்தையும் வெளி உறவுக் கொள்கையில் இருந்த தவருன கணக்கீடுகளேயும் மன்னிக்கத் தயாராக இருக்கின்றனர். அதனுல் சுகர்ணோவைப் பற்றிய இன்றைய விமர்சனத்தின் முக்கியப் புள்ளியாக உழைப்பாளிகளின் சுய சித்தாந்த, சுய கட்சி நிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் நாசகோம் (Nasakom) கோட்பாடுகளும், ஜனநாயகச் சக்திகளே ஐக்கியப்படுத்தும் கருத்தும் விளங்குவது தற்செயலானது அல்ல. மறைந்த தலேவரின் மற்ற பல கருத்தோட்டங்கள் தொடப்படாமல் இருக்கின்ற நிலேயிலும் அல்லது அவை சில மாற்றங்களுக்கு உள்ளாக்கப்பட்டு அவற்றின் நடைமுறைத் தன்மை அங்கீகரிக்கப்பட்டாலும், மேலே கூறப்பட்ட பிரச்சினேயில் அவருடைய எதிரிகள் உடன்பாடற்றவர்களாகவே இருக்கின்றனர்.

சுகர்ணோ—அவருடைய எல்லாச் சேவைகளுடனும், தவறுகளுடனும் கூட, அவருடைய தீர்க்கதரிசனம் மற்றும் கட்டுக்குள் அடங்கிய தன்மையுடனும் அவருடைய திறமையுடனும் மனித பலவீனங்களுடனும் உறுதியுடனும் தீர்க்கமாக முடிவெடுக்கும் திறமையின்மையுடனும்—இவை எல்லாவற்றுடனும் இந்தோனேசிய மக்களின் தேசிய மற்றும் சமூக விடுதலேப் போராட்ட சரித்திரத்திற்கு, மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் காலனி ஆதிக்க எதிர்ப்பு வரலாற்றிற்குச் சொந்தமானவராகவே விளங்குகின்ருர். சுகர்ணோவின் அனுபவங்களேப் போன்றே, அவர் நாட்டின் தலேமையில் நின்ற சகாப்தத்தின் அனுபவமும், இந்தோனேசிய மக்களின் பல்வகைப்பட்ட, வீரம் நிறைந்த வரலாற்று அனுபவத்தின் ஒரு பகுதியாக விளங்குகின்றது.

# கமால் அப்துல் நாசர்

கமால் அப்துல் நாசர் எகிப்து நாட்டின் மற்றும் அரபு தேசிய விடுதலை இயக்கத்தின் புகழ் பெற்றத் தலைவர் ஆவார்.

1918ம் ஆண்டு ஜனவரி 15ம் தேதி அசியூட் (Asiut) சமஸ்தானத்தில் (எகிப்தின் மேல் பகுதி) உள்ள பெனி மூர் (Beni Mor) என்ற நகரத்தில் ஒரு அஞ்சல் அலுவலரின் குடும்பத்தில் இவர் பிறந்தார். தனது 8வது வயதில் கெய்ரோ நகர உயர்நிலைப் பள்ளியான ''அன் நஹ்தா அல்மிஸ்ரியாவில்'' சேர்ந்து 1935ம் வருடம் அப் பள்ளியில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார்.

நாசர் தன்னுடைய இளம் வயதிலேயே அரசியலில் ஈடுபாடு கொண்டிருந்தார். நாட்டில் இருந்த ஆங்கில ஆதிக்கவாதிகளுக்கு எதிராகப் பள்ளி மாணவர்களின் ஆர்பாட்ட ஊர்வலத்திற்கு அவர் ஏற்பாடு செய்த போது அவருக்கு வயது பதினாறு தான்.

1937-39ம் வருடங்களில் அரசு ராணுவக் கல்லூரியில் பயின்று General Staff கல்லூரியில் இளைய லெப்டினன்ட் ஆக முதல் வகுப்பில் தேர்ந்தார். 1939-42ம் ஆண்டுகளில் எகிப்திலும் சூடானிலும் இருந்த பல்வேறு எகிப்திய ராணுவ பிரிவுகளில் பணி புரிந்தார்.

1942ல் ராணுவ அதிகாரிகளுக்கு இடையில் ''சுதந்திர ராணுவ அதிகாரிகள்'' என்ற சட்ட

விரோதமான ஒரு ஸ்தாபனத்தைத் தோற்றுவிக்கிறார். 1948-49ம் வருடங்களில் நடைபெற்ற பாலஸ்தினியப் போரில் அவர் தீவிரமாகப் பங்கு கொள்கிறார். 1949–1952ம் வருடங்களில் அவர் General Staff கல்லூரியில் ஆசிரியராக வேலை செய்கிறார்.

1953ம் ஆண்டு ஜனவரியிலிருந்து 1954ம் ஆண்டு மே மாதம் வரையில் ''விடுதலை ஸ்தாபனம்'' என்ற அமைப்பின் தலைமைச் செயலாளராகவும் (பின்னர் இந்த அமைப்பு தேசிய ஐக்கிய கட்சியாக மாறியது). 1954ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 1957ம் ஆண்டு அக்கட்சி கலைக்கப்பட்ட வரை அதன் தலைவராகவும் விளங்கினார்.

1953ம் ஆண்டு மே முதல் பிப்ரவரி 1954ம் ஆண்டு வரை தலைமை புரட்சிக் கவுன்சிலின் உதவித் தலைவராகவும், 1953–ஜூன் முதல் 1954ம் ஆண்டு பிப்ரவரி முடிய பிரதம மந்திரி நாகிபின் (M. Naguib) முதல் உதவியாளராகவும் இருந்தார். 1953ம் ஆண்டு ஜூன் முதல் அக்டோபர் முடிய நாகிபின் அரசாங்கத்தில் உள்துறை அமைச்சராகப் பணி புரிந்தார்.

1954ம் ஆண்டு மார்ச் மாதமும் பின்னர் 1956ம் ஆண்டு ஜூன் முதல் ஆகஸ்ட் முடிய எகிப்தின் ராணுவப் பொது கவர்னர்-ஜெனரலாகவும், 1954ம் ஆண்டு ஏப்ரல் முதல் 1956ம் ஆண்டு ஜூன் முடிய பிரதம மந்திரியாகவும், தலைமை புரட்சிக் கவுன்சிலின் தலைவராகவும் விளங்கினார்.

1956ம் ஆண்டு ஜூன் முதல் தன்னுடைய வாழ்நாள் முடியும் வரை எகிப்துக் குடியரசின், பின்னர் ஐக்கிய அரபுக் குடியரசின் முதல் ஜனாதிபதியாக விளங்கினார். அவ்வாறே அரசின் தலைமைப்

பதவி, ராணுவத்தின் முதல் தலைவர் ஆகிய பதவிகளை வகித்ததுடன் வெகுஜன அரசியல் அமைப்பான அரபு சோஷலிச ஐக்கிய ஸ்தாபனம் முதலான இன்னும் பிறவற்றிற்கும் தலைமை தாங்கினார்.

கமால் அப்துல் நாசர் 1958, 1965, 1968, 1970 ஆகிய வருடங்களில் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்தார்.

1956ம் ஆண்டு ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பைத் தூக்கியெறிய அவர் செய்த பணிகளுக்காகவும், சர்வதேச பதட்ட நிலையைத் தணிக்கவும், அமைதியை உலகில் நிலைநாட்டவும் அவர் செய்த சேவைகளுக்காகவும், சோவியத் மக்களுக்கும் ஐக்கிய அரபுக் குடியரசின் மக்களுக்கும் இடையே நட்பையும் ஒத்துழைப்பையும் உறுதிப்படுத்த அவர் மேற்கொண்ட பிரசித்தி பெற்ற பங்கை கவனத்தில் கொண்டு அவருக்கு 1964ம் ஆண்டு ''சோவியத் ஒன்றிய வீரர்'' என்ற பட்டமும் ''லெனின் விருதும்'' தங்க நட்சத்திரப் பதக்கமும் அளிக்கப்பட்டன.

கமால் அப்துல் நாசர் 1970ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 28ம் தேதி திடீரெனக் காலமானார்.

எகிப்தின் மிகவும் பிரசித்திப் பெற்ற அரசாங்க, அரசியல் பிரமுகரான கமால் அப்துல் நாசரின் பெயரோடு எகிப்து மக்களின், அரபு உலகின் பிற மக்களின் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றின் மிகச் சிறப்பான கட்டங்கள் தொடர்பு கொண்டவை. தன்னுடைய நாட்டை ஏகாதிபத் தியத்தின் தாக்கத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதிலும் அதற்கு உண்மையான சுய உரிமையை அளிக்க வேண்டும் என்பதிலும் அவர் கொண்டிருந்த உறுதியான நாட்டமே எகிப்தின் முதல் ஜனாதிபதியான நாசரைப் பிறரிடமிருந்து தனித்துக் காட்டியது. பொருளாதாரச் சுதந்திரமின்றி உண் மையான தேசியச் சுதந்திரத்தை அடைவது என்பது முடியாத காரியம் என்பதை அவர் தெளிவாகப் புரிந்து கொண்டார்.

எகிப்தில் நடைபெற்ற நில உடைமை எதிர்ப்பு, வேளாண் மைச் சீர்திருத்தங்கள், ஆங்கில ராணுவத்தை நாட்டை விட்டு நீக்கியது, சூயஸ் கால்வாய் தேசிய மயமாக்கப்பட்டது, மேலும் 1956ம் ஆண்டு நடந்த ஆங்கில–பிரெஞ்சு–இஸ்ரேல் ஆக்கிரமிப்பை எதிர்த்துத் தவிர்த்தது போன்ற முக்கியமான சம்பவங்கள் குறிப்பாக நாசரின் சேவைகளோடு தொடர்பு கொண்டவை. அவர் மேற்கொண்ட இப்பணிகள் நாட்டில் ஏகாதிபத்தியத்தின் நிலையைத் தகர்த்ததுடன் சர்வதேச அரங்கில் எகிப்தின் நிலையை உறுதியாக்கி, அதனுடைய தேசிய செல்வாக்கை வளரச் செய்தன.

50, 60களின் மத்தியில் அரபு மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் எகிப்தை முன்னிலையில் வைத்த அந்நாட்டின் சுதந்திர வெளி உறவுக் கொள்கையைத் உருவாக்கியதிலும் செயல்படுத்தியதிலும் நாசரின் பங்கு மிகப் பெரியதாகும். அரபு மக்களின் தேசிய சுதந்திரப் போராட்டத்தில் அவர் களின் ஒற்றுமைக்காக அவர் இடையறுது போராடினுர். பிற இளைய தேசிய அரசுகளின் புகழ் பெற்ற பிரமுகர்களுடன்

ஒன்றுக அவர் கூட்டு சேரா இயக்கத்தின் தலைமையில் நின் ருர். மேலும் கூட்டு சேரா இயக்கத்தின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போக்கின் தீவிர ஆதரவாளராகவும் இருந்தார். எகிப்திற்கும் சோவியத் யூனியனிற்கும் இடையிலான சர்வாம்ச ஒத்துழைப்பையும், நட்பையும் தொடர்ந்து ஆதரித் தார். எகிப்தின் பொருளாதார, அரசியல் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்காக நாசர் உறுதியாகவும் தொடர்ந்தும் போராடியது அவர் ஒரு புரட்சியாளராக பரிணமித்ததுடன் பிணைந்தது. ''ஒரு தேசியக் குடும்பமாக'' எகிப்திய சமுதாயத் தின் ''ஒழுங்கான வளர்ச்சிக்கான அரசியல் கொள்கையின்'' சார்பாளராக இருந்ததிலிருந்து, ''சொந்த'' பூர்ஷ்வாவின் உறுதியான எதிரியாக மாறியது வரையிலான சிக்கலான பாதையை அவர் கடந்தார். 60வது வருடங்களில் எகிப்தின் சோஷலிசத் திசை அமைவுப் பாதையைத் தயாரித்த பெருமை முதன்மையாக அவரைச் சாரும்.

முடியரசுக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிரான, மேலும் எகிப்துக் குடியரசு தோன்றக் காரணமாக இருந்த எகிப்திய (ஜூலைப்) புரட்சிக்கு ஆரம்பப் புள்ளி வைத்த ஆட்சிக் கவிழ்ப்பை நாசரின் தலைமையில் இரகசியமாகச் செயல்பட்ட குழுவான ''சுதந்திர ராணுவ அதிகாரிகள்'' செய்து முடித்த திலிருந்து முப்பதிற்கும் மேலான வருடங்கள் ஏற்கெனவே கடந்து விட்டன. தன்னுடைய தனித்தன்மைகளுடனும் நிதான முரண்பாட்டுப் போக்குகளுடனும், குறிக்கோள் முழு தாக நிறைவேருத அரைகுறைத் தன்மையுடனும்கூட இந்தப் புரட்சி நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் முக்கியமான நிலைகளை அடைந் தது. எகிப்திய மக்களின் பொதுத் தேசிய நலன்களைப் பாது காத்த அதே வேளையில் ஜூலைப் புரட்சியானது அண்டை அரபு நாடுகளின்மீது பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியது. அந்நாடுகளின் முற்போக்கு சமூக-பொருளாதார மற்றும் அரசியல் நிகழ்ச்சிப் போக்குகளைத் துரிதப்படுத்தியதுடன் தேசிய, சமூக விடுதலைக்கான அரபுகளின் போராட்டத்தைத் தீவிரப்படுத்தவும் செய்தது.

அரசு மாற்றத்தைச் செய்த எகிப்திய ராணுவ அதிகாரி கள் எந்த ஒரு கட்சியையோ அல்லது அரசியல் ஸ்தாபனத் தையோ சார்ந்தவர்களாக இருக்கவில்லை. ராணுவ கார்ப்பரே ஷன்களின் நலன்களையும் தனிப்பட்ட நட்புறவு மற்றும் தீவிர

தேசபக்தி ஆகியவற்றைத் தவிர முடியரசின் மீதும் அன்னியரின் ஆதிக்கத்தின் மீதும் முதலாளித்துவ-நிலப்பிரபுத்துவ வர்க்கத்தினரின் அரசியல் கட்சிகளின் அரசியல் கொள்கைகளின் மீதும் கொண்டிருந்த திருப்தியின்மையும் அவர்களை ஒன்றிணைத்தன. தேசியவாதம் மற்றும் அரபுவாதம் ஆகியவை அவர்களின்மீது தீவிர தாக்கம் செலுத்தின. வேறு வார்த்தைகளில் கூற முற்பட்டால், இரண்டு அடக்கு முறைகளுக்கு—ஃபாரூக்கின் நிலப்பிரபுத்துவ முடியரசு மற்றும் ஆங்கிலேயர்களின் தலைமையிலான ஏகாதிபத்திய வல்லரசுகளின் அடக்கு முறைகளுக்கு மேலும் அடங்கி செல்ல விரும்பாத பல மில்லியன் எகிப்து மக்களின் விருப்பத்தையே ''சுதந்திர ராணுவ அதிகாரிகள்'' வெளியிட்டனர் எனக் கூறலாம்.

''சுதந்திர ராணுவ அதிகாரிகள்'' ஸ்தாபனத்தின் தலைமை அங்கத்தில்—புரட்சித் தலைமைக் கவுன்சிலில்—பல்வேறுபட்ட சமூக வகுப்புகளின் பிரதிநிதிகள் அடங்கியிருந்தனர். அவர்களில் ஒவ்வொருவரும் தங்கள் வர்க்கத்தின், தங்கள் சமூக வகுப்பின் அல்லது சமூகக் குழுவின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில், நாட்டின் பிரச்சினைகளுக்குத் தங்களுடைய சொந்தத் தீர்வுகளை, குறிப்பாக அவைதான் மிகவும் நம்பகரமானவை என்று எண்ணி, அத்தீர்வுகளை புரட்சித் தலைமைக் கவுன்சிலில் முன்வைத்தனர். ஆகவே புரட்சியின் ஆரம்ப காலகட்டத்தை (50வது வருடங்கள், அதாவது உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய தேசியப் பிரச்சினைகளின் தீர்வுகளுக்கான முதல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட நேரம்) நாட்டின் சமூக-பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சித் துறையில் பரீட்சார்த்த காலம் என்று சித்தரிக்கலாம். நாசர் தன்னுடைய **புரட்சியின் தத்துவஞானம்** என்ற புத்தகத்தில் கீழ்க் கண்டவாறு எழுதினர்: ''நம்முடைய குறிக்கோள் என்ன? அதை அடைவதற்கான வழிமுறைகள் யாவை? முதல் கேள்வியின் பதில்—சுதந்திரத்தை அடைவது. இரண்டாவது கேள்வியான அதை அடைவதற்கான வழிமுறைகள் எவை என்பது—ஜூலை 23ம் தேதி வரையிலான நம்முடைய நெடும் விவாதங்களின் விஷயமாகும்''*. சாரத்தில் புரட்சித் தலைமைக் கவுன்சிலின் உறுப்பினர்கள் உண்மையான தேசிய சுதந்திரத்தை அளிக்கவல்ல சிறந்த வழிகளைப் போகும் போக்

---

* Nasser G.A. The Philosophy of the Revolution. Buffalo, 1959, p. 28.

கில் தேடினர். இன்னும் முழுமையடையாத பிற ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் சுதந்திர வளர்ச்சி அனுபவங்களைப் பயன்படுத்த முயன்றனர். அது எகிப்தின் எல்லா சூழ்நிலைமைகளுக்கும் பலவற்றில் பொருந்திவரவில்லை என்பது மட்டுமல்லாமல் பல தவறுகள் ஏற்படவும் வழிவகுத்தது. எல்லாவித பலவீனங்களையும் கொண்டிருந்த போதிலும், எகிப்திய புரட்சியின் தலைமை, புரட்சியின் ஆரம்பக் கட்டங்களிலேயே எகிப்தின் சமூக-பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சியின் முக்கியப் பிரச்சினைகளுக்குப் பதிலைக் கண்டறிவதில் வெற்றி கண்டது. இதில் நாசரின் பங்கு மிகப் பெரியதாகும்.

ஆரம்பத்தில் ''சுதந்திர ராணுவ அதிகாரிகள்'' அமைப்பின் அரசியல் திட்டமாக புரட்சியின் ''ஆறு கோட்பாடுகள்'' விளங்கின. நாசரின் நேரடியான உழைப்பின்கீழ் 1951ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இவை பிரிட்டிஷ் ஆக்கிரமிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், நிலப்பிரபுத்துவச் சமுதாயத்தையும், ''மூலதனம்'' அரசாங்கத்தின்மீது கொண்டிருக்கும் அதிகாரத்தை ஒழிக்கவும், மேலும் சமூக நீதி முறையை அடையவும், வலிமை மிக்க தேசிய ராணுவத்தைத் தோற்றுவிக்கவும், முடிவாக நாட்டில் ஜனநாயகத்தை நிலை நாட்டவும் கோரின. இத்தகைய முடிவுகள் ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் நிலப்பிரபுத்துவச் சமுதாய எதிர்ப்புப் புரட்சியின் பிரச்சினைகளுக்கு முழுமையாகப் பதிலளிப்பவையாக இருந்தன. மேலே கூறப்பட்ட ''ஆறு கோட்பாடுகளும்'' சாரத்தில் ராணுவப் புரட்சியாளர்களின் சித்தாந்த-அரசியல் கொள்கைப் பரிணாமத்தின் தொடக்கப் புள்ளியாக இருந்தன. ஆயினும் ஜூலைப் புரட்சிக்குப் பின்பு உடனேயே ''சுதந்திர ராணுவ அதிகாரிகள்'' அமைப்பின் தலைமையில் கருத்து வேறுபாடுகள் தோன்றின.

''ஆறு கோட்பாடுகளில்'' முன்வைக்கப்பட்ட குறிக்கோள்களைத் தொடர்ந்து திட்டவட்டமாக்குவதும் சிறப்பாக அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான நடைமுறைச் சாத்தியமான வழி முறைகளைத் தேடுவதும் ''சுதந்திர ராணுவ அதிகாரிகள்'' அமைப்பின் தலைவர்களுக்கிடையே தீவிர சித்தாந்த-அரசியல் போராட்டத்தை ஏற்படுத்தியது. அது அவர்களுக்கிடையே ஏற்பட்ட முதல் குறிப்பிடத்தக்க பிளவுக்கு வழிவகுத்தது.

ஜெனரல் முகமது நாகிபின் தலைமையிலான ''சுதந்திர ராணுவ அதிகாரிகள்'' அமைப்பின் ஒரு பகுதியினர், ஜூலைப் புரட்சியை முடிவடைந்ததாகக் கருதி, ஜனநாயகப்படுத்தும் நிகழ்ச்சிப் போக்கை பாராளுமன்ற அமைப்பை நிறுவுவதுடன் கட்டுப்படுத்த வேண்டும் என்று கோரினர். ஆனால் அதே சமயத்தில் நாசரும் அவர் தலைமை தாங்கிய புரட்சித் தலைமைக் கவுன்சிலின் தீவிரவாதிகளும் ''ஆறு கோட்பாடுகளில்'' கூறப்பட்ட சமுதாய சீர்திருத்தங்களைத் தொடர்ந்து செய்ய வேண்டுமென்று கோரினர். அவர்களுக்கிடையே ஆரம்பித்தப் போராட்டம் 1954ம் ஆண்டு நவம்பரில் புரட்சித் தலைமைக் கவுன்சிலின் தீவிரவாதிகளின் வெற்றியோடு முடிவடைந்தது.

தத்துவ ரீதியாகப் பார்த்தால், ''சுதந்திர ராணுவ அதிகாரிகள்'' ஸ்தாபனத்தில் நிகழ்ந்த இந்தப் போராட்டம் எகிப்தில் சமூகப் புரட்சியை நிறைவேற்ற வேண்டிய அவசியத்தை பற்றிய நாசரால் முன்வைக்கப்பட்ட கொள்கைகளின் மூலம் வெளிப்பட்டது. சரியாகக் கூறினால், எகிப்திய மக்களின் முன் ஒரே நேரத்தில் இரண்டு புரட்சிகளை நிறைவேற்ற வேண்டிய குறிக்கோள்களை அவர் முன்வைத்தார். அவையாவன: ஒன்று, நாட்டை ஆங்கிலேயரிடமிருந்து விடுவிக்கவும் முடியரசைக் கவிழ்க்கவும் செய்யும் அரசியல் புரட்சி. மற்றொன்று, ''எகிப்தியச் சமுதாயத்தின் எல்லா உடைமையற்ற வர்க்கங்களின் மற்றும் வகுப்புக்களின் நலன்களுக்காகவுமான'' அவர்களைச் ''சுரண்டுவோரின் எண்ணங்களுக்கு''* எதிராகச் செலுத்தப்பட்ட சமூகப் புரட்சி ஆகியவைகளாகும். இரண்டு புரட்சிகளையும் ஒரே சமயத்தில் நிறைவேற்றுவது என்பதைப் பற்றிய சிந்தனை அவருடைய அனுமானத்தை, அதாவது தேசியச் சுதந்திரத்திற்கான போராட்டத்தையும், 50ம் ஆண்டுகளின் மத்தியில் எகிப்திய சமுதாயத்தின் சமூக நியாயங்களுக்கான போராட்டத்தையும் இயல்பாக ஒன்றிணைக்க வேண்டிய அவசியத்தை அவர் புரிந்து கொண்டதை பிரதிபலித்தது.

ஆயினும் நாசர் புரட்சிக்கு முன்பும், புரட்சிக்குப் பின்பு சில வருடங்களும் எகிப்தில் வர்க்கங்களும் வர்க்கப் போராட்

---

* நாசர் க.அ. எகிப்துப் புரட்சியின் பிரச்சினைகள். தேர்ந்தெடுக்கப்பட்ட 1952 — 1970 வருட சொற்பொழிவுகள். மாஸ்கோ, *1979*, பக்கங்கள் *13, 18.*

டமும் இருப்பதை முற்றிலும் மறுத்தார் என்பதைக் குறிப்பிட வேண்டும். இரண்டு புரட்சிகளேயும் ஒரே சமயத்தில் நிறை வேற்றுவதைப் பற்றிய சிந்தனே எதார்த்த முரண்பாட்டை தன்னுள் கொண்டிருந்தது: அரசியல் புரட்சி, தேசியத்தை ''ஐக்கியப்படுத்தியது'' என்ருல் சமூகப் புரட்சியோ அதன் பிளவுக்கு வழிவகுத்தது. எகிப்திய சமுதாயத்தில் இருந்த பல்வகைப்பட்ட வர்க்கங்களின் மற்றும் சமூக வகுப்புகளின் நலன்கள் ஒன்றுடன் ஒன்று வேறுபட்டன என்பதே அதற்குக் காரணமாக விளங்கியது.

நாசரும் அவருடைய ஆதரவாளர்களும் புரட்சியின் போதும் அதற்குப் பின்னரும் ராணுவம் தலைமை தாங்கிஞல் இந்த முரண்பாடு தீர்ந்து விடும் என்று கருதினர். மக்களிடமிருந்து பிரிந்து வந்த ராணுவம், அவர்களுடனுன உறவை இழந்து விட்ட, ''வர்க்கங்களுக்கு அப்பாற்பட்ட சக்தி'' என்று அவர்கள் கருதினர். ராணுவத்தின் பங்கைப் பற்றி இத்தகைய அர்த்தத்தைக் கொண்டிருந்தபடியால் நாசரும் அவருடைய சார்பாளர்களும் ''மக்களின் மற்றும் புரட்சிகரத் தலைமையின் (ராணுவம்) அபிலாஷைகள் தீர்மானமான திட்டமாக உருவாக்கப்படும் வரையில் ஆட்சியில் இருப்பது''* அவசியம் என்பது இயற்கையானது என்றும் கருதினர். நாட்டில் நிர்வாக ஆட்சியை ராணுவத்தின் கைகளில் ஒரு முனைப்படுத்துவதும், அரசாங்க அமைப்பை முடிந்தவரை மையப்படுத்துவதும், ''மத்தியஸ்தர்கள்'' இல்லாமலேயே அதாவது அரசியல் ஸ்தாபனங்கள் இல்லாமலேயே நாட்டை நிர்வகிப்பது என்பதும் மேற்கூறப்பட்ட கருத்திஞல் நியாயமாக்கப்பட்டது.

அரசின் எல்லா அதிகாரங்களேயும் தங்களுடைய கைகளில் ஒரு முனைப்படுத்திக் கொண்டு நாசரும் அவருடைய ஆதரவாளர்களும் இருவிதங்களில் செயல்பட ஆரம்பித்தனர். ஒன்று, தீவிரமான அரசாங்கத்தை நிறுவுதல், மற்ருென்று நாட்டின் சமூக-பொருளாதார வளர்ச்சியைப் பற்றிய அடிப்படைக் குறிக்கோள்களே நிறைவேற்றக் கூடிய பலனுள்ள

* ஹாலேத் மோஹி-ஏத்தின். எகிப்துப் புரட்சி. அதன் வளர்ச்சியும், எதிர்காலமும். — சமாதானம் மற்றும் சோஷலிசத்தின் பிரச்சினைகள். பிராகா, 1966, № 8, பக்கம் 39.

சட்டப்பூர்வமான முன்முயற்சிகளை மேற்கொள்ளுதல் என்பவையே அவை.

சமூக-பொருளாதாரச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்தியதன் மூலம் மக்களின் அரசியல் ஆதரவைப் பெறும் கடமையைப் புதிய அரசாங்கம் மிகச் சரியாகவே நிறைவேற்றியது. குறிப்பாக 1952ம் ஆண்டிலேயே நிலச் சீர்திருத்தங்களை நிறைவேற்றுவதில் (மிகச் சொற்பமான அளவில் என்பது உண்மையே) இறங்கினர். பண்படுத்தக் கூடிய நிலங்களில் 10% க்கும் குறைவாகவே மறு விநியோகம் செய்யப்பட்டது. அத்துடன் இந்தச் சீர்திருத்தங்களினால் 10% க்கும் குறைவான விவசாயிகளே பலனடைந்தனர். இருந்த போதிலும் சட்டப்பூர்வமாக குத்தகைத் தொகை கணிசமான அளவு குறைக்கப்பட்டது. இது ஏழை விவசாயிகளின் நிலையைப் பல மடங்கு எளிதாக்கியது. வேளாண்மைப் பூர்ஷ்வாக்கள் மற்றும் பெரிய நில உடைமையாளர்களின் மூல நலன்களை அடியோடு கருவறுக்கத் தீர்மானமாக முடிவெடுக்காமல் புதிய அரசாங்கம் அவர்கள் இழந்த நிலங்களுக்குப் பதிலாக நஷ்ட ஈடு வழங்குவதாக உறுதியளித்தது. இருந்த போதிலும் இந்தச் சமூக வகுப்புகள் புரட்சிக்கு முன்பு கொண்டிருந்த அரசியல் செல்வாக்கின் அடிப்படையை இந்தச் சீர்திருத்தம் அடியோடு தகர்த்தது. அத்துடன் அரசாங்கத்தின் சமூக-வர்க்க ஆதாயத்தைக் கிராமப்புறத்தில் விரிவாக்கவும் உறுதிப்படுத்தவும் செய்தது.

1953ம் ஆண்டின் ஆரம்பத்தில் புரட்சித் தலைமை கவுன்சில் மூன்றாண்டு கால ''இடைக்காலத்தை'' நடைமுறைக்குக் கொணருவதாக அறிவித்தது. இந்த இடைக்காலத்தில் நாட்டில் அரசியல் சட்ட அமைப்புக்குள் அடங்கிய ஜனநாயக அரசை தோற்றுவிப்பதற்கான சூழ்நிலைகளை உருவாக்கப் போவதாகவும் அது அறிவித்தது. இடைக்காலத்தின் கோஷமாக நாசரால் அறிவிக்கப்பட்ட ''ஒற்றுமை, ஒழுங்கு, உழைப்பு'' என்ற கோஷம் எந்தவொரு திட்டமான சமூக-வர்க்கச் சாரத்தையும் கொண்டிருக்கவில்லை. 1952ம் வருடப் புரட்சியின் குறிக்கோள்களைப் புரட்சியின் அந்த நிலையில், வாழ்க்கையில் நிறைவேற்றக் கூடிய ''சமூக நியாயத்தை'' நடைமுறையில் சாத்தியமாக்கக் கூடிய ஒரு ஐக்கிய பொதுத் தேசிய ஸ்தாபனமே மக்களின் அரசியல் முன்னணிப் படையாக விளங்க வேண்டுமென்று நாசர் கருதினர். 1953ம் ஆண்டு அப்படிப்

பட்ட ஒரு வெகுஜன அமைப்பு—விடுதலை ஸ்தாபனம்—தோற்று விக்கப்பட்டது. புரட்சித் தலைமை கவுன்சிலின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்த இந்த ஸ்தாபன அமைப்பு அரசியல் ஆட்சிக்கு வரவோ, தெளிவான அரசியல் மற்றும் சமூகச் செயல் திட்டங்களைக் கொண்டிருக்கவோ இல்லை. எகிப்தில் தொடர்ந்து வந்த வெகுஜன அரசியல் ஸ்தாபன அமைப்புகளின் வடிவங்களை ஏதோ ஒரு வகையில் சித்தரித்த ஒரு அரூபமான ஸ்தாபனமாகவே அது விளங்கியது. வெகுஜன-கலாச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல், மக்களுக்கு ராணுவக் கல்வி அளித்தல் மற்றும் எழுத்தறிவின்மையை ஒழிக்கப் போராடுதல் ஆகியவையே அந்த ஸ்தாபனத்தின் பணிகளாக விளங்கின. புரட்சித் தலைமை கவுன்சிலால் முன்வைக்கப்பட்ட ''நாம் எல்லோரும் விடுதலை ஸ்தாபனத்தின் உறுப்பினர்கள்'' என்ற கோஷம் எகிப்தில் உள்ள எல்லா தீவிர அரசியல் சக்திகளையும், அவற்றிற்கு இடையே உள்ள சமூக-வர்க்க வேறுபாடுகளைச் சாராமல், ஒன்றிணைக்க வேண்டும் என்ற நேர்மையான ஆனால் தவறான நாட்டத்தின் விளைவாகும். விசேஷமாகக் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், 50ம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் எகிப்திய சமுதாயத்தின் சமூக-வர்க்க மதிப்பீட்டையும், சோஷலிச அமைவைப் பற்றிய தன்னுடைய கருத்தோட்டங்களையும் நாசர் உருவாக்கிக் கொள்ளவில்லை. ஆதலால் ''எல்லா வர்க்கத்தினருக்குமான'' முன்னேற்றம், ஏழைக்கும் பணக்காரருக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை ஒழித்தல், பணக்காரர் ஏழைக்கு உதவும் வகையிலான ''சமூக நீதி'' நிறைந்த சமுதாயத்தை நிறுவுதல் ஆகியவற்றைப் பற்றித் தன்னுடைய சொற்பொழிவுகளில் தொடர்ந்து பேசினார். அவ்வாறே உழைப்பாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை அவர்களின் பரஸ்பர லாபத்திற்காகவும், முழுத் தேசிய நலன்களின் பேரிலும் வளர்க்க வேண்டியதன் அவசியத்தை உறுதிப்படுத்தினார்.

இந்தக் காலகட்டத்தில் நாட்டின் சமூக-பொருளாதார வளர்ச்சியின் எல்லா அடிப்படைப் பிரச்சினைகளும் நடைமுறையில் பொதுத் தேசிய அளவில் தீர்க்கப்பட்டன. தேசியப் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கான பிரச்சினைகளை அரசாங்கம் இம்முறையில் அணுகியது, நாட்டில் உள்ள எல்லா சமூக-பொருளாதார அமைப்புகளையும் (நிலப்பிரபுத்துவ அமைப்

பைத் தவிர்த்து) வளர்ப்பதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை நிறைவேற்றக் கருதினர் என்பதில் முக்கியமாக வெளிப்படுகின்றது. அதே சமயத்தில், இயந்திரத் தொழில் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக பாரம்பரியமாக வரும் கட்டுப்பாடற்ற வணிக சட்டங்களும் அதே போல் அரசுக் கண்காணிப்புத் தன்மை கொண்ட சட்டங்களும் பல இயற்றப்பட்டன. ஒப்பீட்டு அடிப்படையில் சிறிய அரசுப் பொருளாதாரப் பிரிவுகளின் மூலம் வழிகாட்டுவது, தனியார் முதலீட்டின் அடிப்படையில் பொருளாதாரத்தின் திட்டமான வளர்ச்சியின் சாத்தியக் கூறுகளை ஆராய்தல், ஐக்கிய மூலதனக் கம்பெனிகளின் ஸ்தாபன அமைப்புகளை ஒழுங்குபடுத்தக் கூடிய சட்டத் தொகுப்பைத் தயாரிப்பது, பெருத்த லாபங்களுக்கு வரி விதிப்பது இன்ன பிறவற்றில் பொருளாதாரத்திலான அரசாங்கத்தின் குறுக்கீடு இருந்தது. அசுவானில் ஒரு பெரிய அணைக்கட்டையும், வேளாண்மை-இயந்திரத் தொழில் தொகுதியையும் கட்டுவதற்காக 1954ம் வருடம் எடுக்கப்பட்ட முடிவு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது.

நாட்டின் அரசியல்-பொருளாதார வளர்ச்சியைப் பற்றிய நாசரின் கருத்தோட்டங்கள் 1956ம் வருட அரசியல் அமைப்புச் சட்டத்தில் சுருக்கமான வடிவத்தில் இடம் பெற்றன (அதைத் தயாரிப்பதில் குடியரசின் தலைவராக இருந்த நாசரும் பங்கு கொண்டார்). அந்த அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படை நிலைகளாகக் கீழ்க் கண்டவற்றைக் குறிப்பிடலாம்:

—''எகிப்திய சமுதாயத்தின் அடிப்படையாக சமூக ஒற்றுமை விளங்குகின்றது;

—சமூக நீதி முறைக் கோட்பாடுகளைப் பாதுகாக்கும் திட்டங்களுடனும் உற்பத்தி பெருக்கம், மக்களின் வாழ்க்கை நிலை ஆகியவற்றை உயர்த்துவதைக் குறிக்கோளாகக் கொண்ட திட்டங்களுடனும் ஒத்துச் செல்வதாகவே தேசியப் பொருளாதாரம் திட்டமிடப்படுகின்றது;

—தேசியப் பொருளாதார நலன்களைக் காக்கும் விதத்திலேயே, ஆனால் அதே சமயம் சமுதாய நலன்களுக்குக் கேடுவிளைவிக்காத வகையிலேயே மூலதனம் பயன்படுத்தப்படல் வேண்டும்;

—சமுதாயப் பொருளாதார நடவடிக்கைகளில் பரஸ்பர ஒத்துழைப்பிற்கு உத்தரவாதம் அளிப்பதுடன், செயல்பாடு மிக்க தீவிரத்தை வளர்க்கவும் சட்டத் தொகுப்பு உதவுகிறது;

—சமூகப் பாதுகாப்பு அளிப்பதை அரசாங்கம் தன் பொறுப்பாக ஏற்றுக் கொள்கிறது''*.

நாசர் ஜனதிபதியாக இருந்த அரசாங்கத்தின் உள்துறை சீர்திருத்தவாதப் பணிகள் சார்பற்ற, தீவிர ஏகாதிபத்திய எதிர்ப்பு வெளி உறவுக் கொள்கைகளின் பின்னணியிலும் சோவியத் யூனியனுடனும், மற்ற பிற சோஷலிச நட்புறவு நாடுகளுடனுமான நெருங்கிய உறவை நிலைநாட்டும் பாதையின் பின்னணியிலும் புரட்சியின் முதல் காலகட்டங்களில் செயல்படுத்தப்பட்டன. இந்தக்காலகட்டத்தில் எகிப்திய அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்ட முக்கியமான அரசியல் நடவடிக்கைகளாக, ஆங்கில ராணுவத்தை நாட்டை விட்டு வெளியேற்றும் ஒப்பந்தத்தைச் செய்ததும், (1956ம் வருடம், ஜூன் மாதம்), சூயஸ் கால்வாய் நிறுவனத்தைத் தேசியமயமாக்கியதும் (1956ம் வருடம் ஜூலை மாதம்) விளங்குகின்றன. அவ்வாறே சோவியத் யூனியன், பிற சோஷலிச நாடுகள் மற்றும் சர்வதேச முற்போக்கு சமுதாயத்தின் உறுதியான ஆதரவை அடிப்படையாகக் கொண்டு முக்கூட்டு ஆங்கில-பிரெஞ்சு-இஸ்ரேல் ஆக்கிரமிப்பை (1956ம் வருடம்) முறியடிக்கவும் அதனல் முடிந்தது. ஆக்கிரமிப்பாளர்களின் மீதான வெற்றி எகிப்தின் புதிய வரலாற்றில் நாட்டின் தொடர்ச்சியான வெளி உறவுக் கொள்கையின் திசையமைவைப் பல விதங்களில் நிர்ணயித்தது, உள்நாட்டு அரசியல் போக்கை நிர்ணயிக்கும் திருப்பு முனையாக அமைந்தது. ஆக்கிரமிப்பு நிகழ்ந்த உடனேயே நாசரின் அரசாங்கம் அன்னியரின் உடைமைகளை அரசுமயமாக்கி, நிர்வாகத்தை எகிப்திய நிபுணர்களிடம் ஒப்படைத்தது. இதைத் தொடர்ந்து எகிப்தைச் சுற்றி மேற்கு நாடுகள் மேற்கொண்ட பொருளாதார முற்றுகை, ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாதையைத் தீவிரமாக்க நாசரைத் தூண்டியது.

50ம் ஆண்டுகளின் மத்தியில் எகிப்தில் மேற்கொள்ளப்பட்ட அரசியல், பொருளாதார நடவடிக்கைகளும், எகிப்து முன்னிலைப் பங்கு வகித்த வடக்கு ஆப்பிரிக்க மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலான தேசிய விடுதலை இயக்கங்களின் வளர்ச்சியும் எகிப்தையும், சிரியாவையும் உள்ளடக்

---

* சமாதானம் மற்றும் சோஷலிசத்தின் பிரச்சினைகள் பார்க்க, *1966, №8, பக்கம் 41.* (ருஷ்ய மொழியில்.)

கிய ஐக்கிய அரபுக் குடியரசின் தோற்றமும் எகிப்து மக்களின் தேசிய உணர்வு வளரப் பெருமளவில் உதவின. இத்தகைய சூழ்நிலைகளில் ஆழ்ந்த சமூக-பொருளாதாரச் சீர்திருத்தங்களை நாட்டில் செயல்படுத்தும் திட்டத்தைக் கொண்டிருந்த நாசரின் தலைமையிலான புரட்சி அரசாங்கம், அதனுடைய உள்துறை அரசியலில் வர்க்கங்கள் மற்றும் சமூக வகுப்புகளுக்கிடையிலான நிர்ணயமான ஐக்கியங்களின் தீவிரமான அமைப்புக்களைத் தயாரிப்பதில் உறுதியாக முனைந்திருந்தது. கலைக்கப்பட்டுவிட்ட ''விடுதலை ஸ்தாபனத்திற்குப்'' பதிலாக அதே வர்க்க ஒத்துழைப்பின் அடிப்படையில் அமைந்த ''சமுதாயத்தின் எல்லா மிதவாத அம்சங்களையும்'' ஒன்றிணைக்கும் ''தேசிய ஐக்கிய கட்சி'' என்ற ஸ்தாபன அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது.

புதிய அரசியல் ஸ்தாபனத்தின் குறிக்கோள்களையும் சாரத்தையும் நாசரே கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டார்: ''தேசிய ஐக்கிய கட்சி'' ஒரு சோஷலிச, ஜனநாயக, கூட்டுறவுச் சமுதாயத்தைத் தோற்றுவிக்க உதவும் சாதனமாகும். அவ்வாறே நாம் உள்நாட்டுப் போரின்றி, இரத்தமின்றி, வர்க்கச் சண்டைகளின்றி, அன்பு, சகோதரத்துவம் ஆகியவற்றின் உதவியுடன் நம்முடைய வளர்ச்சியைச் செயல்படுத்த முடியும்''°. உண்மையில் இந்தப் புதிய ஸ்தாபனத்தின் பெயரே, அது தேசியவாத சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதைக் காட்டுகிறது. ''சுதந்திரம், ஒற்றுமை, சோஷலிசம்'' என்ற கோஷம் அரபு அரசுகளை ஒன்றிணைப்பது, சமூகச் சீர்திருத்தங்களுக்கான ஒரு முன்தேவை என்பதாகச் சித்தரிக்கப்பட்டது.

எகிப்தில் சோஷலிச மாதிரியில் அமைந்த சமுதாயத்தைத் தோற்றுவிப்பதற்கு ஆதரவாக நாசர் பலமுறை பேசினார். 1955ம் ஆண்டு பான்துங் மாநாட்டிலிருந்து திரும்பிய பின்பு அவர் ஆற்றிய சொற்பொழிவு ஒன்றில், வர்க்கங்களுக்கு இடையிலான வித்தியாசத்தை ஒழிப்பதன் மூலம் சோஷலிசம் யதார்த்தமாகும் என்ற குறிப்பு காணப்படுகின்றது. ஆயினும் அப்போது அது யாராலும் கவனிக்கப்படவில்லை. ''சோஷலிச, ஜனநாயக, கூட்டுறவுச் சமுதாயத்தைப்'' பற்றி அவர் பின்புதான் கூறினார். ஒருசில சமயங்களில் அவர் சோஷலிசம்

° ஹாலேத் மோஹி-ஏத்தின்..., பிராகா, 1966, № 8, பக்கம் 41.

என்பது சுரண்டுபவர்களற்ற சமுதாயம் என்று குறிப்பிட்டார். இன்னும் சிலவற்றில் அதை ஒரு சொந்தக்காரர்களின் அல்லது ''உடைமையாளர்களின்'' சமுதாயம் எனக் கூறினர். 1957ம் ஆண்டு இந்திய பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் தொழிலாளிக்கும், தொழிலதிபருக்கும் இடையிலான ஒத்துழைப்பு, பொருளாதாரத்திலும் பொருளாதாரக் கட்டுமானத்தைத் திட்டமிடுவதிலும் தனியார் மற்றும் அரசுப் பொருளாதாரப் பிரிவுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு ஆகியவற்றையே சோஷலிசம் எனத்தான் புரிந்து கொள்வதாக நாசர் விளக்கினர். 1958ம் வருடம் கூட்டுறவு சங்கங்களின் IV வது காங்கிரசில் ''சோஷலிசம்'' என்ற சொல்லை இன்னமும் பரவலாக விளக்கிக் கூறினர்: ''நிலப்பிரபுத்துவச் சமுதாயம், ஏகபோக முதலாளித்துவம், ஆட்சியின் மீதான மூலதனத்தின் ஆதிக்கம், சுரண்டல் ஆகியவற்றை ஒழிப்பதே சோஷலிசம் ஆகும். தேசியப் பொருளாதாரத்தைத் தோற்றுவிப்பதும், சமூக நீதியை, நிலை நிறுத்தும் வகையிலும், சமுதாயத்தின் தேவைகளை நிறைவேற்றும் வகையிலும் அத்தேசியப் பொருளாதாரத்தை வளர்ப்பதுவுமே சோஷலிசத்தின் சாதகமான அம்சம் ஆகும்''[*].

சோஷலிசத்தைப் பற்றிய இவ்வகை விளக்கம் 50வது வருடங்களில், முக்கியமாக நாசரின் மற்றும் அவருடைய துணைவர்களின் சமுதாய வளர்ச்சிக்கான பொருளாதார அணுகுமுறையையும், சமூக நியாயப் பிரச்சினையை வர்க்க அமைப்பிற்கு அப்பாற்பட்டு அவர்கள் அணுகியதையும் பிரதிபலித்தது. ஆனல் எகிப்திய சமுதாயத்தில் மனிதனை மனிதன் சுரண்டுவதைக் கட்டுப்படுத்தும் நாட்டமும் அதில் இருந்தது. அந்த நேரத்தில் உற்பத்தி சாதனங்களின் மீதான கட்டுப்பாட்டைப் பற்றிய பிரச்சினையை நாசர் தன்னுடைய சோஷலிசக் கோட்பாட்டில் இணைக்கவில்லை. ஆயினும் ஆட்சியிலிருந்த தேசிய ஜனநாயகவாதிகள் நாட்டின் சமூக-பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினைகளை (அதாவது கிராமப்புறத்தில் வேளாண்மைச் சீர்திருத்தத்திலும் கூட்டுறவு சங்கங்களை அமைப்பதிலும், சூயஸ் கால்வாயைத் தேசிய மயமாக்குவதிலும், அன்னிய நிறுவனங்களை எகிப்திய மயமாக்குவதிலும், தனியார் மூல

[*] ஜனதிபதி க. அ. நாசரின் சொற்பொழிவுகளும் அறிக்கைகளும். தொகுதி IX, கெய்ரோ, பக்கம் 52. (அரபு மொழியில்.)

தனத்தின் வளர்ச்சியிலும், சமுதாயத்திலிருந்த சமூக வித்தியாசங்கள் தீவிரமடைவதிலும் மற்றும் வர்க்கப் போராட்டம் தவிர்க்க முடியாமல் முற்றியதிலும்) அடிக்கடிச் சந்திக்க வேண்டியிருந்ததால் இதைப் பற்றிய தெளிவான கருத்து நாசரிடம் உருவாகியிருந்தது.

எகிப்திய தேசியப் பூர்ஷ்வா அரசாங்கத்தின் பாதுகாப்பிலும், பொருளுதவியின் ஆதரவினுலும் 50வது வருடங்களின் கடைசிக்குள் கணிசமான அளவில் தன்னுடைய பொருளாதார நிலையை உறுதிப்படுத்திக் கொண்டது. அதே சமயத்தில் அரசாங்கத்தின் பணிகளில் அதனுடைய செல்வாக்கு வளர்ந்தது. எகிப்திய பெரிய மூலதனத்தின் பிரதிநிதிகளும் அவர்களுடன் தொடர்பு கொண்ட வட்டங்களும் எகிப்திய பாராளுமன்றத்தின் (The People's Assembly) மற்றும் தேசிய ஐக்கிய கட்சியின் மீதும் தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநாட்டுவதில் வெற்றி அடைந்தனர். அவர்கள் புரட்சியின் மேற்கொண்ட வளர்ச்சிக்குச் சாதகமற்ற தங்களுடைய நிலையை மறைக்கவில்லை. அவர்கள் புரட்சியானது அதனுடைய குறிக்கோள் நிறைவேறிவிட்டது என்று உறுதிப்படுத்தினர். இப்படி வட்டார பெரிய தொழிலதிபர்களின் பின் நின்ற சக்திகள், அரசாங்க ஆட்சியாளர்களின் சுய நிலைக்கு ஆபத்தான வகையில், அவர்களை எதிர்த்து நின்றன.

தேசியப் பொருளாதாரத்தைத் தோற்றுவித்து அதை எழுச்சி பெறச் செய்யும் குறிக்கோளும், ஜனதிபதியே கூறியது போல, ''இரும்புபோல் உறுதி கொண்ட எகிப்தைத்'' தோற்றுவிக்கும் குறிக்கோளும், அரசாங்கத்தின் வளர்ச்சித்திட்டங்களுக்கு எதிராக மேலும் மேலும் வளர்ந்த பெரிய ஸ்தல மூலதனத்தின் தடைகளும், ''முதலாளித்துவத்தின் மிரட்டலைப்'' பற்றி விமர்சனம் செய்ய நாசரைத் தூண்டின. ''முதலாளித்துவத்தின் மிரட்டல்'' என்பதன் மூலம் முழுமையான தனியார் பொருளாதாரப் பிரிவினை அல்லாமல், ஏக போக முதலாளித்துவ நிலையை அடைந்து கொண்டிருந்த பெரிய முதலாளிகளின் கூட்டையே அவர் புரிந்து கொண்டார் என்பதை ஊகிக்கலாம். நடைமுறைச் செயல்களும் நீண்ட காலத்திற்குத் தாமதிக்கப்படவில்லை. தொழிற்சாலைகளிலும், வியாபார நிறுவனங்களிலும் இருந்த முதலீட்டைப் பெருமளவில் நிர்வகித்த தலையாய தனியார் ''மிஸ்ர்'' (MISR) வங்கிகளும், தேசிய வங்கிகளும் (National Banks) *1960*ல்



11–909

தேசிய மயமாக்கப்பட்டன. இதை அடுத்து 1961ம் ஆண்டில் ''சோஷலிச சட்டங்கள்'' தொடர்ந்து இயற்றப்பட்டன. அச்சட்டங்களின்படி மிகப் பெரிய தொழிற்சாலைகளும், போக்குவரவு, நிதி நிறுவனங்களும் அரசுடமையாக்கப்பட்டன, அல்லது அரசுக் கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டன. அவ்வாறே வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதும், உள்நாட்டு முழு வர்த்தகத்தின் ஒரு பகுதியின்மீது அரசின் கண்காணிப்பு நிலைநாட்டப்பட்டது. தேசிய மயமாக்குதல் பற்றிய 1963ம் வருட சட்டங்கள் தனியார் மூலதனத்திற்குச் சொந்தமான சிற்றியந்திரத் தொழிற்துறை (Light Industries) நூற்றுக் கணக்கான. மத்தியதர மற்றும் சிறிய நிறுவனங்களின்மீது வியாபித்தன. நாசரின் அரசாங்கம் அவ்வாறே வேளாண்மைச் சீர்திருத்தங்களைப் பற்றிய சட்டத்தையும் (ஜூலை, 1961ம் வருடம்) கொண்டுவந்தது. இச்சட்டம் நில உடைமையின் உச்ச அளவை (5 பேர் கொண்ட குடும்பத்திற்கு 42 ஹெக்டர் நிலம்) கட்டுப்படுத்தியதுடன் நிலப்பிரபுக்களிடம் பறிமுதல் செய்யப்பட்ட நிலங்களின் மீட்டுப்பணத்தையும் தள்ளுபடி செய்தது. அவ்வாறே சீர்திருத்த சட்டப்படி விவசாயிகளுக்கு வழங்கப்படும் நிலங்களுக்கான விலையைக் கணிசமான அளவு குறைத்தது. சீர்திருத்த சட்டப்படி நிலங்கள் பெற்ற விவசாயிகளைக் கூட்டுறவு சங்கங்களின்கீழ் இணைக்கும் நிகழ்ச்சிப் போக்கிற்குப் புதிய வேகம் ஊட்டப்பட்டது.

''சோஷலிச சட்டங்கள்'' இத்துடன் முடிந்து விடவில்லை. கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் வெகு ஜனங்களின் சமூக மற்றும் உடைமை நிலைமைகளைச் சிறப்பாக்கும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்தது. 42 மணி நேர வேலை வாரத்தைச் சட்டப்பூர்வமாக்கியதுடன் பொருளாதாரத்தின் அடிப்படை பிரிவுகளில் அலுவலர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் திட்டவட்டமான குறைந்தபட்ச சம்பளத்தையும், பென்ஷன் பெறவும் மற்றும் சம்பளத்துடன் கூடிய விடுமுறையை பெறவுமான அவர்களின் உரிமையை உறுதியாக்கியது. அரசு மற்றும் தனியார் தொழிற்சாலைகளின் லாபத்தில் இருபத்தைந்து சதவிகிதத்தைத் தொழிலாளர்களுக்கும் அலுவலர்களுக்கும் மத்தியில் பிரிப்பது மற்றும் உற்பத்தியின் வளர்ச்சியிலும் நிர்வாகத்திலுமான அவர்களின் பங்கு ஆகியவற்றைப் பற்றிய தீர்மானம் புதிய அம்சமாக

விளங்கியது. அவ்வாறே வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கவும், உணவுப் பொருட்களின் விலையையும் மற்றும் வீட்டு வாடகையையும் கட்டுப்படுத்தவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பள்ளிகளின் எல்லா நிலைகளிலும் உயர் கல்வி நிறுவனங்களிலும் கல்வி பெறுவது இலவசமாக்கப்பட்டது.

1961—1963ம் வருடங்களின் முற்போக்குத் தன்மை நிறைந்த சமூக-பொருளாதார நடவடிக்கைகள் எகிப்தில் நிகழ்ந்த மாபெரும் சம்பவங்களாக விளங்கின. இவை உழைக்கும் வெகு ஜனங்களின் பரந்த ஆதரவைப் பெற்றன. இருப்பினும் இத்துடன் இவற்றினல் திருப்தியடையாதவர்களும் பலர் இருந்தனர். இத்தகையவர்களில் ''புண்படுத்தப்பட்ட'' பூர்ஷ்வாக்கள் முதன்மையானவர்களாக இருந்தனர். இவ்வாறு வாழ்க்கையின் தர்க்க இயல் ''வர்க்க சமாதானத்தை'' முன்னிலைக்குக் கொணராமல் வர்க்கப் போராட்டத்தையே கொணர்ந்தது. சுரண்டல்வாதிகளின் நலன்களைப்பாதிக்கும் வகையில் அவ்வர்க்கப் போராட்டம் தீவிரமடைந்தது.

இயற்கையாகவே இத்தகைய நிலைமைகளில் நாசரும் அவருடைய அரசாங்கமும் சுரண்டும் வர்க்கங்களின் அரசியல் செல்வாக்கைக் கட்டுப்படுத்தும் துணிவுமிக்க செயல்களைச் செய்ய வேண்டியிருந்தது. இந்தக் குறிக்கோளுடன் 1961ம் ஆண்டு நவம்பரில் முற்போக்குத் தன்மை கொண்ட சீர்திருத்தங்களுக்கு சாதகமற்ற நிலையை வகித்த தேசிய ஐக்கிய கட்சியும் மற்றும் பாராளுமன்றமும் விலக்கப்பட்டன. ''கோடீசுவர்களுக்கு எதிரான பிரச்சாரங்கள்'' ஆரம்பிக்கப்பட்டு அரசாங்கத்தின் சமூக-பொருளாதாரப் பாதையை எதிர்க்கும் பெரிய முதலீட்டாளர்கள் (financiers), தொழிலதிபர்கள் மற்றும் வியாபாரிகளின் சொத்துக்களை அரசாங்கம் சுவீகரித்தது. எதிர்ப்பு மனப்பான்மை கொண்ட சில பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சில தேசிய ஐக்கிய கட்சி உறுப்பினர்களின் அரசியல் வாழ்வில் பங்கு கொள்வதற்கான உரிமை நீக்கப்பட்டது. 1962ம் ஆண்டு பிப்ரவரி மாதம் புதிய ஆட்சி அமைப்பிற்கான—தேசிய காங்கிரசுக்கான—தேர்தல்கள் நடைபெற்றன. ஜனதிபதி நாசரும் அவருடைய அரசாங்கமும் பின்னர் எகிப்திய தேசிய ஜனநாயகப் புரட்சியின் செயல்திட்ட தஸ்தாவேஜாக விளங்கிய தேசிய செயல் பாட்டு திட்ட அறிக்கையின் நகலைத்

தேசிய காங்கிரசின் ஆலோசனைக்காக முன்வைத்தனர்.

நாசர் தானே பங்கு கொண்டு தயாரித்த இந்த தேசிய செயல்பாட்டு திட்ட அறிக்கை,* தங்களுடைய சேவைகளாலும், சித்தாந்த-அரசியல் வளர்ச்சியாலும் புரட்சி ஜனநாயகவாதி களாக சித்தரிக்கப்படக் கூடியவர்கள் நிறைந்திருந்த எகிப்திய தலைமையிலிருந்த முற்போக்குவாதிகளின் முறைப்படுத்தப் பட்ட கருத்தோட்டங்களை முழுமையாகக் கொண்டிருந்தது. 1952ம் வருட ஜூலை 23ம் தேதிப் புரட்சியிலிருந்தான நாசரின் சித்தாந்த பரிணாமத்தை மட்டுமல்லாது எகிப்தின் சமூக-பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினைகளின் மீதான அவருடைய கருத்தோட்டங்கள் விஞ்ஞான சோஷலிசத்தின் சில கோட்பாட்டு நிலைகளை நெருங்கும் நிகழ்ச்சிப் போக்கையும் இந்தத் திட்ட அறிக்கையில் காணலாம்.

எகிப்திய சமுதாய கட்டுமான அமைப்பாக சோஷலிச நிர்மாணத்தின் அவசியத்தை வலியுறுத்தியிருப்பது இந்தத் திட்ட அறிக்கையின் முக்கியமான ஒரு அம்சமாகும். இந்த தஸ்தாவேஜைத் தயாரித்தவர்கள் ''எகிப்தின் பின்தங்கிய சமூக-பொருளாதார நிலையைப் போக்குவதற்கான சோஷலிச முறைத் தீர்வும், புரட்சிகர முறையில் வாழ்வில் முன்னேற் றத்தை அடைவதும் எந்த ஒரு மானசீக முறையிலும் தேர்ந் தெடுக்கப்பட்டதல்ல, அதற்கு மாறாக அது வரலாற்றுப் பூர்வமான தேவையாகவும், உண்மையான எதார்த்தத்தின் விளைவாகவும், வெகு ஜனங்களின் அபிலாஷையாகவும், 20வது நூற்றாண்டின் இரண்டாவது பாதியில் உலகம் முழுவதிலுமான சூழ்நிலைகளின் விளைவாகவும், விளங்கியது''**. மேலும், நாட்டின் சோஷலிச சீர்திருத்தங்களைப் பற்றிக் கூறும் போதும், ஒப்பீட்டடிப்படையில் சில காலம் முன்பு வழக்கத்தில் இருந்த ''அரபு சோஷலிசம்'' அல்லது ''எகிப்திய சோஷலிசம்'' என்ற வார்த்தைகள் திட்ட அறிக்கையில் ஏற்கெனவே பயன் படுத்தப்படவில்லை. அதில் முன்னேற்றத்திற்குக் கொண்டு செல்லும் சரியான பாதையைக் காண உதவும் பொருத்தமான வழிமுறையாக விஞ்ஞான சோஷலிசத்தைப் பற்றி, அதாவது

---

* **எகிப்தியப் புரட்சி தஸ்தாவேஜுகளின் தொகுதி** *(தேசிய செயல்பாட்டு திட்ட அறிக்கை. அரபுச் சோஷலிச ஐக்கியத்தின் விதிமுறைகள். அரசியல் அமைப்புச் சட்டம், 1964ம் ஆண்டு மார்ச் 23ம் தேதி, 1968ம் வருடம், மார்ச் 30ம் தேதிய செயல்திட்டம்). கெய்ரோ, 1970. (அரபு மொழியில்.)*

** **திட்ட அறிக்கை,** பக்கங்கள் 70—71.

''சோஷலிசத்திற்கான எகிப்திய பாதையைப்'' பற்றி கூறப் படுகின்றது.

திட்ட அறிக்கையில் அடங்கியிருந்த சோஷலிச கோட் பாடுகளின் அடிப்படை அம்சங்கள் கீழ்க் கண்ட முடிவுகளுக்குக் கொணர்ந்தன: தேசிய மயப்படுத்தப்பட்ட அரசுப் பொருளா தாரப் பிரிவுகளைத் தோற்றுவிப்பது மற்றும் அதன் ஆதிக்கத் தைப் பெருக்குவது; மக்களுக்கு சேவை செய்யும், ''மக்களால் கட்டுப்படுத்தப்படும் தனியார் பொருளாதாரப் பிரிவுகளைப் பாதுகாத்தல்''; எல்லா துறைகளிலும் திட்டமிட்டுப் பணி யாற்றுதலின் அவசியத்தை அங்கீகரித்தல்; கனரகத் தொழிற் சாலைகளின் வளர்ச்சியை முதன்மைப்படுத்துதல்; ''செல்வத் தைச் சமுதாயத்தின் எல்லா சமூக வகுப்புகளுக்கும் வர்க்கங் களின் நலன்களுக்காகவும் மறு விநியோகம்'' செய்தலின் மூலம் சமூக நீதியை நிலை நாட்டுதல்; கிராமத்திற்கும், நகரத் திற்கும் இடையிலான சமூக-பொருளாதார வளர்ச்சி மட்டத் திலான வேறுபாட்டைச் (''சமமின்மையைக்'') குறைத்தல்; முடிவாக தொழிற்சங்கங்கள், கூட்டுறவு சங்கங்கள் ஆகிய வற்றை வளர்த்தல்; மேலும் தொழிற்சங்கங்களைப் பொறுத்த வரையில் அவை காலப் போக்கில் சொந்த அரசியல் பொறுப் புக்களின் பேரில் பிரிக்கப்படலாம் என்று கூறப்பட்டது.

நாசரும் அவருடன் சேர்ந்து திட்ட அறிக்கையைத் தயாரித்தவர்களும், தங்களுடைய ''விஞ்ஞான சோஷலிசம்'' அல்லது ''சோஷலிசத்திற்கான எகிப்திய பாதையைப்'' பற்றிய கோட்பாட்டை உருவாக்குகையில் வர்க்கப் போராட்டத்தில் எந்த அளவுக்கு சாத்தியமோ அந்த அளவுக்கு அமைதி முறை களைப் புகுத்த அவர்கள் முயன்ற போதிலும் எகிப்திய சமு தாயத்தில் வர்க்கங்களும், வர்க்கப் போராட்டமும் இருப் பதை மறுக்கவில்லை. ''இயற்கையான அல்லது தவிர்க்க முடியாத வர்க்கப் போராட்டத்தை மறுப்பதோ அல்லது அசட்டை செய்வதோ கூடாது'' என்று திட்ட அறிக்கையில் கூறப்படுகின்றது. இங்கே இந்த வர்க்கப் போராட்டம் ஏற் கெனவே தேசிய விடுதலைப் போராட்டத்திற்கான தடையாகப் பார்க்கப்படாமல், அதனுடைய வெற்றிக்கான முன் காரண மாகவே கருதப்படுகின்றன என்பதையும் குறிப்பிடுவோம். வர்க்கப் போராட்டமானது சமூக முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட சக்திகளுக்கும், (''உழைக்கும் மக்கள்'') பழைய கன்சர்வேடிவ் சக்திகளுக்கும் (அதாவது ஏகாதிபத்தியத்துடன்

நெருங்கிய தொடர்பு கொண்ட பெரிய பூர்ஷ்வாக்களும் நிலப்பிரபுக்களும் அடங்கிய பிற்போக்குவாத கூட்டமைப்பு) இடையிலான போராட்டமே என திட்ட அறிக்கை நிர்ண யித்தது. அதில் வர்க்கப் போராட்டத்தின் வடிவம் சுரண்டு பவர்களின் நிலையையும் நடத்தையையும் பொறுத்துள்ளது என்றும் குறிப்பாக, அதனுல்தான் அமைதியான வழியில் அமைந்த வர்க்கப் போராட்டம் என்பது ஒரே ஒரு நிபந் தனையைப் பொறுத்துள்ளது, அதாவது பிற்போக்குவாதத்தை எதிர்ப்பதற்கான சாத்தியக் கூறுகளை நீக்குதல் என்றும் குறிப்பிடப்பட்டது. மேற்கொண்டு, ''தலையாய `விரோதத்தை வேருடன் அழிப்பது மட்டுமே மற்ற வர்க்கங்களுக்கிடையி லான முரண்பாடுகளைத் தாஞகவே நீக்காது; இருந்த போதி லும் அது ஜனநாயக முறைகளில் அவற்றின் அமைதிவழித் தீர்வுக்கான சாத்தியங்களை உண்டாக்குகிறது''* என்று சரி யாகக் குறிப்பிடப்பட்டது.

நிச்சயமாக, நிலப்பிரபுக்கள் மற்றும் பெரிய முதலாளி களின் (''சுரண்டும் மூலதனத்தைக்'' கொண்டிருந்தவர்கள் என்று நிர்ணயிக்கப்பட்ட பூர்ஷ்வாக்கள்) பிற்போக்குவாத கூட்டமைப்புக்கு எதிராக நிற்கும் எல்லா தேசியவாத சக்தி களும், அதாவது விவசாயிகள், தொழிலாளிகள், ராணுவ வீரர்கள், அறிவு ஜீவிகள், தேசிய குட்டி மற்றும் மத்தியதர முதலாளிகள் (இங்கே ''சுரண்டாத மூலதனத்தைக்'' கொண் டவர்கள் எனக் குறிக்கப்படுபவர்கள்) ஆகிய அனைவருமே, திட்ட அறிக்கையில் உழைப்பாளிகள் என்ற வகுப்பில் இணைக் கப்பட்டனர் என்பது சம்மதிக்கக் கூடாத ஒரு விஷயம் ஆகும். திட்ட அறிக்கையைத் தயாரித்தவர்கள் இந்த இரண்டுவித மூலதனத்தின் வித்தியாசத்தை கீழ்க் கண்ட விதத்தில் கண் டனர்: ''சுரண்டும் மூலதனப் பூர்ஷ்வாக்கள்'' ஏகாதிபத் தியத்தின் உதவியை ஆதாரமாகக் கொண்டு அரசின் மீதான தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட முயல்கின்றனர். மேலும் தொழிலாளர் வர்க்கத்தைச் சுரண்டுவதுடன் உச்சகட்ட லாபத்தை அடைவதில் நாட்டம் கொண்டது. ''சுரண்டாத மூலதனப் பூர்ஷ்வாக்களோ'' அரசின் அதிகாரத்திற்கு உரி மைக் கொண்டாடுவதில்லை. மேலும் அவர்கள் தொழிலாளர் வர்க்கத்தைச் சுரண்டுவதைத் தவிர்ப்பதுடன் தொழிலாளி

---

* திட்ட அறிக்கை, பக்கங்கள் 42, 54.

களுக்கு நியாயமான சம்பளத்தை நிர்ணயித்து தொழிற்சாலையின் நிர்வாகத்திலும் லாபத்திலும் பங்கு பெறுவதற்கான உரிமையையும் அதற்கு அளிக்கின்றனர். உலகப் பொதுத் தத்துவ நிலைக்குக் கொணரப்பட்ட இந்த நிர்ப்பந்த உபாய முறை இயற்கையிலேயே தவறானதாக விளங்குகிறது. பிற்பாடு திட்ட அறிக்கையைத் தயாரித்தவர்களே ''சுரண்டாத மூலதனப்'' பூர்ஷ்வாக்கள் செயல்படும் வட்டத்தை வரையறுக்க வேண்டியது அவசியம் எனக் கருதினர். அவ்வாறே அதை முக்கியமாக வியாபாரத்திலும் மற்றும் சிற்றியந்திரத் தொழிலிலும் சில முன்னேற்பாடுகளுடனும் கூட கட்டுப்படுத்தவும் செய்தனர். உதாரணமாக, தனியார் பொருளாதாரப் பிரிவுகள் சிற்றியந்திரத் தொழிலில் சுதந்திரமாக செயல்பட முடியும் என்றாலும் அரசுப் பொருளாதாரப் பிரிவுகள் மக்களின் நலன்களுக்காகச் செயல்படும் வகையில், நாடு முழுதும் இத்துறையில் தலைமைப் பங்கை வகிக்கும் என்று திட்ட அறிக்கையில் கூறப்பட்டது[°].

வேளாண்மைப் பிரிவில் செயல்படும் தேசிய மூலதனத்தைப் பற்றிய கேள்வி வேறுவகையில் எழுப்பப்பட்டது. இங்கே திட்ட அறிக்கையில் பெரிய நிலப்பிரபுக்களின் மறுபிறப்பைத் தடுக்கும் வகையில் மட்டுமே நடவடிக்கைகள் முன்னேக்கப்பட்டன. அதே நேரத்தில் முதலாளித்துவ வகையிலான பெரிய சுரண்டும் பண்ணைகள் தீவிரமடையும் ஆபத்தைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. விவசாயக் கூட்டுறவின் முக்கியத்துவத்தை நியாயமான முறையில் குறிப்பிட்ட (கூட்டுறவுப் பண்ணைகளில் வேளாண்மை சீர்திருத்தத்தின் மூலம் நிலம் பெற்ற எல்லா விவசாயிகளும் கண்டிப்பாக இணைக்கப்பட்டனர்) திட்ட அறிக்கையை ஆக்கியோர்கள் கிராமப்புற சோஷலிசக் காரணி என கூட்டுறவுச் சங்கங்களைக் கருதினர். இத்துடன் சம்மதிப்பது இயலாத ஒன்றாகும். ஏனெனில் திட்ட அறிக்கையில் அறிவிக்கப்பட்ட கோட்பாட்டின் அடிப்படையில் இத்தகைய கூட்டுறவு சங்கங்கள் தனி உடைமையைப் பாதுகாக்கவும் உறுதிப்படுத்தவும் செய்தன. ''எகிப்தின் வேளாண்மைப் பிரச்சினையின் சரியான தீர்வு நிலங்களைப் பொது உடைமையாக்குவதில் இல்லை. அதற்கு மாறாக, நிலங்களின் மீதான தனி உடைமையைப் பாதுகாத்து அதை

---

[°] திட்ட அறிக்கை, பக்கங்கள் 74, 92.

விரிவாக்குவதிலும், எல்லா விவசாயத் தொழிலாளிகளுக்கும் நிலங்களைக் கொண்டிருக்கும் உரிமையை அளிப்பதிலும்தான் அது அடங்கியுள்ளது.*

நாசரின் தலைமையிலிருந்த எகிப்தின் புரட்சிகர ஜனநாயக வாதிகள் 20வது நூற்றூண்டின் இரண்டாவது பாதியில் உலக சக்திகளின் விகிதம் சோஷலிசத்திற்குச் சார்பாக மாறி யுள்ளது என்பதையும் இத்தகைய மாற்றம் தேசிய மற்றும் சமூக விடுதலைச் சக்திகளைத் தீவிரப்படுத்துவதற்கு அனுகூல மானது என்பதையும் சந்தேகமின்றி அதாவது இந்த நூற் ருண்டின் எதார்த்தத்தை ஏற்றுக் கொண்டனர். நாசரும் அவருடைய ஆதரவாளர்களும் ஏகாதிபத்தியத்தின் இயல் பான கூட்டாளிகளும், மற்றும் பிற்போக்குவாத, புரட்சி எதிரிகள் கூட்டத்துடன் சந்தேகமின்றி தொடர்பு கொண் டுள்ள நிலப்பிரபுக்கள் மற்றும் ஏகபோக முதலாளிகளிடமிருந் தும் (''சுரண்டும் மூலதனம்'') பொருளாதார விடுதலையை அடையாமல் அரசியல் சுதந்திரம் என்பது தீர்மானமான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்க முடியாது என்ற தங்களு டைய நம்பிக்கையைத் திட்ட அறிக்கையில் வெளியிட்டனர். ''தேசிய மூலதனம் பொருளாதாரத்தில் தலைமைப் பங்கை மேற்கொண்டு வகிக்கத் திறனற்றது''** என்ற முடிவு வெளி யானது.

திட்ட அறிக்கையின் மிக முக்கியமான ஒரு நிலை புதிய அரசியல் ஸ்தாபனத்தை—அரபு சோஷலிச ஐக்கியத்தைத்—தோற்றுவிப்பதைப் பற்றிக் கூறியது. அந்த ஸ்தாபனம் எகிப்தின் சமுதாய வளர்ச்சியைப் பற்றிய புதிய கோட்பாட்டை வாழ்வில் செயலாக்குவதற்கு வழி செய்ய வேண்டும் என் பதைக் குறிக்கோளாகக் கொண்டது. திட்ட அறிக்கையின் அங்கீகரிப்பின்படி, மற்ற சமுதாய வகுப்புகளை விட நீண்ட காலத்திற்குத் தொழிலாளிகளும் விவசாயிகளும் தங்களுடைய சொந்த எதிர்காலத்தைக் கட்டிக் கொள்ளும் உரிமையற்றவர் களாக இருந்தனராகையால், இந்த ஸ்தாபனத்தின் உறுப்பு களுக்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களில் பாதிக்குப் மேற்பட்டவர்கள் கண்டிப்பாகத் தொழிலாளிகள் மற்றுப் விவசாயிகளாக இருக்க வேண்டும் என்ற அம்சத்தில்தான்

---

* திட்ட அறிக்கை, பக்கம் 91.

** திட்ட அறிக்கை, பக்கம் 64.

இதற்கு முந்தைய தேசிய ஐக்கிய கட்சியுடன் ஒப்பிடுகையில் இந்த ஸ்தாபனத்தின் முக்கியமான வித்தியாசம் அடங்கியுள்ளது. இந்தக் காரணத்தினுல்தான் ''மக்கள் ஸ்தாபனங்கள், குறிப்பாக கூட்டுறவு சங்கங்களும், தொழிற்சங்கங்களும் நல்ல ஜனநாயக வளர்ச்சிக்கான செயல்வன்மை மிக்க, செல்வாக்கு மிக்க பங்கை வகிக்க முடியும். அவைகளே பல்வேறு துறைகளில் தேசிய-ஜனநாயக செயல்பாட்டிற்குத் தேவையாக முன்னணிச் சக்தியையும் ஆதரிக்க வேண்டும்'' என்று கருதப்பட்டது. திட்ட அறிக்கையில் முதலாளித்துவ அமைப்பில் இருக்கும் ''பிற்போக்குவாதம் மற்றும் சுரண்டும் மூலதனம்'' ஆகியவற்றினை சர்வாதிகாரத்திற்குப் பதிலாக புதிய ஐக்கியத்தை—''உழைக்கும் மக்களைக் கொண்டுள்ள சக்திகளின் ஐக்கியத்தை''—கொணர வேண்டும் என்ற குறிக்கோள் முன்வைக்கப்பட்டது. இந்த ஐக்கிய ஸ்தாபனத்தின் குறிக்கோள்—சோஷலிசம். அதாவது ''பற்ருக்குறை அற்ற, எல்லோருக்கும் சம வாய்ப்புகளும் வேலை வாய்ப்பும் நிறைந்த நியாயமான சமுதாயத்தை தோற்றுவிப்பது ஆகும்''*.

திட்ட அறிக்கையின் பல முக்கியமான நிலைகள் 1964ம் ஆண்டு மார்ச் 23ம் தேதி அரசியல் அமைப்புச் சட்டத்தால் உறுதியாக்கப்பட்டன. இதன் மூலம் அதிகார பூர்வமாக அரசு-அரசியல் சித்தாந்தங்களாக அவை ஆக்கப்பட்டன.

திட்ட அறிக்கையின் முக்கியமான பல நிலைகள், அதன் சுருக்கப்பட்ட வடிவில் கூட, எகிப்திய மக்களின் நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு அனுபவங்களைப் பொதுமைப்படுத்தவும், எகிப்தின் மேற்கொண்ட, எதிர்கால வளர்ச்சி, சோஷலிச முன்னேக்குப் பாதையில் அமைய வேண்டும் என்பதிலும் அதை உருவாக்கியவர்கள் முக்கியமாக, ஜனதிபதி நாசர் கொண்டிருந்த நாட்டத்தை வெளிப்படுத்துகின்றன. நாசரும் அவருடைய ஆதரவாளர்களும் வர்க்கப் போராட்டத்தை அங்கீகரிக்கும் வகையில் வளர்ந்தனர். ஆனுல் வர்க்கப் போராட்டம் என்பது முக்கியமாக, மேல்மட்ட பூர்ஷ்வாக்களுக்கும் நிலப்பிரபுத்துவ அம்சங்களுக்கும் மற்றும் ஏகாதிபத்திய சக்திகளுக்கும் எதிரான போராட்டம் என்று அவர்கள் புரிந்து கொண்டனர். பணக்காரச் சுரண்டும் சிறுபான்மையோரின் நலன்களுக்கு உதவி

* திட்ட அறிக்கை, பக்கங்கள் 66,166,170.

புரியும் வகையில் அமைந்த முதலாளித்துவ ஜனநாயகக் கோட்பாட்டை அவர்கள் நிராகரித்தனர். அவர்களின் உலகக் கண்ணோட்ட கோட்பாடுகள், மனிதனுல் மனிதன் சுரண்டப் படுவதை ஒழித்தல், பெரிய அளவு நிலப்பிரபுத்துவ, முத லாளித்துவ உடைமைகளை ஒழித்தல், புரட்சிகர சீர்திருத்தங் களில் உழைக்கும் மக்களின் தீர்மானகரமான பங்கை அங்கீ கரித்தல் போன்ற முக்கியமான கோட்பாடுகளைக் கொண் டிருந்தன.

இவற்றுடன், திட்ட அறிக்கை தொகுக்கப்பட்டிருந்த அதே வடிவில், புரட்சிகர ஜனநாயகக் கருத்தோட்ட அமைப்பு எக்லெக்டிசம் (Eclecticism) மற்றும் விஞ்ஞான தன்மையற்ற தத்துவஞான, சமுதாய-அரசியல் கருத்தோட் டங்களின் தாக்கம் ஆகியவற்றையும் கொண்டிருந்தது. திட்ட அறிக்கையின் சரியான முடிவுகளுடனும் நிலைகளுடனும் தொழிலாளர் வர்க்கத்தின் தலைமைப் பங்கை எதிர்காலத்திலும் கூட மறுத்தல், தனியார் உடைமைகளை அரசுமயமாக்கு தலையும் கிராமப்புறத்தில் கூட்டுறவு சங்கங்களை மிகச் சாதார ணமான வடிவில் வளர்ப்பதையும் சோஷலிச சீர்திருத்தங் களாகக் கருதியது போன்ற இன்னபிற தவறுகளும் இருந்தன. மேலும் ''மக்களின் மீதான பயத்தின்'' தடங்களும், வர்க்க விரோதத்தை தேசிய ஒற்றுமையின் எல்லைக்குள் ''அமைதி யான வழியில்'' தீர்க்கும் நாட்டமும், தேசிய சுயதன்மை மற்றும் எகிப்திய மக்களின் விசேஷ ஆன்மீக அசாதாரணத் தன்மை ஆகியவற்றைப் பற்றிய மிகைப்பாடும் இருந்தன. சுருக்கமாகக் கூறினுல், புரட்சிகர ஜனநாயகவாதிகளின் பல வீனத்தையும் சக்தியையும், காலனியாதிக்கம், முதலாளித் துவம் இரண்டின் ஒடுக்குமுறைக்கும் ஆளான பல்லாயிரக் கணக்கான கிராமப்புற, நகர அரைத் தொழிலாளிகளின் மற்றும் மத்தியதர வகுப்பினரின் குட்டி முதலாளித்துவ மனவியலின் தாக்கத்தையும், அவ்வாறே விஞ்ஞான சோஷ லிச கருத்துக்கள் சோவியத் யூனியன் இன்னும் பிற சோஷலிச நாடுகளின் வெற்றிகள் ஆகியவற்றின் வளர்ந்து வரும் கவர்ந் திழுக்கும் தாக்கத்தையும் திட்ட அறிக்கை பிரதிபலித்தது.

நம்முன்னே இருப்பது சோஷலிச திசை அமைவின், சோஷலிசத்திற்கு முந்தைய வளர்ச்சியின் செயல்திட்டம்தான் என்பதும் சோஷலிச செயல்திட்டம் அல்ல என்பதும் தெளி வானது. அது 60வது வருடங்களின் ஆரம்ப காலகட்டத்தில்

மார்க்சியவாதிகளால் அல்லாமல் புரட்சிகர ஜனநாயகவாதி களால் எகிப்திற்கென உருவாக்கப்பட்டது என்பதைக் கருத்தில் கொண்டால், அதன் தோற்றம் அரபுப் புரட்சிகர-ஜன நாயகச் சித்தாந்த வளர்ச்சியின் குறிப்பிடத்தக்க ஒரு சம்பவமாகும்.

திட்ட அறிக்கையில் கூறப்பட்ட ஆழ்ந்த சமூக-பொருளாதாரச் சீர்திருத்தப் பாதையின் வழியில், நாசரின் தலைமையிலான புரட்சிகரத் தலைமை எகிப்தைச் சமுதாய வளர்ச்சியின் புதிய எல்லைக்குக் கொணர்ந்தது. நாட்டில் 50—60ம் ஆண்டுகளில் நவீன இயந்திரத் தொழிற்சாலைகளுக்கான அஸ்திவாரம் இடப்பட்டது; இயந்திரத் தொழில் மயமாக்கும் வளர்ச்சி விகிதத்தில் ஆசிய-ஆப்பிரிக்க வளரும் நாடுகளின் மத்தியில் எகிப்து ஒரு முன்னிலைப் பங்கை வகித்தது (60ம் ஆண்டுகளின் கடைசியில் இயந்திரத் தொழில் உற்பத்திப் பொருட்களின் அளவு, 1952ம் ஆண்டு அளவை விட 5 மடங்கு அதிகரித்தது). தேசியப் பொருளாதாரத்தின் அஸ்திவாரமாக தேசியப் பொருளாதாரப் பிரிவு விளங்கியது. அதன் உட்பகுதியில் தொழிலாளி வர்க்கம் வளர்ந்தது. தேசியப் பொருளாதாரப் பிரிவுகளுடன் பரந்த அளவில் மக்கள் சேவைத் துறைகளிலும், இயந்திரத் தொழிலிலும் அவ்வாறே வேளாண்மைப் பொருளாதாரத்திலும் தனியார் பொருளாதாரப் பிரிவுகளும் இருந்தன. கிராமப்புறத்தில் கொண்டு வரப்பட்ட வேளாண்மைச் சீர்திருத்தங்கள் பெரிய நில உடைமையாளர்களின் நிலையைத் தகர்த்ததுடன் கூட்டுறவு சங்கங்களின் வளர்ச்சிக்கும் புதிய உற்பத்தி உறவுகளின் வளர்ச்சிக்கும் வழி வகுத்தன.

ஆனும் புரட்சிகர ஜனநாயகவாதிகளால் எகிப்தில் அமுலாக்கப்பட்ட சீர்திருத்தங்களின் சமூக-அரசியல் அம்சத்தை நோக்கினுல், அவை நிலப்பிரபுத்துவ சமுதாய உறவுகளையும், நகரத்திலும் கிராமத்திலும் பெரிய தனியார் உடைமைகளையும் அறவே ஒழித்ததுடன், நிலப்பிரபுக்களையும். பெரிய முதலாளிகளையும் அரசியல் அரங்கிலிருந்து முற்றிலும் நீக்கியது. ஆட்சியின் சமூக-அரசியல் அடிப்படையாக ''மக்களின் உழைக்கும் சக்தியின் ஐக்கியம்'' அறிவிக்கப்பட்டது. அதில் விவசாயிகள், தொழிலாளிகள், அறிவு ஜீவிகள், ராணுவம் மற்றும் தேசிய (''சுரண்டும் தன்மையற்ற'') பூர்ஷ்வா ஆகிய ஐந்து பிரிவுகள் உள்ளடங்கியிருந்தன.

திட்ட அறிக்கையின்படி, நாட்டின் எல்லாத் தேர்தல்

உறுப்புகளிலும் 50 சதவிகிதத்திற்குக் குறையாத இடங்களை, நாசர் தலைவராக விளங்கிய, நாட்டின் ஒரே ஒரு வெகுஜன அரசியல் ஸ்தாபனமான அரபு சோஷலிச ஐக்கியத்தில், வெகு ஜனங்களுக்குக் கொடுப்பதன் மூலமாக அவர்கள் நாட்டின் நிர்வாகத்தில் பங்கெடுப்பதற்கு வகை செய்யும் முயற்சிகளை ஜனாதிபதி நாசரின் அரசாங்கம் நடைமுறையில் மேற்கொண்டது. நாட்டின் அரசியல் படிப்படியாக ஜன நாயக மயமாக்கப்பட்டது. கம்யூனிஸ்டுகளின் பணிகளுக்காக அவர்களைப் பின்தொடர்ந்து கண்காணித்த மற்றும் சிறை யிலும், காவல் முகாம்களிலும் அடைத்த நேரம் ஒன்றிருந்தது. போர் நிலைமை மற்றும் அவசரச் சட்டங்களை நீக்கியது அர சியல் கைதிகளில் பெரும்பான்மையோரின் விடுதலைக்கு வழி வகுத்தது. இப்போது நாசரின் புரட்சிகர-ஜனநாயக அரசு, பல கம்யூனிஸ்டுகளை அரபு சோஷலிச ஐக்கியத்திலும் வெகு ஜன செய்தித் துறையிலும் பங்கெடுத்துக் கொள்ளச் செய்ய முயன்றது. எகிப்தில் மார்க்சிய இலக்கியங்களுக்கு விதிக்கப் பட்டிருந்த தடை நீக்கப்பட்டு, புத்தகக் கடைகளில் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரின் நூல்கள் தோன்றின. மேலும் எகிப்திய பத்திரிகைகளில் சோஷலிசக் கட்டுமானத் தின் அனுபவங்களைப் பற்றிப் பரந்த அளவில் விவரிக்கப்பட் டன. நாசரும் அவருடைய ஆதரவாளர்களும் மெதுவாக ஆனால் உறுதியாக, எகிப்திய மார்க்சிஸ்டுகளின் ஒத்துழைப்பின் அவசியத்தைப் புரிந்து கொள்ள ஆரம்பித்தனர். மேலும் அதை நடைமுறையில் செயலாக்கவும் ஆரம்பித்தனர்.

இத்தகைய எல்லா நடவடிக்கைகளும், கடைசிவரை அவை நிறைவேற்றப்படவில்லை என்ற போதிலும், (உதாரண மாக, முன்பு நிலச்சுவான்தார்களுக்கும், முதலாளித்துவ வகுப்புகளுக்கும் சேவை புரிந்தவர்களிடம், சீர்திருத்தி அமைக் கப்பட்ட அரசாங்க இயந்திரம் தங்கிவிட்டது) அவை தேசிய-ஜனநாயகப் புரட்சியின் வெற்றிகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற நாட்டத்துடன் எடுக்கப்பட்டவை ஆகும். புரட்சியின் செயல்திட்டங்களை நிறைவேற்றுவதற்கான போராட்டத்தின் தர்க்கமே மக்களின் உழைப்பாளர் பிரிவு மற்றும் முற்போக்கு புரட்சிகர அறிவு ஜீவிகள் ஆகியோரின் ஆதரவு, முன்வைக் கப்பட்ட குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு மிகவும் அவசியம் என்று நாசரை உணர வைத்தது.

வெளி உறவுத் துறையில், எகிப்துப் புரட்சியின் வெற்றி

கரமான வளர்ச்சிக்கான உத்தரவாதத்தைச் சோஷலிச நாடுகளுடனுன, குறிப்பாக சோவியத் யூனியனுடனுன, சர் வாம்ச ஒத்துழைப்பிலும் நட்பிலும் நாசர் கண்டார். எனவே எகிப்தின் உள்நாட்டு அரசியலின் முற்போக்கு தன்மையை ஆழப்படுத்திய போக்கு, சோவியத்-எகிப்திய உறவுகளை உறுதி யாக்கவும் விரிவாக்கவும் செய்தது. அவற்றின் அடிப்படை யாகப் பிற்போக்குவாதம் மற்றும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டம், மக்களின் சுதந்திரம், அவர்களின் சமூக-பொருளாதார மற்றும் கலாச்சார முன்னேற்றத்திற் கான போராட்டம் ஆகியவைகளின் நெருக்கம் அல்லது அவற்றின் பொருத்தமே விளங்கியது. தன்னுடைய அரசியல் கொள்கையாக சோஷலிசத் திசை அமைவை அறிவித்த நாசர் தலைமைவகித்த எகிப்திய புரட்சித் தலைமை சோவியத் யூனியனின் ஆதரவை நாடியது மிகவும் இயல்பானதும் முறை யானதும் ஆகும்.

சோவியத்-எகிப்து ஒத்துழைப்பு 60ம் ஆண்டுகளில் பொரு ளாதாரம் மற்றும் அரசியல், வணிகம் மற்றும் ராணுவத் துறை, கலாச்சாரம், விஞ்ஞானம், உல்லாசப் பயணம் போன்ற எல்லாத் துறைகளிலும் பரந்த அளவை விரைந்து அடைந் ததற்கான காரணம் இதிலிருந்து விளங்கும். சோவியத் யூனி யனின் உதவியுடன் எகிப்தில் கிட்டத்தட்ட 150 பல்வேறு தொழிற்சாலைகள் கட்டப்பட்டன என்பதை நினைவுபடுத்தினுல் போதும். அசுவானில் உள்ள, நாட்டிலேயே மிகவும் சக்தி வாய்ந்த, புகழ் பெற்ற நீர்மின் உற்பத்தி நிலையம், ஹெல்வானில் உள்ள எகிப்திலேயே மிகவும் பெரிய உலோக உற்பத்திக் கூட்டாலை, நாக்-ஹமாதியில் உள்ள அலுமினியத் தொழிற்சாலை, ஆப்பிரிக்கக் கண்டத்திலேயே உள்ள ஒரே ஒரு 50 கிலோவாட் சக்தி உள்ள மின் கம்பிப் பாதை (Power transmission line) ஆகியவை இவற்றில் சில ஆகும். சோவியத் யூனியனுடனுன எகிப்தின் ஒத்துழைப்பை நாசர் மிக உயர்த்தி மதிப்பிட்டது தற்செயலானது அல்ல. தன்னு டைய சொற்பொழிவுகளில் அடிக்கடி நாசர் குறிப்பிட்டபடி, சோவியத்-எகிப்து ஒத்துழைப்பை பல்வேறு துறைகளில் எகிப்தின் வெற்றியை நிர்ணயிக்கும் தலையாய சக்தி எனக் கருதினுர். இத்துடன் சோவியத்-எகிப்து ஒத்துழைப்பு பரஸ்பர உதவியின் அடிப்படையில் அமைந்தது என்பதைக் குறிப்பிடு வது அவசியம்.

நாசரின் தலைமையிலான ஆளும் புரட்சிகர ஜனநாயகவாதிகளால் 60வது வருடங்களில் அமுலாக்கப்பட்ட சமூக-பொருளாதார மற்றும் அரசியல் சீர்திருத்தங்கள் முற்போக்குத் தன்மை நிறைந்தவை என்பது மிகவும் தெளிவானது. மக்களுக்கு அவை எவ்வளவு உண்மையான பலனைக் கொணர்ந்தது, எவ்வளவு தூரத்திற்கு அவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தியது என்பதைப் பொறுத்தே அத்தகைய சீர்திருத்தங்களின் ஜனநாயகவாதம் அளக்கப்பட்டது. ஆனால் அப்போதும் கூட, அந்தக் காலகட்டத்திலேயே, உழைக்கும் மக்கள் பயமின்றியும் சுதந்திரமாகவும் இத்தகைய முற்போக்குச் சீர்திருத்தங்களை நடைமுறையாக்குவதில் பங்கு கொள்ளும் போதே, அத்தகைய சீர்திருத்தங்களின் முக்கியத்துவம் பிரம்மாண்டமான அளவை அடையும் என்பது தெளிவானது. உழைப்பாளிகளை அரசியல் ரீதியாக அணி திரட்டும் வேலையில் பல தீர்க்கப்படாத பிரச்சினைகள் எஞ்சியிருந்தன. குறிப்பாக, அரபு சோஷலிச ஐக்கியத்தின் சேவைகளை திட்ட அறிக்கையின் கோரிக்கைகள் மற்றும் செயல்திட்டத்தின்படி வேகமாகத் தீவிரப்படுத்த நாசர் கொண்டிருந்த பல நம்பிக்கைகள் முழுமையாகச் செயல்படுத்தப்படவில்லை. அரசியல் தலைமை, அரபு சோஷலிச ஐக்கியத்தில் கீழ்மட்ட, மத்திய மற்றும் உயர்மட்ட அளவில் தொழிலாளர், விவசாயிகளின் நிலையை உறுதிப்படுத்துவதில் நாட்டம் கொண்டிருந்த போதிலும் அந்த ஸ்தாபனத்தில் குட்டி முதலாளித்துவ வகுப்பின் அம்சங்கள் நிறைந்திருந்தன.

அரபு சோஷலிச ஐக்கியப் பணிகளின் அரசியல் பாதிப்பு மொத்தத்தில் அவ்வளவு உயர்ந்ததாக இருக்கவில்லை. அதற்குக் கொடுக்கப்பட்ட ''வர்க்கங்களைத் தவிர்த்த'' தன்மை அதை அடிப்படையில் செயலின்மை நிலைக்குத் தள்ளியது. நாட்டில் நடக்கும் வர்க்கப் போராட்டத்தின் தொடர்ந்த தீவிரத் தன்மையை சமூக-பொருளாதார நிலைமைகள் அரபு சோஷலிச ஐக்கியத்திலும் மற்ற சமுதாய ஸ்தாபனங்களிலும் பிரதிபலித்தன என்ற உண்மை மேற்கூறிய நிலையை மேலும் ஆழப்படுத்தியது. சுரண்டும் வர்க்கங்கள், புரட்சிகரத் தலைமையின் அரசியலுக்குப் பல வேறுபட்ட விதங்களில் கடும் தடைகளை உண்டாக்கின. இன்னும் வெளிப்படையான அரசாங்க எதிர்ப்புப் பிரச்சாரங்களில்கூட பிற்போக்குவாத அம்சங்கள் பங்கு கொண்டன. சட்டத் தொகுப்பிலிருந்த

பல ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டு, தேசிய மயமாக்கப்பட்ட பின்பும் கூட பெரிய பூர்ஷ்வாக்கள் வணிகம், மக்கள் சேவைத் துறை, கட்டுமானத் துறை, சிறிய மற்றும் மத்திய அளவு இயந்திரத் தொழிற்சாலைகளில் தொடர்ந்து தீவிரமாகச் செயல்பட்டனர். சீர்திருத்தம் செய்யப்பட்ட கிராமப்புறத்தில் பணக்கார விவசாயிகளும், வேளாண்மைப் பூர்ஷ்வாக்களும் வேகமாக வளர ஆரம்பித்தனர். முன்னேற்றச் சீர்திருத்தங்களை மறைமுகமாகத் தாக்கும் பூர்ஷ்வாவின் மறு பிறப்பு, அவ்வாறே அரசாங்க, நிர்வாக மற்றும் ராணுவ அமைப்புகளின் உயர்மட்டத்திலும் ஆரம்பித்தது. அவர்களின் உதவியுடனும், நேரான பங்கெடுப்பிலும், கள்ள வியாபாரம், காண்டிராக்டுகள் அல்லது லஞ்சம், இன்னும், நேரடியான திருட்டு ஆகியவைகளின் உதவியால் பணத்தைப் பெருக்கிச் செல்லும் பூர்ஷ்வாக்கள் கொந்தளிப்பான நிலையை வளர்த்தனர்.

இந்த எல்லா எதிர்ப்புரட்சி சக்திகளும் நாட்டின் உள்நாட்டு அரசியல் வளர்ச்சியைத் தடுக்கவும் சோஷலிசத் திசை அமைவுப் பாதையிலிருந்து அதை மாற்றவும் தொடர்ந்து திட்டமிட்டு இயங்கின. இந்த எல்லா சக்திகளுடனும் மொத்தமாக அரபுப் பிற்போக்குவாதமும் சேர்ந்து செயல்பட்டது. ஏனெனில் அதனுடைய நிலைக்கு ஆற்றல் நிறைந்த பயமுறுத்தலை எகிப்திய புரட்சியின் பக்கமிருந்து அரபுப் பிற்போக்குவாதம் கண்டதே இதற்குக் காரணம்.

புதிய, பலம் மிக்க, சுதந்திர எகிப்தைத் தோற்றுவிப்பதற்கான நாசரின் உள்நாட்டு மற்றும் அயல் நாட்டு அரசியலும் பிற அரபு நாடுகளின் தேசிய விடுதலைச் சக்திகளுக்கு அவர் அளித்த ஆதரவும் இஸ்ரேலின் நாடுபிடிக்கும் திட்டங்களுக்குக் குழிதோண்டுவதாக அமைந்தன என்பது சந்தேகமற்றது. நிலப்பரப்பை ஆக்கிரமிப்பதில் மட்டுமல்லாது, அரபு நாடுகளில் உள்ள முற்போக்கு ஆட்சி அமைப்புகளை, முதல் வரிசையில் எகிப்து அரசாங்கத்தை, நீக்குவதிலான தங்களுடைய நோக்கத்தை அவர்கள் மறைக்கவில்லை.

இத்தகைய நிலைமைகளில், இஸ்ரேல் ஆக்கிரமிப்பாளர்கள், 1967ம் ஆண்டு ஜூன் மாதம் மத்திய கிழக்கு வட்டாரத்தில் பரந்த அளவில் போரை ஆரம்பித்தனர். எகிப்தின் ராணுவ இலக்குகளைத் தாக்கிய அவர்கள் செனாய் தீபகற்பத்தைக் கைப்பற்றிக் கொண்டு, சூயஸ் கால்வாயைச் செயலற்றதாக்கினர்.

எகிப்து ராணுவத்தின் தோல்வி எகிப்திய சமுதாயத்தின் பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த மக்களால் வெவ்வேருன விதங்களில் ஜீரணிக்கப்பட்டது. நகரங்களிலும் கிராமப் புறத்திலும் அரசாங்க அமைப்பிலும் ராணுவத்திலும் மத வட்டாரங்களிலும் இருந்த, முற்போக்குவாதச் சீர்திருத்தங் களால் பாதிக்கப்பட்ட, உடைமை வர்க்கங்களின் பிரதிநிதி கள் இரகசியமாக, சில சமயங்களில் வெளிப்படையாகவே இதனுல் வன்மமுடன் மகிழ்ந்தனர். அவர்களுடைய உடை மைச் சலுகை மற்றும் அரசியல் சலுகைகளைப் பறித்த, அவர் களுடைய நலன்களுக்கு விரோதமான ஆட்சி முறையை அழிப்பதற்கான சாத்தியத்தை அவர்கள் இப்போது கண் டனர். இதைத் தொடர்ந்து நாசரின் தலைமையிலான அர சாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான சதிவேலைகளில் ஈடுபட்டனர். மறு புறத்திலோ, உழைக்கும் வெகு ஜனங்களுக்கு—தொழி லாளிகள், விவசாயிகள், கைத்தொழிலாளர்கள், தேசபக்த அறிவு ஜீவிகள், ஆகியோருக்கும், கணிசமான பகுதி இளைஞர் களுக்கும் மாணவர்களுக்கும் எகிப்து ராணுவத்தின் தோல்வி எதிர்பாராத இடியாக இருந்ததுடன், நாட்டின் நிலையைப் புது விதமாக நோக்கத் தூண்டியது. ஜனதிபதி நாசரின் முற் போக்கு அரசாங்கத்தின் முன் நிற்கும் அபாயத்தையும் அந்த அரசாங்கம் உழைக்கும் மக்களின் நலன்களுக்காக செய்த பணிகளுக்கான ஆபத்தையும் அவர்கள் தெளிவாகக் கண் டனர்.

குறிப்பாக இவர்கள்தான் கடினமான நேரத்திலும் நாசரின் மீதான முழு நம்பிக்கையையும் வெளிப்படுத்தினர். அவர்கள் மேற்கொண்டு நாட்டின் வருவாயை தொடர்ச்சியான சமூக-பொருளாதாரச் சீர்திருத்தத்திற்கும் எதிரியை எதிர்த்துத் தாக்குவதற்குத் தேவையான வகையிலும் பயன்படுத்தும் பரந்த அதிகாரத்தையும் நாசருக்கு அளித்தனர். சந்தேகமின்றி ஆக்கிரமிப்பிற்கு உள்ளான எல்லா அரபு நிலப்பரப்புக்களையும் மீட்கவும், இஸ்ரேல் ஆக்கிரமிப்பின் விளைவுகளை நீக்கவுமான போராட்டத்தை நாசரின் தலைமையின்கீழ் தொடர எகிப்து மக்கள் தீர்மானித்தனர். சோவியத் யூனியனின் உதவியுடன் தங்களுடைய ராணுவ வலிமையை வேகமாகப் புதுப்பித்தனர்.

நாட்டை அதிர்ச்சிக்கு உள்ளாக்கிய 1967ம் வருட அரபு-இஸ்ரேல் போரின் சம்பவங்கள், ஜனதிபதி நாசரை முக்கிய மான அரசியல் நடவடிக்கைகளை எடுக்கத் தூண்டின: படிப்

படியாக வளர்ந்து வந்த ஆட்சியெதிர்ப்பு மையங்களை ஒழிக்க சக்தியைத் திரட்டல், அரபு சோஷலிச ஐக்கியத்திலிருந்த பழமைவாத கருத்தோட்டம் மிக்கப் பிரமுகர்களை நீக்குதல், புரட்சியின் வளர்ச்சியைத் தடுக்கமுயலும் ''ராணுவ பூர்ஷ்வாக்களின்'' நூற்றுக் கணக்கான பிரதிநிதிகளை அரசாங்க அமைப்பிலிருந்து தூக்கி எறிதல் ஆகிய நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டார். 1968ம் ஆண்டு வசந்த பருவத்தில் நாசர் ''மார்ச் 30ம் தேதிய செயல்திட்டத்தைப்'' பிரகடனப்படுத்தினர். அதில் அதிகார வர்க்கத்தினருக்கு எதிரான போர் அறிவிக்கப்பட்டிருந்தது. அரபு சோஷலிச ஐக்கியத்தின் பங்கை தீவிரப்படுத்தவும், எகிப்தின் சோஷலிசத் திசை அமைவை ஊர்ஜிதப்படுத்தவும், ''தேசிய ஒற்றுமையை'' உறுதிப்படுத்தவும் மேலும் நாட்டின் எல்லா வருவாயையும் ஆக்கிரமிப்புக்கு ஆளான நிலப்பரப்புக்களை மீட்கப்பயன்படுத்தவும் கோரப்பட்டது. ''தேசிய ஒற்றுமையில்'' தலைமை ஸ்தாபனம் உழைக்கும் மக்களின் ஐக்கியத்தையேச் சாரும் என்பது இச்செயல் திட்டத்தில் நேரடியாகவே கூறப்பட்டிருந்தது. உழைக்கும் மக்களின் ஐக்கியத்தின் அந்தத் தலைமைப்பங்கு புதுப்பிக்கப்பட்ட அரபு சோஷலிச ஐக்கியத்தின் மூலமாகவும், அதனுள் தோற்றுவிக்கப்பட்ட ''வர்க்கங்களுக்கிடையிலான வித்தியாசங்களைச் சுத்தமாக நீக்கும் அரசியல் தலைமையின் கொள்கையுடன் ஒத்துழைக்கும் திறன் பெற்றவர்களால் நிறைந்த புதிய அரசியல் கருவியின் மூலமாகவும் செயலாக்கப்படும்''* என்பதும் அச்செயல்திட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

உள்நாட்டு, அன்னிய பிற்போக்குவாதத்திற்குப் பதிலளிக்கும் வகையில், சமூக-பொருளாதாரச் சீர்திருத்தங்களை மேற்கொண்டு ஆழப்படுத்திப் பாதுகாக்கும் குறிக்கோளுடன் நாசர் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். அரசாங்க இயந்திரத்திலிருந்தும், அரபு சோஷலிச ஐக்கியத்திலிருந்தும் பூர்ஷ்வா சார்பு அம்சங்களையும், ஊழல் பேர்வழிகளையும் நீக்கி அவற்றைச் ''சுத்தம்'' செய்ததுடன், கிராமப்புறத்தில் முதலாளித்துவ அம்சங்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும்

---

* க.அ. நாசர். எகிப்துப் புரட்சியின் பிரச்சினைகள். தேர்ந்தெடுக்கப்பட்ட 1952 — 1970 வருட சொற்பொழிவுகள், மாஸ்கோ, ''சர்வதேச உறவு'', 1979, பக்கம் 179. (ருஷ்ய மொழியில்.)

குறிக்கோளுடன் 1969ம் ஆண்டு நிலச் சீர்திருத்தத்தைப் பற்றிய புதிய சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அது உச்சகட்ட நில உடைமையின் அளவை 20 ஹெக்டேர் வரைக் குறைத் தது. ஆயினும் இந்த நடவடிக்கைகளைக் கடைசி வரை நிறை வேற்ற அவரால் முடியவில்லை. அவர் ஆட்சியின்கீழ் வளர்ந்த பிற்போக்குவாதம் இதை நன்கு பயன்படுத்திக் கொண்டது.

* * *

உள்நாட்டிலும் வெளி உறவுத் துறையிலும் நாசர் மேற் கொண்ட அரசியல் பாதையின் முக்கியத்துவத்தை வரலாற்று அனுபவம் தெளிவாகக் காட்டியுள்ளது. முற்போக்குப் பாதை யிலான எகிப்தின் வளர்ச்சிக்கு அவர் செய்த சேவைகளை யாரும் மறுக்க இயலாது. குடியரசின் சோஷலிசத் திசை அமைவுப் பாதையைப் பிரகடனப்படுத்தியது எகிப்தின் தவப்புதல்வனான நாசரின் சாதனை ஆகும். எகிப்திற்கும் சோவியத் யூனியனிற்கும் இடையிலான நட்புறவை உறுதிப் படுத்த அவர் பல வழிகளிலும் முயன்றார். நாசர் மார்க்சிய வாதியல்ல. ஆனால் முற்போக்கான சமூக-அரசியல் சீர்திருத் தங்களைச் செயல்படுத்தியதிலும், அரபு மக்களின் ஏகாதிபத் திய எதிர்ப்பைத் தீவிரப்படுத்தியதிலும் அவர் மீது விஞ் ஞான சோஷலிசம் கொண்டிருந்த தாக்கம் பிரத்தியட்சமா னது. சோவியத் யூனியன் மற்றும் பிற சோஷலிச நாடுகள் பெற்ற பல அனுபவங்களின் மூலம் புரட்சி, அதன் சக்தி கள் மற்றும் அதன் எதிர்காலம் ஆகியவற்றைப் பற்றிய தன்னுடைய கருத்துக்களை மெதுவாக, ஆனால் நிலையாக அவர் மாற்றி கொண்டு வந்தார்.

அரசாங்கப் பிரமுகரும் ஒரு அரசியல்வாதியுமான நாசரின் சித்தாந்தம்—தேசபக்த தொண்டிலிருந்து ஆரம்பித்து, படிப் படியாக விஞ்ஞான சோஷலிசத்தின் பல கொள்கைகளை ஏற்றுக் கொள்ளும் புகழ் பெற்ற மத்தியதர சமூக வகுப்புப் பிரதிநிதிகளின் புரட்சி-ஜனநாயக சித்தாந்தமாகும். நாசர் மற்றும் அவரின் ஆதரவாளர்களின் கருத்துப் பரிணமம் குறிப்பிட்ட அளவு நிர்ணயமானது என்பது தெளிவே. அவ ரைப் போன்ற பிரமுகர்கள், முடிவில் சோஷலிசத்தின் வெற் றிக்கு வழி வகுக்கும் பாதையில் தங்களுடைய நாட்டு மக் களைத் தங்களுடன் கொண்டு செல்பவர்கள்.

எகிப்தில் தீவிரவாத சமூக-பொருளாதாரச் சீர்திருத்தங் களை செய்த கமால் அப்துல் நாசரின் அனுபவங்கள் ஆழ்ந்து ஆராயப்பட வேண்டியவை. இந்த அவருடைய அனுபவங் களில் சாதகமானவையும் சாதகமற்ற அம்சங்களும் இருப்பது தெளிவே. ஒரு புரட்சியாளராகவும் அரசியல்வாதியாகவும் நாசரும் எகிப்திய புரட்சிகர ஜனநாயகமும் தன்னுடைய உள் முரண்பாடுகளுடனும், சிக்கல் நிறைந்த வடிவத்துடனும் நம்முன் நிற்கின்றூர்கள்.

# அந்தோனியோ அகஸ்திஞே நேத்தோ

அ. அ. நேத்தோ ஆப்பிரிக்க தேசிய விடுதலை இயக்கத்தின் புகழ் பெற்ற தலைவர்களில் ஒருவர் ஆவார்.

லுவாண்டா (Luanda)விற்கு அருகில் உள்ள இக் கோலு-இ-பெங்கு (I kolu—I—Bengu) என்ற கிராமத்தில் 1922ம் ஆண்டு செப்டெம்பர் 17ம் தேதி கிம்பண்டு (Kimbundu) பழங்குடி இனத்து கிருத்துவக் கோயில் போதகர் ஒருவரின் குடும்பத்தில் பிறந்தார்.

லுவாண்டாவிலுள்ள ஒரு பிராட்டஸ்டண்டு பள்ளியில் («Salvador Corria») படித்தார்.

1944-47ம் வருடங்களில் நேத்தோ லுவாண்டாவின் பொதுச் சுகாதார அமைப்பில் பணிபுரிந்தார். 1947ம் ஆண்டு போர்ச்சுகேசியாவிற்குச் சென்று அங்கே லிஸ்பன் பல்கலைக்கழகத்தின் (Lisbon University) மருத்துவப் பிரிவிலும் காயிம்ரா பல்கலைக்கழகத்திலும் (University of Coimbra) கல்வி பயின்ருர்.

போர்ச்சுகேசியாவில் படிக்கும் போதே அங்கோலா உள்பட பிற போர்ச்சுகேசியக் காலனிகளுக்கான விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டார். அவ்வேளையில் தலைமறைவில் இயங்கிய போர்ச்சுகேசியக் கம்யூனிஸ்டுக் கட்சியுடனும் அவர் தொடர்பு கொண்டிருந்தார்.

மிகச் சிறந்த புலவராக அ. நேத்தோ அவரு

டைய மாணவப் பருவத்திலேயே போர்ச்சுகேசிய இலக்கியவாதிகளின் அங்கீகரிப்பைப் பெற்றிருந்தார்.

*1952—1960*ம் வருடங்களில் தன்னுடைய அரசியல் பணிகளுக்காக போர்ச்சுகேசிய ஆட்சியாளர்களால் பல முறை கைது செய்யப்பட்டார்.

*1956*ம் ஆண்டு, சிறையில் இருக்கும் போதே, ''அங்கோலிய மக்கள் விடுதலை இயக்கம்'' (The Popular Movement for the Liberation of Angola—MPLA) என்ற அ.ம. வி.இ. கட்சியை நிறுவுவதில் தலைமை தாங்கினர். *1957*ம் ஆண்டிலிருந்து அதன் உறுப்பினராக விளங்கினர்.

லிஸ்பன் பல்கலைக்கழகத்தில் *1957*ம் ஆண்டு உடற்கூறு இயல் மருத்துவராகப் பட்டம் பெற்ற அ. நேத்தோ *1958*ம் ஆண்டு அங்கோலாவிற்குத் திரும்பினர்.

லுவாண்டாவில் மருத்துவராக வேலை செய்யும் போதே, அரசியலில் ஈடுபட்டார். ''அங்கோலா மக்கள் விடுதலை இயக்கத்திற்குத்'' தலைமை தாங்கினர்.

*1960*ம் ஆண்டு ஜூன் மாதம் *8*ம் தேதி அ. நேத்தோ, லுவாண்டாவில் கைது செய்யப்பட்டு, அதே வருடம் செப்டெம்பர் மாதம் போர்ச்சுகேசிய ஆட்சியாளர்களால் பச்சைமுனைத் தீவுகளுக்கு (Cape Verde Islands) நாடு கடத்தப்பட்டார். பின்னர் விடுதலை செய்யப்பட்ட அவர், *1961*ம் ஆண்டு நவம்பரில், பச்சைமுனைத் தீவுகள் கவர்னரின் உத்தரவின் பேரில் மறுபடி கைது செய்யப்பட்டு அல்ஜுபா (Aljuba)வில் உள்ள போர்ச்சுகேசிய ராணுவச் சிறைக்கு அனுப்பப்பட்டார்.

போர்ச்சுகேசிய ஜனநாயக ஸ்தாபனங்களின் தலையீட்டால் *1962*ம் வருடம் வசந்தகாலத்தில்

விடுதலை செய்யப்பட்ட அவர் லிஸ்பனுக்கு அருகில் இல்லச் சிறையில் வைக்கப்பட்டார். *1962*ம் ஆண்டு ஜூலை மாதம் தற்போது கின்ஷாஸ (Kinshasa) என்றழைக்கப்படும் லியோபோல்ட்வில்லே (Leopoldville)விற்கு அவர் தன் குடும்பத்துடன் அ.ம.வி. இ.ன் உதவியுடன் தப்பி ஓடினர்.

*1962*ம் ஆண்டு டிசம்பரில் இருந்து *1979*ம் ஆண்டு வரை அ.ம.வி.இ.ன் தலைவராக விளங்கினர். (*1977*ம் ஆண்டு மறுபடி தேர்ந்தெடுக்கப்பட்டார்.)

*1969*லிருந்து *1977*ம் ஆண்டு வரை ''அனைத்துலக சமாதான சபையின்'' தலைமைக்குழு உறுப்பினராக இருந்தார்.

''மொசாம்பிக், அங்கோலா மற்றும் கயினி பிஸ்ஸாவு (Guinea-Bissau)வின் விடுதலைக்கான குழு'' வெளியிட்ட கொரில்லேரோ *(Guerrilero)* அறிக்கையின் செய்திப்படி அ.ம.வி.இ. கட்சித் தலைமை நேத்தோவைக் கொல்வதற்காக கட்சிக்குள் இருந்த இரகசியச் சூழ்ச்சியை அம்பலப்படுத்தியது (அவரைக் கொல்ல இரு முறை முயற்சிக்கப்பட்டது).

*1974-77*ம் ஆண்டுகளில் நேத்தோ அ.ம.வி.இ.—உழைப்பாளர் கட்சியின்—தலைவராக விளங்கினர்.

நீண்டகால அயல்நாட்டு வாழ்க்கைக்குப் பின் *1975*ம் ஆண்டு பிப்ரவரி *4*ம் நாள் அங்கோலா திரும்பினர்.

*1975*ம் ஆண்டு நவம்பர் *11*ம் தேதி அங்கோலாவின் சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தியதுடன், அங்கோலா மக்கள் குடியரசின் முதல் ஜனதிபதியாகவும், அ.ம.வி.இ. கட்சி அமைத்த அரசாங்கத்தின் தலைவராகவும், அங்கோலா தேசிய ராணுவத்தின் முதல் தலைவராகவும் (Commander—in—Chief) ஆனர். *1975*ம் ஆண்டு நவம்பரில் இருந்து *1979*ம் ஆண்டு செப்டெம்பர் வரை அங்கோலா

மக்கள் குடியரசின் புரட்சிக் கவுன்சிலின் தலைவ ராகவும் விளங்கினார்.

*1967, 1970, 1971, 1973, 1976, 1977, 1978, 1979*ம் ஆண்டுகளில் அவர் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்தார்.

*1976*ம் ஆண்டு அக்டோபர் *8*ம் தேதி அங்கோலா மக்கள் குடியரசுக்கும் சோவியத் யூனியனிற்கும் இடையிலான நட்பு மற்றும் ஒத்துழைப்பு உடன்படிக்கையில் கையெழுத்திட்டார்.

*1979*ம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தின் ஆரம்பத்தில் மருத்துவ சிகிச்சைக்கென சோவியத் யூனியனிற்கு வந்த அவர், செப்டெம்பர் *10*ம் தேதி காலமானார்.

சுதந்திரமடைந்த மற்ற எல்லா ஆப்பிரிக்க அரசுகளை விட, அதை அடைய அங்கோலா கடந்து வந்த பாதைதான் ஒருவேளை மற்ற எல்லாவற்றையும் விடக் கடினமானதாக இருக்கும். காலனி ஆதிக்கத்தில் இருந்த மக்களுக்கும், ஆட்சி வட்டாரத்திலிருந்தவர்களுக்கும் இடையேயான மோதலை அமைதி வழியில் தீர்ப்பதை அசாத்தியமாக்கிய சாலசாரின் (Salazar) பாசிஸ்டு சர்வாதிகாரத்தை எதிர்த்து, போர்ச்சுகேசிய காலனியில் இருந்த மக்களில் ஆயுத எழுச்சியை முதன்முதலில் 1961ம் ஆண்டு பிப்ரவரி 4ம் நாள் ஆரம்பித்தவர்கள் அங்கோலா தேசபக்தர்கள் ஆவர். 1961ம் வருட ஆயுத எழுச்சியானது அன்னிய அடிமை முறையை எதிர்த்த திட்டவட்டமான போராட்டத்திற்கு ஆரம்பப் புள்ளியாகவும் அங்கோலா மக்களுக்கும் மற்றும் பிற போர்ச்சுகேசியக் காலனி மக்களுக்கும் அடையாளச் சின்னமாகவும் அமைந்தது.

ஆனால் லுவாண்டா ஆயுத எழுச்சி மோசமான முறையில் திட்டமிடப்பட்டிருந்தது. அதன் முன்முயற்சியாளர்கள் பாசிஸ்டு ஆட்சியை எதிர்த்து நடக்கும் போராட்டத்தின் விசேஷ சூழ்நிலைகளைக் கவனத்தில் கொள்ளவில்லை. மக்களில் பெரும்பான்மையினர் போராட்டத்தின் குறிக்கோளை அறிந்திருக்கவில்லை. காலனியின் ராணுவம் எழுச்சியைக் கடுமையான வழிகளில் அடக்கியது. அங்கோலாவின் துணிவு மிக்க பல வீரர்கள் கொல்லப்பட்டனர். பின்னர் தேசிய விடுதலைக்கான சக்திகளைத் திருத்தி அமைக்கும் பணியும், நீண்டகால ஆயுதப் போராட்டத்திற்கு அவற்றைத் தயார் செய்யும் பணியும் தொடர்ந்து செய்யப்பட்டன. அன்னிய ஆக்கிரமிப்பை நீக்கி, சர்வதேச ஏகாதிபத்தியத்தின் உதவியுடன் இயங்கிய பிரிவினைவாதக் குழுக்களை முறியடித்து சுதந்திர ஆப்பிரிக்க அரசுகளுக்கிடையே தன்னுடைய இடத்தைப் பெற அங்கோலாவிற்கு 15 வருட நீண்டகால, தொடர்ந்த, உறுதியான ஆயுதப் போராட்டம் தேவைப்பட்டது.

தொழிலாளர், கம்யூனிஸ்டு மற்றும் தேசிய-விடுதலை இயக்கங்களின் சர்வதேச ஆதரவைப் பெற்றிருந்த மேலும் பல போராட்டங்களில் பங்குபெற்ற அனுபவம் நிறைந்த முன்னணிப்படையான—அங்கோலிய மக்கள் விடுதலை இயக்கம் (அ. ம. வி. இ.) என்ற கட்சியும் இந்த இயக்கத்தைத் தலைமை தாங்கிய துணிவும் உறுதியும் மிக்க புரட்சியாளர்களின் ஒன்றிணைந்த குழுவும் இருந்ததால் அங்கோலா மக்கள் எல்லா சோதனைகளையும் வெற்றிகரமாகக் கடந்தார்கள். மேற்கூறப்பட்ட புரட்சியாளர்களின் குழுவில் முதன்மையானவராக அ. ம. வி. இ.யின் அங்கீகரிக்கப்பட்ட தலைவரான அகஸ்தினோ நேத்தோவைக் குறிப்பிட வேண்டும்.

காலனி நுகத்தடியின்கீழ் எல்லாவிதச் சலுகைகளுடனும் (ஸ்தல ஜனத்தொகையின் தரத்துடன் ஒப்பிடுகையில் சற்று உயர்ந்த நிலை) வசதியுடனும் வாழ்வதற்குப் பதிலாக தேசிய விடுதலைப் போராட்டத்தில் எல்லாவற்றையும் இழந்து, தியாகம் செய்யவும், போராட்டத்தின் ஆபத்துகளைச் சந்திக்கவும் தயாராக இருந்த புகழ் பெற்ற புரட்சிகர ஆப்பிரிக்க அறிவு ஜீவுகளின் முன்னணி வரிசையைச் சேர்ந்தவர் நேத்தோ ஆவார். தேசியப் புரட்சி இயக்கத்தின் ஸ்தாபகர்களாகவும் சித்தாந்தவாதிகளாகவும் இயங்கியவர்களும், போர்ச்சுகேசிய காலனி ஆதிக்கத்தால் சுரண்டப்பட்ட வெகு ஜனங்களை ஒன்றிணைத்து அவர்களின் தேசிய உணர்வை வளர்க்கும் அடிப்படைப் பணிகளில் ஈடுபட்டவர்களுமே இம்முன்னணி வரிசையைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

திறமை வாய்ந்த புலவரும் மருத்துவருமாகிய நேத்தோ, தேசபக்த, நியாய உணர்வுகளால் தூண்டப்பட்டு, நாட்டின் விடுதலைக்கான போராட்டத்தைத் தனது வாழ்வின் தலையாயக் குறிக்கோளாகக் கொண்டார்.

தன்னுடைய அபூர்வப் புலமையின் காரணமாக, ''அங்கோலாவின் தேசியக் கலாச்சாரத்தின் மறுமலர்ச்சிக்கான இயக்கத்தின்'' ஒரு பெரிய பிரமுகராக 40வது வருடங்களிலேயே விளங்கினார். அவருடைய முதல் படைப்புகளே நாட்டைக் கிளர்ச்சியடையச் செய்து கொண்டிருந்த அதன் தலையாயப் பிரச்சினையான—காலனியாதிக்க நுகத்தடியிலிருந்தான விடுதலைக் கருத்துக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தன.

தேவையான அளவு பணத்தைச் சேகரித்துக் கொண்ட

பிறகு, 1947ம் ஆண்டு நேத்தோ போர்ச்சுகேசியாவிற்குப் பயணமானுர். அங்கே லிஸ்பன் பல்கலைக்கழகத்தின் மருத்துவப் பிரிவிலும், பின்னர் காயிம்ரா பல்கலைக்கழகத்திலும் சேர்ந்தார்.

''ஸ்டாக்ஹோம் சமாதான அறைகூவலுக்கு'' ஆதரவாகக் கையெழுத்துச் சேகரிப்பில் ஈடுபட்டதற்காக 1952ம் ஆண்டு முதன் முதலில் கைது செய்யப்பட்டார். சிறையிலிருந்து வெளிவந்த பிறகு தீவிரவாத மாணவர் இயக்கத்தில் ஊக்கமுடன் பங்கு பெற்ருர். போர்ச்சுகேசிய காலனியிலிருந்த இளம் மாணவர்களின் பிரதிநிதியாக அவ்வியக்கத்தில் விளங்கினுர். 1955ம் ஆண்டு ஒரு பிரச்சாரக் கூட்டத்தின் போது கைது செய்யப்பட்ட அவர் 1957ம் ஆண்டு வரை சிறையில் இருந்தார். நேத்தோவை விடுதலை செய்ய வேண்டி 1957ம் ஆண்டு கொடுக்கப்பட்ட கோரிக்கை விண்ணப்பத்தில் ஜான் பால் சார்த்ரே, லுயீ அரகோன், சிமோன்-டி-பௌவார், நிக்கலாஸ் கில்லேன் (Nicolas Guillen), டிகோ ரிவேரா உட்பட இன்னும் பிறர் கையெழுத்திட்டது ''போர்ச்சுகேசிய'' ஆப்பிரிக்காவின் பிரபலப் புலவராகிய அவரின் சர்வதேசப் புகழுக்குச் சான்ருக விளங்குகின்றது.

1958ம் ஆண்டு அகஸ்தினே நேத்தோ மருத்துவர் பட்டம் பெற்று அங்கோலாவிற்கு திரும்பி வந்த உடனே, 1956ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட அ. ம. வி. இ. கட்சியின் தலைவரானுர். அதே நேரத்தில் அவர் மருத்துவராகவும் பணிபுரிந்தார். 1960ம் ஆண்டு ஜூன் 8 தேதி அன்று மூன்ரும் முறையாகச் சிறை செய்யப்பட்ட நேத்தோ, முதலில் போர்ச்சுகேசிய சிறை ஒன்றிற்கு அனுப்பப்பட்டார். பின்னர் பச்சைமுனைத் தீவுகளில் ஒன்றில் சிறை வைக்கப்பட்டார். நேத்தோ கைது செய்யப்பட்டதைக் கேள்விப்பட்ட அவருடைய நாட்டு மக்கள் எதிர்ப்பு ஊர்வலங்களை நடத்தினர். அங்கோலாவில் காலனி நிர்வாகச் சரித்திரத்திலேயே முதல் தடவையாக காவல் துறையினருடன் இந்த ஊர்வலங்களை அடக்குவதற்காக, ராணுவமும் உதவிக்கு வர வேண்டிய அளவுக்கு இவ்வூர்வலங்கள் கணிசமான அளவில் இருந்தன. விடுதலை இயக்கத்தில் அவர் செய்த சேவைகளுக்காக சரியாக இந்த நேரத்தில்தான் நேத்தோ அ. ம. வி. இயக்கத்தின் கௌரவத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுகிருர்.

1961ம் ஆண்டு நவம்பரில் போர்ச்சுகேசிய ராணுவச் சிறை ஒன்றிற்கு நேத்தோ அனுப்பப்பட்டார். 1962ம் ஆண்டு

அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டி அ. ம. வி. இயக்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட சர்வதேசப் பிரச்சாரத்தின் நிர்ப்பந்தத்தினுல் அங்கிருந்து விடுதலை செய்யப்பட்டாலும் லிஸ்பனுக்கு அருகில் இல்லச் சிறையில் சிறிதுகாலம் அவர் வைக்கப்பட்டார். இருப்பினும் போர்ச்சுகேசிய நண்பர்கள் சிலரின் உதவியுடன் அங்கிருந்து சட்டவிரோதமாகத் தப்பி ஓடினுர். தப்பி ஓடிய அவர், 1961ம் ஆண்டு எழுச்சி முறியடிக்கப்பட்ட பின்பு அ. ம. வி. இயக்கம் தற்காலிகமாக இயங்கிய லியோபோல்ட்லில்லேவிற்கு (தற்போதைய கின்ஷாஸ எனும் நகரத்திற்கு) 1962ம் ஆண்டு ஜூலையில் வந்தார். அப்போதிருந்து தன்னுடைய வாழ்நாள் முடிய அ. நேத்தோ நேரடியாகவும், தொடர்ந்தும் அங்கோலிய மக்களின் போராட்டத்திற்குத் தலைமை தாங்கினுர். 1961ம் வருடக் கடுமையானத் தோல்விக்குப் பின்பு அ. ம. வி. இ. கட்சியின் மறுமலர்ச்சி அவருடைய பெயருடன் இணைந்ததாகும்.

போராட்டத்தின் புதிய கட்டத்தைத் தயார் செய்யும் கடினமான பாதையின் ஆரம்ப எல்லைக் கல்லாக அமைந்த அ. ம. வி. இ. கட்சியின் முதல் தேசிய மாநாடு 1962ம் ஆண்டு டிசம்பரில் லியோபோல்ட்வில்லேவில் கூட்டப்பட்டது. அம்மாநாடு அ. நேத்தோவின் தலைமையில் நடைபெற்றது. 1961ம் ஆண்டு சம்பவங்களின் முடிவுகளைத் தொகுத்து அ. ம. வி. இ. கட்சி புதிய செயல்பாட்டு திட்டத்தை முன் வைத்தது. சுதந்திரத்தை அடைவதற்கான எல்லா வகையான அமைதி வழிகளும் பயனற்றுப் போய் விட்டதால் இயக்கம் தற்போது ஆயுதப் போராட்டத்தை நோக்கி, சர்வாம்ச முன்னேற்பாடுகளுடன் கவனமாக வளர்க்கப்படும் என்று முடிவு செய்யப்பட்டது. அ. ம. வி. இ. கட்சியின் முதல் தேசிய மாநாடு விவசாயிகளை விடுதலை இயக்கத்தில் ஈடுபடச் செய்யும் வகையில் அவர்கள் மத்தியில் அரசியல் மற்றும் ஸ்தாபன ரீதியான பணிகளைச் செய்ய வேண்டும் என்ற கோட்பாட்டு ரீதியாக முக்கிய முடிவை ஏற்றுக் கொண்டது.

ராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு முறை அங்கோலிய தேசபக்த சக்திகளுக்கு உதவாது என்று 1961ம் வருட அனுபவம் காட்டியது. மக்கள் போராக வளரக் கூடிய கடினமான, இடைவிடாத நீண்டகாலக் கொரில்லாப் போராட்டம் மட்டுமே காலனி நுகத்தடியிலிருந்தான விடுதலைக்கு வழிவகுக்கும். ஆனுல் இதற்கு முன்கூட்டியே ஒழுங்கமைக்கப்பட்ட நீண்டகால

மற்றும் சர்வாம்ச ஆயுதங்கள் தேவைப்பட்டன. இவ்வகை யில் பிரச்சினையை முன்வைத்ததே அ. ம. வி. இ. கட்சியின் முதல் தேசிய மாநாட்டின் வரலாற்று முக்கியத்துவம் ஆகும். இது மக்களை அரசியல் ரீதியாக அணிதிரட்டுவதன் முக்கியத் துவத்தையும், தேசிய நலன்களுக்காகக் காலனி ஆதிக்கவாதி களுடன் சமரசம் செய்து கொள்ளக் கூடாது என்ற எண்ணத்தை அவர்களுக்கிடையில் வளர்க்கவும், ஆயுதப் போராட்டத்தின் தவிர்க்க முடியாத தன்மையையும் உணர்ந்ததிலிருந்து தோன் றியது ஆகும். இதிலிருந்து ராணுவ நடத்தைகளுக்கு அரசியல் தன்மையை அளிக்கவும், ராணுவ-அரசியல் படையைத் தயார் செய்யவும் முடிவு செய்யப்பட்டது. அத்துடன் பொருள்-தொழில்நுட்ப சப்ளையை மறந்து விடவுமில்லை. தொடர்ந்து ராணுவ-அரசியல் படையைத் தயார் செய்யும் பணியில் அ. ம. வி. இ. கட்சி முனைந்தது. இதற்கென இயக்கத்தின் பல தீவிர உறுப்பினர்கள் நட்புறவு நாடுகளுக்கு, முக்கியமாக சோஷலிச நாடுகளுக்கு, அனுப்பப்பட்டனர். அ. ம. வி. இயக் கத்தை ஸ்தாபன ரீதியாக உறுதிப்படுத்த மாநாடு நடவடிக் கைகளை மேற்கொண்டது. இயக்கத்தின் ஒழுங்கிசைவுக்காக வும், செயல்முறைத் தலைமைக்காகவும் ராணுவ-அரசியல் கமிட்டி ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. அ. ம. வி. இ.ன் தலைவராக நேத்தோ தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அ. ம. வி. இயக்கத்தின் முதல் தேசிய மாநாடு விடு தலைப் போராட்டத்திற்கு ஒரு புதிய அணுகுமுறையைக் கொடுத்தது. இந்த மாநாட்டிற்குப் பிறகு, ஆயுதமேந்திய எதிர்ப்பைக் குறுகிய ராணுவ நடவடிக்கையாக அல்லாமல் எல்லா தேசபக்த சக்திகளையும் ஒன்றிணைத்து அணிதிரட்ட உதவும் ஒரு அரசியல் போராட்ட வடிவமாகவும், அவர்களின் அரசியல் உணர்வை உயர்த்துவதாகவும், அங்கோலா தேசத் திற்கு உள்ளும், வெளியே எல்லைக்கு அப்பாலும் உள்ள எல்லா காலனி ஆதிக்க எதிர்ப்பாளர்களுடனும் ஐக்கியப்பட வேண்டிய, மேலும் இணைந்து செயல்பட வேண்டிய அவசி யத்தை உணர்த்துவதாகவும் இருந்தது. இதில் முதல் வரி சையில் ஏகாதிபத்திய சுரண்டலுக்கு எதிராக எழுச்சி கொள் ளும் மக்களுக்கு உதவி புரிய எப்போதும் தயாராக உள்ள சோஷலிச நாடுகளுடன் இணைந்து செயல்பட வேண்டிய அவசியத்தையும் அது உணர்த்தியது. கட்சியின் இந்தப் பாதைக்கு எதிராக 1962ம் ஆண்டு கட்சியிலிருந்து வெளி

யேற்றப்பட்ட அ. ம. வி. இ. கட்சியின் மாஜித் தலைவரான விரியாட்டோ-டா-க்ரூஸின் தலைமையில் தீவிர இடதுசாரி வாதிகள் நின்றனர். ''சுய சக்தியின் ஆதரவில் மட்டுமே நிற்க வேண்டும்'' என்று வாதாடிய அவர்கள் சோஷலிச நாடுகளுடனான நட்புறவிலிருந்தும் சர்வதேச கம்யூனிச இயக்கத்திலிருந்தும் அ. ம. வி. இ.யைத் தனித்து விலக்கப் பார்த்தனர். அத்துடன் எல்லா கலப்பு நிறத்தவர் மீதும் போர்ச்சுகேசியர் மீதும் நம்பிக்கையின்மையை வளர்க்கும் நிறவெறிப் பேதமைக் கொள்கையை ஏற்றுக் கொள்ளக் கட்சியை நிர்ப்பந்தித்தனர். இந்தத் தீவிரவாத இடதுசாரி குழுக்கள், தேசிய-விடுதலைப் போராட்டத்தில் முன்னணிப் படையாக முன் வந்து கொண்டிருந்த பழங்குடி இன மக்களின் ஸ்தாபனங்களுக்குக் கோட்பாட்டு ரீதியில் விட்டுக் கொடுக்க வேண்டும் என்றும் கோரினர்.

பழங்குடி இன அம்சங்களின் தாக்கம் அங்கோலாவின் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்திற்கு உண்மையிலேயே ஒரு சாபமாக இருந்தது. நிச்சயமாக, நாடு முழுதும் ஜனத் தொகை அங்குமிங்கும் பரந்திருந்த நிலையில், அங்கோலாவிலிருந்த பல தேசிய இனங்களையும் (சில கணக்கீடுகளின்படி 11) பழங்குடி இனங்களையும் (100க்கும் மேற்பட்டவை) இணைத்து ஒரு ஒன்றுபட்ட தேசியத்தை உருவாக்கும் நிகழ்வுப் போக்கின் ஆரம்ப நிலையையும் தன்னுள் இது கணிசமான அளவில் கொண்டிருந்தது. அங்கோலாவிலும் பிற ஆப்பிரிக்க நாடுகளிலும் ஒரு அரசியல் போக்காக பழங்குடி இன வாதம் (tribalism) வந்ததற்கான மூலகாரணம் அதனுடைய பல இனத் தன்மையில் இல்லை. ஆனால் ஆட்சியைக் கைப்பற்றும் பேராசை மிக்க ஆப்பிரிக்க அரசியல்வாதிகள் அவர்களைத் தங்களின் மூலக் குறிக்கோள்களுக்காகப் பயன்படுத்துவதிலேயே உள்ளது. மேலும் தேசிய விடுதலை இயக்கத்தைத் தகர்க்கக் கூடிய எந்த முன்முயற்சிக்கும் முதலீடு அளிக்க எப்போதும் தயாராக உள்ள ஏகாதிபத்திய அரசுகள் அவர்களின் நாட்டத்திற்குக் கொடுக்கும் ஆதரவுமே அதற்குக் காரணம்.

தேசிய நலன்களைப் பாதுகாப்பவர்கள் என்று கூறிக் கொள்ளும் ஒவ்வொரு அரசியல்வாதியின் பங்கையும் அன்னியக் குறுக்கீடு இல்லாமலிருந்தால், நாட்டில் அவர்களுக்கிருந்த செல்வாக்கைக் கொண்டு நிர்ணயித்திருக்க முடியும். ஆனால்

வெளியிலிருந்து வந்த தாராள முதலீடும் ஆயுதங்களும் தேசிய நிலப்பரப்புக்கு வெளியே ஆதாரத்தை அமைக்கக் கூடிய சாத்தியமும் அவ்வாறே காலனியாதிக்கத்தை எதிர்த்து சக்தியை ஒன்றுபடுத்தாமல் உண்மையான போராளிகளும் தேசபக்தர்களும் தங்களுக்குள் போட்டியிட்டதும் பிரிவினை வாத, பிறர் கைப்பொம்மைக் குழுக்களுக்கு உதவின.

தன்னுடைய இயற்கை வளம், நிலப்பரப்பு மற்றும் பூகோள நிலை ஆகியவற்றின் காரணமாக சர்வதேச ஏகாதிபத்திய நலன்களின் கண்ணோட்டத்தில் அங்கோலா முக்கியமான ஒரு நாடாகும். அத்துடன், அ. ம. வி. இ. கட்சியின் புரட்சிகர நோக்கத்தை விரும்பாத (ஜாயிர்) அல்லது வெளிப்படையாகவே தேசிய விடுதலை இயக்கத்தை எதிர்த்த (தென் ஆப்பிரிக்க ராணுவத்துடன் நமீபியாவை ஆக்கிரமித்த ஆட்சியாளர்கள்) தலைவர்களைக் கொண்ட அரசுகளை எல்லையில் கொண்டிருந்தது. அ. ம. வி. இ. கட்சியின் தொடர்ந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலையை விரும்பாத அவர்கள் சந்தர்ப்பவாத பழங்குடி இன அமைப்புகளுக்கு எல்லா வகையிலும் ஆதரவு தந்தனர். இந்தப் பழங்குடி இனக் குழு அமைப்புகளோ வெகு ஜனங்களுக்கிடையில் எந்த வித ஆதாரமும் கொண்டிருக்காமல், ஆப்பிரிக்கப் பழமைவாத வட்டாரங்களின் மற்றும் மேலை நாடுகள், தென் ஆப்பிரிக்க நிறவெறியாளர்கள் ஆகியோரின் ஆதரவிலேயே நின்றனர்.

அத்தகைய பெரிய குழு அமைப்புகளாக, ஜாயிரின் நிலப்பரப்பிலிருந்து ஹோல்டன் ராபர்ட்டின் தலைமையின்கீழ் செயல்பட்ட ''அங்கோலிய தேசிய விடுதலை முன்னணி'' (அ.தே. வி. மு.) மற்றும் 1966ம் ஆண்டு தோன்றிய, தென் ஆப்பிரிக்க நிறவெறியாளர்களின் ஆதரவுடன் நாட்டின் தென் பகுதியிலிருந்து ஜோனஸ் சாவிம்பியின் தலைமையின்கீழ் செயல்பட்ட ''அங்கோலிய விடுதலைத் தேசிய ஐக்கியம்'' (அ. வி. தே. ஐ.) ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

சி. ஐ. ஏ.வின் கையாளான ஹோல்டன் ராபர்ட்டின் துரோகச் செயல்கள் அ. ம. வி. இ. கட்சிக்குக் கஷ்டமான சூழ்நிலைகளை உண்டாக்கியது—கட்சி தடைசெய்யப்பட்டது. 1963ம் ஆண்டு காங்கோவில் பிற்போக்குவாத ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின்பு—அங்கே புரட்சிகரப் பணிபுரிய வாய்ப்பு ஏற்பட்ட போது—அ. ம. வி. இ. காங்கோவிற்கு (பிரஸ்ஸா

வில்லே) தன்னுடைய அஸ்திவார நிலேயை மாற்றிக் கொண்ட பிறகே ஆயுதப் போராட்டத்திற்குத் தயார் செய்வதற்கான சாத்தியம் ஏற்பட்டது. அவ்வாறே 1964ம் ஆண்டு காபிந்தா (Cabinda)வில் ஆயுதப் போராட்டத்திற்கான ஆயத்தங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இது 1961ம் ஆண்டு தோல்வியிலிருந்து தொடர்ந்த நெருக்கடி நிலேயிலிருந்து அ. ம. வி. இ. மீண்டு விட்டது என்பதற்கும், மேலும் அங்கோலாவில் தீவிரமான ஏகாதிபத்திய எதிர்ப்பு ராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒரே இயக்கமாகவும் அது விளங்கியது என்பதற்கும் சான்ருகத் திகழ்கின்றது. அதிலிருந்து அ. ம. வி. இ. தொடர்ந்து வளரவும், பரந்த அளவில் வெகு ஜனங்களின் ஆதரவைப் பெறவும் செய்தது. இதன் முடிவில் கணிசமான அளவு நிலப்பரப்பை அ. ம. வி. இ.யால் மீட்க முடிந்தது. மேற்கொண்டு அந் நிலப்பரப்பில் ஜனநாயகம், கூட்டுறவு மற்றும் பரஸ்பர உதவி ஆகியவற்றின்மீது அமைந்த முறையில் மக்களின் வாழ்வை சீர்திருத்தி அமைக்க ஆரம்பித்தது.

1974ம் ஆண்டு வசந்தகாலத்தில், போர்ச்சுகேசியாவில் நடந்த பாசிஸ்டு எதிர்ப்புப் புரட்சியின் முடிவில் சாலசார்-கயேத்தானே ஆட்சி வீழ்ந்ததுடன் சுதந்திரப் போராட்டம் தீர்மானமான நிலேயை அடைந்து விட்டது என்பது தெளிவானது. பத்தாண்டுகளுக்கு முன்பிருந்தது போலவே, உறுதியான ராணுவ மற்றும் அரசியல் அடிப்படையைக் கொண்ட ஒரே ஒரு தேசிய ஸ்தாபனமாக அ. ம. வி. இ. இப்போதும் விளங்கியது. அ. நேத்தோவின் பெரும் பணிகளே இதற்குக் காரணம்.

ஆனுல் பிரிவினேவாதக் குழுக்களின் நடத்தைகள் முன் போலவே, தேசிய விடுதலே இயக்கத்தின் வெற்றிகரமான முடிவுக்கு அபாய நிலேயைத் தோற்றுவித்தன. 1975ம் ஆண்டு அங்கோலாவின் சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்திய அந்த நேரம், பல துன்பங்களுக்கும் ஆளான இந்த நாட்டிற்கு மிகவும் ஆபத்தான நேரமாக விளங்கியதற்கு இவையே காரணம். இளேய குடியரசின் வடக்கிலிருந்து ஏகாதிபத்திய அரசுகளிடமிருந்து நன்கு ஆயுத உதவி பெற்ற, ஜாயிர் அரசால் தீவிரப்படுத்தப்பட்ட ''அங்கோலிய தேசிய விடுதலே முன்னணியின்'' படைகள் தலேநகரை நோக்கி வந்தன. தெற்கிலிருந்தோ தொடர்ந்து தென் ஆப்பிரிக்கப் படைகளும், ''அங்கோலிய விடுதலேத் தேசிய ஐக்கியத்துடன்''

சேர்ந்து செயல்பட்ட கூலிப்படைகளும் கடுமையான வேகத்துடன் தாக்கி முன்னேறினர். ''சுதந்திரத்திற்கான இரண்டாவது போர்'' என்று கூறப்பட்ட சண்டை ஆரம்பித்தது. அ. நேத்தோவின் தலைமையிலான அ. ம. வி. இ. கட்சியின்கீழ் ஒன்றிணைந்து நாட்டின் சுதந்திரத்தைத் தேசபக்தர்கள் காத்து நின்றனர். ஆனல் இப்போதோ அவர்கள் போர்ச்சுகேசிய காலனி ஆதிக்கவாதிகளுக்கு எதிராகப் போரிடவில்லை. அதற்கு மாருக, பிரிவினைவாதக் குழுக்களுக்கு ஆயுதம் அளித்து அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் சர்வதேச பிற்போக்குவாதத்தையும், ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்துப்போராடினர்.

இத்தகைய நெருக்கடி நிலையில் அ. நேத்தோவின் கீழிருந்து செயல்பட்ட அ. ம. வி. இ. கட்சியின் தலைமை இளைய அரசாங்கத்தின் எல்லா வருவாயையும் எதிரிகளை முறியடிப்பதற்கெனப் பயன்படுத்தியதுடன் உதவிக்கென சோஷலிச நட்புறவு நாடுகளை நாடியது. கியூபா, சோவியத் யூனியன் மற்றும் பிற சோஷலிச நாடுகளின் ஆதரவுடன் பலாத்காரத் தலையிட்டாளர்களைத் தங்களின் நிலப்பரப்பிலிருந்து வெளியே துரத்தவும், பெரும் கஷ்டங்களுக்குப் பின் வென்ற சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் அங்கோலிய தேசபக்தர்களால் முடிந்தது. 1976ம் ஆண்டு மார்ச் மாதம் தென் ஆப்பிரிக்கப் படைகளை அங்கோலிய நிலப்பரப்பிலிருந்து துரத்தியதுடன் ''சுதந்திரத்திற்கான இரண்டாவது போர்'' முற்றுப் பெற்றது.

இதற்குப் பின்னர்தான் அங்கோலிய மக்கள் குடியரசால் தேசிய-விடுதலை இயக்கத்தின் சமூக-பொருளாதார குறிக்கோள்களை நிறைவேற்றும் காரியங்களில் இறங்க முடிந்தது. இருப்பினும் அவற்றைச் செய்ய வேண்டிய சூழ்நிலைமை முற்றிலும் அமைதி நிறைந்ததாக இருந்தது என்று கூறுவது தவருகும். ஏனெனில் பிரிவினைவாதக் குழுக்களின் எதிர்த் தூண்டலும் தென் ஆப்பிரிக்க நிறவெறியாளர்களின் திடீர் தாக்குதல்களும் இன்று வரையும் தொடர்கின்றன.

அ. ம. வி. இ. கட்சியின் புரட்சிகரப் பாதையை நிர்ணயிப்பதில் அ. நேத்தோ முக்கியப் பங்கு வகித்தார். இந்த நேரத்தில் ஏற்கெனவே அங்கோலாவின் வளர்ச்சிக்கான மார்க்சியக் கருத்தோட்டங்கள் முழுமையாக அவருள் உருவாகியிருந்தன. அவர் மார்க்சிய-லெனினியத் தத்துவத்தை ஆழ்ந்து படித்தறிந்தார். அத்துடன் சோவியத் யூனியனுக்கும்

பிற சோஷலிச நட்புறவு நாடுகளுக்கும் பலமுறை விஜயம் செய்தார். அவருடைய தத்துவஞான உலகக் கண்ணோட்டம் பொருள்முதல்வாத-இயக்க இயல் உலகக் கண்ணோட்டமே என்பதை அவருடைய பேச்சுக்கள் நிரூபிக்கின்றன.

பொதுவாக எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட உண்மையான மக்கள் தலைவராகவும் அரசாங்கத் தலைவராகவும் அகஸ்தினோ நேத்தோ திகழ்ந்தார். காலனி ஆதிக்கத்தினருடன் 20 வருட காலம் தொடர்ந்து நடைபெற்ற ஆயுதப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கிய அனுபவத்தைப் பெற்றிருந்த அவர், அ. ம. வி. இ. கட்சியின் உள்ளமைப்பை மாற்றி அதை மார்க்சிய-லெனினிய மாதிரியிலமைந்த ஒரு அரசியல் கட்சியாக உருவாக்க வேண்டியதன் அவசியத்தைத் தெளிவாக உணர்ந்தார். இதன் தொடர்பாக, அ. ம. வி. இ. கட்சியை உழைப்பாளர் முன்னணிப் படைக் கட்சியாக சீர்திருத்தி அமைப்பதைப் பற்றி விவாதிக்கும் குறிக்கோளுடன் அ.ம.வி.இ. கட்சியின் முதல் காங்கிரசைக் கூட்டத் தீர்மானிக்கப்பட்டது.

1977ம் ஆண்டு டிசம்பர் 4–10 தேதிகளில் அ. ம. வி. இ. கட்சியின் முதல் காங்கிரஸ் லுவாண்டாவில் நடைபெற்றது.

அகஸ்தினோ நேத்தோவால் வழங்கப்பட்ட மத்தியக் கமிட்டி அறிக்கைச் சொற்பொழிவில் இருபது வருடப் போராட்டத்தின் முடிவுகளும் சுதந்திரத்தை அடைந்த பின் அ. ம. வி. இ. கட்சியில் நிகழ்ந்த கோட்பாட்டு மாறுதல்களும் தொகுத்துரைக்கப்பட்டன. போராட்டத்தின் தற்காலகட்டமும் முடிவான குறிக்கோள்களும் அவ்வாறே திட்டமான சமூக-அரசியல், பொருளாதார, சித்தாந்த மற்றும் ஸ்தாபன ரீதியான பிரச்சினைகளும் அதில் நிர்ணயிக்கப்பட்டிருந்தன. உழைப்பாளர் கட்சியான அ. ம. வி. இ. கட்சியின் ''செயல்திட்டமும்'' ''விதிமுறைகளும்'' மற்றும் 1978–1980ம் வருட காலகட்டத்தின் பொருளாதார, சமூக வளர்ச்சியின் அடிப்படைப் போக்குகள் ஆகிய முக்கியமான தஸ்தாவேஜுகளை மாநாடு ஏற்றுக் கொண்டது.

சோஷலிசக் கட்டுமானமே தலையாயக் குறிக்கோள் என்று அ. ம. வி. இ. கட்சியின் காங்கிரஸ் பிரகடனப்படுத்தியது. மேலும் அங்கோலாவின் தற்கால வளர்ச்சிக் கட்டம் மக்கள்-ஜனநாயகப் புரட்சிக் கட்டம், அதாவது சோஷலிசக் கட்டுமானத்திற்குச் செல்லும் இடைக்கால கட்டம் என்றும்

நிர்ணயித்தது. அங்கோலிய மக்கள் குடியரசு உருவாக்கப் பட்டதுடன் அ. ம. வி. இ. ஒரு தேசிய விடுதலை இயக்கமாகத் தன்னுடைய வரலாற்றுப் பங்கை நிறைவேற்றி விட்டது என்றும், மக்கள் ஜனநாயகத்தையும் சோஷலிசத்தையும் கட்ட மார்க்சிய-லெனினியக் கோட்பாடுகளின்மீது அமைக் கப்பட்ட, எல்லா அங்கோலிய உழைப்பாளர்களையும் ஒன் றிணைக்கும் ஒரு தொழிலாளி வர்க்க முன்னணிக் கட்சி தேவை என்றும் தன்னுடைய சொற்பொழிவில் அ. நேத்தோ குறிப் பிட்டார். இதன் பின்னர் அது அ. ம. வி. இ.—உழைப்பாளர் கட்சி என்று பெயரிடப்பட்டது.

''அங்கோலிய மக்களின் வெற்றிக்காக அலுப்பேயின்றி உழைத்த நமது போராட்டத் தலைவரான அந்தோனியோ அகஸ் தினே நேத்தோவை அவருடைய உறுதியும், துணிவும், கூர் மையான ஞானமும் பிறரிலிருந்து அவரைத் தனித்துக் காட்டு கின்றன''* என்று மாநாட்டின் தீர்மானங்களில் ஒன்றில் விசேஷமாகக் குறிப்பிடப்பட்டது. அ. ம. வி. இ.யின் முதல் காங்கிரசுக்குப் பிந்தைய வருடங்களில், போரினால் அழிக்கப் பட்டிருந்த மேலும் காலனியாதிக்கவாதிகளின் மற்றும் அவர் களின் கையாட்களின் நாச வேலைகளுக்கு உள்ளாகியிருந்த தேசியப் பொருளாதாரத்தைப் புதுப்பிப்பதில் முதல் வெற்றி களைப் படைத்த காலத்தில், நாட்டின் பாதுகாப்பையும் சட்ட ஒழுங்கு நடவடிக்கைகளையும் அதிகரித்து, சர்வதேச அரங்கில் நாட்டின் செல்வாக்கை அதிகப்படுத்திய காலகட் டத்தில் அவருடைய இந்தச் சிறப்புகள் மேலும் தெளிவாகத் தெரிந்தன. இப்படிப்பட்ட குணச்சிறப்புகளையுடைய அ. நேத் தோ 1979ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் தன்னுடைய 57ம் வயதில் காலமானார்.

புகழ் பெற்ற இந்தப் புரட்சியாளரின் மரணம் அகால மானதாக இருந்தது. நாட்டின் நடைமுறைப் பிரச்சினைகள் இன்னும் தீர்மானிக்கப்படாமல் இருந்தன. புயலும், துன் பமும் நிறைந்த வளர்ச்சிப் பாதையில் அங்கோலா சென்று கொண்டிருந்தது. ஆனால் நேத்தோ மிகச் சிறந்த அரசியல் கருத்தோட்டங்களை மக்களுக்குக் கொடுத்துள்ளார். அவர் எப்போதும் அங்கோலிய மக்களுடன் தான் உருவாக்கிய

---

* அங்கோலிய மக்கள் விடுதலை இயக்கத்தின் முதல் காங்கிரஸ். லுவாண்டா, 4—10 டிசம்பர் 1977. மாஸ்கோ, 1978, பக்கம் 278. (ருஷ்ய மொழியில்.)

அ. ம. வி. இ.—உழைப்பாளர் கட்சியுடன்—இருப்பார். தனது தலைமையின்கீழ் சுதந்திரத்தை அடைந்த அங்கோலாவின் எதிர்கால வளர்ச்சியை நேத்தோ பிரதிபலித்தார் நேத்தோ வின் துணைவர்களும் நாட்டின் உழைப்பாளர்களும் அவரால் சுட்டிக்காட்டப்பட்ட சோஷலிச திசை அமைவுப் பாதையில் உறுதியுடன் செல்வர் என்பதை அனைத்தும் குறிக்கின்றன. அங்கோலாவிற்கும் எல்லா ஆப்பிரிக்க நாடுகளுக்கும் மிகவும் சிக்கலான நிலைமைகளின் புரட்சிகரப் போராட்ட அனுப வத்தை நேத்தோ கொடுத்துள்ளார். இந்த அனுபவம் சந்தே கமின்றி, கணிசமான அளவில் சர்வதேச முக்கியத்துவத் தையும் கொண்டது.

முக்கியமாக 70ம் ஆண்டுகளின் மத்தியில் ஆட்சிக்கு வந்த ''புதிய அலையைச்'' சேர்ந்த ஆப்பிரிக்க புரட்சிகர ஜனநாயகவாதிகளில் சிறந்த, செல்வாக்கு மிக்க ஒரு சிலரில் ஒருவராக நேத்தோ திகழ்ந்தார். நேத்தோவும் அவருடைய ஆதரவாளர்களும், சோஷலிசத்திற்காக போராட வேண்டிய தேவையை அவர்களுக்கு உணர்த்தி அவர்களை உறுதிப்படுத் திய சொந்த ஆயுதப் போராட்ட அனுபவத்தையும் 10—15 வருடகால சுதந்திர வளர்ச்சியைக் கொண்டிருந்த பிற ஆப் பிரிக்க அரசுகளின் அனுபவத்தையும் தங்கள் பணிகளின் ஆதாரமாகக் கொண்டனர். இந்தப் ''புதிய அலையைச்'' சேர்ந்த ஆப்பிரிக்க புரட்சிகர ஜனநாயகவாதிகள், விஞ்ஞான சோஷலிசத்துடனான தங்களின் நெருக்கத்திலும், ஆப்பிரிக்க சமுதாயம், குறிக்கோள்கள், புரட்சியின் கட்டங்கள், வர்க்கச் சக்திகளின் வரிசைக் கிரமம் மற்றும் நடைமுறைச் சீர்திருத்தங்கள் ஆகியவற்றைப் பற்றிய விஞ்ஞான முறை ஆராய்ச்சியிலும் தங்களுடைய முன்னோர்களைவிட, அதாவது 60வது வருடங்களின் தேசிய ஜனநாயகவாதிகளைவிடக் கணிச மான அளவு முன்னேக்கிச் சென்றனர். தன்னுடைய புரட் சிகர அனுபவத்தையும் பிற புரட்சியாளர்களின் அனுபவத்தை யும் கொண்டு நேத்தோ செய்த முடிவுகள் ஆப்பிரிக்க தேசிய விடுதலை இயக்கங்களின் 70வது வருடங்களின் அரசியல் சிந்தனைகளில் ஒரு முக்கிய அம்சத்தைக் குறிக்கின்றன. அவற்றை ஒன்றிணைப்பதும், ஆராய்வதும் மிக முக்கியமாகும். நேத் தோவின் எல்லா அரசியல் கருத்தோட்டங்களையும் இங்கே விவரிக்காமல் நம்முடைய கண்ணோட்டத்தில் ஆப்பிரிக்க மக்களின் எதிர்காலப் புரட்சிகர தேசிய-விடுதலை இயக்கத்திற்கு

விசேஷத் தேவையான அம்சங்களை மட்டும் எடுத்துப் பார்ப் போம்.

போர்ச்சுகேசிய காலனியாதிக்கவாதிகளை எதிர்த்துப் போராட உதவும் ஒரே முறையாக ஆயுதப் போராட்டத்தைக் கருதினாலும், நேத்தோ, தன்னுடைய அ. ம. வி. இ.யின் ஆதர வாளர்களையும் மற்றும் மொசாம்பிக்கிலும் கயினி-பிஸ் ஸாவுவிலும் விடுதலைப் போராட்டத்தைத் தலைமை தாங்கிய ''பிரெலிமா'' (FRELIMO) மற்றும் ''பாயிக்'' (PAIGC)கிலிருந்த ஆதரவாளர்களைப் போன்றே ராணுவ நடவடிக்கைகளைப் பூரணத்துவப்படுத்தவில்லை. விடுதலைப் போரின் அரசியல் தன்மையையும், அரசியல் ரீதியில் அதைத் தயார் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் அர சியல் ரீதியிலமைந்த தலைமையின் முக்கியத்துவத்தையும் அவர் நன்கு புரிந்து கொண்டார். போர் வேலைகளுடன் அதே வேளையில் சிந்தாந்த, அரசியல், சமூக மற்றும் பிரச்சாரப் பணிகளையும் ஒன்ருகச் செய்ய வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினர். கலகம், கிளர்ச்சி போன்ற குறுகிய செயல் களுக்குள் மட்டுமே விடுதலை இயக்கம் அடங்கிவிடக் கூடாது. அதற்கு மாருக, தேசிய வாழ்க்கையின் எல்லா பக்கங்களி லிருந்தும் அதை ஆட்கொள்வதில்தான் தேசிய விடுதலை இயக்கத்தின் வெற்றியின் இரகசியம் அடங்கியுள்ளது என்று கூறினர். அங்கோலா, மொசாம்பிக், கயினி-பிஸ்ஸாவு ஆகிய நாடுகளின் அனுபவங்கள், வியட்நாமின் அனுபவத்தைப் போன்றே, மேற்கூறப்பட்டதைப் போன்ற அணுகுமுறை, அதாவது தென் அமெரிக்க நாடுகளில் நடைபெறும் பல விடுதலை இயக்கங்களின் தோல்விக்குக் காரணமான, தவருன, குறுகிய-ராணுவ நடவடிக்கை அணுகுமுறையிலிருந்து வேறுபட்ட அணுகுமுறை சரியானது என்பதை நிரூபிக் கின்றன.

அ. நேத்தோவின் பணிகள் இயக்க இயல் தன்மை கொண் டவை. உயிரற்ற வெறும் கோஷங்களையும் கருத்துக்களையும் அமைப்புகளையும் அவர் மறுத்தார். அங்கோலிய உழைப் பாளிகளின் முழுமையான அரசியல் மற்றும் சமூக விடுதலைக் காகத் தொடர்ந்து பாடுபட்ட அவர், திட்டவட்டமான பிரச்சினைகளை முன்வைக்கும் போது எப்போதும் உண் மையான சாத்தியக்கூறுகளையும் எதார்த்த நிலைமைகளையுமே கணக்கில் கொண்டார். இத்தன்மைகள் புரட்சிகர நிகழ்ச்சிப்

போக்கின் கட்டங்களைப் பற்றிய விஞ்ஞான பூர்வமான சிந்தனையிலிருந்து வெளியானவை.

தேசிய சுதந்திரம் அடைய போர்ச்சுகேசிய காலனி நுகத்தடியைத் தூக்கி எறிவது மட்டுமே போதாது என்பதையும் அ. ம. வி. இ.யின் தஸ்தாவேஜுகளில் குறிப்பிடப்பட்டதைப் போல் பழைய போர்ச்சுகேசிய காலனியாதிக்கத்தை மேலும் வளர்ந்து கொடுக்கக் கூடிய புதுக் காலனி ஆதிக்க முறை அமைப்புகளால் மாற்ற முயலும் ஏகாதிபத்திய அரசுகளின் முயற்சிகளைப் பொறுத்த வரையில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்பதையும் இன்னும் 60வது ஆண்டுகளின் ஆரம்பத்திலேயே அ. நேத்தோ உணர்ந்து கொண்டார். மேலும் சுதந்திரமான நிலைமையில் அங்கோலிய சமுதாயத்தைச் சீர்திருத்தவும், தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கவும், சமூக நீதியை நிலை நாட்டவுமான அவருடைய நாட்டத்தைக் குறிக்கும் சமூகக் குறிக்கோள்களை அ. நேத்தோ முன் வைத்தார்.

இருப்பினும் சுதந்திரப் போராட்டம் நடந்த வருடங்களில் அ. நேத்தோவோ, அ. ம. வி. இ.யின் பிற தலைவர்களோ எவருமே இயக்கத்தின் குறிக்கோள் சோஷலிசம் என்று கூறவில்லை. தேசிய விடுதலை என்பதே மாபெரும் குறிக்கோளையும் எல்லா தேசபக்த சக்திகளையும் ஒன்றிணைக்கும் நம்பிக்கையான அடிப்படையைத் தன்னுள் கொண்டுள்ளது என்பதை அவர்கள் புரிந்து கொண்டனர். ஏகாதிபத்திய எதிர்ப்பு, தேசியவாதப் போராட்டம் காலனி ஆதிக்கத்திலிருந்த மக்களின் வெகுஜனப் போராட்டத்தின் வளர்ச்சிக் கட்டத்தில் தர்க்க ரீதியில் அமைந்த ஒரு கட்டமே என்பதை உணர்ந்து கொண்ட அவர்கள் இந்தக் கட்டத்தைத் தாண்டிச் செல்லவோ அல்லது அதைத் தாங்கள் ஏற்கெனவே கடந்து விட்ட கட்டம் என்று அறிவிக்கவோ இல்லை. ஆனல் அதே சமயம் சாரத்தில் பூர்ஷ்வா தேசியவாதத் தன்மையை உடைய குறுகிய சுயநலத் தேசியவாதமாக அதைப் பூரணப்படுத்துவதையும் அவர்கள் மறுத்தனர்.

ஏகாதிபத்திய எதிர்ப்புத் தேசியவாதப் பிரச்சினையை வெவ்வேறுவிதங்களில் அணுகும் இருவிதத் தீவிரவாத அணுகுமுறைகளைக் கடந்த இருபதாண்டு தேசிய விடுதலை இயக்க வரலாறு அறியும். ஒரு புறத்தில், பூர்ஷ்வா வட்டாரங்கள், சுரண்டப்பட்ட மக்களின் ஜனநாயக, ஏகாதிபத்திய எதிர்ப்புத்

தேசியவாதத்தின் புரட்சிகர சாரத்தை அடியோடு நீக்கவும், அதனுடைய சமூக சீர்திருத்தக் கருத்துக்களை மற்றும் உழைப் பாளிகளின் தேவைகளை நிறைவேற்றும் தன்மைகளை அகற் றவும் முயல்கின்றன. மேலும் காலனியாதிக்கத்தில் உள்ள சமுதாயத்தில் வர்க்க நலன்கள் மற்றும் வர்க்கப் போராட் டத்தைப் பற்றிய கருத்துக்கள் தேச விரோதமானவை என்றும் ஐரோப்பியர்களிடமிருந்து வாங்கப்பட்டவை என்றும் பிரகடனப்படுத்த முயல்கின்றன. இவர்கள் சுயநலத் தேசிய வாதத்தைக் கொண்ட பூர்ஷ்வாக்களின் மாதிரிகள் ஆவர். வழக்கமாக இவர்களின் அன்னியச் சுரண்டல் எதிர்ப்பு அம்சங் கள் மறைந்து விடுகின்றன என்பதுடன், புரட்சிகர சக்தி களுக்கு எதிராகச் செயல்படுவதாகக் கூறி பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக ஏகாதிபத்திய அரசுகளுடன் நட்புறவை நாடி நிற்க ஆரம்பித்து விடுகின்றனர்.

மறு புறத்திலோ, தீவிரவாத இடதுசாரிவாதிகள் சுரண் டப்பட்ட நாட்டின் தேசியவாத ஜனநாயக சாரத்தை, அதாவது புரட்சிகர தேசியவாதம் இருப்பதையே மறுத்தனர். அவர்கள் புரட்சிகர தேசியவாதம் ஒரு சந்தர்ப்பவாதம், அபாயகரமானது, உழைப்பாளர்களின் வர்க்க உணர்வை வளர்ப்பதற்கு எதிரானது என்றும் மேலும் ஸ்தல மூலதனத் திற்கு உழைப்பாளர்களின் நலன்களை அது பலி கொடுத்து விடும் என்றும் கருதினர். இதிலிருந்துதான் எல்லாவிதத் தேசியவாதத்திற்கும் எதிராகப் போராடுவோம் என்ற திட் டமற்ற கோஷமும்; உழைக்கும் மக்களை வர்க்க நலன்கள் மற்றும் சோஷலிசம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒன்று திரட்டுவதற்கான கோஷத்தை அதற்கு எதிராகக் காட்டுவதும் பிறந்தன. இந்தக் கோஷம் உழைப்பாளிகளின் வர்க்க உணர்வை விட்டுப் பூரணமாக விலகியிருந்தது. சுதந்திரத் திற்காகவும் சமூக முன்னேற்றத்திற்குமான போராட்டத்தில் உழைப்பாளிகளுடன் ஒன்றிணைந்திருக்க வேண்டிய முன்னணிப் படையை இது வெகு ஜனங்களிடமிருந்து பிரிக்கவும், தேச பக்த சக்திகளிடமிருந்து விலக்கவும் செய்தது.

அ. ம. வி. இ.யும் அதன் தலைவரான நேத்தோவும் கயினி-பிஸ்ஸாவு மற்றும் மொசாம்பிக்கிலிருந்து போர்ச் சுகேசிய காலனி ஆதிக்கவாதிகளை எதிர்த்துப் போராடிய தங்களுடைய கூட்டாளிகளைப் போன்றே, மேலே குறிப்பிடப் பட்ட இரண்டு பாதையிலும் செல்லவில்லை. நீண்டதாகவும்

கடினமானதாகவும் இருந்த போதிலும் மிகச் சரியான ஏகாதிபத்திய எதிர்ப்புத் தேசியவாத புரட்சிகர, ஜனநாயக வளர்ச்சிப் பாதையில் சென்றனர். அதே சமயம் அதன் சமூக சாரத்தை ஆழப்படுத்தவும், சுரண்டும் வர்க்க அம்சங்களைத் தொடர்ந்து பலவீனப்படுத்தி நீக்கவும் செய்தனர். இந்த ஜனநாயக தேசியவாதத்தின் மூலம் உழைப்பாளிகளுக்கு விஞ்ஞான சோஷலிசக் கருத்துக்களைக் கொடுத்தனர். நீண்ட காலப் போராட்டத்தில் காலனி ஆதிக்கத்தை முறியடிக்கும் வகையில் பரந்த அளவில் மக்களை ஒன்றிணைக்க அ. ம. வி. இ.க்கு இத்தகைய பாதை உதவியது.

1976ம் ஆண்டின் கடைசியில் நடைபெற்ற அ. ம. வி. இ. மத்தியக் குழுவின் மூன்றுவது முழுச்சபைக் கூட்டத்தில்தான், அரசியல் சுதந்திரத்தை ஏற்கெனவே அடைந்த பின்புதான், இயக்கத்தின் முடிவான குறிக்கோள் சோஷலிசம் என்று பிரகடனப்படுத்தப்பட்டது. ஆனுல் அ. ம. வி. இ.—உழைப்பாளர் கட்சியின் முதல் மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட செயல் திட்ட அறிக்கையில் உறுதியாக்கப்பட்டபடி, வளர்ச்சியின் தற்காலகட்டம் சோஷலிச வளர்ச்சிக் கட்டம் அல்ல, இது மக்கள்-ஜனநாயக வளர்ச்சிக் கட்டமே என்ற தெளிவான நிர்ணயத்துடனே இவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்டது. கட்சியின் முதல் மாநாட்டு செயல்திட்ட அறிக்கையில் ''போர்ச்சுகேசியக் காலனி ஆதிக்கத்தை முறியடித்ததுடன் போராட்டத்தின் புதிய கட்டத்திற்கு—மக்கள்-ஜனநாயகப் புரட்சிக் கட்டத்திற்கு—மாறத் தேவையான சூழ்நிலைமைகள் தோன்றின... இந்த கட்டத்தின்போது அடுத்த வளர்ச்சிக் கட்டத்திற்கு—சோஷலிசப் புரட்சிக் கட்டத்திற்கு—அவசியமான அரசியல் மற்றும் பொருளாயத சூழ்நிலைமைகள் தோற்றுவிக்கப்படும்''° என்று குறிப்பிடப்பட்டது.

போராட்டக் குறிக்கோளின் இந்தப் புதிய வரையறுப்புடன், தத்துவ-அரசியல் நிலையின் இத்தகையக் கோட்பாட்டு மாற்றத்துடன், இயக்கத்தில் பங்கேற்ற பெரும்பான்மை விஞ்ஞான சோஷலிசச் சித்தாந்தத்துடன் கொள்ளும் புதிய உறவும் சம்பந்தப்பட்டது என்பதையும் நேத்தோ தெளிவாகப் புரிந்து கொண்டார். ஏற்கெனவே குறிப்பிட்டபடி, நேத்

° அங்கோலிய மக்கள் விடுதலை இயக்கத்தின் முதல் காங்கிரஸ், லுவாண்டா, 4—10 டிசம்பர் 1977, பக்கங்கள் 105, 108. (ருஷ்ய மொழியில்.)

தோவின் முன்முயற்சியால் அ. ம. வி. இ.—உழைப்பாளர் கட்சி அதனுடைய முதல் காங்கிரசில் தன்னுடைய சித்தாந்த அடிப்படையாக விஞ்ஞான சோஷலிசத்தை அறிவித்தது. அ. ம. வி. இ. கட்சியின் தலைமையிலிருந்தோர், முக்கியமாக நேத்தோ, மார்க்சிய-லெனினியத் தத்துவத்தின் ஆதரவாளர் கள் என்பது நீண்டகாலத்திற்கு முன்பே அனைவரும் அறிந்தது என்றாலும் சுதந்திரப்போராட்ட வருடங்களில் மேற்கூறப் பட்டவாறு எப்போதும் அறிவிக்கப்படவில்லை. தன்னுடைய சுய உணர்வின் மட்டத்தை இயக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளாமல் இயக்கத்தில் பங்கு பெற்ற வெகு ஜனங்களின் உணர்வு மட்டத்தையே அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்பதிலும், இத்தகைய நடவடிக்கையை மேற்கொள்வதன் மூலம் போராட்டத்தின் தேவைகளையும் உபாயவழிக் குறிக் கோள்களையும் கட்டுப்படுத்துதல் அவசியம் என்பதிலிருந் துமே இது வெளியானது. விஞ்ஞான சோஷலிசத்தை ஏற்றுக் கொள்ளத் தயாரான நிலையில் இல்லாத அல்லது தங்களு டைய சமூக நிலையின் காரணமாக அத்தகைய அரசியல் பக்குவத்தை அடையாத சமூக வகுப்புகளைப் பயமுறுத்த விரும்பாததால் அவர் அ. ம. வி. இ. கட்சியின் தத்துவ அடிப்படையாக விஞ்ஞான சோஷலிசத்தை அறிவிக்க அவ சரப்படவில்லை.

சுதந்திரம் அடைந்த பிறகு, உள்நாட்டுப் போர் முடிந்து சமுதாயம் இருவேறு பிரிவுகளாகப் பிரியும் சமயத்தில், பூர்ஷ்வா மற்றும் குட்டி முதலாளித்துவ வர்க்கங்களை எதிர்ப் புரட்சியாளர்களாக உருவாக்கவும் அணிதிரட்டவும் ஏகாதி பத்திய வட்டாரங்கள் தீவிரமாக முயன்றதால் அங்கோலாவில் வர்க்கப் போராட்டம் கடுமையான அளவில் தீவிரமடைந்த நிலைமையில், மேலும் ஆல்விஷ் மற்றும் வான்-டுனேமின் தலைமையிலிருந்த துர்ச்சாகசத் தீவிரவாத இடதுசாரிக் குழு தன்னை மார்க்சிய-லெனினியத்தின் சார்பாளனாக அறிவித்துக் கொண்டு அ. ம. வி. இ. கட்சித் தலைமை குட்டி முதலாளித் துவத் தன்மை கொண்டது என்று குற்றம் சாட்டிய நேரத் தில், நேத்தோவின் முன்முயற்சியால், அ. ம. வி. இ. கட்சி விஞ்ஞான சோஷலிசத்திற்குச் சார்பாக முடிவெடுத்து அதைத் தன்னுடைய தத்துவ அடிப்படையாக அறிவித்தது. இதில் கட்சி கடைசிவரை உறுதியுள்ளதாக இருந்ததுடன் ''ஆப்பிரிக்க சோஷலிசத்தின்'' பிரதிநிதிகள் செய்தபடி சோஷலிசத்தைப்

பற்றிப் பல்வேறுன வியாக்கியானங்களைச் செய்யாமல் தவிர்த்தது. ஆப்பிரிக்க சோஷலிசம், ஐரோப்பிய சோஷலிசம் என்றே, வளர்ந்த நாடுகளுக்கான சோஷலிசம் அல்லது வளரும் நாடுகளுக்கான சோஷலிசம் என்றே பிரிவுகள் இருக்க முடியாது என்று நேத்தோ அறிவித்தார். ''ஒரே ஒரு சோஷலிசம்தான்—உலகத்தில் கணிசமான அளவு பரந்து நிற்கும் விஞ்ஞான சோஷலிசம் மட்டும்தான்—உள்ளது'' என்றும் திட்டவட்டமான அங்கோலியச் சூழ்நிலைமைகளைக் கருத்தில் கொண்டு தலைசிறந்த மார்க்சிய-லெனினியத் தத்துவத்தை நடைமுறையில் நிறைவேற்ற வேண்டும் என்பது நமது குறிக்கோள்* என்றும் நேத்தோ கூறினார். அத்துடன் அ. ம. வி. இ. கட்சியை உழைப்பாளர் முன்னணிக் கட்சியாக மாற்றுவது ஆரம்பம் மட்டுமே என்றும் செயல்திட்ட அறிக்கையைத் தயாரிப்பதும் ஏற்றுக் கொள்வதும் மட்டுமே விஞ்ஞான சோஷலிசத்தை நிறைவேற்றுவது ஆகாது என்றும் இவற்றுடன் கட்சியின் எல்லா உறுப்பினர்களையும் அக்கருத்துக்கள் அடையும் விதத்தில் உழைப்பதுடன் வாழ்க்கையில் அவற்றை உறுதியாக நிறைவேற்றுவதுதான் தலையாயது என்பதையும் அகஸ்தினோ நேத்தோ தெளிவாகப் புரிந்து கொண்டார்.

புரட்சியின் கட்டங்களை நிர்ணயிப்பதானது, வர்க்க சக்திகளின் வரிசைக் கிரமத்தை நிர்ணயிக்கும் பிரச்சினையுடன் ஒன்றுகப் பிணைந்ததாகும். இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் அகஸ்தினோ நேத்தோ பெரும் பங்காற்றினார். அவர் ஏகாதிபத்தியத்தை முறியடிப்பதற்காக எல்லாத் தேசிய சக்திகளையும் முடிந்தவரை ஒன்றிணைப்பதற்கு ஆதரவாக இருந்தார். சுதந்திரத்திற்கான போராட்டத்தில் எல்லா சமூக வகுப்புகளின் பங்கெடுப்பையும் தேசிய முன்னணி அரசியல் கோருகின்றது என்று அ. ம. வி. இ. கட்சியின் தஸ்தாவேஜுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேசமயம் ஏகாதிபத்திய எதிர்ப்பு அடிப்படையில் எல்லோரையும் ஒன்றிணைக்கும் நாட்டம், அதன் கூட்டாளிகள் அனைவரையும் சமமானவர்களாக்குவது அல்ல என்பதன் மீது குறிப்பாக கவனம் செலுத்தப்பட்டது. தங்களுடைய வேறுபட்ட பொருளாதார நிலைமைகளின் காரணமாகவும், மேலும் தங்களுக்குள்ளான முரண்பாடுகள்,

---

* அ.ம. வி. இ. கட்சியின் முதல் காங்கிரஸ், லுவாண்டா, 4—10 டிசம்பர் 1977, பக்கம் 58. (ருஷ்ய மொழியில்.)

மற்றும் விரோதத் தன்மை காரணமாகவும் பல்வேறுபட்ட சமூக வகுப்புகள் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் வகிக்கும் பங்கு ஒரே மாதிரியானது அல்ல என்பது அதில் மறக்கப்பட்டு விட்டது என்பதுமாகாது. நேத்தோவின் கருத்துப்படி, தேசிய ஒற்றுமை என்பது வர்க்கப் போராட்டக் கோட்பாட்டையும் புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கின் வளர்ச்சிப் பாதையில் அதைத் திசை திருப்பி விடுவதன் அவசியத்தையும் அங்கீகரிப்பதன் அடிப்படையில் உள்ளது.

சுதந்திரப் போராட்ட வருடங்களில், போராட்டத்தில் பங்கு பெற்ற சமூக வகுப்புகளின் மத்தியில் போராட்டத்தில் முக்கியப் பங்கு வகிக்கவல்ல ஏதாவது சில சமூகப் பிரிவுகள் அ. ம. வி. இ.ன் தஸ்தாவேஜுகளில் தனித்துக் காட்டப்படவில்லை. அரசியல் சுதந்திரத்தை அடைந்தவுடன், எதிர்காலத்தில் சோஷலிசப் புரட்சிக்கு மாறத் தேவையான சூழ்நிலைமைகளைத் தயாரிக்கக் கூடிய மக்கள்-ஜனநாயகக் கட்டுமானக் குறிக்கோள் முன்வைக்கப்பட்ட போது நிலைமை மாறி விட்டது. சுதந்திரத்தை அடையும் வரையில் போர்ச்சுகேசிய காலனியாதிக்கவாதிகளுடனான போராட்டக் குறிக்கோளின் பொதுத் தன்மையைக் கருத்தில் கொண்டு அங்கோலிய சமுதாயத்தின் உள் வர்க்க முரண்பாடுகள் பின்னுக்குத் தள்ளப்பட்டன. நாடு விடுதலை அடைந்தவுடன், நேத்தோ அ. ம. வி. இ. ன் முதல் காங்கிரசில் குறிப்பிட்டது போல, அங்கோலாவில் வர்க்கப் போராட்டமும் உள்முரண்பாடுகளும் தீவிரமடைந்து விட்டன. அதேபோல் குட்டி முதலாளித்துவ அம்சங்களும் தீவிரமாகச் செயல்பட ஆரம்பித்து விட்டன[*]. இத்தகைய நிலைமைகளில், அங்கோலிய மக்கள் குடியரசின் ஆட்சி உழைப்பாளர்கள் கையில்தான் உள்ளது என்றும், தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் ஐக்கியம் எல்லா தேசபக்த சக்திகளின் ஒற்றுமையையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது என்றும் இந்த ஐக்கியத்தில் தலைமைப் பங்கு தொழிலாளர் வர்க்கத்தைச் சார்ந்தது என்றும் அ. ம. வி. இ.ன் செயல்திட்ட அறிக்கையிலும் நேத்தோவின் சொற்பொழிவுகளிலும் குறிப்பிடப்பட்டன.

பாட்டாளி வர்க்கத் தலைமை உழைக்கும் மக்களைத் தலைமை

---

[*] அ.ம. வி. இ.ன் முதல் காங்கிரஸ், லுவாண்டா, 4—10 டிசம்பர் 1977, பக்கம் 21. (ருஷ்ய மொழியில்.)

தாங்கும் கருத்தை தேசிய ஒற்றுமைக்கு எதிராகக் காட்டவும் மேலும் தொழிலாளர் வர்க்கத்தை மத்தியதர, குட்டி முதலாளித்துவ வகுப்புகளுடன் மோத விடுவதன் மூலம் செயற்கையான முறையில் புரட்சியைத் திணிக்கவும் முயன்ற ஆல்விஷ்-வான் டுனேம் கட்சிப் பிரிவின் துர்சாகச முயற்சிகளை நேத்தோ உறுதியாக எதிர்த்து நின்ருர். ஆட்சிக்காகப் போரிட்ட கட்சிப் பிளவுப் பிரிவின் இந்தப் பிரச்சார ஏமாற்று வேலையை எதிர்த்து, அ. ம. வி. இ.ன் மாருத கோட்பாட்டை நேத்தோ பின்வருமாறு கோடிட்டுக் காட்டினுர்: ''புரட்சியில் தங்களின் பங்கையாற்ற எல்லா தேசபக்த சக்திகளும் அழைக்கப்படுகின்றன... தேசிய ஒற்றுமையை நாங்கள் காத்து நிற்கின்ருேம், அவர்கள் அல்ல. தொழிலாளர் வர்க்கம் ஆட்சியிலிருப்பதைக் காண அவர்கள் விரும்புகின்ருர்கள் என்பது சரியே. ஆனுல் அது ஆட்சியிலிருந்து கொண்டு மற்ற எல்லா வர்க்கங்களுடனும் மாருமல் தொடர்ந்து போரிட்டுக் கொண்டே இருக்க வேண்டுமென்று விரும்புகிருர்கள்''*. கட்சிப் பிளவு வாதிகளின் செய்கைகளை அம்பலப்படுத்தி 1977ம் ஆண்டு ஜூலை 12ம் நாள் அ. ம. வி. இ. கட்சியின் மத்திய கமிட்டியின் அரசியல் சபை வெளியிட்ட அறிக்கையில் ''விஞ்ஞான சோஷலிசத்தின் ஒரே இயற்கையான பாதுகாவலனுன தொழிலாளர் வர்க்கம் தேசியப் புரட்சியில், மற்ற சக்திகளிடமிருந்து தன்னைப் பிரித்துக் கொள்ளாமல், தன்னுடைய தலைமைப் பங்கை நிறைவேற்றுவதற்காகத் தொடர்ந்து போராட செய்துள்ள முடிவைப்''** பற்றிக் கூறப்பட்டது. ஆனுல் அதேசமயம் அத்தீர்மானத்தில், எல்லா சந்தர்ப்பவாதிகளுடனும், முக்கியமாகத் தீவிரவாத இடதுசாரிகளின் தோல்விக்குப்பின் தங்களுடைய செல்வாக்கைப் பலப்படுத்திக் கொள்ள முயலும் குட்டி முதலாளித்துவப் பிரதிநிதிகளுடன் போராட வேண்டியதன் அவசியமும் வற்புறுத்தப்பட்டது***.

அ. ம. வி. இ.ன் முதல் மாநாட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதைத் தகர்க்கும் வகையில் குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினரின் செல்வாக்கு அதிகரிக்கும் அபாயத்தைத்

---

* *Africa Contemporary Record. Annual Survey and Documents. 1977-1978*. London, 1979, p. 497.

** *The African Communist,* London, 1977, №71, p. 49.

*** *Ibid.*, p. 50.

தன்னுடைய கடைசிச் சொற்பொழிவுகளில், 1979ம் ஆண்டு ஜூலை-ஆகஸ்ட் மாதங்களில், பலமுறை நேத்தோ குறிப்பிட்டார். நாட்டில் ஆட்சி பூர்ஷ்வாக்களிடம் சிக்கிக் கொள்ளாமல் தொழிலாளர்களிடமும் விவசாயிகளிடமுமே இருக்க வேண்டும் என்று அவர் வற்புறுத்திக் கூறினர். அங்கோலாவில் பூர்ஷ்வா ஆட்சியில் இல்லை என்றாலும், எச்சரிக்கையுடன் இல்லாவிட்டால் அது ஆட்சியைக் கைப்பற்றி விடலாம் என்று அவர் அழுத்திக் கூறினர். இதனல் குட்டி முதலாளித்துவ வர்க்கம் தொழிலாளர்களையும், விவசாயிகளையும் கண்டு பயப்படத் தேவை இல்லை என்றும், உழைப்பாளிகளின் நலன்களைச் சார்ந்து நின்று அவர்களை நிந்திப்பதைத் தவிர்த்தால் தங்களின் பொருளாதாரப் பணிகளைத் தொடரும் வாய்ப்பு அவர்களுக்கு எப்போதும் இருக்கும் என்றும் கூறினர். பொருளாதாரத்தின் பல பிரிவுகளிலும் தனியார் தொழிலை அனுமதித்து, அவர்களைப் பலப்படுத்துகின்ற அதேசமயத்தில் ஆட்சிக்கும் அரசியல் தலைமைக்கும் அவர்கள் சொந்தம் கொண்டாடுவதை அடியோடு நீக்கிய இந்த உபாய வழி—தேசிய முன்னணி, வர்க்கப் போராட்டம் இரண்டின் இயக்க இயல் முறையிலான ஐக்கியம், எல்லாத் தேசிய சக்திகளையும் ஒன்றிணைத்தல், மற்றும் தொழிலாளர் வர்க்கத்தின் தலைமைப் பங்கை உறுதிப்படுத்துதல் ஆகியவை நேத்தோவின் புரட்சி வழிப் பாதையின் தன்மையைச் சித்தரிப்பவை ஆகும்.

பெரும்பான்மையான பிற ஆப்பிரிக்க நாடுகளைப் போலவே அங்கோலாவிலும் தேசிய ஒற்றுமைப் பிரச்சினை வர்க்க அம்சத்தை மட்டுமல்லாமல் பழங்குடி இன அம்சத்தையும் கொண்டுள்ளது. இனப்பாகுபாடுகள் இருந்த நிலையை அரசியல் குறிக்கோள்களுக்காகப் பயன்படுத்தும் முயற்சிகள் அங்கோலாவிற்கு எத்தகைய கேடுகளைக் கொணர்ந்தது என்பது ஏற்கெனவே குறிப்பிடப்பட்டது. அங்கோலாவில் வாழும் அனைத்து தேசிய இனங்களின் ஒற்றுமைக் கருத்தை நேத்தோ எப்போதும் ஆதரித்து வந்தார். அவருடைய தலைமையின்கீழ் அ. ம. வி. இ. கட்சி நிறவெறி கோஷங்களை வெகு விருப்பத்துடன் பயன்படுத்திய பிற பழங்குடி இனக்குழு அமைப்புகளிலிருந்தும் இயக்கங்களிலிருந்தும் வித்தியாசப்பட்டு, ஒரு உண்மையான சர்வதேச ஸ்தாபனமாக விளங்கியது. தேசிய நலன்களுக்காகப் போராடிய அனைவருடனும் சேர்ந்து செயல்பட நேத்தோ எப்போதும் தயாராக இருந்தார். அத்துடன்

தங்களுடைய சுய நலத்திற்காகவும் ஆட்சி வேட்கைக்காகவும் நாட்டைப் பலி கொடுக்கத் தயாராக இருந்த கோட்பாடற்ற அரசியல்வாதிகளுடன் என்றுமே சமரசப்படாதவராகவும் அத்தகைய அரசியல்வாதிகளின் கடுமையான எதிரியாகவும் விளங்கினர். ''பிறர் கைப்பொம்மைகளுடன் ஒற்றுமை என்பது எப்போதுமே இருக்க முடியாது. பல போக்குகளைக் கொண்ட தேசபக்த சக்திகளைப் பற்றிப் பேசும் போது மட்டுமே ஒற்றுமையைப் பற்றிய பிரச்சினை சரியான முறையில் முன் வைக்கப்படுகின்றது. தேசபக்தர்களுக்கும் துரோகிகளுக்குமிடையில் ஒற்றுமை இருக்க முடியாது''* என்று கூறினர் நேத்தோ. இத்தகைய கருத்தோட்டங்களை அவர் கடைசி வரை மாருமல் கடைபிடித்தார். மேற்கூறப்பட்டது அங்கோலியத் தேசத்திற்கு அவர் கொடுத்த கொள்கைகளில் ஒன்ருகும்.

சோவியத் யூனியனிற்கும் அங்கோலிய மக்கள் குடியரசிற்கும் இடையிலான சகோதரத்துவ நட்புறவை உறுதிப்படுத்த அவர் பெரும் பணியாற்றினர். இவ்வகையில் அவருடைய அனுபவம் சர்வதேச முக்கியத்துவத்தை உடையதாகும். தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு முக்கியமான உதவியையும், அதனுடைய வெற்றிக்கான உத்தரவாதத்தையும், ஏகாதிபத்தியத்தின் முற்றுகையிலிருந்து தப்புவதற்கான உறுதியான ஆதாரத்தையும் சோஷலிச நாடுகளுடனை ஒருமைப்பாடும் அவர்களின் சர்வதேச உதவியும் தமக்கு அளிக்கின்றன என்பதைப் புரிந்து கொண்ட முதல் ஆப்பிரிக்கத் தலைவர்களில் ஒருவராக நேத்தோ திகழ்ந்தார்.

அரசாங்கத்தின் தலைவரான பின்னர், நேத்தோ சோஷலிச உலகத்துடனை உறவை வளர்ப்பதற்கான அனைத்து வாய்ப்புகளையும் நன்கு பயன்படுத்திக் கொண்டார். அங்கோலியப் புரட்சிக்குப் பெருத்த அபாயம் ஏற்பட்டபோது சிறிதும் தயங்காமல் அவர் சோவியத் யூனியன், கியூபா மற்றும் பிற சோஷலிச நாடுகளின் உதவியை நாடினர். 1976ம் ஆண்டு அக்டோபரில் நேத்தோ மாஸ்கோவிற்கு விஜயம் செய்தபோது சோவியத் யூனியனுக்கும் அங்கோலாவிற்கும் இடையிலான ஒத்துழைப்பு உடன்படிக்கை

* Barnett D., Harvey R. *The Revolution in Angola. MPLA Life in Historical Documents.* New York, 1972, p. 300.

கையெழுத்திடப்பட்டது. இது இரு தரப்பு ஒத்துழைப்புக்கும் உறுதியான அஸ்திவாரத்தை அமைத்தது. அத்துடன் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் அ. ம. வி. இ.—உழைப்பாளர் கட்சிக்கும் இடையிலான கட்சி உறவுகளும் வளரத் தொடங்கின.

நாட்டின் அரசியல் மற்றும் சமுதாய வாழ்க்கைக்கு ஸ்தாபன ரீதியாகவும் கொள்கை அம்சத்திலும் உறுதி வாய்ந்த அரசியல் கட்சி தலைமை தாங்க வேண்டும் என்பது ஆப்பிரிக்காவின் அனுபவத்திலிருந்து தான் கற்றுக் கொண்ட பெரிய பாடங்களில் ஒன்று ஆகும் என்று இக்கட்டுரை ஆசிரியரிடம் நேத்தோ பலமுறை குறிப்பிட்டார். போர்ச்சுகேசிய பாசிஸ்டுகளை எதிர்த்துப் போராடிய வருடங்களிலேயே நேத்தோ கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டார்: ''கட்சி தோற்றுவிக்கப்பட வேண்டும் என்பதும், நாட்டின் வாழ்க்கையின் தலையாய அம்சமாகவும் அடிப்படையாகவும் முதுகெலும்பாகவும் அது விளங்க வேண்டும் என்பதும் மிக முக்கியம். கட்சி என்று ஒன்று இல்லாத போது, போராளிகள் கடுமையான ஒழுங்கு முறையைக் கடைபிடிக்காத போது, மேலும் தலைவர்கள் புரட்சிக் கோட்பாடுகளைக் கடைபிடிக்காத போது அராஜகவாதம் தலையெடுக்கிறது. அப்போது எதிரி நம் இடத்தில் எளிதாக புகுந்து விடுவதுடன், முழுச் சுதந்திரத்தை அடைவதற்கு பதிலாக புதுக்காலனி ஆதிக்கத்தில் அல்லது சார்பு நிலைக்கும் சார்பற்ற நிலைக்கும் மத்தியிலுள்ள, முற்போக்கு வாதத்திற்கும் பிற்போக்குவாதத்திற்கும் இடையிலமைந்த ஒரு உறுதியற்ற நிலையில் நாம் சிக்கிவிடுவோம்''*.

கட்சியைத் தோற்றுவிப்பதில் மட்டுமல்லாமல் அதன் தொடர்ந்த வளர்ச்சியிலும், அதன் சோஷலிச உள்ளாற்றலை வளர்ப்பதிலும் அங்கோலியப் புரட்சியாளர்கள் கொண்டிருந்த குறிக்கோளை நேத்தோ கண்டு கொண்டார். ''பாட்டாளிகளின் குறிக்கோளில் நம்பிக்கை கொண்ட தொழிலாளர், விவசாயிகள், புரட்சிகர அறிவு ஜீவிகள் மற்றும் பிற உழைப்பாளிகள் அனைவரையும் ஒரே உறுதியான ஐக்கியத்தின் கீழ்'' ஒன்றிணைக்கக் கூடிய உழைப்பாளர் கட்சியைத் தோற்றுவிக்கும் குறிக்கோளை முன்வைத்த அ. ம. வி. இ. கட்சியின் முதல் காங்கிரஸ் மேற்கூறபட்ட வகையில் ஒரு தலையாய கட்டமாக

* Barnett D., Harvey R. *The Revolution in Angola*, pp. 33-34.

விளங்கியது[8]. முதல் காங்கிரசில் பிரகடனப்படுத்தப்பட்ட கோட்பாடுகளுடன் ஒத்துச்செல்லும் வகையில் அ. ம. வி. இ.ன் பணிகள் அமைய வேண்டும் என்பதிலும் அதன் உள்கட்டு மான அமைப்பின் சீர்திருத்தத்திலும் அகஸ்தினோ நேத்தோ மிகுந்த கவனம் செலுத்தினார். இந்தக் குறிக்கோளுடன் நாட்டில் ''கட்சி சீர்திருத்த இயக்கம்'' ஆரம்பிக்கப்பட்டது.

அங்கோலாவில் ''மக்கள் ஆட்சி சபைகளைத்'' தோற்று விக்கவும் நேத்தோ மிகவும் பாடுபட்டார். பிற்போக்குவா தத்தினரின் எதிர்ப்பின் தீவிரத்தாலும், இந்த சபைகளுக்கான தேர்தல்களைத் தங்களின் மூல நலன்களுக்காகப் பயன்படுத்திக் கொள்வதில் முனைந்த கட்சிப் பிளவுக் குழுக்களின் முயற்சி களும் இச்சபைகளைச் சீரமைப்பதைத் தாமதப்படுத்தின. இச் சபைகளுக்கு உண்மையான மக்கள் தன்மையை அளிக்கவும் மேலும் அவற்றில் தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் பிரதிநிதித்துவத்தை அதிகப்படுத்தவும் நீண்டகாலம் தேவைப் பட்டது. நேத்தோவின் மரணத்திற்குப் பின்பே இது நிறை வேற்றப்பட்டது.

தன் மரணத்திற்குச் சிறிது காலத்திற்கு முன்பு நாட்டின் பல பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்து, வெகுஜனக் கூட்டங் களில் சொற்பொழிவாற்றினார் நேத்தோ. கட்சி மற்றும் அரசாங்கக் கட்டுமானப் பிரச்சினைகள் அவருடைய கவனத்தில் முக்கிய இடத்தை வகித்தன. கட்சி மற்றும் அரசாங்க அமைப்பு கள் பூர்ஷ்வா மயமாக்கப்படுவதிலிருந்தும் அதிகார வர்க்கத் தினரின் கைகளில் சிக்கிக் கொள்ளும் அபாயத்திலிருந்தும் அவற்றை அங்கோலாவின் முதல் ஜனாதிபதி காத்தார். கட்சி மற்றும் அரசின் பணிகள் எல்லாச் சமூக வகுப்புகளையும் அணி திரட்டவும் அவர்களின் அரசியல் உணர்வை வளர்க்கவும் வேண்டும் என்று கூறினார். தொழிலாளர்களையும் விவசாயி களையும் அரசியல் வாழ்வில் பரந்த அளவில் கலந்து கொள்ளத் தூண்டுவது சோஷலிசத்தை நோக்கிய முன்னேற்றத்திற்கு உத்தரவாதம் அளிப்பதை உணர்ந்து அதற்கு அறை கூவி அழைத்தார்.

தன்னுடைய மரணத்தை முன் கூட்டியே உணர்ந்தது போல் நேத்தோ, தன்னுடைய கடைசிச் சொற்பொழிவுகளில்

---

[8] **அ.ம. வி. இ. கட்சியின் முதல் காங்கிரஸ்,** லுவாண்டா, 4—10 டிசம்பர் 1977, பக்கம் 74. (ருஷ்ய மொழியில்.)

ஒன்றில் அங்கோலியப் புரட்சியில் பங்கு கொண்டவர்கள் மறைந்து போனுலும் புரட்சி மேலும் தொடரும் என்று குறிப்பிட்டார். மிகவும் கடினமான சூழ்நிலைமைகளில் தலைமை தாங்கி சுதந்திரத்திற்கான போராட்டத்தை நடத்திச் சென்றது மட்டுமல்லாமல், தன்னுடைய மக்களுக்கு நம்பிக்கையான எதிர்கால வளர்ச்சிப் பாதை ஒன்றைச் சுட்டிக் காட்டிய அ. நேத்தோவின் பாதையில் அங்கோலியப் புரட்சி மேலும் மேலும் சக்தியைச் சேகரித்துக் கொண்டு முன்னேக்கிச் செல்கிறது. அங்கோலாவிலும் பிற நாடுகளிலும் உள்ள புரட்சியாளர்கள் அ. நேத்தோவிடம் உறுதி, தீரம், மனோதைரியம் மற்றும் எதார்த்தவாதம் ஆகியவற்றையும், தேசிய நலன்கள், நியாய மற்றும் சோஷலிசக் கொள்கைகளுக்குத் தங்களை அர்ப்பணிக்கும் மனப்பாங்கையும் கற்றுக் கொள்கின்றனர்.

# பாட்ரிஸ் லுமும்பா

ஆப்பிரிக்க தேசிய விடுதலை இயக்கத்தின் புகழ் பெற்ற தலைவர்களில் ஒருவர். காங்கோ குடியரசின் (தற்போதைய ஜாயிர்) முதல் அரசின் தலைவர்.

1925ம் ஆண்டு ஜூலை 2ம் நாள், அனுலுவா (பெல்ஜியக் காங்கோவில் இருந்த கசாயி சமஸ் தானம்) என்ற கிராமத்தில், பாத்தேதெலா என்ற பழங்குடி இனத்து ஏழை விவசாயி ஒருவரின் குடும்பத்தில் பிறந்தார். கத்தோலிக்க மதப்பள்ளி ஒன்றில் கல்வி பயின்ற அவர், குமாஸ்தாவாகவும், அஞ்சல் அலுவலராகவும் இன்னும் பல பெல்ஜியக் கம்பெனிகளிலும் வேலை பார்த்தார்.

தனது 23வது வயதிலிருந்து நாட்டின் அரசியல் வாழ்க்கையில் தீவிரப் பங்கேற்றார். பல சமுதாய ஸ்தாபனங்களை நிறுவி அவற்றிற்குத் தலைமை தாங்கினார். **உஹுரு** *(Uhuru)* (''விடுதலை'') —மற்றும் *Independence* (''சுதந்திரம்'') என்ற இரு பத்திரிகைகளை நடத்தி வந்தார். 1958ம் ஆண்டு அவரால் தோற்றுவிக்கப்பட்ட, நாட்டிலேயே பெரிய அரசியல் கட்சியாக விளங்கிய ''காங்கோ தேசிய இயக்கத்திற்குத்'' (கா. தே. இ.) (Congolese National Movement) தலைவராகக் கடைசி வரை இருந்தார்.

1958-59ம் வருடங்களில் ''ஆப்பிரிக்க மக்களின் முதல் மாநாட்டிலும்'' (அக்ரா—கானாவின் தலை நகரம்), சர்வதேச கலாச்சாரப் பிரதிநிதிகளின்



14–909

கூட்டத்திலும் (இபாதான், நைஜீரியா), மேலும் 1960ம் ஆண்டு ஜனவரி—பிப்ரவரி மாதத்தில் பிரஸ்ஸெல்சில் நடைபெற்ற பெல்ஜிய காங்கோ கூட்டத்திலும் (இக்கூட்டத்தில் காங்கோவிற்குச் சுதந்திரம் அளிக்க முடிவு செய்யப்பட்டது) பங் கேற்ருர். காலனி ஆதிக்க எதிர்ப்புப் பணிகளுக் காகப் பலமுறை அடக்கு முறைக்கும் சிறை வாழ்க் கைக்கும் ஆளாக்கப்பட்டார்.

1960ம் ஆண்டு மே மாதம் நடந்த பாராளு மன்றத் தேர்தலில் காங்கோ தேசிய இயக்கமும் (கா.தே.இ.) அதனை ஆதரித்த கட்சிகளும் சேர்ந்து பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றன. 1960ம் ஆண்டு ஜூனில் காங்கோ குடியரசின் அரசிற்குத் தலைமையேற்ற லுமும்பா, செப்டெம்பரில் அப் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். சட்டத்திற்குப் புறம் பாக சில மாதகாலம் சிறையிலடைக்கப்பட்ட அவர் 1961ம் ஆண்டு ஜனவரி மாதம் கொல்லப் பட்டார்.

தேசிய விடுதலைப் போராட்டத்தின் புகழ் பெற்ற தலைவர்களில் ஒருவராகவும், ஏகாதிபத்தியத்தின் காலனி அமைப்பு முறையை நீக்குவதற்காகத் தீவிரமாகப் போராடியவர் என்ற அந்தஸ்திலும் ஆப்பிரிக்காவின் வரலாற்றில் பாட்ரிஸ் லுமும்பா குறிக்கப்படுகின்றார். அவருடைய கண்ணோட்டங்களும் நடைமுறைப் பணிகளும் இன்றுவரை ஆப்பிரிக்காவிலும் இன்னும் ஆப்பிரிக்காவுக்கு வெளியேயும் முற்போக்குவாத வளர்ச்சியின் ஆதரவாளர்களுக்கும் எதிரிகளுக்கும் இடையேயான தீவிர சித்தாந்தப் போராட்டத்தின் இலக்காகத் திகழ்கின்றன. லுமும்பாவைப் பற்றிய புத்தகங்கள் நிறையவே வெளியிடப்படுகின்றன. ஒரு சாரார் அவருடைய அரசியல் அனுபவமின்மை, சில சமயங்களில் வெள்ளை மனத்துடன் செயல்பட்டது, அவருடைய தவறுகள் மற்றும் தவறான கணக்கீடுகள் ஆகியவற்றை மட்டும் சுட்டிக்காட்டி அவருடைய பங்கைக் குறைத்துக்காட்ட முயல்கின்றனர். மறு சாராரோ லுமும்பாவை ஒரு தலைவராகவும் தியாகியாகவும் பூரணப்படுத்த முயல்கின்றனர்.

நிச்சயம் அவருடைய பணிகளின் மதிப்பீடு ஒருமித்ததாக இருக்க முடியாது. லுமும்பாவின் சேவைகளின் தன்மையை முழுமையாகச் சித்தரிக்க, அவர் சமுதாய, அரசாங்கப் பிரமுகராக உருவான சூழ்நிலைமைகளின் தனித்தன்மைகளைக் கணக்கில் கொள்வது மிக அவசியம்.

ஒரு உழைப்பாளியாகத் தன்னுடைய வாழ்க்கையை அவர் சிறு வயதிலேயே ஆரம்பித்தார். காலனி ஆதிக்க ஆட்சியாளர்களால் விதிக்கப்பட்டிருந்த பல்வேறு வரிகளைக் கட்டவும், குடும்பத்திற்கு உணவளிக்கவும் தனது ஆறாவது வயதிலேயே நிலத்தில வேலை செய்ய ஆரம்பித்தார். தனது பத்தாவது வயதில் மதப்பள்ளி ஒன்றில் சேர்ந்து பயில

ஆரம்பித்தார். இருப்பினும் மதப் போதகராக பணியாற்று வதன் மூலமாகவோ அல்லது காலனி ஆதிக்க ராணுவத் தில் சேர்ந்து பணியாற்றுவதன் மூலமாகவோ செல்வ வாழ்க்கை வாழ்வதில் அவருக்கு நாட்டம் இருக்கவில்லை. மறுபடி 16வது வயதில் மருத்துவ கம்பவுண்டர் படிப்புப் பிரிவில் சேர்ந்த அவர் விரைவில் சமூக இயலுக்காகவும் அரசியலுக்காகவும் அதை விட்டு நீங்கினர். காலனி காங்கோவில் உயர் கல்வி நிலையங்கள் இருக்கவில்லையாதலால் சுயமாகக் கல்வி பயில ஆரம்பித்தார். இதற்காக அவர் 1943ம் ஆண்டு கின்டு (Kindu) நகரத்திற்குச் சென்றார். பின்னர் காலிமா (Kalima) நகரத்திற்கு (கிவு சமஸ்தானம்) சென்று அங்கே வெள்ளீயம் எடுத்த ''சிமடெய்ன்'' என்ற கம்பெனியின் நிர்வாகத் துறையில் குமாஸ்தாவாகப் பணிபுரிந்தார். தனது வாழ்வில் முதல் முறையாக லுமும்பா இங்கேதான் காங்கோ பாட்டாளிகளுடன் அறிமுகமானர்.

இதற்குள், சில உள்நாட்டு மொழிகளுடன் கூட பிரெஞ்சு மொழியையும் அவர் நன்கு அறிந்திருந்தார். மிகக் கஷ்டங் களுடன் புத்தகங்களைத் தேடிக் கண்டு பிடித்து வேலை யற்ற ஓய்வு நேரத்திலெல்லாம் அவற்றைப் படித்தார். விக்டோர் ஹ்யூகோ (Hugo V.), மோலியேரின் (Moliere) படைப்புகளைப் படித்தறிந்தார். அத்துடன் அரிஸ்டாடில், கற்பனவாத சோஷலிசவாதிகள், பிரெஞ்சு மறுமலர்ச்சிச் சிந்தனையாளர்கள் ஆகியோரையும் ஆழ்ந்து படித்தார். தற்காலப் படைப்புகளில், முதலாளித்துவ விமர்சனங்களும் பூர்ஷ்வா ஜனநாயக விமர்சனங்களும் அவரைக் கவர்ந்தன.

தனது 18வது வயதில் ஸ்தலப் பத்திரிகைகளில் தன்னு டைய முதல் கவிதைகளையும் கட்டுரைகளையும் வெளியிட் டார். அக்கட்டுரைகளில் காங்கோவை அதனுடைய பின் தங்கிய நிலைமையிலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும் பெல் ஜியக்காரர்கள் மீட்டனர் என்பதாக ஆப்பிரிக்காவில் பெல் ஜியக்காரர்களின் செய்கைகளுக்கு சாதகமாக எழுதினர். ஆப்பிரிக்கர்களை முழுதும் இவ்வகையில் மயங்க வைத்த காலனி ஆதிக்கவாதிகளின் பிரச்சாரத்திற்கு பாட்ரிஸ் லுமும் பாவும் ஆளாகி விட்டாலும், ஏற்கெனவே அப்போது பெல்ஜிய ஆட்சியாளர்களின் பிரச்சார கோஷங்களும், காங்கோவில் அவர்களுடைய செயல்களும் ஒன்றுடன் ஒன்று ஒத்துச்செல் வதில்லை என்பதை அவர் கவனிக்க ஆரம்பித்து விட்டார்.

ஆனாலும் இத்தகைய கருத்தோட்டங்களிலேயே நீண்டகாலத்திற்கு அவர் இருந்தார்.

காங்கோ மக்களின் வாழ்க்கைத் தரம் ஆப்பிரிக்காவிலேயே தாழ்வானதாக இருந்தது. பெல்ஜிய ஆதிக்கவாதிகள் 80 வருடம் ஆண்டதில், காங்கோவைக் காலனி ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவரும் நிகழ்ச்சிப் போக்கில் ஈவிரக்கமற்ற மக்கட் கொலைகள் மற்றும் மனிதாபிமானமற்ற சுரண்டல் ஆகியவற்றின் விளைவாக நாட்டில் ஜனத்தொகை இரண்டு மடங்காகக் குறைந்தது.

காங்கோ மக்கள் அடிமைத்தனத்துடன் எப்போதும் சமரசப்படவில்லை. பெல்ஜியக்காரர்களால் காலனி ஆதிக்க எதிர்ப்புக் கூட்டங்கள் எவ்வாறு கருணையின்றி முறியடிக்கப்பட்டன என்பதையும், குறிப்பாக 19ம் நூற்றாண்டின் கடைசியிலும் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் நடைபெற்ற பாத்தேதெலா எழுச்சி மற்றும் 1931ம் வருட பாப்பென்தே (Bapende) எழுச்சியைப் பற்றியும் தனது இளமைப் பருவத்தில் கேட்ட முதியோர்களின் கதைகள் லுமும்பாவின் நினைவில் பதிந்திருந்தன. கின்டு நகரத்தில் வேலை செய்யும் போது காங்கோவைச் சுற்றியுள்ள கிவு (Kivu) காடுகளில் பரந்து வரும் ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசியல் மற்றும் மத இயக்கங்களைப் பற்றியும், அதில் பங்கு கொண்டவர்கள் ''நாட்டின் அரசியல் அதிகாரத்தை நமக்குக் கீழ் கொணருவோம்'' என்று மக்களுக்கு அறைகூவல்விடுத்ததைப் பற்றியும், தற்போது கானங்கா (Kananga) என்றழைக்கப்படும் லுலுவாபர்க் (Luluaburg)கில் 1941ம் ஆண்டு நடைபெற்ற ராணுவக் காவல்படைக் கலகத்தைப் பற்றியும், கிசாங்கனி (Kisangani) என்றழைக்கப்படும் ஸ்டான்லிவில்லியில் (Stanleyville) 1945ம் ஆண்டு மட்டாடியில் (Matadi) நடைபெற்ற மாலுமிகளின் எழுச்சியைப் பற்றியும் அவ்வாறே காங்கோ மக்கள் பங்கேற்ற பிற காலனி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டங்களைப் பற்றியும் கேள்விப்பட்டார்.

ஸ்டான்லிவில் நகரத்திற்கு 1944ம் ஆண்டின் மத்தியில் வந்த பாட்ரிஸ் லுமும்பா அங்கே அஞ்சல் அலுவலகத்திலும் வரிவிதிப்பு அலுவலகத்திலும் மூன்றாண்டுகள் வேலை செய்தார். பின்னர் 1947ம் ஆண்டு ஜூலையில் காலனியின் நிர்வாக மையமாக இருந்த லியோபோல்ட்வில் (தற்போது கின்ஷாச)

நகரத்தில் அஞ்சல் அலுவலகர் பள்ளியில் சேர்ந்த அவர் ஒரு வருடத்தில் தேர்ச்சியடைந்தார். பள்ளியில் படிக்கும் போது பாடங்களைத் தவிர தத்துவஞானம், அரசியல் பொருளாதாரம், அரசியல்பாட வரலாறு, அரசாங்கம் மற்றும் உரிமைகளின் தத்துவம், ஆப்பிரிக்காவின் புதிய வரலாறு ஆகியவற்றையும் ஆழ்ந்த ஆர்வத்துடன் கற்றுத் தேர்ந்தார்.

அப்போது அவருடைய சுய அனுபவம் கொஞ்சமே என்றாலும் முக்கியமான பல பிரசித்திப் பெற்ற தலைவர்களின் வாழ்க்கைப் பணிகளைப் பற்றி நூல்களின் மூலம் அறிந்திருந்தபடியால், நாட்டின் சமுதாய அரசியல் வாழ்வில் தன்னை இணைத்துக் கொண்டால் தன்னுடைய மக்களுக்குப் பயனுள்ள வகையில் பணி புரிய முடியும் என்ற நம்பிக்கை அவருள் வளர்ந்தது. 1948ம் ஆண்டிலிருந்து 1956ம் ஆண்டு வரை ஸ்டான்லிவில்லில் அவர் வாழ்ந்த போது அவரால் தோற்றுவிக்கப்பட்ட ''பெல்ஜிய மிதவாதக் கட்சியின்'' ஒரு பிரிவு உட்பட ஆறு சமூக ஸ்தாபனங்களுக்குத் தலைமைதாங்கினார். இவற்றில் எந்த ஸ்தாபனமும் பழங்குடி இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை என்பதும் லுமும்பா, மக்கள் சார்ந்திருந்த இனத்தைக் கொண்டு அவர்களைப் பிரிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக இந்தக் காலகட்டத்தில்தான் ஆப்பிரிக்க சமூக ஸ்தாபனங்கள் இயங்க வேண்டிய கோட்பாடுகளைப் பற்றிய லுமும்பாவின் ஆழ்ந்த ஜனநாயகக் கருத்துக்கள் உருவாயின. இன்னும் 1952ம் ஆண்டிலேயே, எந்த ஒரு ஸ்தாபனமும் தன்னுடைய உறுப்பினர்களின் கூட்டுமுயற்சியினால்தான் பலமுடையதாக விளங்குகிறது என்று கூறினார். எந்த ஸ்தாபனமும் அழிந்து விடாமலிருக்க அது செயல்படவும், தொடர்ந்து புதிய பிரச்சினைகளை முன்வைத்து அவற்றை தீர்க்கவும் வேண்டும். இதில் பல விஷயங்கள் தலைவர்களைச் சார்ந்துள்ளன. தங்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலை தங்களுடைய சிறு முயற்சி கூட இல்லாமல் தானாகவே நிறைவேற்றப்பட்டுவிடும் என்று கைகளைக் கட்டிக் கொண்டு ''கனவு'' காண்பவர்களாக அல்லாமல் தங்கள் வேலைகளில் விருப்பமும் முன்முயற்சியும் துணிவும் உண்மையும் மிக்கவர்களே தலைவர்களாக இருக்க வேண்டும்* என்று அவர் குறிப்பிட்டார்.

---

* *La voix du Congolais, Léopoldville,* 1953,№89, p. 578.

லுமும்பா நாடு முழுவதும் பலமுறை பயணம் செய்தார். இது தன்னுடைய மக்களின் வாழ்க்கையையும், மனப் போக்கையும், அபிலாஷைகளேயும் அறிய அவருக்கு உதவியது. நாட்டு மக்கள் அவரை ஒரு சிறந்த பேச்சாளராகக் கண்டனர். அவருடைய பொதுப் பிரசங்கங்களேயும், சொற்பொழிவுகளேயும் கேட்கவென்று பெரும் மக்கள் திரள் கூடியது. அவரால் எழுதப்பட்ட **காங்கோவின் எதிர்காலச் சுய உரிமை மிரட்டலுக்குள்ளாகியுள்ளதா?** என்ற புத்தகம் ''ஸ்தல ஜனத்தொகையின் பல்வேறு வகுப்புகளேத் தீவிரமாக ஆராய்ந்த பின்''* எழுதப்பட்டது என்று கூற அவருக்கு எல்லா அடிப்படைகளும் இருந்தன. மேலும் அவர் வேற்று ஆப்பிரிக்க நாடுகளுக்கும் பெல்ஜியம் மற்றும் அமெரிக்காவிற்கும் பலமுறை பயணம் செய்தார்.

1955ம் ஆண்டு ஜூலேயில் ஸ்டான்லேவில்லிற்கு விஜயம் செய்த பெல்ஜிய அரசர் பாடுயேனுக்கு, காலனி நிர்வாகத்தின் கருத்துப்படி காங்கோவின் குறிப்பிடத்தக்க சமூகப் பிரமுகராக பாட்ரிஸ் லுமும்பா அறிமுகப்படுத்தப்பட்டார். இருவரும் வெகுநேரம் உரையாடினர். தன்னுடைய கருத்தோட்டங்களேப் புரிந்து கொள்ளும் மனப்போக்கைக் கொண்ட ஒரு இளவரசனேத் தான் கண்டு கொண்டதாக லுமும்பா கருதினுர். காங்கோ மக்கள் மற்றும் ஐரோப்பியர்கள் இருவரின் ஒன்றிணேந்த சக்தியால் நாட்டைச் சூழ்ந்து நிற்கும் இருண்ட மேகங்களேப் போக்கிவிடலாம் என்று நம்ப அவர் விரும்பினுர். 1957ம் ஆண்டு அவர் கீழ்க் கண்டவாறு எழுதுகிருர்: ''நிற, மத வேற்றுமைகளே முற்றிலும் தவிர்த்து, நாட்டின் தலேவிதியைப் பற்றிய பொது அக்கறையால் ஒன்றிணேந்த பெல்ஜியக்காரர்களும் காங்கோ நாட்டவரும் அடங்கிய ஒரே மாதிரியான ஒரு சமுதாயத்தைப் படைப்பது அவசியம் என்பது சிறிது கற்பனுவாதமானுலும், மனதார நான் விரும்புவது ஆகும்''**.

50வது ஆண்டுகளின் மத்தியிலேயே பல காங்கோ அரசியல் பிரமுகர்கள் காங்கோவிற்கு சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும் என்று கோரினர். லுமும்பா உடனே அவர்களுடன்

---

* Lumumba P. *Le Congo, terre d'avenir, est-il menacé?* Bruxelles, 1961, p. 8.

** Brausch G. *Belgian Administration in Congo*. London, 1961, p. 78.

இணைந்து விடவில்லை. இன்னும் பெல்ஜிய-காங்கோ கூட்டுச் சமுதாயக் கருத்தில் நம்பிக்கை கொண்டவராக இருந்த அவர், அதை நடைமுறையாக்குவதென்பது நிற வேற்றுமையை நீக்குதல், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், கல்வி அமைப்பை வளர்த்தல், ஆப்பிரிக்க பெண்கள் விடுதலை, நாட்டின் நிர்வாகத்தில் காங்கோ நாட்டவரைத் தீவிரமாக ஈடுபடச் செய்தல் போன்ற பிரச்சினைகளுடன் ஒன்றிணைந்தது என்று கருதினார். இந்தப் பிரச்சினைகளைப் பற்றிக் காலனி ஆதிக்கவாதிகளுடன் விவாதிக்கக் கூடப் பிறர் மறுப்பதை, லுமும்பா ''படிப்படியாக தொடர்ந்து செயல்பட வேண்டும்'' என்று விமர்சித்தார்.

இருப்பினும் உலகச் சூழ்நிலை மாறியதும் காலனி ஆதிக்கத்திற்குட்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டம் தீவிரமடைந்ததும், ஆப்பிரிக்கா முழுவதும் மற்றும் ஐரோப்பாவிலும் அவர் மேற்கொண்ட பயணங்கள் ஏற்படுத்தியத் தாக்கமும், அவர் கண்ணோட்டத்தை மேலும் விரிவாக்கி, காங்கோவின் பிரச்சினைகளைப் புதுவகையில் சிந்திக்க அவருக்கு உதவின. லுமும்பாவின் முற்போக்குக் கண்ணோட்டங்கள் மற்றும் அவருடைய நடைமுறைப் பணிகளின் வேகமான மாறுதல்கள் கவனிக்கப்பட வேண்டியவை. 50ம் ஆண்டுகளின் கடைசியில் காலனி ஆதிக்கத்திலிருந்தும் புதுக்காலனி ஆதிக்க முறையிலிருந்ததுமான ஆப்பிரிக்காவின் முழு சுதந்திரத்திற்காகப் போராடும் போராளிகளின் வரிசையில் இவர் முன்னிலையில் நின்றார்.

வெகுஜனக் கட்சியாகவும் செல்வாக்குமிக்க அரசியல் ஸ்தாபனமாகவும் விளங்கிய ''காங்கோ தேசிய இயக்கம்'' என்ற கட்சியை 1958ம் ஆண்டு அக்டோபரில் தோற்றுவித்தார். அவரால் எழுதப்பட்ட கா. தே. இ.ன் முதல் செயல் திட்ட அறிக்கையில் ''கட்சி எல்லா சாதனங்களின் உதவியுடனும் காங்கோவை ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுவிக்கப் போராடுகிறது''* என்று கூறப்பட்டது. நாட்டின் ஒற்றுமைக்காகப் போராடுவது, கட்சியின் தலைமை எடுக்கும் முடிவுகளை நிறைவேற்றுவதில் தானே பங்கெடுத்துக் கொள்வது, காலனி ஆதிக்கவாதிகளின் புரட்டுக்களை அம்பலப்படுத்துவது, தொடர்ந்து தங்களுடைய அரசியல் அறிவை வளர்த்

---

* *L'avenir politique du Congo Belge,* p. 47.

தல் ஆகியவை ஒவ்வொரு காங்கோ தேசிய இயக்கக் கட்சி உறுப்பினனின் கடமை* என்று கட்சியின் விதிமுறைகளில் குறிக்கப்பட்டது.

அக்ரா (கானு)வில் நடைபெற்ற ஆப்பிரிக்க மக்கள் மாநாட்டிற்கு காங்கோவின் பிரதிநிதியாக 1958ம் ஆண்டின் கடைசியில் லுமும்பா சென்ருர். அங்கே அதன் செயலாளரு டைய காரியாலயத்தின் (ஸெக்ரிடேரியட்) நிரந்தர உறுப்பின ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்தவருடம் அவர் இபா தானில் (நைஜீரியா) நடைபெற்ற கலாச்சாரப் பிரமுகர் களின் சர்வதேசக் கருத்தரங்கு வேலைகளில் பங்கு கொண்டு அங்கே **ஆப்பிரிக்க ஒற்றுமையும் தேசிய விடுதலையும்** என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினர். ''காலனி ஆதிக்கத்தின் கீழ் உள்ள எல்லா நாட்டு மக்களின் அபிலாஷைகளும் ஒன்றே, அவர்களின் தலைவிதியும் ஒன்றே, மேலும் தங்களின் தேசிய வளர்ச்சியில் அவர்கள் மேற்கொள்ளும் குறிக்கோளும் ஒன்றே: அது காலனி நுகத்தடியில் இருந்து ஆப்பிரிக்காவை விடு விப்பது என்பதே ஆகும். ஆப்பிரிக்காவின் ஏதாவது ஒரு பகுதி மட்டும் அன்னிய ஆதிக்கத்தின்கீழ் இருந்தாலும் கூட ஆப்பிரிக்கா எப்போதுமே சுதந்திரத்தையும் விடுதலையையும் அடையாது'' என்று அச்சொற்பொழிவில் குறிப்பிட்டார்.**

லியோபோல்ட்வில்லில் 1960ம் ஆண்டு ஆகஸ்டில் நடை பெற்ற சுதந்திர ஆப்பிரிக்க அரசுகளின் மாநாட்டில் லுமும்பா, ஆப்பிரிக்கர்கள் ஒன்றுசேராவிட்டால், ஏகாதிபத்தியத்தின் ராட்சதப் பிடியிலிருந்து அவர்கள் மீளவே முடியாது என்றும், ஆப்பிரிக்க கண்டத்திலுள்ள ஒவ்வொரு அரசும் மற்ற எல்லா நாடுகளின் உதவியையும் எதிர்பார்க்கும் வகையில் சுதந் திரத்தை அடையவும், மற்றும் விடுதலைக்காகப் போராடும் ஆப்பிரிக்க நாடுகளின் ஐக்கிய முன்னணி மிக அவசியம் என் றும் குறிப்பிட்டார்.

அவர் காங்கோ விடுதலை இயக்கத்தின் பிற எந்தத் தலை வரையும் விட ஆழமாகவும், முதலிலும் உள்நாட்டிலுள்ள காலனி ஆதிக்க எதிர்ப்பு சக்திகளை ஒன்றிணைக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து கொண்டார். இன்னும் 1956ம்

---

* Lemarchand R. *African political thought. Lumumba, Nkrumah and Toure*. Denver, 1958, p. 48.

** *Remarqúes congolaises et africaines,* Bruxelles, 1964, № 3, p. 47.

ஆண்டிலேயே ''எவ்வளவுக்கெவ்வளவு நாம் ஒற்றுமையுடன் இருக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு வெற்றிகரமாகச் சுரண்டலேயும், ''ஊழலேயும் மற்றும் 'பிரித்தாளும்' கோட்பாட்டின்கீழ் நம்மைப் பிரிக்க முயலும் சூழ்ச்சிகளுக்கும் எதிராகப் போராட முடியும்''* என்று குறிப்பிட்டார்.

லுமும்பாவும் மற்றும் அவருடைய ஆதரவாளர்களும் காலனி ஆதிக்கத்திற்கு எதிராகக் காங்கோ மக்களே ஒன்று திரட்டுவதற்காக நடத்தியப் போராட்டம் மிகவும் கடினமான நிலேமைகளில் நடந்தது. ஆப்பிரிக்காவின் நிலேயிலேயே காங்கோவிலிருந்த இனப்பிரிவுகள் மிகவும் அதிகமானவை. பல்வேறு சமூக-பொருளாதார வளர்ச்சி மட்டத்திலுள்ள 200க்கும் மேற்பட்ட பழங்குடி இனங்களும், குழுக்களும் காங்கோவில் உள்ளன. நாட்டின் பல்வேறு இடங்களுக்கு இடையிலும், நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் இடையிலும் நிலேயான பொருளாதாரத் தொடர்புகள் இருக்கவில்லே. ஏதாவது ஒரு வகை தேசிய இனம் எண்ணிக்கையில் பெரியதாக இருந்தாலும் (கீழ் காங்கோ, கசாயி, காடெங்கா) அங்கே பிரிவினேவாதப் போக்குகள் இருந்தன.

பழங்குடி இனவாதத்தை அபாயகரமான ''உள்நாட்டு எதிரியாக'' உணர்ந்த லுமும்பா, குறுகிய இனவாதத்திற்குப் பதிலாக பொதுத் தேசிய நலன்களுக்காகப் பாடுபடும்படி நாட்டு மக்களே அறைகூவியழைத்தார். மேலும் நாட்டின் ஒருங்கிசைவான வளர்ச்சிக்குக் கேடு விளேவித்த காலனி ஆதிக்க ஆட்சியாளர்களின் சமூக-பொருளாதார வளர்ச்சிக் கொள்கையை—அவர்களின் கண்ணேட்டத்தின்படி மூலதன வளர்ச்சிக்கும் மிகுந்த லாபம் பெறவும் தகுந்த இடங்களுக்கு மட்டும் பொருளாதார உதவிகளே செய்தல் என்ற கொள்கையை—எதிர்த்து தீவிரமாகவும் தீர்மானமாகவும் விமர்சித்தார். காங்கோவைச் சிறிய சிறிய பிராந்தியங்களாகப் பிரிக்கும் காலனி ஆதிக்கவாதிகளின் திட்டங்களேயும், இத்திட்டங்களே தங்களின் மூலநலன்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ள சில அரசியல் பிரமுகர்கள் கொண்டிருந்த நாட்டத்தையும், அத்தகைய பிராந்தியங்களே அவர் கூறியபடி ''சிறிய குடியரசுகளாக்கும் திட்டத்தையும்'' அவர் கடுமையாக எதிர்த்தார். காங்கோவின் சுதந்திரத்தைப் பற்றிய பிரச்சினேயைத் தீர்த்த

---

* *Ibid.*, p. 46.

பிரஸ்ஸெல்ஸ் மாநாட்டில் லுமும்பா கீழ்க் கண்டவாறு அறிவித்தார்: ''எங்களுடைய தேசிய நிலப்பரப்பை துண்டு போடும் எத்தகைய முயற்சியையும் நாங்கள் எதிர்க்கிறேம். மாபெரும் காங்கோ அதனுடைய அரசியல் மற்றும் பொருளாதார ஒற்றுமையின் மீதே கட்டப்பட்டுள்ளது.''* ஒன்றிணைந்த காங்கோத் தேசியத்தை உருவாக்குவதற்கு காலனி ஆதிக்கம் பயன்படுத்திய அரசியல், சமூக மற்றும் பொருளாதார அமைப்புகளை அழிப்பது மிக அவசியம் என்பதைச் சுட்டிக் காட்டினர்.

அதே நேரத்தில், காங்கோ சமுதாயத்தின்கீழ் பல்வேறு பட்ட வர்க்கங்களுக்கும் சமூக வகுப்புக்களுக்கும் இடையிலான—விவசாயிகள், விவசாயத் தொழிலாளர் மற்றும் தொழிலாளர் (இவர்களின் எண்ணிக்கையில் ஆப்பிரிக்காவிலேயே காங்கோ முதலிடம் வகித்தது), உருவாகிக் கொண்டிருந்த பூர்ஷ்வா, தேசிய அறிவு ஜீவிகள், பாரம்பரிய மேற்குடியினர் ஆகிய அனைவருக்கும் இடையிலான—ஒத்துழைப்பு சாத்தியமே என்று லுமும்பா கருதினர். அவருடைய கானல் நீர் போன்ற பல கருத்துக்களில் ஒன்ருன இது, ஒரு புறத்தில் அவருடைய அரசியல் கொள்கை யாருடன் முரண்பட்டதோ, அந்தச் சமூக வகுப்புகளை அம்பலப்படுத்துவதற்கும் மறு புறத்தில் எந்த சமூக சக்திகளை ஆதாரமாக அவர் கொண்டிருக்க முடியுமோ அவற்றை வெளிப்படுத்தவும் அவருக்குத் தடையாக இருந்தது. ''அருமை சகோதர சகோதரிகளே, தொழிலாளர்களும் அரசு அலுவலர்களும் அறிவு ஜீவிகளும் உழைப்பாளர்களும் பணக்காரர்களும் ஏழைகளும் ஆப்பிரிக்கர்களும் ஐரோப்பியர்களும் கத்தோலிக்கர்களும் பிராட்டஸ்டண்டுகாரர்களும் கிம்பான்கிஸ்டுகளும் கித்தவாலிஸ்டுகளும் (மத-அரசியல் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்கள் — யூ.வி.) அனைவரும் ஒன்ருக இணைவோம். இவ்வாறு இணைந்து மாபெரும் காங்கோலியத் தேசியத்தைத் தோற்றுவிப்போம்''** என்று லுமும்பா பறைசாற்றினர்.

இருப்பினும், அரசியல் விடுதலைக்காக மட்டுமின்றி பொருளாதார விடுதலைக்காகவும் காங்கோ சமுதாயத்தின் எல்லாத்

---

* *La pensée politique de Patrice Lumumba*, Paris, 1963, p. 201.

** Ibid., p. 245.

தேசிய சக்திகளையும் ஒன்றிணைக்க வேண்டியதன் அத்தியாவசியத்தையும், அவ்வாறே காங்கோவின் இனக்குழுப் பிரிவு அமைப்பினுள் மறைந்திருக்கும் அபாயத்தையும் அவர் உணர்ந்தார். மேற்கூறப்பட்ட மாயை நிறைந்த கருத்துக்கு இந்த உணர்வே காரணம் என்று கூடக் கூறலாம் அதனுலேயே நாட்டில் சமூக வேறுபாடுகள் கணிசமான அளவு தெளிவாகத் தெரிய ஆரம்பித்துவிட்டன என்பதைப் புரிந்து கொண்டாலும், எல்லா ஆப்பிரிக்கர்களின் நலன்களும் பொருந்துவது சாத்தியமே என்று அவர் வாதாடினுர்.

ஒரு ஏழை விவசாயியின் குடும்பத்தில் பிறந்த லுமும்பா, சாதாரண சிப்பந்தியாக இருந்து பிரதம மந்திரி வரை வளர்ந்த லுமும்பா, தன்னுடைய மக்களுடனேயே என்றென்றும் இருந்தார். உழைக்கும் மக்களை ஆழ்ந்த மரியாதையுடன் அணுகிய அவர், போராட்டத்தில் துணைவர்களாகவும், சகோதரர்களாகவும் அவர்களைக் கருதினுர். ''சில காங்கோவாசிகள் நன்ருக வாழ்கிருர்கள் என்பதை அறிவோம். ஆனுல் அவர்கள் மிகச் சொற்பமானவர்களே என்பதுடன் நமது அக்கறை ஜனத்தொகையில் பெரும்பான்மையினர் மீதே''* என்று 1956ம் ஆண்டு அவர் எழுதினுர்.

கா. தே. இ. கட்சியை வெகு ஜனங்களுடன் தொடர்பு கொண்ட ஒரு சக்தி மிக்க கட்சியாக மாற்ற வேண்டும் என லுமும்பா பாடுபட்டார். அக்கட்சி காலனி ஆட்சிக்கு எதிரான போராட்டத்திற்கு மட்டுமின்றி மனிதன் மனிதனுல் சுரண்டப்படுவதை அழிக்கும் போராட்டத்திலும் மக்களை ஒன்று திரட்ட வேண்டும் எனக் கருதினுர். பரந்த அளவில் மக்களுடன் கொண்ட தொடர்பை உறுதிப்படுத்த கா. தே. இ. கட்சித் தலைவர்கள் நாட்டம் கொண்டனர். ''சுதந்திரத்திற்கான போராட்டத்தில் தனியான சில அரசியல் தலைவர்களைக் கருத்தில் கொள்ளக் கூடாது. தங்களுடைய நிலையில் அதிருப்தி கொண்ட மக்களையே கருத்தில் கொள்ள வேண்டும்'' என்று கூறினுர் லுமும்பா.** நாட்டின் பல பகுதிகளில் தோற்றுவிக்கப்பட்ட ஸ்தல பிரிவுகள் மற்றும் மத்திய கட்சி உறுப்புகள் ஆகிய

* Lumumba P. *Le Congo, terre d'avenire, est-il menacé?* Bruxelles, 1961, p. 28.

** *Notes pour servir à l'étude des groupements politiques à Léopoldville.* V. III, Bruxelles, 1959, p. 80.

வற்றின் கூட்டங்கள் அடிக்கடி தொடர்ந்து நடத்தப்பட்டது கா. தே. இ. கட்சியின் தனித்தன்மை ஆகும். கட்சித் தலைமையின் பிரதிநிதிகள் முக்கியமாக விவசாயிகள், மர வெட்டிகள், விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோர் பங்கு கொண்ட கூட்டங்களை நடத்தினர். உழைப்பாளிகளின் தொழிற்சங்களுடன் கா. தே. இ. கட்சி தொடர்பு கொண்டிருந்தது என்பதில் அது காங்கோவிலிருந்த பிற கட்சிகளிடமிருந்து தனித்து விளங்கியது. உண்மையில் இது தேசிய ஐக்கிய முன்னணி வகையிலமைந்த ஸ்தாபனமாக விளங்கியது.

லுமும்பாவின் உண்மையான ஜனநாயகக் கருத்தோட்டங்களும் அரசியல் கொள்கைகளும் அவற்றின் தீவிரவாதத் தன்மையில் மிகவும் அபாயகரமானவை என்று அவருடைய உள்நாட்டு, வெளிநாட்டு எதிரிகளுக்குத் தோன்றின.

முக்கியமாக லுமும்பாவும், பிற கா. தே. இ. கட்சித் தலைவர்களும் காங்கோ மக்களின் துன்பங்களுக்கு முக்கியக் காரணம் ஏகாதிபத்தியமே என்று கருதினர். ஆப்பிரிக்காவில் தங்களுடைய ஆதிக்கத்தை நிரந்தரப்படுத்த புதுக்காலனி ஆதிக்கவாதிகள் கொண்ட நாட்டத்தை அவர்கள் அம்பலப் படுத்தினர். ''ஐரோப்பிய அரசுகள், தம் வழியில் வந்து, தங்கள் மக்களை ஏமாற்றும் ஆப்பிரிக்கத் தலைவர்களின் ஆதரவைப் பயன்படுத்திக் கொள்ள எண்ணுகிறார்கள். நேர்மையற்ற இத்தகைய தலைவர்களின் துணையைக் கொண்டு ஆப்பிரிக்காவின், காங்கோவின் செல்வர்களை முடிந்த வரைச் சுரண்டுவதற்காக இங்கே தாங்கள் இருப்பது அவசியம் என்று இந்த ஐரோப்பிய அரசுகள் கருதுகின்றன''* என்று லுமும்பா குறிப்பிட்டார்.

லுமும்பா மேற்கு நாடுகளின் அரசியலை மதிப்பிட்டதில் சமுதாய விளைவுகளை வர்க்க நோக்கில் அணுகும் முறையின் அம்சங்கள் உள்ளன. ''பெரும்பான்மையான பெல்ஜிய மக்கள் ஆப்பிரிக்கர்களைச் சுரண்டுவதை எதிர்க்கின்றனர் என்பதை நானறிவேன். சிறிய பொருளாதார ஆட்சிக் குழுவின் சர்வாதிகாரத்தின்கீழ் 14 மில்லியன் காங்கோ மக்கள் வைக்கப்பட்டிருக்கும் காங்கோவின் காலனி நிலையை அவர்கள் அங்கீகரிக்கவில்லை. இது பெல்ஜிய மக்களைச் சார்ந்து இருக்குமேயானால் தற்காலத்தில் இருக்கும் அத்தனை துன்ப நிலைகளைக் காங்கோ

---

* *Afrique — Asie,* Paris, 1978, №. 154, p. 10.

சந்திக்க நேரிட்டிக்காது.''* என்று 1959ம் ஆண்டு அக்டோபரில் கூறினர் லுமும்பா. இதற்கு சில நாட்களுக்கு முன்னுல், செப்டெம்பர் 6ம் தேதி லுலுவாபர்க்கில் ஆருயிரம் மக்கள் கூடியிருந்த கூட்டத்தில் கீழ்க் கண்டவாறு அறிவித்தார்: ''காலனி ஆட்சியை நீடிக்கவும் காங்கோவின் செல்வத்தைச் சுரண்டவும் எண்ணம் கொண்ட சில சிறிய குழுக்களே காங்கோவிற்கும், பெல்ஜியத்திற்கும் இடையிலான உறவின் பதட்ட நிலையை அதிகப்படுத்துகின்றன. தங்களுடைய சுயநலத்தில் அக்கறை கொண்ட சில தனிப்பட்ட அலுவலர்களும் அவ்வாறே செயல்படுகின்றனர்.''**

சுதந்திரத்திற்கும் சமூக முன்னேற்றத்திற்குமான போராட்டத்தில் மக்களே தலையாய சக்தி என்று லுமும்பா கருதினர். ''மக்களின் தலைவர்கள் கருதுவதைவிட விரைவாக முன்னேற்றப் பாதையில் செல்ல வெகு ஜனங்கள் விரும்புவதால்'' அவர்களே எந்தவொரு கோரிக்கையையும் கோஷத்தையும் முன்வைக்க அரசியல் பிரமுகர்களைத் தூண்டுகிருர்கள்*** என்று 1959ம் ஆண்டு ஏப்ரலில் பிரஸ்ஸெல்சில் நடைபெற்ற கூட்டத்தில் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார்.

வெகு ஜனங்களின் பங்கை லுமும்பா இந்த வகையில் மதிப்பிட்டது காங்கோவில் மட்டுமல்லாமல், பிற ஆப்பிரிக்க நாடுகளிலும் இருந்த அவருடைய சமகால அரசியல் தலைவர்களிடமிருந்து அவரை சாதகமான வகையில் தனித்துக் காட்டியது. ''சுதந்திரத்தை யாரும் வெள்ளித் தட்டில் வைத்துக் கொணர்ந்து தரமாட்டார்கள் என்பதற்கு வரலாறு சான்ருக விளங்குகின்றது. சுதந்திரத்தைப் போராடி வெல்ல வேண்டும். ஆனுல் இதற்காக நாட்டில் உள்ள எல்லா பலம் மிக்க சக்திகளையும் ஒன்று திரட்டவும் அணிதிரட்டவும் வேண்டும். நம்முடைய அறை கூவலுக்கு காங்கோ மக்கள் செவி சாய்த்தனர். இந்த ஒன்றிணைந்த சக்தியின் உதவியால் கெடுதல் மிக்க காலனி ஆதிக்கத்திற்கு மரண அடி கொடுத்தோம்''**** என்று கூறினர் அவர்.

லுமும்பா, கேடு நிறைந்த சிந்தனைகளை மக்களிடையே

---

* *La pensée politique de Patrice Lumumba*, p. 87.

** *Ibid.*, p. 66.

*** *Ibid.*, p. 45.

**** *Afrique — Asie*, 1978, № 154, p. 11.

வளர்க்கிறார் என்று குற்றம் சாட்டிய பிற பெரும்பான்மை யான கன்சர்வேடிவ் அரசியல் பிரமுகர்களிடமிருந்து அவர் வேறுபட்டு நின்றதுடன் ஒருசில சமூக வகுப்புகளின் பங்கை மட்டும் மிகைப்படுத்திய, மேலும் இளைய அரசுகள் செய்து வரும் புரட்சிகர சீர்திருத்தங்களில் உழைப்பாளி மக்களின் பங்கைச் சரியாக மதிப்பிடாத சில சமகால புரட்சிகர ஜனநாயகவாதிகளையும் விட மேம்பட்டிருந்தார்.

பெருகிவந்த தேசிய விடுதலை இயக்கத்தின் தாக்கத்தினால் பெல்ஜிய ஏகாதிபத்தியம் பின்வாங்க வேண்டியதாயிற்று. 1960ம் ஆண்டு ஜூன் 30ம் நாள் காங்கோ குடியரசு பிரகடனப்படுத்தப்பட்டது. முதல் தேசிய அரசாங்கத்திற்கு பா. லுமும்பா தலைமை தாங்கினார். சுதந்திரத்தை பிரகடனப்படுத்திய கூட்டத்தில் அவர் ''நமது சுதந்திரம் தினசரி நடந்த கருத்து நிறைந்த உறுதியான போராட்டத்தில் அடையப்பட்டது. வறுமையோ, துன்பங்களோ, எண்ணிக்கையிலடங்காத பலிகளோ, நம்முடைய மக்கள் சிந்திய இரத்தமோ எதுவுமே நம்மைத் தடுக்க முடியாத மாபெரும் போராட்டத்தின் முடிவாகவே இந்தச் சுதந்திரத்தை அடைந்தோம் என்பதை எந்த ஒரு காங்கோ குடிமகனும் எப்போதுமே மறக்க மாட்டான்''* என்று குறிப்பிட்டார்.

பிரதம மந்திரியாக ஆன உடனே தன்னுடைய அரசாங்கத்தைத் தீவிர ஏகாதிபத்திய எதிர்ப்புப் போக்கைக் கொண்ட பாதையில் வழி நடத்த ஆரம்பித்தார். அந்த நேரத்தில், உண்மையான ஆட்சி இயந்திரம் அவருடைய நிர்வாகத்தின் கீழ் இருக்கவில்லை என்பதையும் காங்கோவில் தன்னுடைய பொருளாதார மற்றும் அரசியல் நிலையை ஏகாதிபத்தியம் இன்னும் தொடர்ந்து காத்து வருகின்றது என்பதையும் அப்போது அவர் உணரவில்லை என்றே தோன்றுகிறது. ''அரசாங்கத்தின் அரசியல், மக்களின் அரசியலாகவே இருக்கும். குறிப்பாக, மக்கள்தான் எவ்விதத்தில் நாங்கள் செயல்பட வேண்டும் என்று எங்களுக்கு உத்தரவிடுகிறார்கள். அவர்களின் அபிலாஷைகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் ஏற்ற வகையில் நாங்கள் செயல்படுவோம்''** என்று அறிவித்தார் லுமும்பா.

---

* *பாட்ரிஸ் லுமும்பா.* காலனியாதிக்கவாதிகள் செய்த கொடூரமான குற்றங்களைப் பற்றிய உண்மைகள். *மாஸ்கோ, 1961, ப. 42. (ருஷ்ய மொழியில்.)*

** *Congo 1960*. Bruxelles, 1961, V. 2, p. 593.

தன்னுடைய அரசாங்கத்தின் செயல்திட்டத்தை முழுமை யாகத் தயாரிக்க அவரால் முடியவில்லை. இருப்பினும் அவரு டைய அத்திட்டத்தின் முன் குறிப்புகளில் அரசியல் சுதந் திரப் போராட்டத்தைச் சுரண்டல் உறவுகளுக்கு எதிரான போராட்டமாக வளர்க்க வேண்டியதன் அவசியத்தை அவர் உணர்ந்து கொண்டார் என்ற முடிவுக்கு வரக் கூடிய அம்சங் கள் உள்ளன.

''அரசியல் சுதந்திரத்தைப் பொருளாதார வளர்ச்சியால் உடனே உறுதிப்படுத்தாவிட்டால் அது வெறும் சொல்லாகவே நின்று விடும்''* என்று மிகச் சரியாகக் கருதிய லுமும்பா நாட்டு வருவாயின் மீதும் பொருளாதாரத்தின் மீதும் தேசியக் கண்காணிப்பை நிலைநாட்ட முயன்றார். காங்கோவின் செல் வங்களை ஏற்றுமதி செய்வதை அரசாங்கம் தடை செய்தது. பின்னர் இயந்திரத் தொழிலில் அரசுப் பொருளாதாரப் பிரிவின் அடிப்படையிலும் வேளாண்மையில் கூட்டுறவுச் சங்கங்களின் அடிப்படையிலும் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிப்பதில் அரசாங்கம் முனைந்தது. உழைப் பாளிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக விலை களின்மீது கட்டுப்பாட்டைக் கொணரவும் தொழிலாளர் களுக்குச் சம்பள உயர்வளிக்கும்படி முதலாளிகளை நிர்ப்பந் திக்கவும் மக்களுக்கு முழு வேலை வாய்ப்பளிக்கவும் நாடு முழுமைக்கும் ஒருமித்த உழைப்புச் சட்டத்தைத் தயாரிக் கவும் அரசாங்கம் முயன்றது.

அரசாங்கத்தைப் பற்றிய அவருடைய கருத்தோட்டங் களிலும் அரசாங்க இயந்திரத்தின் வேலைகளை ஒழுங்குபடுத்திய நடைமுறைப் பணிகளிலும் லுமும்பாவின் ஜனநாயகவாதம் தெளிவாக வெளிப்பட்டது. ஆப்பிரிக்காவில் தோன்றிக் கொண்டிருக்கும் புதிய சமுதாயத்தின் உயிராற்றலில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்த லுமும்பா அந்தப் புதிய சமுதாயம் ஆப்பிரிக்கப் பாரம்பரிய ஆரம்பத்தையும் ஐரோப்பிய அர சாங்கத் தன்மையின் அம்சங்களையும் ஒன்றிணைத்தது எனக் கருதினார். அதே சமயம், இயந்திரமயமாக மேலை நாடுகளின் அரசியல் மற்றும் சமுதாய வாழ்க்கை முறைகளை எடுத்துக் கொள்வதை அவர் எதிர்த்தார். இப்படி, பாராளுமன்றச் செயல்முறைக் கோட்பாடுகள் (நீண்ட, பல சமயங்களில்

---

* *La Pensée politique de Patrice Lumumba,* Paris, 1963, p. 57.

பலனெதுவும் அளிக்காத விவாதங்கள், பிளவுப் போராட்டங் கள் இன்னும் பிற நிறைந்த பாராளுமன்ற முறை) காங் கோவிற்கு ஒத்து வராதது என்று அவர் கருதினர். இம்முறை காங்கோவின் சூழ்நிலைகளுடன் ஒரு பொருத்தமும் கொண் டிராத ஒரு ஐரோப்பிய நாடான பெல்ஜியத்தில் இருந்ததும் எதிர்காலக் காங்கோ குடியரசின்மீது காலனியாதிக்க ஆட்சி யாளர்கள் திணிக்க முயன்ற ஆட்சி முறையும் ஆகும். காங் கோவின் சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்திய நேரத்தில் பெல்ஜிய ஆட்சியாளர்களால் தயாரிக்கப்பட்ட அரசு இயந் திரம் இயங்கும் முறையின் கோட்பாடுகளில் பலவற்றுடன் லுமும்பா ஒத்துக் கொள்ளவில்லை என்றாலும் அவருடைய பல அரசியல் எதிரிகளைப் போலல்லாமல் சட்டப்பூர்வமாகவே அவர் செயல்பட்டு வந்தார். அத்துடன் ஏகாதிபத்தியத்தால் நாட்டில் நெருக்கடி நிலை உண்டாக்கப்பட்ட போது கூட அவர் அரசாங்கத்துடனும் பாராளுமன்றத்துடனும் நெருங் கிய தொடர்பு கொண்டே செயல்பட்டு வந்தார்.

அரசாங்கத்தை ''ஆப்பிரிக்க மயமாக்குதல்'' என்பதை ஐரோப்பிய அலுவலர்களுக்குப் பதிலாக காங்கோ நாட்ட வரை வெறும் இயந்திரமயமாக கொணருவது என்பதாகப் பாட்ரிஸ் லுமும்பா கருதவில்லை. மிகவும் அதிகமான காரிய ரீதியான மற்றும் அரசியல் ரீதியான கோரிக்கைகளைத் தேசியத் தலைவர்களின் முன் வைத்ததுடன் அவர்கள் மக்களின் தொண் டர்கள் என்பதைத் தொடர்ந்து நினைவு படுத்தி வந்தார். ''தலைவர்கள் சுய உணர்வுடனும் திறமையுடனும் மேலும் தேசபக்தியுடனும் தங்களின் கடமைகளை நிறைவேற்ற வேண் டும் என்றே நாங்கள் விரும்புகிறோம். மக்களின் நலன்களுக் காக உழைக்க விரும்பாத எந்தக் காங்கோ நாட்டவனும் வெளித்தள்ளப்படுவான். தாய் நாட்டிற்காக உழைப்பவர் களும், தகுதி உள்ளவர்களும் மட்டுமே தலைவர்களாக வேண் டும் என விரும்புகிறோம்''* என்று அவர் கூறினர்.

காங்கோ நாட்டவரை உள்ளத்தளவில் காலனி ஆதிக்கத் திலிருந்து விடுவிப்பது, அதாவது ''பல நூற்றாண்டு காலமாகக் காலனி ஆதிக்கம் நமக்குள் உருவாக்கி வைத்திருக்கும் மனநிலை

---

* Heinz G., Donnay H., *Lumumba Patrice. Les cinguantes derniers yours de sa vie*. Bruxelles—Paris, 1966, p. 192. (மேற்கொண்டு Patrice Lumumba எனக் குறிக்கப்பட்டுள்ளது.)

அமைப்பையும் உளப்பாங்கையும் மற்றும் பழக்க வழக்கங் களையும் நீக்க வேண்டும்''* என்பது அரசாங்கத்தின் பணி களில் முக்கியமான இடத்தை வகிக்க வேண்டும் என்று லுமும்பா கருதினர். காலனி ஆதிக்கக் கட்டத்தில் சர்ச்சுகள் வகித்த எதிர்மறையான பங்கையும் ஒன்றிணைந்த காங்கோ வின் ஆட்சிக்கு எதிரான அவற்றினுடைய செய்கைகளையும் உறுதியாகக் கண்டித்த அவர், அரசாங்கத்தையும் பள்ளி களையும் சர்ச்சுகளிடமிருந்து பிரிப்பதைப் பற்றி அறிவித்தார்.

ஆப்பிரிக்கக் கண்டத்தில் ஏகாதிபத்திய ஆட்சிகளின் ராணுவங்கள் இருப்பதற்கு, குறிப்பாக அங்கே தேசிய அரசாங்கங்களின் கண்காணிப்பில் நாட்டோவின் (NATO) ராணுவத் தளங்களை அமைப்பதற்கு, முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற லுமும்பாவின் கோரிக்கை, ஆப்பிரிக்காவில் மேற்கு நாடுகளின் நலன்களுக்கு மாபெரும் ஆபத்தாக விளங் கியது. காங்கோவின் விடுதலை இயக்கத் தலைவர்களிலேயே இக்கேள்வியை முன் வைத்தவர் லுமும்பா மட்டுமே. 1960ம் ஆண்டு பிப்ரவரியிலேயே அத்தகைய ராணுவத் தளங்களில் ஒன்ருன காமினுவை (Kamina) குறிப்பிட்டு ''காங்கோ நாட்டவர் முதலில் தேசிய மயமாக்கப் போவது அதைத் தான்''** என்று கூறினர்.

லுமும்பாவின் அரசாங்கம் வைத்த முதல் காலடிகளே ஏகாதிபத்தியத்தை எச்சரிக்கை அடையச் செய்தன. மேலை நாடுகளின் சுயநல எண்ணங்கள் காங்கோவில் மிரட்டலுக்கு உள்ளாகி விட்டன. கூட்டு சேராக் கொள்கை, காலனி ஆதிக் கத்திலிருந்தும் நிறவெறியாளர் ஆட்சியிலிருந்தும் ஆப்பிரிக் காவை முழுமையாக விடுவித்தல், காங்கோவிற்கும் சோஷலிச நாடுகளுக்கும் இடையில் சம உறவுகளை நிறுவி, வளர்ப்பது ஆகியவை அடங்கிய லுமும்பாவின் வெளி உறவுக் கொள் கைச் செயல் திட்டங்கள் அவர்களுக்கு ஒத்து வரவில்லை.

பெல்ஜியத்திற்கும் காங்கோவிற்கும் இடையிலான உறவு கள் காங்கோவிற்கு ''நலம் பயக்கும்'' என்ற மாயையிலிருந்து கடைசியாக விடுபட்ட லுமும்பா, பெல்ஜிய அரசரின்கீழ் அமைந்த ஐக்கியப் பொது அரசாங்கத்தின்கீழ் இரண்டு நாடு களையும் ஒன்றிணைக்கக் கோரி பெல்ஜிய அரசாங்கம் அளித்த

---

* *Ibid.*, p. 194.

** *La pensée politique de Patrice Lumumba*, p. 158.

சிபாரிசை நிராகரித்தார். ஐ. நா. சபையின் பெயரால் காங்கோ மேற்கு நாடுகளின் பொறுப்பில் வைக்கப்படுவதை அவர் தீர்மானமாக எதிர்த்தார். 1960ம் ஆண்டு ஜூலை 9ம் நாள் தன்னுடைய பொதுக்கூட்டச் சொற்பொழிவுகளில் ஒன்றில் லுமும்பா கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டார்: ''ஐ. நா. சபையின் பெயரால் எங்களுக்கு ஏதோ சர்வதேச அந்தஸ்தை 15 ஆண்டுகளுக்குக் கொடுக்கச் சிலர் முயல் கின்றனர். காங்கோ ஒரு சுதந்திர அரசு என்பதையும் ஐ. நா. வினுல் அரவணைக்கப்பட்டு வாழும் நாடாக அது என்றுமே மாருது என்பதையும் மக்களின் சார்பாகவும் அரசாங்கத்தின் சார்பாகவும் நான் அறிவிக்கிறேன்''*.

சுதந்திரக் காங்கோவில் தன்னுடைய நிலையைப் பாது காத்துக் கொள்ளும் நாட்டத்துடன் ஏகாதிபத்தியம் உள் நாட்டு பிற்போக்குவாதத்துடன் ஒன்று சேர்ந்து நாட்டில் பொருளாதார மற்றும் அரசியல் குழப்பத்தை அதிகரித்தது. இத்தகையக் கடினமான நிலைமைகளில் லுமும்பா மிகுந்த துணிவுடன் தன் நாட்டின் நலன்களைக் காத்து நின்ருர். காங்கோவின் காரியங்களில் அன்னியக் குறுக்கீடுகளைக் குறைத் ததுடன் ஏகாதிபத்தியத்தின் அரசியலை அம்பலப்படுத்தினுர். 1960ம் ஆண்டு ஜூலையில் பெல்ஜியத்திற்கும் காங்கோவிற்கும் இடையிலான ''நட்பு மற்றும் ஒத்துழைப்பு உடன்படிக் கையை'' ரத்து செய்தார். இதற்கான பொறுப்பு பெல்ஜிய மக்களைச் சார்ந்தது அல்ல என்பதை விளக்கிய அவர், அந் நாட்டின் ஆட்சியில் அமர்ந்திருக்கும் சிலரே—''காங்கோவை சுரண்டலுக்கும் ஆதிக்கத்திற்கும் தங்களுடைய சுயநல எண் ணங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கும் ஏற்ற நாடாக மட்டுமே கருதும் சிலர்தான் இதற்குப் பொறுப்பாவர்''** என்று கூறினுர்.

இந்த நேரத்தில்தான் காங்கோவின் தலைவருக்கு எதிரான சதித் திட்டத்தைச் செயல்படுத்த ஆரம்பித்தனர். பாட்ரிஸ் லுமும்பாவிற்கு தொந்தரவு செய்தல் என்பது காலனி ஆதிக்கக் காலகட்டத்திலேயே ஆரம்பித்து விட்ட ஒன்று. ஒற்றர்கள் அவரை எப்போதும் பின்தொடர்ந்தனர். மிரட்டலுக்கு உள்ளாக்கினர். கடைசியாக, அவருடையப் பெயரைக்

---

* *Congo 1960*, V. 2, p. 588.

** *Ibid.*, p. 586.

கெடுப்பதற்காக, சட்டத்திற்குப் புறம்பாக அவரை இரண்டு முறைகள் விசாரணைக்கு உள்ளாக்கினர். 1956-57ம் ஆண்டு களில் அரசாங்கச் சொத்தை அவர் களவாடியதாகப் பொய் யாகக் குற்றம் சாட்டி, சில மாதங்கள் அவரைச் சிறையில டைத்தனர். 1959ம் ஆண்டு மறுபடி அவர் சிறை செய்யப் பட்டார். இந்த முறை ''அரசியல்'' ரீதியாக—ஸ்டான்லிவில் வாசிகளைக் கலகம் செய்யத் தூண்டியதாகக்—குற்றம் சாட் டினர். இம்முறை அவரை காடெங்கா சிறையில் அடைத்துப் பின்னர், பெல்ஜியக் காலனியிலிருந்து காங்கோ சுதந்திரம் அடைவதைப் பற்றி விவாதிக்க பிரஸ்ஸெல்ஸ் சென்ற பிற காங்கோலிய அரசியல் பிரமுகர்களின் கோரிக்கைகளின் பேரில் அவரை விடுவித்தனர்.

1960ம் ஆண்டு ஜூலை மாதம் பாராளுமன்றப் பெரும் பான்மையின் தலைவர் என்ற முறையில் லுமும்பா பெற் றிருந்த உரிமையிலிருந்து—காங்கோ குடியரசின் அரசாங் கத்தைத் தலைமை தாங்கும் உரிமையிலிருந்து—அவரை நீக்க காலனி ஆதிக்கவாதிகள் முயன்றனர். அவர் மீது சாட்டப் பட்ட அவதூறுகளை அம்பலப்படுத்துகையில் அவர் கீழ்க் கண்டவாறு கூறினார்: ''மேற்கு நாடுகளின் ஆட்சியாளர் களுடன், சாரத்தில் ஊழல் நிறைந்த கூட்டு ஒப்பந்தத்தில் நான் இணைந்து கொள்ள வேண்டும் என்று அவர்களால் செய்யப்பட்ட சிபாரிசை நான் ஒதுக்கித் தள்ளிய பின்பே நான் ''கம்யூனிஸ்டுகளின் கூலியாள்'' என்றும் ''கம்யூனிஸ்டு களுடன் ஏதோ இரகசியச் சதித்திட்டத்தில் கலந்து கொண் டேன்'' என்றும் என்னைப் பற்றிய ஏகாதிபத்திய பிரச்சாரம் பரவலாகச் செய்யப்பட்டது''*.

1960ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அமெரிக்காவிலிருந்து திரும்பிய பின்பு மறுபடி அவர், அவருக்கு லஞ்சம் கொடுத்து அவரை வாங்க முயன்ற முயற்சிகளைப் பற்றிக் கூறினார்: ''நாங்கள் அவர்களுக்குக் கீழ்ப்படிய மறுப்பதாலும் ஊழலுக்கு உள்ளாக மறுப்பதாலும் தொடர்ந்து குற்றச் சாட்டுகளுக்கு ஆளாகியுள்ளோம். எங்களுக்கு லஞ்சம் கொடுத்து எங்களை வாங்க முயன்றனர். பல மில்லியன்களைக் காட்டி என்னை மயக்கப் பார்த்தனர். ஆனால் என்னுடைய மக்களின் நலன் களுக்காக அதை நான் மறுத்து விட்டேன். ஒரே ஒரு

* *Congo 1960*, V. 2, p. 833.

சென்டைமைக் கூட நான் எடுத்துக் கொள்ளவில்லை.''*

அதிகார வர்க்கப் பூர்ஷ்வாக்களின் நலன்களையும் மற்றும் காங்கோ சமுதாயத்தின் பிற பணக்கார வகுப்புகளின் நலன்களையும் பிரதிபலித்த எதிர்கட்சித் தலைவர்களின் குழு, ஏகாதிபத்திய ஆட்சியாளர்களின் உதவியுடன் 1960ம் ஆண்டு செப்டெம்பரில் லுமும்பாவை ஆட்சியிலிருந்து நீக்கினர். அதே ஆண்டு நவம்பரில் அவர் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். இருந்த போதிலும், வெகு ஜனங்களை ஆதரவாகக் கொண்டு லுமும்பா காங்கோவின் உண்மையான சுய உரிமைக்கான போராட்டத்தைத் தொடரும் நாட்டத்தை மாற்றிக் கொள்ளவில்லை. 1961ம் ஆண்டு ஜனவரி மாதம் திஸ்வில் நகரத்துச் சிறையிலிருந்து மக்களுக்கு அவர் விடுத்த கடைசிச் செய்தியில் ''எனதருமை நாட்டு மக்களே! இன்பத்திலும் துன்பத்திலும் என்றும் நான் உங்களுடனேயே இருப்பேன். குறிப்பாக உங்களுடன் ஒன்ருக நின்றுதான் நாட்டை அன்னிய ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கப் போராடினேன். நம்முடைய தேசிய சுதந்திரத்தை உறுதியாக்கவும் நான் உங்களுடன் நின்றுதான் போராடுகிறேன். அவ்வாறே நாட்டின் தேசிய ஒற்றுமையைப் பாதுகாக்கவும் உங்களின் துணையுடன் போராடுவேன்''** என்று கூறினர்.

ஆனல் அவருடைய நாட்கள் ஏற்கெனவே எண்ணப்பட்டு விட்டன. ஜனவரி 17ம் தேதி காவல் படையினர் லுமும்பாவையும் அவருடைய இரு நண்பர்களையும்—ம்பாலா, ஓகிடோ—விமானத்தில் ஏற்றினர். ''சுதந்திர'' காடெங்காவின் தலைநகரை நோக்கிச் சென்ற அந்த விமானத்தில் எலிசபெத்வில் (இப்போது லுமும்பாஷி) வரையிலான பயண நேரம் முழுவதும் லாடமடிக்கப்பட்ட காலணிகளாலும், துப்பாக்கி முனைகளாலும் சிறைப்பட்டவர்களைக் கொடூரமாக அடித்து நொறுக்கினர். லுவானு விமான நிலையத்தில், காடெங்காவின் பிரிவினைவாதத் தலைவர்கள் மற்றும் அவர்களின் ஐரோப்பியக் கூட்டாளிகளின் முன்னிலையில் குற்றுயிராகக் கிடந்த மூவரும் ஜீப்பில் எறியப்பட்டு விமான நிலையத்திலிருந்து ஒரு பண

---

* Heinz G., Donnay H., *Lumumba Patrice...,* p. 193.

** *La pensée politique de Patrice Lumumba,* p. 394.

ணேக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அன்று மாலேயே அங்கே அவர்கள் மூவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

''கொடுமையோ, பலாத்காரமோ, துன்புறுத்துதலோ எதுவுமே என்னே மன்னிப்பு கேட்க வைக்காது. ஏனென்ருல் என்னுடைய புனிதமான கோட்பாடுகளே ஆழப்புதைத்து விட்டு வாழ்வதை விட என்னுடைய தாய் நாட்டில் நான் கொண்டுள்ள மாருத நம்பிக்கையுடன் உயரே நிமிர்ந்த தலே யுடன் மரணமடைவதே மேல் எனக் கருதுகிறேன்.''* என்ற லுமும்பாவின் வார்த்தைகள் அவருடைய சிறிய ஆனுல் மாபெரும் வாழ்க்கைக்கு ஒரு முடிவுரை போலத் திகழ்கின்றன.

லுமும்பா கொல்லப்பட்ட சூழ்நிலேகளே ஆராயவென்று நியமிக்கப்பட்ட ஐ. நா. சபையின் விசேஷ கமிஷன், அன் றைய ஜனுதிபதி காசாவுபுவின் தலேமையிலிருந்த லியோ போல்ட்வில் நிர்வாகத்தையும் காடெங்கா ஆட்சியினரையும், பெல்ஜிய சுரங்கத் தொழிற்சாலேயான Union Minière du Haut Katangaவின் நிர்வாகத்தினரையும், காடெங்கா பிரிவினேவாதிகளின் தலேவனுன சோம்பேவுக்கு (Chombe) பணி புரியும் பெல்ஜிய ராணுவ காவல் படைக் குழுவின ரையும் லுமும்பாவின் கொலேக்குக் காரணமானவர்கள் என்று குற்றம் சாட்டியது.

அமெரிக்க ஒற்றுவேலே ஸ்தாபனத்தின் பணிகளே 70வது வருடங்களின் மத்தியில் ஆராய்ந்த அமெரிக்க செனட் சபைக் கமிஷன், இன்னும் 1960ம் ஆண்டிலேயே சி.ஐ.ஏ. ''தள்ளி வைக்க முடியாத முக்கியமான பிரச்சினேயைச்''** செயல்படுத் துவதில்—அப்போதைய சிஐஏவின் இயக்குனரான ஆலன் டல்லஸின் கருத்துப்படி ''மிகவும் ஆபத்தை விளேவிக்கக் கூடிய''***—காங்கோவின் பிரதம மந்திரியைக் கொல்லும் குறிக்கோள் கொண்ட சதித்திட்டத்தைச் செயல்படுத்துவதில் முனேந்தது என்பதை நிரூபித்தது.

ஏகாதிபத்தியத்தின் சதித் திட்டத்திற்குக் காங்கோவின் தேசிய வீரர் பலியானுர். வெறும் வாய் வீச்சாளர்கள் அவர் நேர்மையற்றவர் என்றும், ஆட்சியைச் சட்டத்திற்குப் புறம்பாகக் கைப்பற்றியவர்கள் அவர் அரசாங்கத்தை நிர்

---

* *Afrique — Azie*, 1978, № 154, p. 10.

** எல்லேக்கு அப்பால் (வார சஞ்சிகை)—ருஷ்ய மொழியில், № 49, 28.11—4.12., 1975 ப. 16—17.

*** எல்லேக்கு அப்பால், 1976, № 24, 11—17 ஜூன், பக்கம் 18.

வகிப்பதில் ஜனநாயகக் கோட்பாடுகளை மீறினர் என்றும், நாட்டின் தேவைகளை உணரும் திறமை அற்றவர் என்று சில அறிவிலிகளும், தேசிய நலன்களைப் புறக்கணித்தவர் என்று அன்னிய ஏகபோக மூலதனத்தின் கையாள்களும் அவர் மீது குற்றம் சாட்டினர்.

இருப்பினும் வரலாறு தன்னுடைய சொந்த வழியில் நீதியை நிலை நாட்டியது. இன்று ஆப்பிரிக்காவும் முழு உலகமும் அவரைக் கொன்றவர்களை அவமானச் சின்னங் களாக மட்டுமே நினைவில் கொள்கின்றன. ஆப்பிரிக்காவின் சுதந்திரப் போராட்டத்தில் லுமும்பா ஆற்றிய மாபெரும் சேவைகளையும் பணிகளையும் பற்றி இன்று வரை பேசவும் எழுத வும் செய்கின்றனர். தொழில் நிறுவனங்களுக்கும் கல்வி நிலையங் களுக்கும், சாலைகளுக்கும் அவருடைய பெயரைச் சூட்டுகின் றனர். மேலும் அவருக்கு நினைவுச் சின்னங்கள் வைப்பதுடன் அவரைப் பற்றி இலக்கியங்களையும் படைக்கின்றனர்.

ஆப்பிரிக்காவின் புகழ் பெற்ற முதல் தேசிய ஜனநாயக வாதிகளில் ஒருவராக லுமும்பா திகழ்ந்தார். அவருடைய உலகக் கண்ணோட்டம் எக்லெக்டிசத்தைத் தவிர்த்திருக்கவில்லை என்பதுடன், குட்டி முதலாளித்துவ வர்க்க அம்சங்களின் தாக்கத்தையும் கொண்டிருந்தன. மேலும் ஆப்பிரிக்க நரோ தியத்தின் தனி அம்சங்களுடன், சோஷலிஸ்டு-கற்பனாவாதி களின் தாக்கத்தையும், அவ்வாறே ஆப்பிரிக்க ஆதி பூர்ஷ்வா சமுதாய சித்தாந்தவாதிகளின் தாக்கத்தையும் கொண்டிருந் தாலும் அவர் நேர்மையான, மாறாத தேசியப் புரட்சியாள ராகவும், ஜனநாயகவாதியாகவும், ஏகாதிபத்திய, நிறவெறி எதிர்ப்பாளராகவும், தேசியச் சீர்திருத்தவாதத்திற்கும், புதுக் காலனி ஆதிக்கத்திற்கும் எதிராகப் போராடியவராகவும் விளங்கினர் என்பதை மறுக்க இயலாது. முடிவில், போராட் டத்தின் பாதையில் அவர் விஞ்ஞான சோஷலிசக் கருத்துக் களை ஏற்றுக் கொள்ளும் நிலைக்கு வந்திருப்பார் என்பதையும் மறுக்க இயலாது.

ஆப்பிரிக்க மற்றும் பிற கண்டங்களிலும் பல மில்லியன் மக்களுக்குப் பாட்ரிஸ் லுமும்பா ஒரு சுதந்திர விரும்பியாக வும், சிறந்த தேசபக்தராகவும், மாபெரும் தேசிய விடுதலைப் போராட்ட வீரராகவும் இன்று வரை திகழ்கின்றார்.

# குவாமே நுக்ருமா

குவாமே நுக்ருமா ஆப்பிரிக்க தேசிய விடுதலை இயக்கத்தின் புகழ் பெற்ற தலைவர்களில் ஒருவர் ஆவார். கானுக்குடியரசை ஸ்தாபித்த வரும், அதன் முதல் ஜனதிபதியும் இவரே.

குவாமே நுக்ருமா 1909ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 21ம் தேதி நுக்ரோஃபுல் என்ற கிராமத்தில் (பிரிட்டன் காலனியாதிக்கத்தின்கீழ் இருந்த பொன் கரைத் தேசத்தில் (Golden Coast) உள்ளது), நிஜிமா என்ற பழங்குடி இனத்தில் பொற் கொல்லர் ஒருவரின் குடும்பத்தில் பிறந்தார்.

ஹால்ஃப்-அசினியில் கத்தோலிக்க ஆரம்பப் பள்ளியை முடித்த பின்பு 1926ம் ஆண்டிலிருந்து அக்ராவிலும் அச்சிமோடாவிலும் இருந்த ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளில் பயின்றார்.

ஆரம்பத்தில் எல்மினவிலும் அக்சிமாவிலும் (கான) இருந்த கத்தோலிக்கப் பள்ளிகளில் ஆசிரி யராக வேலை செய்தார்.

1935–1945ம் ஆண்டுகளில் நுக்ருமா லிங்கன் பல்கலைக்கழகத்தில் (பென்சில்வானியா, அமெரிக்கா) படித்து, பொருளாதாரத்திலும் சமூகவியல் (Sociology) மற்றும் இறையியலிலும் (Theology) பட்டம் பெற்றார். பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் தத்துவ ஞான ஆசிரியராக வேலை செய்தார். அவர் வரலாற்றையும், தத்துவஞானத்தையும் கற்பித்த அதே பென்சில்வானியப் பல்கலைக்கழகத்திலிருந்தே கல்வித்

துறையிலும் தத்துவஞானத்திலும் முதுகலைப் பட்டத்தைப் (Master of Education and Philosophy) பெற்ருர்.

அமெரிக்காவில் கல்வி கற்கையில், அவர் கப்பல் கட்டும் துறையிலும் (shipyards), சோப் பேக்டரியிலும், கப்பல்களில் வெயிட்டர் ஆகவும், வேலையாளாகவும் வேலை செய்தார். அமெரிக்காவில் இருந்த போது தீவிரமாக அரசியலில் ஈடுபட்டார். அங்கே மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் மற்றும் நீக்ரோ சித்தாந்திகள், மறுமலர்ச்சிச் சிந்தனையாளர்கள் ஆகியோரின் படைப்புகளைப் பயின்ருர். அவ்வாறே லண்டன் பல்கலைக்கழகத்திலும், லண்டன் பொருளாதார மற்றும் அரசியல் விஞ்ஞானப் பள்ளியிலும் படித்தார்.

மாஸ்கோ, லிங்கன், கெய்ரோ மற்றும் பிற பல்கலைக்கழகங்களிலிருந்து நுக்ருமா கௌரவ டாக்டர் பட்டம் பெற்றிருந்தார்.

1945-47ம் ஆண்டுகளில் குவாமே நுக்ருமா இங்கிலாந்தில் வசித்தார். அங்கே 1945ம் ஆண்டு அக்டோபர் மான்செஸ்டரில் நடைபெற்ற ''5வது அனைத்து ஆப்பிரிக்க மாநாட்டிற்கான'' (Pan African Congress) முன் ஏற்பாட்டு வேலைகளில் பங்கெடுத்துக் கொண்டார். மாநாட்டு முன்னேற்பாட்டுக் கமிட்டியின் செயலாளராக இருந்தார். பின்னர் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட ஆப்பிரிக்க விடுதலைக்கான செயல்திட்ட அறிக்கையை நடைமுறையில் செயல்படுத்தவென்று தேர்ந்தெடுக்கப்பட்ட செயற்குழுவின் தலைமைச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த வருடங்களில் அவர் லண்டனில் தோற்றுவிக்கப்பட்ட ''மேற்கு ஆப்பிரிக்க தேசியச் செயலகத்தில்'' (West African National Secretariat) தலைமைச் செயலாளராகவும் விளங்

கினர். *1946-47*ம் வருடங்களில் லண்டனில் வெளி யிடப்பட்ட **புதிய ஆப்பிரிக்கா** *(New African)* என்ற பத்திரிகைக்கு பதிப்பாளராக இருந்தார்.

*1947*ம் ஆண்டு டிசம்பரில் தாய் நாட்டிற்குத் திரும்பிய குவாமே நுக்ருமா ''ஐக்கிய பொன்கரைத் தேசக்கட்சி'' (United Golden Coast Convention) யின் உறுப்பினராகவும் பின்னர் தலைமைச் செயலா ளராகவும் விளங்கினர். *1948*ம் ஆண்டு பிப்ரவரி-மார்ச்சில் நாட்டில் ஏற்பட்ட குழப்ப நிலையின் தொடர்பாக நுக்ருமா கைது செய்யப்பட்டு நாட்டின் வடபகுதிக்கு அனுப்பப்பட்டார். நாட்டில் வளர்ந்த புரட்சிகரப் போக்கு ஐ.பொ. (UGCC) கட்சியி லிருந்து நுக்ருமா பிரிவதற்கு வகை செய்தது.

*1949*ம் ஆண்டு ஜூன் மாதம் அவர் ''கன்வென் ஷன் மக்கள் கட்சி'' (Convention Peoples Party) என்ற கட்சியை ஆரம்பித்தார். நாட்டிற்கு உடனடி யாகச் சுதந்திரம் அளிக்க வேண்டுமென்று இக்கட்சி கோரியது.

*1948*ம் ஆண்டு **அக்ரா ஈவினிங் நியூஸ்** *(Akkra Ivening News)* என்ற பத்திரிகையை வெளி யிட ஆரம்பித்தார். *1950*ம் ஆண்டு ஜனவரியில் வேலை நிறுத்தங்களுக்கு ஏற்பாடு செய்தார் என்ற குற்றச் சாட்டின் பேரில் மறுபடியும் கைது செய்யப் பட்டு சிறையிலடைக்கப்பட்டார்.

*1951*ம் ஆண்டு பிப்ரவரியில் நடந்த சட்ட சபைத் தேர்தல்களில் க.ம. கட்சி வெற்றி பெற்றது. இன்னும் சிறையிலிருந்த அக்கட்சித் தலைவர் அக்ரா வின் மைய வட்டாரத்திலிருந்து சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். *1950*ம் ஆண்டு பிப்ரவரி *12*ம் தேதி அவரைச் சிறையிலிருந்து குறித்த காலத்திற்கு முன்பே விடுதலை செய்தனர்.

*1952*ம் ஆண்டிலிருந்து பொன்கரைத் தேசத்

தின் முதல் ஆப்பிரிக்க அரசின் பிரதம மந்திரியாக இருந்தார். ஒரே நேரத்தில் அவர் பாதுகாப்பு மந்திரி, உள் துறை மற்றும் வெளி உறவு மந்திரிப் பதவிகளை வகித்தார்.

1957ம் ஆண்டு மார்ச் 6ம் தேதி (பொன்கரைத் தேசம்) சுதந்திரம் அடைந்ததும் குவாமே நுக்ருமா அதன் பிரதம மந்திரியானார். அவருடைய சிபாரிசின் பேரில் நாட்டிற்கு கானா என்று பெயர் சூட்டப்பட்டது. 1960ம் ஆண்டு ஜூலை முதல் தேதி, கானாக் குடியரசு பிரகடனப்படுத்தப்பட்டது பின்பு நுக்ருமா அதன் ஜனதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1966ம் ஆண்டு பிப்ரவரி 24ம் நாள் வரை அப்பதவியிலிருந்தார்.

1961ம் ஆண்டு க.ம. கட்சியின் தலைமைச் செயலாளராகவும் அதன் ஆயுள் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1962ம் ஆண்டு ஏப்ரலில் சர்வதேச லெனின் பரிசுக் கமிட்டி ''மக்களுக்கிடையில் சமாதானத்தை உறுதிப்படுத்திய'' அவருடைய பணிகளுக்காக 1961ம் வருட ''சர்வதேச லெனின் பரிசை'' அவருக்கு வழங்கியது.

குவாமே நுக்ருமா 1961ம் ஆண்டிலும் 1966ம் ஆண்டு மார்ச்சிலும் சோவியத் யூனியனிற்கு விஜயம் செய்தார்.

கானாவில் நடைபெற்ற ராணுவ ஆட்சிக் கவிழ்ப்பின் விளைவாக 1966ம் ஆண்டு பிப்ரவரி 24ம் நாள் எல்லாப் பதவிகளிலிருந்தும் நீக்கப்பட்ட குவாமே நுக்ருமா நாட்டை விட்டு வெளியேறுமாறு நிர்பந்திக்கப்பட்டார். கயினி (Guinea) விற்குச் சென்று அங்கே தங்கிய அவர் பிரதிநிதிகள் சபையின் (House of Representatives) கௌரவ உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, கயினிவின் துணை

ஜனதிபதியாகவும், கயினி ஜனநாயகக் கட்சியின் தலைமைச் செயலாளராகவும் விளங்கினர்.

1972ம் ஆண்டு ஏப்ரல் 27ம் நாள் புகாரெஸ்ட்டில் குவாமே நுக்ருமா காலமானர். அதே ஆண்டு ஜூலை 9ம் நாள் அவருடைய கிராமமான நுக்ரோஃபுல்லில் அடக்கம் செய்யப்பட்டார்.

40 – 60ம் ஆண்டுகளில் ஆப்பிரிக்காவில் நடந்த காலனி ஆதிக்க எதிர்ப்பு இயக்கத்தின் புகழ் பெற்ற தலைவர்களில் ஒருவர் குவாமே நுக்ருமா ஆவார். இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு அவருடைய பணிகள் அவருடைய தாய் நாட்டின் எல்லைகளைக் கடந்து முழு ஆப்பிரிக்கக் கண்டத்தின் வளர்ச்சிக்கும் உதவின. ஆப்பிரிக்காவின் ஒற்றுமை, விடுதலை, காலனி ஆதிக்க மற்றும் புதுக்காலனி ஆதிக்க சுரண்டலுக்கு எதிரான சமரசம் கொள்ளாத போராட்டம் ஆகியவற்றின் சின்னமாகவும், சர்வதேச செல்வாக்கைப் பெற்ற அரசியல் தலைவராகவும் குவாமே நுக்ருமா விளங்கினர். அவர் புகழ் பெற்ற சித்தாந்தவாதியாகவும் அரசியல் சிந்தனையாளராகவும் திகழ்ந்தார். குவாமே நுக்ருமா காலனி நாடுகளின் தேசிய மற்றும் சமூக விடுதலை நிகழ்ச்சிப் போக்குகளை தத்துவஞான ரீதியில் புரிந்து கொள்வதில் நாட்டம் கொண்டார். தேசிய விடுதலை இயக்கத்தின் உள் முரண்பாடுகளையும் அதன் வளர்ச்சியை அல்லது நெருக்கடி நிலையை ஏற்படுத்தும் பலம் வாய்ந்த உள் சக்திகளைப் புரிந்து கொள்வதிலும் அவற்றைத் தெளிவாக்குவதிலும் விருப்பம் கொண்டார். தற்கால ஆப்பிரிக்க சமுதாய வாழ்வில் வர்க்க போராட்டம் மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களில் பங்கேற்றல் என்பதை மெதுவாக ஆனல் உறுதியுடன் காலப் போக்கில் அங்கீகரித்தார்.

குவாமே நுக்ருமாவின் விதி சோகமயமானது. பிரிட்டனின் காலனியான பொன்கரைத் தேசத்தில் அமைதி வழிகளில் நடந்த விடுதலைப் போராட்டத்தின் மாபெரும் வெற்றிக்குப் பின்பு, உறுதியாகவும் ஒளிமயமானதாயும் காட்சி அளித்த கானக் குடியரசைப் பல வருடங்கள் ஆட்சி புரிந்த பிறகு, அவர் தனிமையிலும் வெளிநாடுகளிலும் தனது கடைசி நாட்களைக் கழிக்க வேண்டியிருந்தது. அவருடைய சுறுசுறுப்

பான நடவடிக்கைகள் கட்டாயமாகக் கட்டுப்படுத்தப்பட்ட நிலை, கடினமான தார்மீக, அரசியல் சூழ்நிலைமைகளில், குவாமே நுக்ருமா இரட்டித்த ஊக்கத்துடன் இலக்கிய வேலை களில் முனைந்தார். ஆராய்ச்சிப் பணி என்று கூறக் கூடிய அவருடைய இந்தப் படைப்புகளில் இதுவரை கடந்த பாதையை விமர்சன ரீதியாக விவரிக்கவும் ஆப்பிரிக்கப் புரட்சியின் எதிர்காலத்தைப் பற்றிக் குறிக்கவும் அவர் முயன்றார். குவாமே நுக்ருமாவின் கடைசி வருடங்கள் மனச் சோர்வு மிகுந்து மீளவகையற்று சோகமயமானதாக இருக்கவில்லை என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். ஆப்பிரிக்க மக்களின் சிறந்த எதிர்காலத்திற்கெனப் போராடிய தன்னுடைய சிந்தனைக் கேற்ற போதுமானதொரு சமூக ஆதாரத்தை தன்னுடைய தாய் நாட்டிலும் ஆப்பிரிக்காவிலும் கண்டறியாத ஒரு போராளியின் சோகமாக இது இருந்தது.

குவாமே நுக்ருமாவின் பணிகளில் தேசிய விடுதலைப் போராட்டத்தின் சில தற்காலத் தலைவர்களுக்கே உரித்தான பலவகைப்பட்ட போக்குகள் அடங்கியிருந்தன. விடுதலை இயக்கக் காலகட்டத்து வெகுஜன மக்களின் தலைவர் ஒரு வரின் ஜனநாயகமும், ஆப்பிரிக்க பழங்குடி இன அமைப்பின் மத்தியகால பாரம்பரியத்திலிருந்து எடுக்கப்பட்ட ஆட்சி முறைகளும்; சோஷலிசத்தின்மீது கவர்ச்சியும், முரட்டுத் தனமான தேசிய நம்பிக்கைகளும்; மக்களின் நலன்களுக்காக நேர்மையுடன் உழைப்பதில் நாட்டமும் அளவுக்கு மிஞ்சிய அதிகார வேட்கையும்; உழைப்பு முறை சீர்திருத்தக் கற்பனை களும் இடதுசாரிவாதத் தீவிரவாதமும் ஆகிய இத்தனை போக்குகளும் அவருடைய பணிகளில் அடங்கியிருந்தன. இவை அனைத்திலும் சுதந்திரப் போராட்ட களத்தில் இறங் கிய அரைக்காலனி, காலனி நாட்டு மக்கள் தொகையின் இடைப்பட்ட குட்டி முதலாளித்துவ வகுப்புகளுக்கே உரித் தான எதார்த்தமான கடும் முரண்பாடுகள் பிரதிபலித்தன. இந்த குட்டி முதலாளித்துவ வகுப்புகள் இரண்டாம் உலகப் போருக்குப் பின் 50—70ம் ஆண்டுகளில் இளைய தேசிய அரசாங்கங்களின் பலம் வாய்ந்த தீவிர சக்தியாக வளர்ந் தன. குறிப்பாக அதனால்தான் ஏற்றமும் வீழ்ச்சியும் நிறைந்த நுக்ருமாவின் வாழ்க்கையும் அவருடைய உறுதியான சிந்தனை களும், குழப்பங்களும் ஊடுருவியுள்ள கணிசமான அளவு தத்துவ பாரம்பரியமும் ஆப்பிரிக்கப் புரட்சியாளர்களுக்கு

மிகப் பெரிய சோதனைச் சாலையாகத் திகழ்கின்றன.

அனைத்து ஆப்பிரிக்க இயக்கத்தின் கடைசிக் கட்டத்தில் அந்த இயக்கம் ஆப்பிரிக்காக் கண்டத்தின் பல நாடுகளில் தேசிய விடுதலை இயக்கமாகப் புதிய கட்டத்தை அடைந்த போது குவாமே நுக்ருமா பரவலாகப் பிரபலமடைந்தார். 1945ம் ஆண்டு மான்செஸ்டரில் நடந்த ''5வது அனைத்து ஆப்பிரிக்க மாநாட்டில்'' மேற்கு ஆப்பிரிக்க மக்களின் சுதந்திரப் போராட்டப் பிரச்சினைகளைப் பற்றி முக்கியமான ஒரு சொற்பொழிவாற்றினார். அப்போதே குவாமே நுக்ருமா, அதற்கு முன் நடந்த அனைத்து ஆப்பிரிக்க மாநாடுகளின் சீர்திருத்தவாதம் மற்றும் காலனி நாடுகளை நாகரிகப்படுத்துவதைப் பற்றிய பூர்ஷ்வா, வலதுசாரி சோஷலிஸ்டுப் பிரச்சாரங்கள் ஆகியவற்றுடன் சம்மதிக்காது, தீவிரமான ஏகாதிபத்திய எதிர்ப்பாளராக இருந்தார். ''5வது அனைத்து ஆப்பிரிக்க மாநாட்டில்'' கலந்து கொண்ட பலரைப் போலவே குவாமே நுக்ருமாவும், தேசிய விடுதலை இயக்கமானது சுதந்திரத்தை அடைய வகை செய்வது மட்டுமின்றி, ஜனநாயக அமைப்பை நிறுவவும் சோஷலிசத்தின் அடிப்படையில் மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தவும் உத்தேசிக்கிறது என்ற கருத்தைக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இது நுக்ருமாவின் அரசியல் கருத்தோட்டங்கள் உண்மையிலேயே சரியான வழியில் வளர்ந்தன என்பதற்குச் சான்றாக விளங்குகின்றது. ஆப்பிரிக்க விடுதலை இயக்கத்தின் அக்காலத் தலைவர்கள் பலரால் அவ்வழியைப் புரிந்து கொள்ளவோ, முன் கூட்டியே உணரவோ முடியவில்லை.

குவாமே நுக்ருமாவின் அப்போதைய சோஷலிசக் கருத்துக்கள் முழுமையாக வர்க்கத்தன்மை கொண்டதாக இருக்கவில்லை என்பது உண்மையே. இந்தத் துறையில் தன்னுடைய சீர்திருத்த மாயைக் கருத்துக்களிலிருந்து அவர் விடுபடவில்லை. சோஷலிசத்தைப் பற்றி 40—50வது ஆண்டுகளில் அவர் கொண்டிருந்த கருத்துக்கள் சிலவற்றில் ஐரோப்பிய சமூக-ஜனநாயகவாதிகளின் தாக்கமும், தேசியவாதக் கருத்துக்களின் தாக்கமும் இருந்தன. 40வது ஆண்டுகளின் அனைத்து ஆப்பிரிக்க இயக்கத்தில் மிகுந்த செல்வாக்கு கொண்டிருந்த ஜார்ஜ் பாட்மோரின் (George Padmore) தாக்கம் அவர்மேல் இருந்தது. கானாவின் சுதந்திரம் பிரகடனப்படுத்தப்பட்ட பின்பு ஜார்ஜ் பாட்மோர் நுக்ருமாவின் ஆலோ

சகராக இருந்தார். ஜார்ஜ் பாட்மோர் தோற்றுவித்த ''அனைத்து ஆப்பிரிக்கனிசம் அல்லது கம்யூனிசம்'' என்ற பொய் யான தடுமாற்றத்திலிருந்து நுக்ருமாவும் அப்போது விடுபட வில்லை.

கானுவின் ஜனாதிபதியான பின்பு நுக்ருமா மிகக் கடின மான பாதையை—தேசிய நலன்களின் நிலையான இணக்கத் தைப் பற்றிய மாயையான கருத்துக்களைக் கொண்ட தேசிய சீர்திருத்தவாதம், ஆப்பிரிக்க சமுதாயத்தில் வர்க்கப் போராட் டம் இல்லை என மறுப்பது இன்னும் இது போன்ற பிறவற் றின் பலமான தாக்கங்களைக் கொண்ட பாதையைக் கடந் தார்.

சோஷலிஸ்டு அகிலத்தில் இணையத் தயங்கும் ஆப்பிரிக்க தேசிய சீர்திருத்தவாதிகள் கடந்த 20—30 வருடங்களாக நிற்கும் அதே தீர்மானமற்ற கட்டத்திலேயே குவாமே நுக் ருமா நின்று விடவில்லை என்பதே அவரின் தொடர்ந்த பரிணும வளர்ச்சியின் சாதகமான பங்காகும். ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தின் புரட்சிகர வட்டத்தின் கட்சி மாறிகள் சிலர் அதைப் போன்ற அரசியல் நிலைக்குத் திரும்புகின்றனர். அவர்களின் பரிணும வளர்ச்சியானது, ஆப்பிரிக்க மக்களின் தனித்த, ஒன்ருன வரலாற்று வளர்ச்சிக் கருத்துகளுக்குப் பதிலாக ஐரோப்பிய சமூக-ஜனநாயகவாதிகளின் வலதுசாரிக் கருத்தோட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதில் உள்ளது. ஆப்பிரிக்க தேசிய-சீர்திருத்தவாதத்தில் இத்தகைய சிறு மாற்றம் (Modification) 70வது ஆண்டுகளின் இரண் டாவது பாதியில் லியோபோல்ட் சென்கோரின் (Leopold Senghor) பணிகளிலும் சோஷலிச அகிலத்தின் பாதை அமைவிலும் அதேபோல் ஆப்பிரிக்காக் கண்ட அளவில் ஆப்பிரிக்க சோஷலிசக் கட்சிகளின் ஐக்கியம் (Confederation of African Socialist Parties) என்ற பெயரில் ஒன்று சேர வேண்டும் என்ற நாட்டத்திலும் பிரதிபலித்தது. இந்த வகைப் பரிணுமம் நேரடியாகவோ அல்லது மறை முக மாகவோ புதுக் காலனியாதிக்கத்தின் வளர்ந்து வரும் செல்வாக்கு டன் தொடர்பு கொண்டது என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

50வது, 60வது ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட் டத்தில் ஆப்பிரிக்க தேசியவாதத்தின் ஏக்லெக்டிச சித்தாந்த வாதத்தில் ''5வது அனைத்து ஆப்பிரிக்க மாநாட்டில்''

நிகழ்ந்ததைப் போல புரட்சிகர மற்றும் சீர்திருத்தவாதக் கருத்துக்கள் ஒன்றிணைந்த பல்வேறுபட்ட சித்தாந்த-அரசியல் போக்குகள் தோன்றின. தேசியவாதிகளின் வலதுசாரி வட்டத்தைச் சார்ந்தவர்கள் பூர்ஷ்வா சீர்திருத்த நிலையில் உறுதியாக நின்றனர். அவர்கள் சீர்திருத்தக் கருத்துக்களை உள்துறையில் மட்டுமல்லாமல், வெளி உறவுக் கொள்கையிலும் பரப்ப முயன்றனர். அத்துடன் ஏகாதிபத்திய அரசாங்கங்களுடன் ஒத்துழைக்க வேண்டும் என்ற கருத்திற்குப் பலமுறை ஆதரவாக நின்றனர். இடதுசாரி வட்டத்தைச் சார்ந்தவர்களோ முதலாளித்துவத்தைத் தவிர்த்த வளர்ச்சிப் பாதைக்கு ஆதரவாக நின்று தேசிய ஜனநாயகவாதத்தின் அரசியல் பாதையையும் சித்தாந்தக் கோட்பாடுகளையும் தயாரித்தனர். புரட்சி உள்ளாற்றலும் மற்றும் தேசிய விடுதலைப் போராட்டத்தின் சமூக சாரமும் நிறைந்த இந்த இடதுசாரிக் குழுவின் முன் முயற்சியாளர்களில் ஒருவராகவும், சிறந்த பிரதிநிதிகளில் ஒருவராகவும் குவாமே நுக்ருமா விளங்கினர். சோஷலிசத்தின் திசை அமைவுக்கு மட்டுமின்றி, பொருளாதாரத்திலும் அரசியலிலும் உண்மையான சுதந்திரத்தை நிலை நாட்ட வேண்டும், ஏகாதிபத்திய சுரண்டலுக்கு எதிரான தீர்மான மான போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும், பூர்ஷ்வா அம்சங்களின் அகங்கார நாட்டங்களை அடக்க வேண்டும் என்ற மார்க்சிய முடிவுக்கு அவர் வந்தார். குறிப்பாக இந்தப் பாதையில் தான் அவர் விஞ்ஞான சோஷலிசத்தின் தத்துவம் மற்றும் நடைமுறைகளின் மீதான தேசிய சீர்திருத்த வாத வெறுப்பைத் தொடர்ந்து தவிர்த்து வந்தார். ஆப்பிரிக்காவில் தேசிய விடுதலை இயக்கத்தை சோஷலிச நாடுகளுடன் நெருங்கச் செய்யும் நிகழ்ச்சிப் போக்கும் இந்த இயக்கத்தின் சித்தாந்தத்தின்மீது மார்க்சிய-லெனினியக் கருத்துக்களின் தீவிர தாக்கமும் குறிப்பாக நுக்ருமாவிலிருந்துதான் ஆரம்பித்தன. ஆப்பிரிக்காவில் நிகழ்ந்த இந்த நிகழ்ச்சிகள் நுக்ருமா தலைமைதாங்கிய கானக் குடியரசின் அரசியலிலும், நுக்ருமாவின் தத்துவப் படைப்புகளிலும் தெளிவான இடத்தைப் பெற்றன.

மாஜி காலனி ஆதிக்கவாதிகளுடனை பிணக்குகளை மறந்து விட வேண்டும் என்று தேசிய சீர்திருத்தவாதிகள் வலியுறுத்திய போது குவாமே நுக்ருமாவோ ஏகாதிபத்தியத் துடனை உறவில் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும்

ஏகாதிபத்தியத்துடனுன தீர்மானமான போராட்டத்தில் எல்லா புரட்சிகர சக்திகளேயும் ஒன்றிணைப்பது அவசியம் என்றும் வற்புறுத்தினர். ஆப்பிரிக்காவின் ஒற்றுமைக்காக அவர் மிகவும் தீவிரமாகக் கிளர்ச்சி செய்தது இந்தக் குறிக் கோளுக்கும் வழி வகுத்தது. இதில் சில மிகைப்பாடுகளே குவாமே நுக்ருமா செய்துள்ளார் என்பதையும் ஒத்துக் கொள் ளத்தான் வேண்டும். எந்த ஒரு ஸ்தல ஐக்கியமும் (Regional union) பரந்த அளவு ஐக்கியத்திற்கு பாதகமானது என்று கருதி, ஆப்பிரிக்கக் கண்ட அரசாங்கத்தையும், ராணு வத்தையும் உருவாக்க அவர் முனேந்தார். அதற்கான அத்தியா வசியச் சூழ்நிலேமைகள் இல்லே என்பதையும் ஆப்பிரிக்க அரசியல் போக்குகளில் இருந்த வித்தியாசங்கள் ஆழமடைந்து வருவதும் புதிதாகத் தோன்றும் அரசுகளின் வித்தியாசமான சமூக திசை அமைவும் இந்தப் பாதைக்கு அதிகமான, மேலும் கூடுதலான கஷ்டங்களே அளிக்கின்றன என்பதையும் அவர் மறந்து விட்டார். ஆனுல் ''ஆப்பிரிக்க ஐக்கிய ஸ்தாபனத் தைத்'' தோற்றுவிப்பதில் அவர் பெரும்பங்காற்றினுர். அபாயம் நிறைந்த ஏகாதிபத்தியத்தை ஒழிப்பதற்காக ஆப் பிரிக்க நாடுகளின் அரசியல், பொருளாதார மற்றும் ராணுவ வருவாயை ஒன்றிணைக்க வேண்டியது அவசியம் என்ற அவரு டைய உணர்வே அவரை ஆப்பிரிக்க நாடுகளின் ஒற்றுமைக்கு வழி வகுக்கச் செய்தது. காங்கோவின் சோக முடிவு அவரை இதில் உறுதியாக நிற்கச் செய்தது.

ஏகாதிபத்தியத்தின் மாபெரும் அபாயத்தைப் பற்றி சலிக்காமல் எடுத்துரைத்துக் கொண்டே இருந்த குவாமே நுக்ருமா, அதனுடைய பெருக்கத்தின் மற்றும் சுரண்டும் முறைகளின் புதிய வகைகளே வெளிப்படுத்தினுர். **புதுக்காலனி ஆதிக்கம் — ஏகாதிபத்தியத்தின் கடைசிக் கட்டம்*** என்ற அவ ருடைய புத்தகம், குறிப்பாக இந்தக் குறிக்கோளுடன் எழுதப்பட்டதே. அப்புத்தகத்தில் ''பாதுகாப்பு'' ஒப்பந்தங் கள் என்ற பெயரிலும், ராணுவத் தளங்கள் அமைப்பதன் மூலமும் தனக்குக் கீழ் அடக்கி வைத்தல், கைப்பொம்மை அரசாங்கங்களுக்கு ஆதரவளித்தல், ''உதவி'' மற்றும் கடன் கள் என்ற பெயரில் பொருளாதாரக் கண்காணிப்பின் கீழ்க்

---

* Nkrumah K. *Neo-Colonialism — The Last Stage of Imperialism.* L., 1965.

கொணர்தல், முறைகேடான வணிகம் மற்றும் சர்வதேசக் கார்ப்பரேஷன்களின் மூலம் ஸ்தல பொருளாதாரத்தைப் பலவீனமடையச் செய்தல், ஸ்தல முதலாளித்துவத்தை வளர்ப்பதன் மூலம் சமூக அமைப்பில் ஊடுருவுதல், சித்தாந்தப் பிரச்சாரம் மற்றும் இன்ன பிற புதுக்காலனியாதிக்க முறைகள் ஆகியவற்றைப் பற்றி விவரித்திருந்தார். நுக்ருமாவின் இப்புத்தகம் இன்றுவரை அத்தியாவசமானதாக விளங்குகின்றது.

ஆப்பிரிக்க நாடுகளின் உள் நிலைமைகளை ஆராய்ந்து அதன் முடிவில் வர்க்கப் போராட்டம் உள்ளது என்பதை அங்கீகரித்ததே குவாமே நுக்ருமா உள்பட பிற தேசிய ஜனநாயக வாதிகளின் முக்கியமான கோட்பாட்டளவிலும் தரத்திலும் புதிய தத்துவ-அரசியல் வெற்றியாக விளங்குகின்றது. அவருடைய மற்ரெரு புத்தகமான **உணர்வுவாதத்தில்** முழுத் தேசிய ஜனநாயக இயக்கத்தின் வளர்ச்சியின் முதல் கட்டத்தில், அதன் தனித்தன்மையாக ஆப்பிரிக்க சமுதாயத்திலிருந்த வர்க்க முரண்பாடுகள் பொதுவாகவும் தற்காலிகமாகவும், சமூக-பொருளாதார முறைகளைவிட அரசியல் முறையில் அதிகமாக அணுகப்பட்டும் விவரிக்கப்பட்டிருந்தன. அதில் ''சாதகமான மற்றும் சாதகமற்ற சக்திகளின்'' மோதல்களைப் பற்றி, அதாவது சமூக நீதியை நிலைநாட்டுவதிலும் ஆளும் இனச் சுரண்டலை ஒழிப்பதிலும் நாட்டம் கொண்ட முற்போக்குவாத சக்திகளுக்கும், தங்களுடைய காலனி ஆதிக்கத்தை நீடிக்க முயற்சிக்கும் பிற்போக்குவாத சக்திகளுக்கும் இடையிலான மோதல்களைப் பற்றி விவரிக்கின்றூர். இத்தகைய பிரிவையே அவர் அடிப்படையாகக் கொண்டார். மேலும் சாதகமான புரட்சிகர சக்திகளுக்கிடையில் பிளவு ஏற்படக் கூடிய சாத்தியக் கூறுகளையும், அவற்றில் சில சக்திகள் பிற்போக்குவாதச் சக்திகளுடன் இணையக் கூடிய சாத்தியக் கூறுகளையும் முன் கூட்டியே தெரிவித்தார்*.

வர்க்கங்களை மார்க்சிய அடிப்படையில் புரிந்து கொள்வதோ அல்லது சமுதாயத்தின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் கட்டுமானத்தின் விஞ்ஞான ஆய்வு முறையோ இதில் இல்லை. ஆயினும் இதில் ஐக்கிய ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணி உபாயத்தின் அவசியத்தை, எதார்த்தமாகத்

* Nkrumah K. *Consciencism.* L., 1964, p. 104-105.

தனக்கே உரிய வகையில், அடிப்படையாக்குவது அடங்கியுள்ளது. இது மேற்கூறப்பட்ட பிரச்சினையை முழுவதுமாக மார்க்சிய முறையில் புரிந்து கொள்வதாகாது என்றாலும் பொதுவாக அதனுடன் முரண்படுவதில்லை. போராட்ட வழிப்பாதையில், அனுபவங்கள் சேரச்சேர இத்தகைய நிலை மார்க்சிய சாரம் கொண்டதாக மாறலாம். நுக்ருமா தன்னுடைய **உணர்வுவாதத்தில்** பல பகுதிகளாக உடையக் கூடிய நிலைமையை முற்போக்குவாத சக்திகள் எதிர்நோக்க வேண்டும் என்றும், ''எதிர்காலப் பிளவுப் போக்குகளைக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரக்கூடிய பாதையைக்'' கண்டறிதல் வேண்டும் என்றும் கோரினார். இத்தகைய அவருடைய நிலையில்—முற்போக்குவாத சக்திகளின் ஐக்கியத்தை எந்தச் சாதனத்தின் உதவியுடனும் பாதுகாக்க வேண்டும் என்ற நாட்டமா அல்லது வர்க்கப் போராட்டத்தை அடக்கி விடலாம் என்ற மாயையான நம்பிக்கையா—எது அதிகமாக இருந்தது என்பதை நிர்ணயிப்பது கடினமே. அந்த நம்பிக்கை நுக்ருமாவிடம் சிலகாலம் தோன்றியிருந்தது. கானாப் பத்திரிகையான **ஸ்பார்க்கில்** (*Spark*) வெளியான சில கட்டுரைகள் நுக்ருமாவின் இத்தகைய முரண்பாடு நிறைந்த பரிணமத்தைப் பிரதிபலிக்கின்றன.

கானா அரசாங்கத்தின் அதிகாரப் பூர்வமான பிரச்சாரத்தால் **உணர்வுவாதம்** புத்தகத்தின் வெளியீடு ''நுக்ருமாயிசத் தத்துவ'' உருவாக்கத்தின் உச்சிப் புள்ளியாக நோக்கப்பட்டது. இந்தத் ''தத்துவத்தின்'' மீது விஞ்ஞான சோஷலிசம் கொண்டிருந்த தாக்கத்தை அனைத்துமே குறித்தன. வரலாற்று வளர்ச்சியின் பொது அடிப்படை விதிகளை அது அங்கீகரித்ததிலும் மார்க்சிய இயக்க இயல்-பொருள்முதல்வாதக் கருத்தோட்டங்களின் பலமான தாக்கத்திலும் ஏகாதிபத்தியத்தை அவர் புரிந்து கொண்ட விதத்திலும் மற்றும் இதைப் போன்ற இன்ன பிறவற்றிலும் விஞ்ஞான சோஷலிசத்தின் தாக்கம் தெளிவாக இருந்தது. இன்னும் 1963ம் ஆண்டிலேயே ஃபென்னர் பிராக்வே ''ஆப்பிரிக்க மார்க்சியத்தைப்'' பற்றிக் கூறுகையில் அதன் பிரதிநிதிகளில் ஒருவராக நுக்ருமாவைக் குறித்தார். இருந்த போதிலும் 60ம் ஆண்டுகளின் முதல் பாதியில் சில தத்துவஞானப் பிரச்சினைகளில் மார்க்சியத்துடன் தான் கொண்டிருந்த வேறுபாடுகளை வெளியிடுவது அவசியம் என்று நுக்ருமா கருதினார். பிரெடெரிக் எங்கெல்ஸ் குறிப்

பிட்டது போல ''முதிர்ச்சியற்ற முதலாளித்துவப் பொருளுற் பத்தி நிலைமைகளுக்கும் வர்க்க நிலைமைகளுக்கும் இணைவாய் முதிர்ச்சியற்ற தத்துவங்கள் முன் வைக்கப்பட்டன*.

நுக்ருமாயிசத்தைப் பொருள்முதல்வாதத் தத்துவஞான மாகக் கருதிய போதிலும், கானுப் பத்திரிகைகள் அது நாத் திகவாதமல்ல என்று கோடிட்டுக் காட்டின. அடிப்படையில் புரட்சியின் ஒழுங்கான விதிமுறையை அங்கீகரித்த நுக்ருமா, பாரம்பரியச் சூழ்நிலைமைகளை ஆப்பிரிக்காவில் பாதுகாப்பது பரிணும வழியில் சோஷலிசத்திற்கு மாறுவதற்கு வழிவகுக்கும் எனக் கருதினுர். நுக்ருமாயிசத்தையும் மார்க்சியத்தையும் ஒப்பிடுவதைப் பற்றி ஸ்பார்க் பத்திரிகை கூறுகையில் ''வலது சாரிகள் மார்க்சியத்தையும் நுக்ருமாயிசத்தையும் ஒன்று என்று ஒப்பிட்டு நுக்ருமாயிசத்தைத் தாக்குகின்றனர்'' என்று எழுதியது. அதாவது ஏகாதிபத்தியத்தின் பிரச்சாரத்தினுல் கம்யூனிஸ்டுகளைக் கொள்ளைக்காரர்களாகவும் கம்யூனிசத்தை நெறியற்ற தத்துவமாகவும் கருதுபவர்களின் உணர்வுகளை இத் தகைய ஒப்பீடு தட்டி எழுப்பும் என்று எழுதியது** இவ்வாறு அடிப்படையில் உபாயகரமான ஆனுல் மிகவும் அர்த்தமுள்ள காரணங்களைக் கொண்டு மார்க்சியமும் நுக்ருமாயிசமும் பிரித்துக் காட்டப்பட்டன.

நிச்சயமாக, அவை இரண்டும் விஞ்ஞான எதார்த்தவாதத் தின் அடிப்படையில் சமம் என்று கூறுவது தவறுக இருந் திருக்கும். சீர்திருத்தவாத மற்றும் தேசியவாதக் கருத்தோட் டங்களை நுக்ருமாயிசத்தால் தவிர்க்க முடியவில்லை. ஆனுல் அதே சமயம் அது மார்க்சியத்தை நெருங்கி வந்தது என்பதும் அதிலிருந்து விலகிச் செல்லவில்லை என்பதும் சந்தேகத்திற் கிடமற்றவை. மேலும் முதலாளித்துவத்தைத் தவிர்த்த வளர்ச்சிப்பாதை மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளின் ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் வெற்றிக்கான சாத்தியக் கூறுகளை அங்கீகரித்ததில், மார்க்சியத்திற்கும் நுக்ருமாயிசத் திற்கும் இடையில் இவை மேற்கூறப்பட்டவற்றை வெவ்வேறு விதமாகப் புரிந்து கொண்ட போதிலும் அடிப்படையில் இரண்டிற்கும் இடையில் முரண்பாடுகள் இருக்கவில்லை. நுக்ரு

---

* பி. எங்கெல்ஸ். கற்பனுவாத சோஷலிசமும் விஞ்ஞான சோஷலிசமும். முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1979, பக்கம் 66.

** *The Spark*, 5, III. 1963.

மாயிசம் மேற்கொண்டு தொடர்ந்த தன்னுடைய பரிணாமத்தில், முதலாளித்துவத்தைத் தவிர்த்த வளர்ச்சிப்பாதையின் எல்லைக்குள் சோஷலிசப் போக்குகளைத் தொடர்ந்து ஆழப்படுத்தும் என்ற அடிப்படையில் அது விஞ்ஞான சோஷலிசத்துடன் மேலும் நெருங்கும் என்ற நம்பிக்கையைத் தந்தது. உண்மையிலேயே அத்தகைய நெருக்கத்திற்கு இடமிருந்தது. ''இடதுசாரி நுக்ருமாயிசத்தின்'' பிரதிநிதிகள் ஒன்றுக இணைந்து கொண்ட ஸ்பார்க் பத்திரிகையின் பல வெளியீடுகளிலும், அதனுடைய தலைமைப் பதிப்பாளரான கோஃபி பாட்சாவின் அறிக்கைகளிலும் ''சாதகமான செய்கைகளின்'' எல்லைக்குள் நடக்கும் சில நிர்ணயமான மாற்றங்கள் குறிக்கப்பட்டன. மேலும் முற்போக்குவாத சக்திகளுடனுன ஐக்கியத்தில் உழைப்பாளர்களின் விசேஷ பங்கு குறிக்கப்பட்டது. தேசிய மூலதனத்தின் முரண்பாடு மிக்க நிலையும் அதன் இரட்டை வேடமும் சோஷலிசப் போக்குகளின்மீது அது கொண்டுள்ள பகைமையும் கோடிட்டுக் காட்டப்பட்டன. அத்துடன் ஆப்பிரிக்காவின் விஞ்ஞான சோஷலிசமாகச் சித்தரிக்கப்பட்ட நுக்ருமாயிசத்திற்கும் தேசிய சீர்திருத்தவாத ''ஆப்பிரிக்கச் சோஷலிசத்திற்கும்'' இடையிலான அடிப்படை வித்தியாசங்களும் விளக்கப்பட்டன.

இருப்பினும் விஞ்ஞான சோஷலிசத்துடனுன நுக்ருமாயிசத்தின் தொடர்ந்த நெருக்கம் 1966ம் ஆண்டு பிப்ரவரியில் கானுவில் நடைபெற்ற, நுக்ருமாவின் அரசாங்கத்தை வீழ்த்திய பிற்போக்குவாத ஆட்சிக் கவிழ்ப்பினுல் தடுக்கப்பட்டது. நாட்டின் முதலாளித்துவத்தைத் தவிர்த்த வளர்ச்சிப் பாதையைக் குலைத்த இந்த மாபெரும் அரசியல் தோல்வி, நுக்ருமாவை அனைத்தையும் மறுபடி மதிப்பிடச் செய்தது. அரசுத் தலைமை செய்த தவறுகள் நிகழாமலிருந்தால் எதிர்ப்புரட்சி ஆட்சிக் கவிழ்ப்பு அவ்வளவு எளிதாக, அவ்வளவு வெற்றிகரமாக நடந்திருக்க முடியாது என்பதை அவர் சிறிது சிறிதாக உணர்ந்தார். கடந்தவற்றை மதிப்பிடுவது என்பது, சோஷலிசத் திசை அமைவின் ஆதரவாளர்கள் உள்ளத்தளவில் சோர்வடைந்திருந்த, தாய் நாட்டை விட்டுப் பிரிந்திருந்த சூழ்நிலையில் நிகழ்ந்தது. அவருடைய பல ஆண்டுகால ஆட்சியில் நுக்ருமாவின் தனிப்பட்ட குணங்களுக்கு மக்கள் பழக்கமாயிருந்தனர் என்பதுடன் பிரச்சினைகளை உத்தரவுகளால் தீர்ப்பதையும் ஆட்சியை அவர் ஒருவரே நிர்வகிப்பதையும்

வழக்கமாகக் கொண்டிருந்தார். இதனுல்தான் பின்னர் கானு வின் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் நிலைமைகளையும், தன்னுடைய சொந்தத் தவருன கணக்கீடுகளையும் எதார்த் தமாக ஆராய்வதற்கும், இந்நாட்டில் புரட்சிகர சக்திகளை அணிதிரட்டவும் அவற்றை ஸ்தாபன ரீதியாக ஒன்று சேர்க் கும் பாதையை நிர்ணயிக்கவும் அவரால் முடியாமல் போய் விட்டது. நாடு கடத்தப்பட்ட நிலையில் நுக்ருமா சில புத் தகங்களை எழுதினுர். அவற்றில் 1969ல் எழுதிய புரட்சிகரப் போரைப் பற்றிய மேசைப் புத்தகம் *(Handbook of Revolutionary Warfare)* மற்றும் 1970ம் ஆண்டு எழுதிய ஆப்பிரிக் காவில் வர்க்கப் போராட்டம் (Class Struggle in Africa) என் பவை ஆப்பிரிக்க சமுதாய-அரசியல் சிந்தனைகளின் வரலாற் றுப் பார்வையில் கணிசமான அளவு ஆர்வத்தைத் தூண்டக் கூடியவை. ஆனுல் சொந்தத் தோல்வியின் காரணங்களையும் கானுவிலிருந்த முற்போக்குவகை ஆட்சியின் முரண்பாடு களையும் பற்றிய புத்தகமொன்றை அவர் கடைசிவரை எழுத வில்லை. அச்சமின்றியும் தர்க்கரீதியாகவும் தன்னுடைய தவறு களை மதிப்பிடும் துணிவு அவருக்குப் போதவில்லை என்றே தோன்றுகின்றது.

யுத்த தந்திரங்களையும் உபாய முறைகளையும் தார்மீக-தத்துவ முறையில் திரும்பிப் பார்ப்பது என்ற சுலபமான வழியை குவாமே நுக்ருமா தேர்ந்தெடுத்தார். கானுவில் நடந்த பிற்போக்குவாத ஆட்சிக் கவிழ்ப்பிற்குப் பின் அவர் தன்னுடைய தாய் நாட்டில் மட்டுமான புரட்சியைப் பற்றி சிந்திக்காமல், முழு ஆப்பிரிக்கக் கண்டத்திற்கும்—அதன் வடக்கிலும் தெற்கிலும், கிழக்கிலும் மேற்கிலும்—என முழு ஆப்பிக்கக் கண்ட அளவில் நடக்க வேண்டிய புரட்சியைப் பற்றிய தன்னுடைய புதிய தத்துவ-அரசியல் நிலையை எடுத் துக் கூறினுர் என்பதில் அனைவரும் அறிந்த அவருடைய சிந்தனை களின் தார்மீக இயல்பு அடங்கியுள்ளது.

கானுவில் புரட்சிகர சக்திகளுக்கு ஏற்பட்ட தோல்வி, போராட்ட களத்தில் இவை புதிய வகையில் ஒரு முகப்படுத் தப்படவும், மீதியுள்ள போராளிகள் ஒன்றிணைந்து ஓரளவு எளிய குறிக்கோள்களை முன் வைக்கவும், புதிய போராட்டத் திற்குத் தயார் செய்யும் பணிகளை ஆரம்பிக்கவும் வழி வகுத் திருக்கலாம். இருப்பினும் கானுவில் முதலாளித்துவத்தைத் தவிர்த்த பாதையின் தோல்வி அனுபவத்திற்குப் பின்பு,

நுக்ருமா முழு ஆப்பிரிக்கச் சோஷலிசப் புரட்சியைப் பற்றிப் பேச ஆரம்பித்தார். அவரைப் பொறுத்தவரையில் எதார்த்தவாத உணர்ச்சிகள் பரந்த அளவில் மாறிவிட்டன என்பது தெளிவானது. இது கற்பனுவாத சமூக-அரசியல் கருத்தோட்டங்கள் மற்றும் சுய பங்கு ஆகியவற்றை அளவு கடந்து மிகைப்படுத்துவது ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட முரணின பின்விளைவு ஆகும்.

காஞவில் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகள் ஒழுங்காக இருக்கவில்லை என்பதற்கு அங்கே நடந்த ஆட்சிக் கவிழ்ப்பே சான்ருக விளங்குகின்றது. இதைக் குவாமே நுக்ருமாவும் உணர்ந்திருந்தார். அவர் ஆட்சியிலிருந்த கால கட்டத்தில் நுக்ருமாயிசத்தில் இருந்த தத்துவ-அரசியல் நிலையின் முரண்பாடுகளையும், அதன் முற்று பெருத தன்மையையும் எளிதில் நொறுங்கக் கூடிய தன்மையையும் அமைதியாக அங்கீகரித்ததில் அவர் மிகச் சரியானவராகவே இருந்தார். ஆனல் துரதிருஷ்டவசமாக, முன்பே கூறியதைப் போல், சுதந்திரமடைந்த முதல் வருடங்களில் காஞவின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சி, கட்சி, அரசு இயந்திரம் ஆகியவற்றின் தோற்றம், வளர்ச்சி ஆகியவற்றை விமர்சனவாத முறையில் ஆராய்ச்சி செய்யும் பாதையை அவர் தேர்ந்தெடுக்கவில்லை. அவ்வாறே நாட்டில் வர்க்க சக்திகளின் விகிதம், ராணுவத்தின் நிலைமை ஆகியவற்றையும் அவர் விமர்சனவாத முறையில் ஆராய்ச்சி செய்யவில்லை. நாட்டில் அதிகார வர்க்கப் பூர்ஷ்வா வளர்வதை அவர் கவனிக்கவில்லை என்பதுடன் சமுதாய வாழ்க்கையில் எல்லா மட்டங்களிலும் ஊழல் மலிந்து விட்டதைப் பார்க்க அவர் விரும்பவில்லை.

அத்தகைய ஆராய்ச்சியில் அவர் முனைந்திருந்தால் சொல்லுக்கும் செயலுக்கும் இடையிலிருந்த உண்மையான தீவிரமான முரண்பாடுகளுக்குக் காரணமான, காஞவின் உள்நிலைமைகளில் இருந்த சாதகமற்ற பல அம்சங்களை அவர் கண்டிருக்க முடியும்.

நாட்டின் பொருளாதாரம் உரிய விகிதத்தில் அமையாமல் இருந்தது என்பதையும் வேகமாக உச்ச கட்ட அளவில் இயந்திரத் தொழில் மயமாக்குதலும் பெரிய திட்டங்களைச் செயல்படுத்துதலும் நாட்டின் பொருளாதாரத்துடன் ஒத்து வரவில்லை என்பதுடன் நாட்டின் உடனடித் தேவைகளை நிறை

வேற்ற அதனல் முடியவில்லை என்பதையும் புரிந்திருப்பார். அவ்வாறே சோஷலிசத்தின் மீதான ஆர்வம், நாட்டில் முதலாளித்துவப் போக்குகள் தீவிரமாக வளர்வதற்குத் தடையாக இருக்கவில்லை என்பதையும் நாட்டில் வெகு ஜனங்களின் வாழ்க்கைத்தரம் உயரவில்லை என்பதுடன் அவருடைய ஆட்சி மக்களுக்கு, சாராம்சத்தில் சிறிதளவே பலனுள்ளதாக இருந்தது என்பதையும் அவர் உணர்ந்திருக்க முடியும். மேலும் ஆட்சி இயந்திரம் வெகு ஜனங்களிடமிருந்து விலகி, தனிப்பட்ட, சாரத்தில் ஆரம்ப நிலை மூலதனக் குவிப்புச் சாதனமாகி விட்டது என்பதையும் உணர்ந்திருப்பார். அவ்வாறே ''கன்வென்ஷன் மக்கள் கட்சி'' பரவவோ தன்னுடைய சக்தியை உறுதிப்படுத்திக் கொள்ளவோ இல்லை என்பதையும், அக்கட்சி ஆட்சிக்கு வரக் காரணமாக இருந்த வெகு ஜனங்களுடன் அது கொண்டிருந்த தொடர்பைச் சிறிது சிறிதாக இழந்து வந்தது என்பதையும் அறிந்திருப்பார். சுதந்திரப் போராட்ட காலத்து உண்மையான புரட்சிகர உற்சாகத்திற்குப் பதில் அதிகாரப் பூர்வ ஆடம்பரம் வந்துவிட்டது என்பதையும், தலைவரை அளவு கடந்து புகழ்வது எல்லாம் ஆட்சியைச் சீரழித்து, அதை மக்களிடமிருந்து பிரிக்கும் என்பதையும் புரிந்திருப்பார்.

சந்தேகத்திற்கிடமற்ற அறிவாளியும், அனுபவம் நிறைந்த அரசியல்வாதியுமான குவாமே நுக்ருமா இவை அனைத்தையும் தவற விட்டார். ஏகாதிபத்தியத்தின் மற்றும் உள்நாட்டு பிற்போக்குவாதத்தின் நாசவேலைகளைச் சுட்டிக் காட்டுவதுடன், சமுதாயத்தின் கலப்பு பொருளாதாரத்தால் விளைந்த ஒரே தன்மையற்ற வர்க்க உள்ளடக்கத்தையும், ராணுவ அதிகாரிகள், அரசு அலுவலர்கள் மற்றும் போலீஸ் படையின் மத்தியிலுள்ள சில குழுக்கள் பிற்போக்குவாதத்திற்கு ஆயுதமாக விளங்குவதையும் சுட்டிக் காட்டுவதுடன் நின்றுவிட்டார். ஆட்சியிலிருந்த போது இவை அனைத்தையும் அவர் கண்டார். அத்துடன் அவற்றை மார்க்சிய-லெனினியவாதிகள் பலமுறை அவருக்கு எடுத்துரைத்தனர். குவாமே நுக்ருமாவிற்கு சோஷலிச நாடுகளின் தலைவர்கள் அனுப்பிய செய்திகளில் இத்தகைய அனுகூலமற்ற நிகழ்ச்சிப் போக்குகள் நாட்டில் இருப்பதைப் பற்றித் தொடர்ந்து குறிப்பிட்டனர். ஆனல்... ஆட்சியிலிருந்த போது நுக்ருமா அவருக்கு எதிராக இருந்த ஆபத்தைப் புரிந்து கொள்ளவில்லை. அதேபோல்

ஆட்சியை இழந்த பின்பு தோல்வியைக் கொணர்ந்த பல்வேறு பட்ட காரணங்களை அவர் வெளிப்படுத்தவில்லை.

தத்துவ முறைக் கருத்தோட்டத்தில் தோல்விக்குப் பிறகு குவாமே நுக்ருமா முதிர்ச்சி அடைந்தவராகவே விளங்கினர். விஞ்ஞான சோஷலிசத்தை நோக்கி ஒரு அடி முன் வைக்கவும் செய்தார். அவருடைய படைப்புகளில் ''ஒரே ஒரு உண்மையான சோஷலிசம்தான் உள்ளது. அது கோட்பாடுகள் நிலையானதும் உலகப் பொதுவானவையுமான விஞ்ஞான சோஷலிசம்தான்''* என்ற உறுதிப்பாடு தோன்ற ஆரம்பித்தது. வர்க்கப் போராட்டத்தை அடக்கி விடலாம் என்ற மாயைக்கு பதில், மிகப் பெரிய சோகமயமான கால தாமதத்திற்குப் பின், தெளிவான முடிவுக்கு வந்தார்: ''வர்க்கங்களின் போராட்டத்தின் மூலம் மட்டும்தான் சோஷலிசத்தை அடைய முடியும்.''** முற்போக்கு பிற்போக்குவாத சக்திகளின் அரசியல் ஐக்கியங்களைப் பற்றிய ''சாதகமான மற்றும் சாதகமற்ற'' சக்திகளைப் பற்றிய பொதுவான தீர்மானத்திற்குப் பதிலாக உற்பத்தி நிகழ்வு முறையில் பல்வேறு சமூக வகுப்புகளின் நிலைமை சலுகை பெற்ற வகுப்புகள் மற்றும் சுரண்டப்படும் வகுப்புகள் என்ற அவற்றின் பிரிவுகளின் அடிப்படையில் ஆப்பிரிக்க சமுதாயத்தின் கட்டுமானத்தைத் தீர்மானமாக ஆராய்வது என்பது இடம் பெற்றது.

நுக்ருமாவின் கண்ணேட்டங்களின் இத்தகைய எல்லா சாதகமான மாற்றங்களும் அடிப்படையில் குறிப்பிட்ட சில காலம் முன்பே, தோல்விக்கு முன்பே நிகழ்ந்திருக்கலாம். ஏனெனில் அவை அனைத்தும் அவருடைய 60வது ஆண்டுகளின் முதல் பாதி காலகட்டத்து அரசியல் பாதையுடன் முழுதுமாக ஒத்திருந்தன. இது அவருடைய சோஷலிச போக்கு தொடர்ச்சியாகச் செயல்பட உதவியிருக்கும். ஆனல் 60ம் ஆண்டுகளின் கடைசியிலும் 70ம் ஆண்டுகளின் ஆரம்பத்திலும் பலத்த அதிர்ச்சிக்கு உள்ளான நுக்ருமா பல சமயங்களில் தன்னுடைய பழைய பாதையைத் தீவிரவாத முறையில் திருப்பிப் பார்க்கும்படி செய்தது. விடுதலை இயக்கத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கான ஒரே சாதனமாக

---

* Nkrumah K. *Handbook of Revolutionary Warfare*. New York, 1969, p. 29.

** Nkrumah K. *Class Struggle in Africa*. New York, 1979, p. 84.

ஆயுதப் போராட்டத்தைப் பிரகடனப்படுத்தியதுடன் அவர் ஆரம்பித்தார். 1967ம் ஆண்டிலிருந்தான நுக்ருமாவின் எல்லாப் படைப்புகளிலும் பிற்போக்குவாத சக்திகளுடன் ஆயுதப் போராட்டத்தில் இறங்கும் வித்தியாசமான அம்சத்தைக் கொண்ட புதிய, தீர்மானகரமான கட்டம் புரட்சியில் தொடங்குவதைப் பற்றிக் கூறப்படுகின்றது.

புரட்சிகரப் போர் என்பது குவாமே நுக்ருமாவால் சுதந்திரத்தை அடைவதற்கான சாதனமாக மட்டுமின்றி புதுக் காலனி ஆதிக்கத்துடனும் பிற்போக்குவாதத்துடனுமான போராகவும் முன் வைக்கப்பட்டது. அது சுதந்திரத்தை அடைவதற்கான சாதனம் என்பதாக ஏதோ ஒரு வகையில் அப்போது நியாயமாக்கப்பட்டது. ஏனெனில் போர்ச்சுகேசியக் காலனிகளிலும், ஆப்பிரிக்காவின் தென் பகுதியிலும் குறிப்பாக இவ்வகையில்தான் விடுதலை இயக்கம் நடந்தது. ஆனால் அதையே புதுக்காலனி ஆதிக்கத்திற்கும் பிற்போக்குவாதத்திற்கு எதிரான போராகவும் நுக்ருமா முன் வைத்தார். ஆப்பிரிக்காவின் பல பகுதிகளிலும் பல்வேறு நாடுகளிலும் நடந்த ஜனநாயக, புரட்சிகர இயக்கத்தின் பிரச்சினைகள், மற்றும் சூழ்நிலைமைகளின் விசேஷமான வித்தியாசங்களைக் கருத்தில் கொள்ளாமல் இவை அனைத்திற்கும் தன்னுடைய உலகப் பொதுப் போராட்ட முறையான ஆயுதப் போராட்டத்தை மேற்கொள்ளும்படி சிபாரிசு செய்தார் நுக்ருமா. இது ஆயுதப் போராட்டத்தின் பங்கை மிகைப்படுத்துவதாகவும் குருட்டு நம்பிக்கையை ஏற்படுத்துவதாகவும் இருந்தது. மேலும் கானாவில் வர்க்கப் போராட்டத்தின் பங்கைக் குறைத்து மதிப்பிட்டதன் விளைவாக ஏற்பட்ட சொந்தத் தோல்வியால் உண்டான ''தற்காலிகப் பிரதிபலிப்பாகவும்'' இது இருந்தது. தனது வாழ்க்கையின் கடைசிக் கட்டத்தில் வர்க்கப் போராட்டத்தின் பங்கைப் புரிந்து கொண்டார். ஆனால் புரிந்து கொண்ட அதை முக்கியமாக ஒரே வடிவத்தில்—ஆயுதப் போராட்டமாகக்—கிரகித்துக் கொண்டு, நேரம் காலம் அனைத்தையும் தவிர்த்து, முழு ஆப்பிரிக்கக் கண்டத்தின் திட்டமான வரலாற்றுச் சூழ்நிலைமைகளைக் கணக்கில் கொள்ளாமல் அதைப் பரப்பினார்.

ஆப்பிரிக்காவின் இந்த ''ஒருமைப்படுத்துதலில்'' அனைத்துப் பிரிவு அரசாங்கத்தைத் தோற்றுவிப்பதிலான நுக்ருமாவின் நீண்டகால நாட்டம் பிரதிபலித்தது. ஏனென்றால் அது வழி

முறைத் (methodological) தன்மையை மட்டும் கொண்டிராமல் ஸ்தாபனத் தன்மையையும் கொண்டிருந்தது. ஐக்கிய ஆப்பிரிக்க புரட்சிகரக் கட்சி ஒன்றையும், ராணுவத்தையும் நிறுவுவதற்கு ஆதரவாக நுக்ருமா இருந்தார். அவற்றில் ஆப்பிரிக்க மக்களுக்கு தேசிய மற்றும் சமூக விடுதலையை அளிக்கக் கூடிய சக்தியை அவர் கண்டார். இத்தகைய குறிக்கோள் எதார்த்தமற்றதாக இருந்தது, இன்றுவரை உள்ளது. அத்தகைய ஸ்தாபனத்திற்கான சூழ்நிலைமைகள் இல்லை என்பதையும், ஆப்பிரிக்கப் புரட்சிகர இயக்கங்களுக்கிடையில் அவற்றின் முன் நிற்கும் குறிக்கோள்களைப் போன்றே அவற்றின் வர்க்க அரசியல் தன்மைகளும் ஒருமைப்பாடு உள்ளவையாக இல்லை என்பதை அந்தக் குறிக்கோள் புறக்கணித்தது. அத்துடன் இத்தகைய குறிக்கோள் கேடு நிறைந்ததாக இருந்தது. ஏனெனில் தேசிய எல்லைக்குள் நடத்தப்படும் போராட்டங்களின் சுய முக்கியத்துவத்தை எதிர்ப்பதாக அது இருந்தது. இன்றைய காலகட்டத்திற்குக் கூட அது தவறான குறிக்கோளாக விளங்குகின்றது.

ஆப்பிரிக்காவில் புரட்சிகர இயக்கங்களின் குறிக்கோள்களைக்கூட நுக்ருமா ஒருமைப்படுத்தினார். **புரட்சிகரப் போரைப் பற்றிய மேசைப் புத்தகத்தில்** மூன்று ஒன்றிணைந்த குறிக்கோள்களைப் பற்றிக் கூறுகிறார்—*1)* தேசியவாதம், *2)* சர்வ ஆப்பிரிக்கவாதம், *3)* சோஷலிசம் என்பவையே அவை. அவ்வாறு கூறும் போது, கூடவே இந்தக் குறிக்கோள்களில் ஏதாவது ஒன்றை மட்டும், மற்றது இல்லாமல் நிறைவேற்ற முடியாது* என்று குறிப்பிடுகிறார். ஒவ்வொரு நாட்டிலும் முதலிடத்திற்கு முக்கியமான குறிக்கோளாக முன்வைக்கப்படும் தேசிய விசேஷ உணர்வு மட்டுமின்றி வரலாற்று உணர்வும் அவரை மாற்றியது. ஒன்றுடன் ஒன்று முரண்படும் அம்சங்கள் (தேசியவாதம் மற்றும் சோஷலிசம்) ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன. புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கின் கட்டங்களைப் பற்றிய பிரச்சினைகள் நம்பிக்கையான வகையில் முன் நிறுத்தப்படவில்லை.

தன்னுடைய கடைசிப் புத்தகமான **ஆப்பிரிக்காவின் வர்க்கப் போராட்டத்தில்** குவாமே நுக்ருமா இயக்கத்தின் குறிக்கோள்களின் வரையறுப்பை சிறிது மாற்றி, தர்க்க

---

* Nkrumah K. *Handbook of Revolutionary Warfare,* p. 24.

ரீதியான முரண்பாடுகளைச் சரி செய்தார். அத்துடன் புரட்சிகர நிலையைத் தயாரிப்பதில் புதிய முயற்சியையும் மேற்கொண்டார். அவர் ''தேசியவாதம்'' என்பதை ''உண்மையான தேசிய சுதந்திரத்தை வெல்வது'' என்று மாற்றிக் குறிப்பிட்டார். இது தேசிய விடுதலை இயக்கத்தின் வர்க்க மதிப்பீட்டுக் கண்ணோட்டத்தின்படி நிச்சயமாக மிகச் சரியானதாகும். உண்மையான சுதந்திரத்தையும் சர்வ ஆப்பிரிக்க வாதத்தையும் சோஷலிசத்தின் அடிப்படையில் மட்டுமே அடைய முடியும் என்று அறிவித்தார்*. இதையும் முன் கூறியதைப் போன்றே வரவேற்க முடியும். ஆனால் குவாமே நுக்ருமாவின் அஃநிலை-சோஷலிச மனப்பாங்கின் வளர்ச்சி, இன்றைய ஆப்பிரிக்காவில் விடுதலை இயக்கத்தின் நேரடியான குறிக்கோள் சோஷலிசமே என்று அவர் பிரகடனப்படுத்தும் நிலைக்கு அவரைக் கொணர்ந்தது.

பின்னர் உபாய முறைகளை முழுமையாகத் திருப்பிப் பார்ப்பது தொடர்ந்தது. ஆனால் முன்போலவே எதார்த்தத்தை விஞ்ஞான முறையில் ஆராய்வதின் அடிப்படையில் அல்லாமல் **புரட்சிகரப் போரைப் பற்றிய மேசைப் புத்தகத்தில்** அடங்கியிருந்த தர்க்க ரீதியான தவறுகளைச் சரி செய்யும் விதத்தில் இது நிறைவேற்றப்பட்டது. குவாமே நுக்ருமா ஆப்பிரிக்க விடுதலை இயக்கத்திற்கு சோஷலிசப் புரட்சி உபாயத்தைச் சிபாரிசு செய்தார். ''விவசாயிகளும் பாட்டாளிகளும் மட்டுமே சோஷலிசத்தின் தொடர்ந்த அரசியலை முழுமையாக ஆதரிக்கும் திறம் படைத்தவர்கள்''** என்று அறிவித்தார் அவர். ஆனால் இந்த அடிப்படையில் உண்மையான அறிக்கை, ஐக்கிய ஏகாதிபத்திய முன்னணி உபாயத்தை மறுக்கும் நிலைக்கு அவரைக் கொணர்ந்தது. அந்த ஐக்கிய ஏகாதிபத்திய முன்னணி உபாயத்தை முன்பே தன்னுடைய **புரட்சிகரப் போரைப் பற்றிய மேசைப் புத்தகத்தில்** ஆதரித்திருந்த போதிலும் அது அவரால் தவிர்க்க முடியாததாக இருந்தது. அவர் எல்லா ஆப்பிரிக்க முதலாளித்துவ வர்க்கம், சர்வதேச ஏகபோக மூலதனத்துடன் தனது தலைவிதியை உறுதியாக இணைத்துக் கொள்ளும் எதிர்ப்புரட்சி சக்தி என்று அறிவித்தார். அத்துடன் அதனுடனான கூட்டிற்கு எதிராக மட்டுமின்றி

---

* Nkrumah K. *Class Struggle in Africa,* p. 84.

** *Ibid.,* p. 58.

விடுதலை இயக்கத்தின் தற்காலகட்டத்தில் குட்டி முதலாளித் துவ வட்டங்களுடன் கூட கூட்டு சேரக் கூடாது எனக் கூறினர்.

1967ம் ஆண்டு ஆயுதப் போராட்டமே, போராட்ட வகைகளின் ஒரே சாதனம் என்ற பிரகடனத்துடன் ஆரம் பித்த தீவிரவாத இடதுசாரிவாதிகளின் தன்னிச்சையான செயல் திட்டத்தின் அமைப்பு இவ்விதமாக உச்ச நிலையை அடைந்தது.

1966ம் ஆண்டுக்குப் பிறகு குவாமே நுக்ருமாவின் சித் தாந்த வளர்ச்சியிலிருந்த ஆழ்ந்த உள்முரண்பாடுகள் வெளிப் படையானவையாகும். சீர்திருத்தவாதத்தையும், தேசிய முதலாளி வர்க்கத்தின் தன்னகங்கார அரசியலையும் பொறுக் காதத் தன்மை, சோஷலிசத்திலான நம்பிக்கை, மார்க்சிய-லெனினியத்தின் பல தத்துவ நிலைகளை ஏற்றுக் கொண்டது ஆகியவை ஒரு புறமிருக்க, மறு புறத்தில் இந்த நிலைகளைத் திட்டவட்டமான எதார்த்த நிலைமைகளில் ஏற்றுக் கொள்ளும் திறமையில்லாமலிருந்தார். இது அடிப்படை அம்சங்களில் ஆப்பிரிக்க, ஐரோப்பிய, ஆசிய மற்றும் தென் அமெரிக்க குட்டி முதலாளித்துவ தீவிரவாதப் போக்குகளுடன் ஒத்துச் சென்ற தத்துவ அரசியல் கருத்தோட்டங்களுக்கு நுக்ருமா வைக் கொண்டு சென்றது. அவ்வாறே நுக்ருமா இருந்த நிலையின் உறுதியற்ற தன்மையும், சீர்திருத்தவாத மாயை யிலிருந்து அதீத தீவிரவாதத்திற்குச் சென்ற அவருடைய மாற்றங்களும் கூட மேற் கூறப்பட்ட போக்குகளுடனை உறவைக் குறிக்கின்றன. தொடர்ந்த சோஷலிச நிலையாக நுக் ருமாவிற்குக் காட்சியளித்த நிலையும் அடிப்படையில் தேசிய வாதத்தின் சில அம்சங்களைக் கொண்டுள்ளது.

ஆனால் அவருடைய இந்தத் தவறுகள் அவருடைய வாழ் வின் முக்கிய சாதனைகளை மங்கச் செய்யக் கூடாது. மிகவும் சிக்கலான முன்னணிப் புரட்சிகர தேசியவாதியின் பாதை யைக் கடந்த குவாமே நுக்ருமா கடைசியில், ஆப்பிரிக்க மக்களுக்கு சுதந்திரம், மறுமலர்ச்சி மற்றும் சமூக நீதிகளை அளிக்கவல்லது சோஷலிசம் மட்டுமே என்ற முடிவுக்கு வந் தார். ஆப்பிரிக்காவில் சோஷலிசக் கருத்துக்களைப் பரப்பு வதில் அவர் தலையாய பங்கை வகித்தார். மேலும் விஞ் ஞான சோஷலிசத்தின் கோட்பாடுகளைக் கைக்கொள்ள வேண் டும் என்ற அறைகூவலுடனும் மற்றும் முன்னணிப் படை

யாக விளங்கக் கூடிய உழைப்பாளர் கட்சியைத் தோற்று விக்க வேண்டும் என்ற அறை கூவலுடனும் மக்களை நெருங்கிய, ஆப்பிரிக்கக் கண்டத்து விடுதலை இயக்கத்தின் முதல் தலைவர்களில் ஒருவராக அவர் விளங்கினார். அவர் சோஷலிசத்தைத் தான் புரிந்து கொண்ட விதத்தை, மார்க்சிய-லெனினியத்திற்கு மனமறிந்து எதிராகக் காட்டவில்லை. இதுவே அவரைத் தற்கால தீவிர இடதுசாரிவாதப் பிரதி நிதிகளிடமிருந்து அனுகூலமான வகையில் பிரித்துக் காட்டு கிறது. சோஷலிசத்தையும், அதை நிறைவேற்றும் பாதை களையும் பற்றிய தவறான கொள்கைகள் இருந்த போதிலும் ஆப்பிரிக்கக் கண்டத்தின் விடுதலைக் கருத்து வளர்ச்சிப் பாதையில் கணிசமான அளவு முன்னேறிச் சென்றதாக இது அமைந்தது.

நுக்ருமா தன்னுடைய கருத்தோட்டங்களைப் பல முறை மாற்றிக் கொண்டு தவறுகளிலிருந்து திருத்திக் கொண்டார். தன்னுடைய கடைசித் தத்துவப் படைப்புகளில் திருத்தங் களைக் கொண்டு வருவதில் மரணம் அவருக்குத் தடையாக இருந்து தடுத்து விட்டது. அவற்றை விமர்சனவாத நோக்கில் திருப்பிப்பார்ப்பது ஆப்பிரிக்கப் புரட்சிகர இயக்கத்தின் கடமை யாகும். ஆப்பிரிக்கப் புரட்சியாளர்கள் ஏதோ ஒருவகையில் குவாமே நுக்ருமாவின் வழியில் வந்தோர் என்று குறிப்பிட லாம். அவர்கள் அவருடைய தத்துவ மற்றும் அரசியல் பணிகளிலிருக்கும் சிறந்தவை அனைத்தையும் ஆயுதமாக எடுத்துக் கொள்கின்றனர். குட்டி முதலாளித்துவ தீவிரவாதி களின் போலித்தனமான புரட்சிகர நிலைகளைத் தவிர்த்து விட்டு விஞ்ஞான சோஷலிசத்துடன் மேலும் மேலும் அவர் கள் நெருங்குகின்றனர்.

## விற்பனையாளர்கள்

### நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

**தலைமை அலுவலகம்**

41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,

சென்னை – 600098

**ஷோ-ரூம்**

136, அண்ணாசாலை, சென்னை – 600002

**கிளைகள்**

80, மேலக் கோபுர வீதி, மதுரை – 625001

3-4, நேரு ஸ்டேடியம், கோயம்பத்தூர் – 641018

42/7, சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி – 620008

செர்ரி ரோடு, சேலம் – 636001

**விற்பனை நிலையங்கள்**

3-22-75- D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன் – 627001

66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்

சேரிங் கிராஸ், உதகமண்டலம் – 643001

நகராட்சி அலுவலகம் எதிரில், திண்டுக்கல் – 624001